# சைவ வாழ்வியல் பேணுவோம்




## திருமதி சுசிலாதேவி கணேசமூர்த்தி

## நினைவு வெளியீடு

07-04-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வச் சந்நிதி ஆலயம்



லண்டன் சிவன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வாழ்வியல் பேணுவோம்

தொகுப்பாசிரியர்
கலாபூஷணம், சைவப்புலவர்
*சு. செல்லத்துரை*

தம்பாலைப்பதி
திருமதி சுசிலாதேவி கணேசமூர்த்தி
நினைவு வெளியீடு
07.04.2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவமயம்



# சமர்ப்பணம்



எங்களை எல்லாம் ஒழுக்க சீலராக, பண்பாளராக, பகுத்தறிவாளராக, குடும்ப சமய சமூக, இனப் பற்றாளராக வையத்தில் வாழ்வாங்கு வளமுடன் வாழ வழிகாட்டிய எங்கள் முன்னறி தெய்வத்தின் நீங்காத நினைவாக வெளிவரும் "சைவ வாழ்வியல் பேணுவோம்" எனும் இந்நூலினைத் தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகப்பெருமான் திருப்பாதங்களில் சமர்ப்பித்து அம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
அன்புக் கணவர்,
பாசமுள்ள பிள்ளைகள், குடும்பத்தினர்

2013.04.07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 01. சமர்ப்பணம் | 02 |
| 02. அணிந்துரை | 05 |
| 03. சைவத் தமிழ்ப் பண்பாட்டைப் பேணும் முயற்சி | 09 |
| 04. சைவ வாழ்வியலைப் பேணுவோம் | 12 |
| 05. சைவ வாழ்வு பேணுவோம் | 13 |
| 06. நினைவு கூருகிறேன் | 17 |
| 07. ஆத்மா சாந்தி அடையட்டும் | 19 |
| 08. பிரார்த்தனை மலர் | 21 |
| 09. பதிப்புரை | 23 |
| 10. விநாயகருக்கு வணக்கம் | 25 |
| 11. சிவபெருமானுக்கு வணக்கம் | 26 |
| 12. உமையம்மைக்கு வணக்கம் | 27 |
| 13. முருகப்பெருமானுக்கு வணக்கம் | 28 |
| 14. திருமால் பெருமாளுக்கு வணக்கம் | 29 |
| 15. பலதெய்வத் துதிப்பாடல்கள் | 30 |
| 16. பன்னிரு திருமுறைக்கு அறிமுகம் | 34 |
| 17. பஞ்சு புராணம் ஓதும் முறை | 36 |
| 18. தேவாரம் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் | 39 |
| 19. தேவாரம் - திருநாவுக்கரசு நாயனார் | 42 |
| 20. தேவாரம் - சுந்தரமூர்த்தி நாயனார் | 50 |
| 21. திருவாசகம் - மாணிக்கவாசகர் சுவாமிகள் | 53 |
| 22. திருவிசைப்பா | 59 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 23. | திருப்பல்லாண்டு | 61 |
| 24. | திருமந்திரம் | 64 |
| 25. | பதினோராம் திருமுறை | 66 |
| 26. | பெரிய புராணம் | 68 |
| 27. | திருப்புகழ் | 70 |
| 28. | வாழ்த்து | 72 |
| 29. | விநாயகர் அகவல் | 73 |
| 30. | திருக்கயிலாயப் பதிகம் | 79 |
| 27. | சிவபுராணம் | 82 |
| 28. | திருப்பொற்சுண்ணம் | 91 |
| 29. | திருவெம்பாவை | 101 |
| 30. | பட்டினத்தார் பாடல் | 112 |
| 31. | திருவருட்பா | 119 |
| 32. | மகத்துவ விரதங்கள் | 123 |
| 33. | மங்கல கருமங்கள் | 199 |
| 34. | அபரக் கிரியைகள் | 253 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

# ஒழுக்க விழுமியங்களில் வழுவாமல் நல்ல வண்ணம் வாழலாம்

உலகின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் கல்வியறிவாற்றலால் தான் எதிர்காலத்தில் சிறப்பாக வாழலாமென்பதை உணர்ந்து, தான் சார்ந்த சமூகத்தின் கல்வி சமூக சமயப்பணிகளுக்காக கணவனின் காரியம் யாவினும் கைகொடுத்து கணவனை மட்டுமல்லாது ஏனைய குடும்ப அங்கத்தினரையும் மெச்சத்தக்க நிலைக்கு உயர்த்தியவர் 11-11-1954 இல் கட்டுவனில் பிறந்து 26-02-2013 அன்று லண்டனில் அமரத்துவம் அடைந்த திருமதி சுசிலாதேவி கணேசமூர்த்தி.

பிறப்பும் இறப்பும் உலக இயற்கை. உலகில் இறவா வரம் பெற்றவர் யாருமில்லை. இருப்பவர்களின் நல் வாழ்வுக்காக இறப்பதற்கு முன் வாழந்த காலத்தில் உலகுக்கு பயன்படத்தக்க வகையில் வாழ்ந்தவர்களின் சிறப்பைக் கூறும் போது அவர்களை நினைவு கூர்கின்றோம். அவ்வண்ணம் நினைவு கூர்ந்து அவர் நினைவாக வெளிவரும் நூல் - **சைவ வாழ்வியல் பேணுவோம்-** சைவ வாழ்வியல்பற்றி அறிய விரும்புவோருக்கு பயன் தரு நூலாகவும்- மேலான வாழ்வுக்கு வழி காட்டும் நூலாகவும் அமைந்திருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

உலக நியதிக்கேற்ப உயிர் உடலை விட்டுப்பிரிவதைத் தொடர்ந்து உயிர் நீத்தோர் நினைவாக 'கல்வெட்டு' பாடும் வழக்கம் மாறி பயனுள்ளதாக மன அமைதியையும் விரிவான அறிவையும் தரத்தக்க நூல் வரிசையில் பன்னிரு திருமுறைகள் மற்றும் திருமுறைகளுக்கான விளக்கவுரைகள், விரதங்கள்,வாழ்வின் ஒவ்வொரு முக்கிய நிகழ்விலும் இடம்பெறும் சடங்குகள் கிரியைகள் தொடர்பாக உட்பொருளுடன் கூடிய விளக்கங்களைக் கொண்டதாக இந்நூல் அமைக்கப்பட்டிருப்பது மேலும் இதன் பெறுமதியை கூட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக நம்நாட்டிலும் , புலம் சிதறி வாழும் நிலங்களிலும் சைவத்தமிழர் வாழும் இல்லங்களில் உயிர் பிரியும் வேளை தேவார திருவாசகம் ஓதுதல் தொடர்கிறது. ஓர் ஒழுங்கில் பஞ்ச புராணம் எனப்படும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் என்பன பாடப்படுகின்றன. அந்த வகையில் பன்னிரு திருமுறைகளை தெரிந்து கொள்வதற்கும், அவற்றின் பயனைப் புரிந்து கொள்வதற்கும் இந்நூல் பேருதவியாக இருக்கும்.

இறையருள் பெற்ற திருஞானசம்பந்தப்பெருமான், திருநாவுக்கரசு சுவாமிகள் சுந்தரமூர்த்தி நாயனார் மாணிக்கவாசக சுவாமிகள் போன்ற அருளாளர்களால் அருளிச் செய்யப் பெற்ற பன்னிருதிருமுறைகள் பொருளுணர்ந்து ஓதினால் பேரின்பம் பெருகும்., நலமெல்லாம் மலரும்.

பழந்தமிழரின் சைவ வாழ்வியலில் விரதங்களும் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளன. அவ்வப்பகுதி ஆலய உற்சவ காலத்தில் விரதமிருப்போரையும், குறிப்பிட்ட தினங்களில் விரதமிருப்போரையும் -ஒவ்வொரு மாதத்துக்கும் என தீர்மானிக்கப்பட்ட தினங்களில் விரதமிருப்போரையும் காணலாம். விரதமிருப்பதால் தெய்வ அனுக்கிரகம் கிடைப்பதோடு தேகமும் திடகாத்திரம் அடைவதாக நம்பப்படுகிறது. விரத அனுட்டானங்களைப் பின்பற்றுவதால் உடலையும் உள்ளத்தையும் தூய்மைபபடுத்தி உயர்ந்த சிந்தனையாகிய தெய்வசிந்தனை மூலம் அமைதி காண்பதோடு ஆரோக்கியத்தையும் பெறலாம்.

சைவத்தமிழர் வாழ்வியலுக்கு தனித்துவமான பண்புண்டு. வாழ்வியலின் ஒவ்வொரு பகுதியிலும் தெய்வவழிபாடும் சைவக் கிரியைகளும் முக்கியத்துவம் பெறுகிறது. இன்னும் சொல்வதானால் சைவ ஞானம் ஒருவகை விஞ்ஞானம் தான் என்பதை ஒப்புக்கொள்ளும் காலமிது.

தாயின் கருவறையில் ஆன்மாவாகிய உயிர் உடலோடு இணைந்து, பின் பூமியில் பிறந்து, உடலோடு கலந்திருந்த ஆன்மாவாகிய உயிர் பிரிந்து பயணத்தைத் தொடர- உடல் ஒருபிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பராகும் வரை நல்ல வாழ்வியலை விரும்பும் ஒவ்வொருவரும் அவசியம் அறிந்திருக்க வேண்டியவற்றை அழகாக கூறுகிறது.

அறிவியல் எனப்படும் விஞ்ஞானவியல் படித்தோரும் சைவ வாழ்வியலில் நம்பிக்கை கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. சைவத்தமிழரின் பழக்கவழக்கங்கள்- வாழ்வியல் நடைமுறைகள்- சடங்குகள் கிரியைகள் சைவ சித்தாந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது பின்பற்ற வேண்டிய சடங்குகள் வழிபாடுகள் போன்றவையும் இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளதுடன், சடங்கு முறைகளையும் கிரியைகளையும் செய்ய வேண்டியதற்கான தெளிவான விளக்கமும் இதில் இடம்பெற்றுள்ளது. மரபை மறுத்து வெறுத்து மனம் போன போக்கில் விடயங்களை ஒப்பேற்றாமல் மரபு தழுவி ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவதாலும், வரம்பொன்றை அமைத்து அதற்கேற்ற வகையில் வாழ்வதாலும் அதிக நன்மை பெறலாம். சடங்குகள் சம்பிரதாயங்கள் குறித்த விளக்கங்களை புரிந்து கொண்டு பின்பற்றும் போது, உள்ளத்தில் பக்குவ முதிர்ச்சியையும் உடலில் திடகாத்திரத்தையும் உணர முடியும்

பிறந்த நாளோடு ஒட்டிய விடயங்கள், பால் பருக்கல், பல்லுக்கொழுக்கட்டை அவித்தல், வித்தியாரம்பம், பூப்புனித நீராட்டு, மற்றும் திருமண நாண் பூணல் போன்ற மங்கல நிகழ்வுகளில் பொருத்தம் பார்த்தல்-நிச்சய தாம்பூலம்-பொன் உருக்கல்-கன்னிகா தானம்-பூதாக்கலம்-கால்மாறல் என பல அம்சங்களும், அபரக்கிரியைகள் அந்தியேட்டி போன்ற நிகழ்வுகளில் கொள்ளிக்குடம் வைத்தல்-சுண்ணம் இடித்தல்-பந்தம் பிடித்தல்-மலர் அஞ்சலி வாய்க்கரிசி இடுதல்-சாம்பல் கரைத்தல் எட்டுச்செலவு என பல அம்சங்களும் இடம்பெறுகின்றன. அப்போதெல்லாம் மாவிலை வாழைமரம் தென்னந்தோரணம் முதலியன பயன்படுத்தப் படுகின்றன. பொருள் ஒன்றாக இருந்தாலும் பயன்படுத்தும் போது வேறுபாட்டைக் காணலாம். தோரணத்துக்கு குருத்து வெட்டிப்பின்னும்போது நுனி கீழ்ப்பாகமாக பின்னப்பட்டிருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபகாரியங்கள் எனவும் மேற்பக்கமாக பின்னப்பட்டிருந்தால் அபரக்கிரியைகள் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

.சுத்தம் சுகாதாரம் என்பவற்றுடன் சுற்றாடல் பேணலுக்கும் முக்கியத்துவம் அளிப்பதால் சைவ வாழ்வியலை மற்றவரும் பின்பற்ற விரும்புகின்றார்கள்

சைவ வாழ்வியல் பேணி சமய உணர்வுடன் கிரியாநெறிகளை பின்பற்றி ஒழுக்க விழுமியங்களில் வழுவாதிருந்தால் வையத்தில் நல்ல வண்ணம் வாழலாம்.

நல்ல விடயங்களை நூல் வடிவில் சமர்ப்பிக்கும் அமரர் திருமதி சுசிலாதேவி கணேசமூர்த்தி குடும்பத்தினர் நலம் யாவும் பெற வேண்டும்.

**உடுவை எஸ்.தில்லைநடராசா**

**(முன்னாள்) கல்வி மேலதிகச் செயலாளர்**

**அரச பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணைசீலர் சுசிலாதேவி அம்மையாரின் நினைவாக சைவத் தமிழ்ப் பண்பாட்டைப் பேணும் முயற்சி.

"நாம் தமிழர்; எமது மொழி தமிழ்; எமது முழுமுதற் கடவுள் சிவன்; எமது மூத்த சமயம் சைவம்; எமது மூலப் பண்பாடு சைவத் தமிழ்ப்பண்பாடு". "நாம் எங்கு வாழ்ந்தாலும் எமது இனம், எமது மொழி, எமது சமயம், எமது பண்பாடு வாழ வளமாக வாழும் பணி செய்து வாழ்வோமாக.

எமது மொழியையும் பண்பாட்டையும் பேணிக் காப்பதன் மூலம் எமது அடையாளத்தைப் பேணிக் காக்க முடியும். இவ்வழியில் எழுந்த சிந்தனை உணர்வுகளினால் உந்தப்பட்டதன் காரணத்தால் தான் சமூக இனப்பற்றாளர் ஐயம்பிள்ளை கணேசமூர்த்தி அவர்கள் தனது அன்பு மனைவி சுசிலாதேவி அம்மையாருக்கு அழியாத நினைவாக "சைவ வாழ்வியல் பேணுவோம்" என்னும் இந்நூலை எமக்குத் தந்துள்ளார். இந்நூலைச் சைவமக்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. சிவன் அருட்கடாட்சம் பெற்ற அருளாளர்களால் உலகம் உய்ய வகுத்துத் தந்த பன்னிரு திருமுறைகளிலிருந்து தெரிந்து தொகுக்கப்பட்ட அருட்பாக்களைப் பொருள் உணர்ந்து படிக்கக் கூடியதாக எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

சைவ வாழ்வியலில் கடைப்பிடிக்கப்படுகின்ற முக்கியத்துவம் பெற்ற கருமங்களில் ஒன்றாக திரிகரண சித்தியுடன் காரிய சித்தி வேண்டி அனுஷ்டிக்கப்படுகின்ற முக்கிய சைவ விரதங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் ஏன்? எவ்வாறு? எங்கே? எப்பொழுது என்பவற்றுக்கான விளக்கங்கள் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. முறைப்படி விரதங்களைக் கடைப்பிடித்து காரிய சித்தியடைய அவை எமக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

சைவ இல்லங்கள் தோறும் நடைபெறும் மங்கலக் கிரியைகள் பற்றியும் அபரக்கிரியைகள் பற்றியும் தெளிவான விளக்கத்தைப் பெற்று அக்கருமகங்களைக் குறையின்றி நிறைவு செய்து பயன் பெறுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது இந்நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலானது சைவமக்களுக்கு சைவவாழ்வியல் முறையைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்கான ஒரு கைந்நூலாக பயன்படும் என நம்புகிறோம். இத்தகைய பயனுள்ள ஒரு நூல் திருமதி சுசிலாதேவி அம்மையாரின் அழியாத நினைவாக விளங்கும் என நம்புகிறோம். இம்முயற்சி மூலம் அம்மையாரை என்றென்றும் நினைவுகூரவும் அம்மையாரின் ஆத்மா சாந்தியடைவதற்கான புண்ணிய கருமமாகவும் அத்துடன் சைவமக்கள் அறிவுபூர்வமாக சைவவாழ்வியற் கருமங்களைக் கடைப்பிடித்தொழுகவும் இந்நூல் உதவுமல்லவா?

## அம்மையாரின் நற்பணிகளை நினைவுகூருவோம்

இச்சந்தர்ப்பத்தில் சுசிலா அம்மையார் 1954ம் ஆண்டு முதல் 58 ஆண்டுகளாக இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் சிறந்த மகளாக, சிறந்த சகோதரியாக, சிறந்த மனைவியாக, சிறந்த மருமகளாக சிறந்த தாயாக சிறந்த மாமியாக சிறந்த பேர்த்தியாக சிறந்த மைத்துணியாக பல பாத்திரங்களையும் பலரும் பாராட்டும் வண்ணம் வகித்துப் பலரினதும் உள்ளங்களில் அழியாத இடத்தை அம்மையார் பிடித்துள்ளார். அத்துடன் உற்றார், உறவினர் நண்பர்கள் அயலவர்கள் ஆகிய பலதரப்பட்டவர்களையும் இனிய முகத்துடன் இனிய மொழிபேசி வரவேற்பதுடன் உள்ளம் குளிர உபசரிப்பதில் முன்னுதாரணமாக வாழ்ந்துள்ளார்.

இவற்றுக்கு மேலாக இறைநம்பிக்கையோடும் மனிதநேய உணர்வோடும் கருணையுள்ளத்தோடும் வாழ்ந்து “நல்ல அம்மா” என்ற பெயரைப் பெற்றுள்ளார். அவர் விட்டுச் செல்கின்ற பெறுதற்கரிய அழியாத புகழாக இந்நாமம் விளங்கும்.

இவரது அன்புக் கணவர் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினதும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் ஒரு முன்னணித் தலைவராக இருந்து 1980ம் ஆண்டு முதல் இற்றைவரை 32 ஆண்டுகளாக மக்கள் சமூகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் வழங்கிய பங்களிப்பு பாராட்டுக்குரியதாகும். மக்கள் சமூகத்தின் ஐக்கியத்தை வலுப்படுத்தவும் பேணவும் மாணவர் சமூகத்தின் கல்வியை மேம்படுத்தவும் இளைஞர் சமூகத்தின் தொழிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ச்சிக்கான முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் மக்கள் மத்தியில் சமூக சீர்திருத்தக் கொள்கைகளை வெற்றி பெறச் செய்வதற்கும் ஆதரவு வேண்டிய நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் திரு.கணேசமூர்த்தி அவர்களின் பங்களிப்பு பெருமை பெற அவரது பாரியார் பெரும் உந்துசக்தியாக இருந்து ஒத்துழைப்பு நல்கியுள்ளார். 2004ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான எமது அவசர நிவாரணத் திட்டத்திற்கும் 2009ம் ஆண்டு வன்னிப்போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர நிவாரணத் திட்டத்திற்கும் அத்துடன் வன்னி மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டுத் திட்டத்திற்கும் கணேசமூர்த்தி சுசிலாதேவி குடும்பத்தினர் வழங்கிய பங்களிப்பு பாராட்டுக்குரியதாகும். கணேசமூர்த்தி ஐயா அவர்களின் தன்னலமற்ற சமூகப் பணிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் வண்ணம் புரட்சிச் செம்மல் என்றும் சமூகப்பற்றாளர் எனவும் கௌரவிக்கப்பட்டுள்ளார். இத்தகைய அன்பும் பண்பும் கருணையும் நிறைந்த குடும்பத்தின் குடும்பதீபமாக விளங்கிய கருணைசீலர் சுசிலாதேவி அம்மையாரின் 'நல்ல அம்மா' என்னும் நாமம் நிலைக்கவும் அவரின் ஆத்மா ஆத்மசாந்தியடையவும் பிரார்த்திக்கிறேன். சைவ வாழ்வியல் பேணுவோம் என்னும் நூல் சைவவாழ்வியல் சிறக்க பயன்பட வேண்டியும் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்
கூட்டுறவுப் பெரியார், எழுச்சித்தந்தை
**ஆர்.எம்.நாகலிங்கம் J.P**
தலைவர் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்
விரிவுரையாளர், பொல்கொல்ல கூட்டுறவுக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாய நம

# உலக சைவப் பேரவை

இலங்கைக் கிளை

**WORLD SAIVA COUNCIL**

**SRI LANKA BRANCH**

No. 9, JAYA ROAD, COLOMBO - 04.
Tel : 2582139 Mobile : 0777 - 656070
E-mail : mknathan21@yahoo.com kthayaparan@sltnet.lk

## சைவ வாழ்வியலைப் பேணுவோம்

மனிதனைச் சமூகத்துக்கு ஏற்ற பிரசையாக உருவாக்குவது சமயம்தான் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. அந்த வகையில் எமது சமயமான சைவ சமயம் மிகவும் புராதனமான சமயம் மட்டுமல்ல பல கலாசார விழுமியங்களையும் பண்பாட்டுத் தளங்களையும் காலம் காலமாகத் தரிசனத்திற்கு தவறாது தருகின்றது. இந்தவகையில் மூதறிஞர் திரு.எம்.நாகலிங்கம் அவர்கள் முயற்சியால் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களை தொகுப்பாசிரியராகக் கொண்டு திருமதி சுசிலாதேவி கணேசமூர்த்தி நினைவாக ''சைவ வாழ்வியல் பேணுவோம்'' என்னும் கருத்தை நூல்வடிவில் வழங்குவது காலத்தின் தேவையைக் கருதியும் அவர் தான் சமயத்தின் மேல் கொண்ட பக்தியையும் பற்றுறுதியையும் வெளிக்காட்டுகின்றது என்றால் மிகையாகாது.

ஏற்கனவே மறைந்தவர்களின் நினைவாக பல நூல்களை வெளியீடு செய்தவர், அண்மைக் காலங்களில் சமய கிரியைகள், மகத்துவ விரதங்கள், விரதங்களை எப்படி விதிமுறைகளுக்கமை வாக கடைப்பிடிப்பது என்பவற்றை இலகு நடையில் பண்டிதர் சி.அப்புத்துரை, சைவப்புலவர் சு.செல்லத்துரை போன்றவர்களின் கருத்துக்களை உள்வாங்கி செயல்படுத்துவது அவர் ஆற்றும் சமயப் பணிக்கு வலுச் சேர்க்கின்றது. வளர்க அவர் பணி என வாழ்த்தி வணங்குகின்றேன்.

வணக்கம்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**மு.கதிர்காமநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## சைவ வாழ்வு பேணுவோம்

நாம் பிறப்பிலே சைவர்களாகத் தமிழர்களாகப் பிறந்திருக் கின்றோம். இதற்குக் காரணம் முற்பிறப்பிலே செய்த புண்ணியம் ஆகும். 'சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது' என்பது மெய்கண்ட சாத்திரம் உணர்த்தும் உண்மையாகும். ஊழ் என்பது முன்பு செய்த வினையாகும்.

எமக்குத் தாயும் தந்தையும் பொல இருப்பவை எமது தமிழ் மொழியும் சைவ சமயமும் ஆகும். தாய் தந்தையர் எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கியவர்கள். ஆதலால் அவர்கள் மீது அன்பு செலுத்தி ஆதரித்து வாழ்கின்றோம். அதேபோல பிறப்பால் எமக்குக் கிடைத்த தமிழ் மொழியையும் சைவத்தையும் போற்றி வாழவேண்டும்.

தமிழ்தான் நாம் மற்றவர்களுடன் அன்பு பாராட்டி, உறவாடி மகிழ்ந்து வாழ்வதற்கு உபகாரமாக இருக்கிறது. அதேபோல நாம் எம்மைப் படைத்த இறைவன் மேல் அன்பு செலுத்தி வணங்கி நல்வாழ்வு வாழ்வதற்கு உபகாரமாயிருப்பது எமது சைவ சமயம் ஆகும். ஆதலால் நாம் சைவ வாழ்வு வாழ்தல் இன்றியமையாததாகும்.

கடவுள் மீது அன்பு செலுத்திப் போற்றி வணங்குவதற்கு நம் அருளாளர்கள் தந்த சைவத்திருமுறைகள் ஆகிய தோத்திரங்கள் உள்ளன. எப்படி வாழவேண்டும் என்பதற்கு நம் சாத்திரங்கள் வழிகாட்டுகின்றன. சாத்திரங்கள் ஆகிய ஆகமங்கள் வடமொழியில் இருந்தாலும் அவற்றையும் நம் அருளாளர்கள் தமிழ் மொழியில் தந்திருக்கின்றார்கள்.

ஆதலால் நமது சமய சாத்திரங்களில் விதித்தபடி கருமங்களைச் செய்து, தோத்திரங்களை ஓதி வாழ வேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள் தனது தேனினும் இனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகத்தில் தன் நெஞ்சுக்குச் சொல்வதுபோல எமக்குச் சொல்கின்றார்.

``வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே, வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய், ஆழாமற் காப்பானை எத்தாதே
சூழ்கின்றாய் கேடு, உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்,
வீழ்கின்றாய் நீ அவலக்கடலாய வெள்ளததே''

வாழவேண்டிய முறையில் சைவவாழ்வு வாழாத நெஞ்சமே, நீ வாழ்கின்றாய் என்று நினைத்துக் கொண்டு இறைவனை மறந்து துன்பக்கடலுள் தத்தளிக்கின்றாய். உனக்குப் பலவழிகளிலும் பெரியோர்கள் சொல்லிவைத்தும் அவர்கள் சொன்னபடி சைவவாழ்வு வாழ்கின்றாய் இல்லையே எனக் கூறி இரங்குகின்றார். நாம் விலங்குகள் போல உண்பதும் உறங்குவதும், உழைப்பதும், இனப்பெருக்கம் செய்வதுமே வாழ்வென எண்ணி அவமே காலத்தைப் போக்குகின்றோம். இந்த வாழ்வின் பயன், கல்வியின் பயனாய்க் கடவுளை வணங்கி வாழ்வின் பயனாய் இறைவனைச் சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுதல் ஆகும் என அறநூல்கள் கூறுகினற்ன.

எப்படி வாழவேண்டுமெனச் சைவவாழ்வியல் கிரியைகள் வழிகாட்டுகின்றன. அவை தாயின் வயிற்றில் கருவான நாள் முதல் இறக்கும் வரை செய்யவேண்டியவற்றைப் பூர்வக் கிரியைகள் என்றும், இறந்த பின் அந்த உயிரின் ஈடேற்றத்துக்காக உறவினர்களால் செய்யப்படவேண்டியவற்றை அபரக்கிரியைகள் என்றும் சொல்லப்படுகின்றன.

எக்கருமத்தைச் (கிரியை) செய்தாலும் எம்மை வாழ்விக்கும் இறைவனை முன்வைத்து வணங்கிச் செய்தல் வேண்டும். அப்போதுதான் நாம் செய்யும் கிரியைகள் நமக்குப் பூரண பலனைத் தரும்.

நாம் சைவ சமயத்தவர், எங்கள் முழுமுதற் கடவுள் சிவபெருமான். நாம் சிவபெருமானை நினைந்து வழிபட்டு வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டுவன சைவக்கிரியைகளும், சைவத்திருமுறைகளும் ஆகும். அவ்விதம் வாழும் வாழ்வே சைவ வாழ்வு ஆகும்.

தாயின் கருவில் இருக்கும் போது கடவுளை நினைந்து இந்தக் குழந்தை நல்லவனாய், வல்லவனாய், வாழ்ந்து இந்த உலகத்தையும் வாழ வைக்க வேண்டும் எனத் திருமுறைகளைப் பாடி வணங்க வேண்டும். அதே போலப் பிறந்தபின் துடக்குக் கழித்துவிட்டு முதலில் குழந்தையைக் குலத் தெய்வக் கோயிலுக்குத்தான் கொண்டு போய் வழிபடுவோம். பின்னர் ஏடுதொடக்குதல், சமயதீட்சை, பெண் பிள்ளை பூப்படைந்த பின் பூப்புனித நீராட்டுதல், திருமணம், வீடுகட்டுதல், குடிபுகுதல் முதலான நற்கருமங்களாகிய பூர்வக்கிரியைகளைச் செய்து திருமுறைகளைக் காலையும் மாலையும் பூசை அறையில் இருந்து எல்லோரும் சேர்ந்து ஓதி வழிபடவேண்டும்.

அதேபோல் ஒருவர் இறந்துவிட்டால் பிரேதக்கிரியை, காடாற்றுதல், அந்தியேட்டி, ஆட்டத்திசவம், வருடத்திவசம் முதலான அபரக்கிரியைகளையும் தவறாது செய்ய வேண்டும்.

புண்ணிய காலங்களில் விரதமிருந்து, திருக்கோயில் வழிபாடு செய்தலும், ஏழைகளுக்குத் தானதருமம் செய்தலும் கோயில் திருப்பணிகள், தொண்டுகள் செய்தலும் வேண்டும். சமய தீட்சை பெற்று, மதுமாமிசம் விலக்கிய சைவ உணவுண்டு விபூதி உருத்திராக்கம் தரித்துத் தினமும் திருமுறை ஓதிச் சிவனை வழிபட்டு வாழும் சைவவாழ்வே பிறவிப் பயனைத் தரவல்லது.

இந்த உண்மையை ஒவ்வொருவரும் நன்குணர்ந்து தற்போது வாழும் வாழ்விலிருந்து படிப்படியாக உயர்ந்து சைவவாழ்வு வாழ்வதற்கு இந்த நூல் சிறந்ததோர் துணையாகவும் வழிகாட்டியாகவும் கிடைத்துள்ளது. இதுவும் ஒரு சிறந்த புண்ணியச் செயலாகும். இந்நூலால் நினைவு கூரப்படும் அமரர் திருமதி சுசிலாதேவி கணேசமூர்த்தி அவர்களின் ஆன்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடேற்றத்திற்குரிய இப்புண்ணியச் செயல் எல்லோராலும் பின்பற்றப்பட வேண்டிய ஒப்பிலா நற்கருமம் ஆகும்.

மானுடப் பிறவிதானும்
வகுத்தது மனம் வாக்குக் காயம்
ஆனிடத்து ஐந்தும் ஆடும்
அரன் பணிக்கு ஆக அன்றோ
வான் இடத்தவரும் மண்மேல்
வந்து அரன்தன்னை அர்ச்சிப்பர்
ஊன் எடுத்து உழலும் ஊமர்
ஒன்றையும் உணரார் அந்தோ!

(சிவஞானசித்தியார் 182)

மனிதப் பிறவி கிடைத்து மனம், வாக்கு, காயம் (உடம்பு) எனும் மூன்றினாலும் பசுவிலிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் பஞ்ச கௌவிய அபிஷேகம் கொண்டு மகிழும் சிவபெருமானுடைய பணிக்கு ஆகும். தேவலோகத்துத் தேவர்களும் பூமிக்கு வந்து சிவபெருமானை வழிபடுவர். இப்பூமியில் உயர்ந்த மனிதப் பிறவியைப் பெற்றிந்தும், இந்த மனிதர் இவ்வுண்மையை அறியாத மூடர்களாக இருக்கிறார்களே.

இவ்வுண்மையை உணர்ந்து எந்நேரமும் சிவபெருமானுடைய திருவடிகளை மனதில் நினைந்து வழிபட்டுச் சிவனடியார்களாகச் சைவவாழ்வு வாழ்வோம்.

சைவப்பெரியார், கலாபூஷணம், சைவப்புலவர்
**சு.செல்லத்துரை**
ஓய்வுநிலை அதிபர்
இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாளர் சுசிலாதேவி அம்மையாரை நினைவுகூருகிறேன்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

(உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான்)

பிறந்த கிராமத்திலும், லண்டனிலும் திருமதி சுசிலாதேவி அம்மையார் வாழ்ந்த 30 வருட இல்லறமெனும் நல்லறத்தில் இனிய பண்பான இரு பிள்ளைகளைப் பெற்று பதிக்கேற்ற பதிவிரதையாக வாழ்ந்து, பிறந்த இரு பிள்ளைகளையும் கோழி குஞ்சுகளை அடைகாப்பது போல ஆரம்பம் முதல் தான் இவ்வுலகை விட்டுப் பிரியும்வரை அன்பையும், பண்பையும், சமய சமூகப் பற்றுடன் மட்டுமல்லாது கல்வியிலும், தன் கணவருடன் சேர்ந்து அவர்களை முன்னேற்றமடையச் செய்தார்.

திருமதி சுசிலாதேவி அம்மையார் செல்விருந்தோம்பி வருவிருந்து காக்கும் பெண்மணியாக, வாழ்நாளில் வாழ்ந்து வானத்தவர்க்கு விருந்தாளியாக அமைந்துவிட்டார். அன்னாரின் மலர்ந்த முகத்துடன் கூடிய கள்ளம் கபடமற்ற வார்த்தைகள் எவரையும் கவர்ந்து திரும்பவும் அவருடன் உறவாட ஒரு ஈர்ப்புச் சக்தியாக அமைந்தது. இனிய உளவாக இன்னாது கூறல் என்பதை மிகவும் நிதானமாகக் கடைப்பிடித்து எப்போதும் நல்லதையே நினைத்து உள்ளத்தில் வெளிப்படுவதை, உதட்டினால் வெளிப்படுத்தும் சிறப்பு அம்சம் கொண்டவர். அவருடய உயிர் பிரிந்ததிலிருந்து இறுதிக் கிரியைவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு வீட்டிற்கு வந்து அஞ்சலி செலுத்திய நண்பர்கள், உறவினர்கள் எண்ணிலடங்கா. இது அவர் சம்பாதித்த நல்ல உள்ளங்கள், அவரில் வைத்திருந்த மரியாதை என்பவற்றை வெளிப்படையாக்கியது.

அன்னாரின் வாழ்வியல் பயணம் குறுகியதானாலும் அவர் செய்த நல்லன எவ்வளவென்பதே முக்கியமானதாகும். ஒரு மனிதன் வாழ்ந்த காலத்தில் எதனைச் சாதித்தான் என்பதே பேசப்படவேண்டிய பொருள். அம்மையாரைப் பொறுத்தவரை, பிறவிப் பெருங்கடல் நீந்துவர் இறைவனடி சேராதார். சுசிலா அம்மையார் என்றும் இறைவனடி சேர்ந்து, எங்கள் மனங்களில் எப்போதும் நீங்காத நினைவுகளாய் இருப்பார். அவர் விட்டுச் சென்ற நல்லனவைகளைப் பின்பற்றி அவருடைய ஆத்ம சாந்திக்கு பிரார்த்தனை புரிவோம்.

**க.சிவஞானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மா சாந்தி அடையட்டும்

2013.02.26 மாசிப்பனியின் மூச்சின் வேகம் குறைந்து விட்டதோ என்னவோ எனக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது உண்மைதான். பகல் 12.30 மணியளவில் நண்பனுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினேன். மறுபுறத்தில் 'ஐயா, வைத்தியசாலையில் அவசர பிரிவில் இருந்து தொலைபேசி வந்திருக்கிறது. உங்களுடன் பின் பேசுகிறேன்' என்பது மட்டும்தான். எனக்குள் நானே தடுமாறினேன். வீட்டிற்கு பலதடவை தொலைபேசி எடுத்தேன். பதில் இல்லை. நிம்மதி இழந்தேன். எதுவும் செய்ய முடியவில்லை. வேண்டும் இறைவனிடம் வேண்டுதல் விடுத்தேன். தப்பான பதில் மட்டும் வரக்கூடாது என்று. ஆனாலும் என் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அக்காவுக்கும் மேலாக நான் அன்புடன் அக்காச்சி, அக்காச்சி என்று நான் ஆசையாக அழைக்கும் என் அக்காச்சி இறைவனிடம் சென்ற செய்தி என்னை திக்குமுக்காடி விட்டது. காரணம் எனக்கும் அக்காச்சி குடும்பத்திற்கும் உரிய உறவு மிகவும் புனிதமானது. நாம் பெயர் சொல்லி அழைக்காத உறவுகள். நமக்குள் இருந்த உறவு உரிமையுள்ள உறவு. எந்த நாளானாலும், எந்த நேரமானாலும் உரிமையுடன் நான் அவர்கள் வீட்டிற்குப் போகும் உறவு. அக்காச்சியின் வீட்டிற்குப் போவதென்றால் எனக்கு மிகவும் ஆனந்தம்தான். வரவேற்பின் அழகிற்கு வார்த்தைகள் இல்லை. எத்தனை மணி நேரமானாலும் சந்தோஷ சங்கீதம் தான் அவர்கள் வீடு.

அண்ணன் நண்பன் மூர்த்தி என்னை அழைப்பது 'ஐயா' என்ற கௌரவப் பெயரால்தான். பிள்ளைகள் என்னை அழைப்பது 'மாமா' என்ற உரிமைப் பெயரால்தான். மருமகளும்கூட ஆனாலும் அக்காச்சி மட்டும் என்னை அழைப்பது தர்மா என்ற தனியுரிமையில் தான். எமக்குள் அப்படி ஒரு உறவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காச்சி அகவை 58ஐ தாண்டினாலும் சிறுவயது குழந்தையின் களங்கமற்ற பேச்சு, குழந்தை சிரிப்பு, செல்லமாக மற்றவர்களை புண்படச் செய்யாத புத்திமதிகள், கோபமாக பேசினாலும் நேர்த்தியான வார்த்தைகள், இப்படி அக்காச்சியைப் பற்றி ஆயிரம் சொல்லலாம். என் அனுபவத்தின் உண்மை இது.

அக்காச்சியின் கணவரைப் பற்றி ஒரேயொரு வார்த்தை சொல்வேன். களங்கமில்லா நெஞ்சினன். பிள்ளைகள் வள்ளுவர் வாசகத்தில் ஒன்று. ''என்ன தவம் செய்தார் இப்பேர்பட்ட பிள்ளைகள் பெறுவதற்கு''. மருமகள், நான் எப்போதும் சொல்வேன் மகள் என்று. இவர்கள் உறவுகள் ஓர் தேன்கூடு.

நண்பர்கள் - கடைசிப் பயணத்தின் சாட்சி. தொலைந்தோரும், காணாமற் போனோரும் ஒன்று கூடிய நாள். இது இக்குடும்பத்தின் சொத்து. கடைசிப் பயணம் - அக்காச்சியின் அன்பைப் பெற காலதேவதை எம்முடன் இருந்து கார்மேகத்தைக் கலைத்து விட்டதால் நான் முழுவதும் வெயில். பயணத்தின் பாதைகள் எங்கும் விரிசல், முடிவில் ஒரு ஆசி. பூமழை பொழிந்தது போல், மல்லிகைப் பூக்களால் ஆசி வழங்கியது போல் ஓரிரு நிமிடங்கள் பனிப்பூக்கள். தேவதூதர்களின் வாழ்த்து மழை மனதில் நிறைவு.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**நாகதர்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Love is God
**LONDON SIVAN KOVIL TRUST**
இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை
Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk

# பிரார்த்தனை மலர்

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்பது வள்ளுவரது திருவாக்காம். மனிதப் பிறப்பு என்பது பலவகைப்பட்ட பிறப்புகளில் நாம் செய்யும் புண்ணியம் காரணமாகக் கிடைக்கும் பிறப்பாகும். இந்த மானுடப் பிறப்பில் பிறந்த நாம் இவ்வையத்துள் வாழவேண்டிய முறைப்படி வாழ்ந்து முக்தியின்பம் பெறும்போது இவ்வாழ்வு பூரணத்துவம் பெறுகிறது. இந்த வகையில் அண்மையில் அமரத்துவம் பெற்ற அமரர் திருமதி சுசிலாதேவி கணேசமூர்த்தி அவர்களை இங்கே குறிப்பிடலாம். அன்பான மனைவியாகவும் பாசமிகு தாயாகவும் அன்பினைப் பொழியும் மாமியாகவும், தனது உயிருக்கும் மேலாக நேசிக்கும் பேரப்பிள்ளைகளின் பாட்டியாகவும் உற்றார் உறவினர் போன்றோர்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மாதரசியாகவும் இருந்து சென்ற 26.02.2013 அன்று எம்பிரானது பாதாரவிந்தங்களைச் சென்று சேர்ந்துவிட்டார். யாழ்ப்பாணத்து கட்டுவனைப் பிறப்பிடமாகவும், தம்பாலையை புகுவிடமாகவும் இலண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த இவரது பண்பினை வார்த்தைகளால் எழுத முடியாது. இவர்கள் இலண்டனில் வாழ்ந்தபோது தமது குடும்பக் கடமைகளோடு சமய பக்தி மிக்கவராகத் திகழ்ந்து இலண்டன் லூயிஷம் பதியுறையும் ஸ்ரீ அருணாசலேஸ்வரப் பெருமான் மீது தீவிரமான பக்தியுடையவராக வாழ்ந்தார். இவ்வாலயம் ஆரம்பமான காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் தமது இறுதிக் காலம் வரையும் இவ்வாலயத்திற்கு வருகை தருவதோடு ஆலய மஹோற்சவத் திருவிழாவை உபயமாக ஏற்று மிகச் சிறப்பாக நடத்தி மகிழ்ச்சி பெறுவது இவரது வழக்கமாகும். இவ்வாறான மாதரசியின் இழப்பு எல்லோருக்கும் ஓர் பேரிழப்பாகும். விருந்தோம்பல் என்பது இவருக்கு உரிய தனிப்பண்பாகும். அன்பினால் எல்லோரையும் அணைத்து அன்னையாக வாழ்ந்த அவரது பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதோடு அமரர் திருமதி சுசிலாதேவி கணேஷமூர்த்தி அவர்களது ஆன்மா இலண்டன் லூயிஷம் சிவபுரம் பதியுறையும் ஸ்ரீ அபிதகுஜாம்பாள் சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரப் பெருமான் பாதாரவிந்தம் சென்று சாந்திபெற வேண்டும் என நாம் எல்லோரும் சேர்ந்து பிரார்த்தனை செய்கிறோம்.

இங்ஙனம்

**ஆலய அறங்காவலர் சபை**
**சிவாச்சார்யார்கள்**
**ஓதுவார் மூர்த்தி**
**சைவக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

எங்களின் குலதீபமாக இருந்து எங்களையெல்லாம் தன்னையே உருக்கி எங்களை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வத்தின் நீங்காத நினைவாக வெளியிடப்படும் ''சைவ வாழ்வியல் பேணுவோம்'' என்னும் இந்நூலினை தொகுத்து வழங்கிய சைவப் பெரியார், கலாபூசணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் தன்னலமற்ற சேவையை பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்நூலானது சைவமக்கள் தமது வாழ்வியற் கருமங்களை அறிவு பூர்வமாக உணர்ந்து கருமமாற்றுவதற்கு ஒரு வழிகாட்டி நூலாக பயன்பெற வேண்டுமென்ற நோக்குடன் வெளியிட்டுள்ளோம். இந்நூலை சைவமக்கள் அனைவரும் வரவேற்று, சைவ வாழ்வியற் பண்பாடு வளம்பெற பயன்படுத்துவார்களென நம்புகிறோம். இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய சைவப் பெரியார் கலாபூசணம், சைவப்புலவர் சு.செலலத்துரை, அணிந்துரை வழங்கிய இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினரும், முன்னாள் கல்வி மேலதிகச் செயலாளருமான உடுவை சி.தில்லைநடராஜா, பிரார்த்தனை உரை வழங்கிய அகில இங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளரும், உலகச் சைவப் பேரவையின் இலங்கைக் கிளையின் பொதுச் செயலாளருமான கலாநிதி மு.கதிர்காமநாதன், பண்பாளர் சுசிலாதேவி அம்மையாரை நினைவு கூருவோம் எனும் தலைப்பில் லண்டன் வாழ் உற்றார், உறவினர், நண்பர்கள் சார்பாக கட்டுரை வழங்கிய சமூகப் பற்றாளர் க.சிவஞானம், சுசிலாதேவி அம்மையார் நினைவாக 'சைவ வாழ்வியல் பண்பாட்டை பேணும் முயற்சி' எனும் தலைப்பில் கட்டுரை வழங்கிய பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரி முன்னாள் விரிவுரையாளரும், புனர்வாழ்வு கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கம், பிரார்த்தனை மலர் வழங்கிய ஆலய அறங்காவலர் மற்றும் சிவாச்சாரியர்கள், ஆத்ம சாந்தி உரை வழங்கிய நாகதர்மா ஆகிய பெரியோர்களிற்கு எங்களின் நன்றியறிதலை பதிவு செய்து கொள்கிறோம்.

இந்நூலைக் குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டு வெளியிட உதவிய கீதா பப்ளிகேஷனுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

அன்புக் கணவர் **ஐ.கணேசமூர்த்தி**
பாசமுள்ள பிள்ளைகள்
**க.திலீப்காந்த், வேணுயா குடும்பத்தினர்**
**க.ஜெயகாந்த்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# விநாயகப்பெருமானுக்கு வணக்கம்



திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகுமா ழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவபெருமானுக்கு வணக்கம்



சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமலட் டானனே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உமையம்மைக்கு வணக்கம்



நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை;
என்றும், வணங்குவது உன் மலர்த்தாள்; எழுதா மறையின்
ஒன்றும் அரும் பொருளே! அருளே உமையே இமையத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!

தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முருகப்பெருமானுக்கு வணக்கம்



மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

சண்முகக் கடவுள் போற்றி
சரவணத்துதித்தாய் போற்றி
கண்மணி முருகா போற்றி
கார்த்திகை பாலா போற்றி
தண்மலர் கடப்பமாலை
தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதனவள்ளி
வேலவா போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருமால் பெருமாளுக்கு வணக்கம்



குலம் தரும் செல்வம் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிரம் தரும் செய்யும்; நீள்விசும்பு அருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலம் தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

அன்றிவ் வுலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச்சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்றுகுணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
ளென்றென்றுன் சேவகமே ஏத்திப்பறை கொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் துதி

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரம் எரித்தோன் புறம் இருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
கார் இருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி

## அம்மன் துதி

ஊன் ஆனாய் உயிர் ஆனாய் உயிரில் உறும் உணர்வானாய்
வான்ஆதி ஐம்பூத வகை எல்லாம் நீ ஆனாய்
தேன் ஆரும் மலர்க் கொன்றைச் சிவம் என்னும் பொருள் ஆனாய்
நான் ஆனாய் உயிற்கு உயிரே ஞானப்பேரொளியுமையே

## துர்க்கா தேவி துதி

இடர் தரு தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே! சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாஷி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி துதி

தாவறு முலகெலாம் தந்த நான் முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்திடும் நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்

## இலக்குமி துதி

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னு நவ ரத்தினம் போல் மேனிய ழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண் புகுந்து வாழ்வோமே

## பைரவக் கடவுள் துதி

பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

## நவக்கிரக தோத்திரம்

### ஞாயிறு

சீலமாய்வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

### திங்கள்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சந்திரா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவில்லாதருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
ஆங்காரஹனே அவதிகள் நீக்கு.

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி.

## வியாழன்

குணமுள்ள வியாழ குருபகவானே
மணமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பரகுருநேசா
கிரகதோஷ மின்றிக் கடாட்சித் தருள்வாய்.

## வெள்ளி

சுக்கிர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே.

## சனி

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே
இச்சகம் வாழ இன்னருள் தாதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராகு


அரவேனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகு கனியே ரெம்மியா போற்றி.

## கேது

கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேது தேவே கேண்மையாய் ரட்ஷி.

## சண்டேசுரர் துதி

அண்டர் பிரானுந்த தொண்டர்
தமக்கு அதிபனாக்கி,அனைத்தும் நாம்
உண்டகலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக்காக
சண்டீசனுமாம் பதந்தந்தோம் என்று
அங்கு அவர்பொற்றட முடிக்குத்
துண்டமதி சேர் சடைக்கொன்றை
மாலைவாங்கிச் சூட்டினார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைக்கு அறிமுகம்

## தேவாரம்

திருஞானசம்பந்தசுவாமிகள் பாடியருளியது - முதல் மூன்று திருமுறைகள். இதற்கு ''திருக்கடைக் காப்பு'' எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இதில் 384 பதிகங்களும் 4159 பாடல்களும் அடங்கும்.

## தேவாரம்

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளியது - நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகள் இதற்கு ''தேவாரமெனப்'' பெயர் வழங்கப்பட்டுள்ளது. இதில் 313 பதிகங்களும், 3045 பாடல்களும் அடங்கும்.

## தேவாரம்

சுந்தரமூர்த்திசுவாமிகள் பாடியருளியது - ஏழாம் திருமுறை இதற்கு ''திருப்பாட்டு'' எனப் பெயர் வழங்கப் பட்டுள்ளது. இதில் 100 பதிகங்களும், 1026 பாடல்களும் அடங்கும்.

## திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளியது - எட்டாந் திருமுறை இது திருவாசகமும், திருக்கோவையாருமாகும். இதில் முறையே 656 பாடல்களும் 400 பாடல்களும் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா திருப்பல்லாண்டு

ஒன்பதாம் திருமுறையைப் பாடியருளியவர்கள் ஒன்பது ஆசிரியர்கள். இதில் திருவிசைப்பாவில் 29 பதிகங்களும், 303 பாடல்களும், திருப்பல்லாண்டில் 13 பாடல்கள் மட்டும் அடங்கும்.

## திருமந்திரம்


திருமூலநாயனார் பாடியருளியது திருமந்திரமாகும். இதில் ஒன்பது மந்திரங்களும், 3350 பாடல்களும் அடங்கும்.

பதினோராம் திருமுறை, பன்னிரண்டு ஆசிரியர்கள் பாடியருளியது. இதில் 40 பிரபந்தங்கள் அடங்கும்.

## பெரியபுராணம்

சேக்கிழார் சுவாமிகள் பாடியருளியது பெரியபுராணமாகும் (திருத்தொண்டர் புராணம்). இதில் இரண்டு காண்டம், பதின்மூன்று சருக்கம், 4253 பாடல்கள் அடங்கும்.

தேவாரங்கள் பாடிய மூவரையும் தேவார முதலிகள் என அழைப்பர். பன்னிரண்டு திருமுறைகளையும் தொகுத்து வழங்கியவர் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியாவார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம் ஓதும் முறை

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் எனும் ஐந்தும் பஞ்சபுராணம் எனப்படும். பஞ்சபுராணம் எனும் தொடர் பழைய காலந்தொட்டு வழங்கி வருகின்றது. பஞ்ச என்றால் ஐந்து என்றும் புராணம் என்றால் புராதன பாடல்கள் என்றும் பொருள்படும். எனவே இது ஒரு தொடராகவே கொள்ளப்படுகின்றது.

சைவசமயத்தவர்களின் தோத்திர நூல்களாக உள்ளவை பன்னிரு திருமுறைகள். அவை முழுவதையும் ஒரே நேரத்தில் ஓதுதல் நடைமுறைச் சாத்தியமில்லை. அதனால் அத்திருமுறைகளிலிருந்து அருளாளர்களால் தொகுத்துத் தரப்பட்டவையே பஞ்ச புராணங்கள்.

தேவாரத்திருமுறைகளாகிய ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரின் முதல் ஏழு திருமுறைகளிலிருந்து ஒரு தேவாரப் பாடலும், எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்திலிருந்து ஒரு பாடலும், ஒன்பதாம் திருமுறையிலிருந்து ஒரு திருவிசைப்பாப் பாடலும், ஒரு திருப்பல்லாண்டுப் பாடலும், பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்திலிருந்து ஒரு புராணமும் ஆக ஐந்து பாடல்கள் தெரிந்தெடுத்து ஓதவேண்டும்.

பஞ்சபுராணம் பாடத் தொடங்கும் போதும் முடிக்கும் போதும் திருச்சிற்றம்பலம் என்று சொல்ல வேண்டும். இதற்குக் காரணம் திருச்சிற்றம்பலம் என்பது சிதம்பரத்தைக் குறிக்கும். திருமுறைகள் சிதம்பரத்தில் உள்ள ஓர் அறையில் இருந்து எடுக்கப்பட்டபடியால் அவற்றை ஓதும் போது நடராசப்பெருமானின் திருவருளை நன்றியுடன் நினைந்து திருச்சிற்றம்பலம் என்று சொல்லிப் பாடுதல் மரபு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் இந்த ஐந்து பாடல்களுடன் முருகப்பெருமானைப் பற்றித் திருப்புகழ் பாடும் வழக்கமும் ஏற்பட்டது. இக்காலத்தில் திருப்புகழைத் தொடர்ந்தும் ''வான்முகில் வழாது பெய்க...........'' எனும் கந்தபுராண வாழ்த்துப் பாடலும் பாடப்படுகின்றது.

ஓதுவார் அல்லது சைவாசாரமுள்ள ஒருவர் இந்த அருட்பாடல்களுக்குரிய பண்முறையில் பாடுவார். பாடி முடிந்ததும் பக்தி சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருக்கும் எல்லா அன்பர்களும் பங்கு பற்றும் வகையில் பின்வரும் ''அருள்வாக்குகளின்'' முற்பாதியை ஓதுவார் சொல்லப் பிற்பாதியை எல்லோரும் சேர்ந்து சொல்லுவார்கள்.

நமபார்வதிபதயே - அரகரமகாதேவா என்பதைச் சில இடங்களில் முதலில் சொல்வதும் உண்டு.

◆தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

◆சிறீசிற்சபேசா
சிவசிதம்பரம்

◆இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க

◆நம பார்வதிபதயே
அரகரமகாதேவா

## இத்தொடர்களின் பொருள்

தென்னாடுடைய சிவனே போற்றி : தென்னாடாகிய தமிழ் நாட்டில் சிவபெருமான் என்னும் பெயருடன் இருக்கும் பெருமானே வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி : எல்லா நாட்டவர்க்கும் இறைவனாக உள்ள பெருமானே வணக்கம்

சிறீசிற்சபேசா : சிறீ, சிற்சபை, ஈசா - வணக்கத்திற்குரிய ஞான சபையின் ஈசனே

சிவசிதம்பரம் : ஞான ஆகாசமான தலத்தில் இருந்தருள் புரியும் சிவனே (சித் ஞானம், அம்பரம் - ஆகாசம், வெளி)

இன்பமே சூழ்க : எவ்விதத்திலும் இன்பமே பொலியட்டும்

எல்லோரும் வாழ்க : எல்லோரும் நல்வாழ்வு வாழட்டும்.

நம பார்வதிபதயே : பார்வதிபதயே நம - பார்வதியின் தலைவனாகவுள்ள சிவனே வணக்கம் (நம வணக்கம்)

அரகரமகாதேவா : மகாதேவா அரகர - மகாதேவனாயுள்ள பெருமானே வணக்கம் வணக்கம்

மூன்று முறை சொல்வது வழக்கம்.

கோயில் பூசையில் மட்டுமன்றி வீட்டில் நடைபெறும் பூசை வழிபாடுகளின் போதும் பஞ்சபுராணம் ஓதல் இடம் பெறுகின்றது. ஒவ்வொரு சைவசமயியும் பஞ்சபுராணம் பாடி வழிபாடு செய்வது இன்றியமையாததாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பன்னிருதிருமுறைகள்

## திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தேவாரம்

## 1,2,3ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தலம் : திருப்பிரமபுரம் பண் : நட்டபாடை

தோடுடைய செவியன் விடையேறி யோர்தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசிஎன் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவியபெம்மா னிவனன்றே.

**உரை:** *காதில் தோடணிந்து, இடபவாகனத்தில் ஏறி, பிறைச்சந்திரனைச் சூடி, சுடுகாட்டுச் சாம்பரைப் பூசி என்னுள் ளத்தைக் கவர்ந்த கள்வன். இதழ்களையுடைய தாமரை மலரில் இருக்கும் பிரமன் முன்பு பணிந்து வணங்க அருள் செய்த பெருமை மிக்க பிரமாபுரத்தில் இருக்கும் பெருமான் இவனே.*

தலம் : திருவண்ணாமலை பண் : தக்கேசி

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கருள் செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே.

**உரை:** *திசைகள் அதிரவரும் பெருமழையின் இரைச்சல் கேட்டு அச்சங்கொண்ட யானைக் கூட்டங்கள் மலைச்சாரலில் ஒதுங்குகின்ற திருவண்ணாமலையில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானை அடியார்கள் மலர்கொண்டு தொழுவார். தேவர்கள் புகழ்வார்கள். முப்புரங்களை நீறாக்கி மலைகளாகி நின்ற அசுரர்களுக்கும் அருள்புரிந்த பெருமான் அவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : பொது பண் : கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

***உரை:*** *அந்தணர், தேவர், பசுக்கள் வாழ்க! மழை மண்ணில் வீழ்க! மன்னன் உயர்க! தீமைகள் அழிக! எல்லாம் சிவன் நாமமே சூழ்க! உலகமும் துயர்தீர்க!*

தலம் : திருவாவடுதுறை பண் : காந்தார பஞ்சமம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல் தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே

***உரை:*** *திருப்பாற்கடலில் அமுதுடன் வந்த நஞ்சை உண்டு, தொண்டையில் அடக்கிய திருவாவடுதுறைப் பெருமானே, எமக்குத் துன்பம் வந்து தளர்ந்தாலும் நோய் தொடர்ந்தாலும் உன் திருவடிகளைத் தொழுவோம். அப்படிப்பட்ட எம்மை இதுதானோ நீ ஆட்கொள்ளும் முறை. எமக்குத் தருவதற்கு ஒன்றும் இல்லையானால் இதுதான் உனது அருளோ.*

தலம் : திருவாலவாய் பண் : காந்தார

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலு ள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை:** நினைப்பதைச் சிந்திக்கவைக்கும் மந்திரமாய் இருப்பது திருநீறு; தேவர்களுக்கும் மேலானது திருநீறு; அழகாயிருப்பது திருநீறு; வணங்கப்படத்தக்கது திருநீறு; வேதமாயிருப்பது திருநீறு; சைவ சமயத்தின் உண்மைப் பொருளாயிருப்பது திருநீறு; சிவந்த பவளம் போன்ற வாயையுடைய உமாதேவி பகராகிய திருவாலவாய்ப் பெருமானின் திருநீறே அது.

தலம் : நமச்சிவாயத் திருப்பதிகம் பண் : கௌசிகம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார் தமை நன்நெறிக்கு ய்ப்பதும்
வேத நான்கினு மெய்ப்பொருள் ஆவது
நாதனாம நமச்சிவாயவே

**உரை:** சிவபெருமானின் மீது அன்பு கொண்டு உள்ளம் கசிந்து, ஆனந்தக் கண்ணீர் வடிய ஓதுபவர்களை முக்திநெறியில் சேர்ப்பது, நான்கு வேதங்களின் மெய்ப்பொருளாய் இருப்பது, சிவபெருமானின் பெயராக விளங்கும் நமச்சிவாயவே ஆகும்.

தலம் : திருப்பழனம் பண் : தக்கேசி

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியினு ரிதோலார்
நாதா வெனவும் நக்காவெனவும் நம்பா என நின்று
பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே

**உரை:** வேதத்தை ஓதி, வெண்ணூல் அணிந்து, வெள்ளை இடபத்தில் ஏறி, பூதப்படைசூழ வருகின்றவரும், புலித் தோலை அணிந்தவருமான திருப்பழனத்தில் இருக்கும் சிவபெருமானை, நாதா! நக்கா!நம்பா!என்று தொழுபவர்களின் பாவங்களைத் தீர்ப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்
# 4,5,6 ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தலம் : திருவதிகைவீரட்டானம் பண் : கொல்லி

கூற்றாயின வாறு விலக்ககிலீர், கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும், பிரியாது வணங்கு னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே, குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில, வீரட்டா னத்துறை யம்மானே.

**உரை:** *திருவதிகை வீரட்டானத்துறைப் பெருமானே, உன்னை என்றும் பிரியாது வணங்குவேன். நான் எந்தக் கொடுமையும் செய்யவில்லை. என் வயிற்றினுள்ளே குடல்களை இறுக்கிப் பிழிந்து துடக்கி முடக்கி வருத்தும் இந்த நோயைத் தாங்க முடியவில்லை. எனக்கு எமனாகி வந்த இந்தச் சூலை நோயை மாற்றி அருள்வீர்.*

தலம் : திருவையாறு பண் : காந்தாரம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறி யாதன கண்டேன்

**உரை:** *கங்காதேவியையும், பிறையையும், கொன்றைமாலையையும் சடையிலணிந்த பெருமானை. மலையான் மகளான உமாதேவியாரோடும் பாடிப், பூவும் நீரும் கொண்டு வணங்கப் போகின்றவர் பின்னே நானும் போவேன். எவ்வித அடையாளமுமின்றித் திருவையாற்றை அடைந்த நான், காதல் கொண்ட பெண் யானையும் ஆண் யானையும் சேர்ந்து வருவதைக் கண்டேன். இதுவரை கண்டறியாத கயிலைக் காட்சியைக் கண்டேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : பொது திருநேரிசை

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறைய நீ ரமையஆட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

**உரை:** *இந்த உடலே கோயிலாக, மனம் அடிமையாக, வாய்மை தூய்மையாக மனமே இலிங்கமாக, அன்பே நெய்யும் பாலுமாக அபிசேகம் நிவேதனம் செய்து ஈசனை என்னுள்ளே வணங்கினேன்.*

தலம் : திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே.

**உரை:** *இவ்வுலகில் உன்னைத் தொழுவார்க்கு அருள்புரிவதற்காகக் கங்கையைச் சடையில் தாங்கித் திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளி இருக்கும் சோதி மயமான பெருமானே, நான் புழுவாய்ப் பிறந்தாலும் உனது திருவடிகளைத் தவறாமல் நினைக்கின்ற வரத்தைத் தா.*

தலம் : பொது தனித்திருக்குறுந்தொகை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நிழலே

**உரை:** *என் தந்தையாகிய ஈசனின் திருவடி நிழல், வீணையின் இனிமையான இசையும், மாலைச்சந்திரனும், தென்றற்காற்றுவீசும் இளவேனிற் காலமும், வண்டுகள் ரீங்காரமிடும் தாமரைத் தடாகமும் போன்று இன்பமாய் இருந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : திருவாரூர் திருத்தாண்டகம்

நிலைபெறுமா றெண்ணிதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே

**உரை:** *என் மனமே இங்கே வா! நீ என்றும் நிலையாக இன்புற்று இருக்கவேண்டுமானால் கேள், தினமும் எம்பெருமானின் கோயிலுக்குப் போய் விடியுமுன் கூட்டி மெழுகி, பூமாலை தொடுத்துக் கொடுத்துப் புகழ்ந்து பாடி, தலை வணங்கிக் கும்பிட்டு ஆனந்தக் கூத்தும் ஆடி சங்கரா சயசய போற்றி என்றும், அலையெறியும் கங்கைசேர் செம்சடையாய் எம் ஆதிப்பிரானே, ஆரூர் பெருமானே என்றும் அழுதழுது தொழுது நிற்பாயாக.*

தலம் : திருவையாறு திருத்தாண்டகம்

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

**உரை:** *திருவையாற்றில் என்றும் உள்ளவரே, செம்பொன் சோதிமயமாய் உள்ளபெருமானே, ஓசை ஒலியெலாம் ஆனவன் நீயே, உலகிற்கு என்றுமுள்ள ஏகனாயுள்ளவன் நீயே. பேசுவதற்கு இனியவன் நீயே, என் தலைவனாய் எனக்குத் திருவடி தீட்சை தந்தவன் நீயே! உலகம் முழுவதற்கும் ஒளியாய் உள்ளவனும் நீயே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : திருவாவடுதுறை                                   திருத்தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவே என் னுறவே என்ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.

***உரை:*** *திருவாவடுதுறையுறையும் தேவாதிதேவனே, திருவே, என் செல்வமே தேனே, தேவர் தம் தெய்வமே, ஞானச் சோதி வடிவினனே, என் உறவே, என் ஊனே, ஊனின் உட்பொருளே, அதன் கருப்பொருளே, கற்பகமே, கண்ணே, கண்ணின் கரு மணியே, கண்மணியின் பாவையே, என்னைக் கொடியவினைத் துன்பத்தினின்றும் காத்தருள்வாய்.*

தலம் : பொது                                   திருத்தாண்டகம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்னுள்ளம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

***உரை:*** *தந்தை நீ, தாயும் நீ, தலைவனும் நீ, அன்பான மாமனும் மாமியும் நீ, மனையாளும், பெரும் செல்வமும் நீ, என் குலமும், சுற்றமும் நீ, என் ஊரும் நீ, நான் உண்பனவும் நுகர்வனவும் நீ, தருபவன் நீ, என் பற்றுக்களை அறுப்பவன் நீ, இப்பொன் நீ, இம்மணி நீ, இம்முத்தும் நீ, என் இறைவனும் நீ, இடபவாகனத்தில் வ:ரும் பெருமானும் நீயே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : பொது திருத்தாண்டகம்

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணி றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே

**உரை:** *சிவநாமம் ஆகிய ஐந்தெழுத்தை ஓதாராகில், சோதிமயமான சிவபெருமான் புகழைப் பேசாராகில், தினமும் திருக்கோயில் வலம் வராராகில், உண்பதன் முன் மலர் இட்டு வணங்கி உண்ணாராகில், கொடிய நோய்தீர வெண்ணீறு அணியாராகில் அப்படிப்பட்டவர் ஏன் பிறந்தார்களோ என்னில், பெருநோய்கள் மிகவருத்தச் செத்தும் பிறந்தும் உழல்வதையே தொழிலாக இருக்கிறாரே.*

தலம் : பொது திருத்தாண்டகம்

சங்கநிதி பதுமநதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே

**உரை:** *சங்கநிதி, பதுமநிதி எனப்படும் குபேரச் செல்வம் எல்லாம் தந்து இந்த உலகையே ஆள்வதற்குத் தருவாரேனும், சிவனில் அன்பில்லையானால் அச்செல்வங்களை மதிக்கமாட்டோம். உடலெல்லாம் அழுகிவிழும் தொழுநோயராய்ப், பசுவை உரித்துண்ணும் பாவிகளாயினும் கங்கையைச் சூடிய பெருமானுக்கு அன்புடையவராகில் அவரே நாம் வணங்கும் கடவுளாவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : பொது

திருத்தாண்டகம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலை யில்லோம்,
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை.
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

***உரை:*** *நாம் யார்க்கும் அடிமைகள் அல்ல, இயமனுக்கும் அஞ்சமாட்டோம் நரகத் துன்பமும் அடையமாட்டோம். ஏளனத்துக்காளாக மாட்டோம். இறுமாந்திருப்போம். துன்பத்தை அறிய மாட்டோம். பணியவும் மாட்டோம். எந்நாளும் இன்பமன்றித் துன்பமில்லை. தாம் யார்க்கும் தாழ்வில்லாத பெருமையுடைய சங்கரன் சங்கினாலான குண்டலத்தை ஓர் காதில் அணிந்த கோமானுக்கு நாம் என்றும் மீளாத ஆளாய் மலர் போன்ற அவர் திருவடிகளையே சேர்வோம்.*

தலம் : திருக்குறுக்கை

திருநேரிசை

காப்பதோர் வில்லும் அம்புங் கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதி நீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கை வீரட்டனாரே

***உரை:*** *ஒருகையில் காவலுக்குரிய வில்லும் அம்பும் ஏந்தி, மறுகையில் இறைச்சித் தொனனையைத் தாங்கி, காலில் தோல் செருப்புடன் வாயில் அபிஷேக நீர், கொணர்ந்து அபிஷேகித்துப், பெருமானின் அக்கினி மயமான கண்களில் இரத்தம் வடியக் கண்டு, தன் கண்ணைத் தோண்டி அப்பிய கண்ணப்பர்க்கு அருள்புரிந்தார் திருக்குறுக்கை வீரட்டப் பெருமான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : தில்லை திருக்குறுந்தொகை

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே

***உரை:*** *அன்னம் சுரக்கும் தில்லைச் சிற்றம்பலம் பொன்னும் பொலியும் இப்பூமியில் என் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புற இன்னும் இப்பிறவி வருமோ வரவேண்டும்.*

தலம் : பொது திருத்தாண்டகம்

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே

***உரை:*** *ஆட்டுவித்தால் ஆடாதவர் யார்? அடக்குவித்தால் அடங்காதார் யார்? ஓட்டுவித்தால் ஓடாதார் யார்? உருகுவித்தால் உருகாதார் யார்? பாட்டுவித்தால் பாடாதார் யார்? நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் காட்டாவிட்டால் யார்தான் காண்பார்கள்.*

தலம் : பொது திருத்தாண்டகம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை:** *எம்பெருமான் திருவடியே எ்ணுவதன்றி வேறு எதை எண்ணுவேன். பெருமானின் திருவடிகளைத் தொழுது காண்பதேயன்றி வேறு எதையும் காணேன், காணத் துணையுமில்லை, எனக்குள்ளே ஒன்பது வாயில்களை வைத் தாய். அவற்றை அடைக்கும் போது எதையும் உணரமாட்டேன். திருப்பூம்புகலூரில் எழுந்தருளியுள்ள பெருமானே உன் திருவடிகளுக்கே வருகின்றேன்.*

தலம் : நமச்சிவாயப் பதிகம் பண்: காந்தார பஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே

**உரை:** *சொல்லுக்குத் துணையான வேதியனாயுள்ளவனும், சோதிமயமான தேவனும், பொன்போன்ற திருவடி களையுடையவனுமான சிவபெருமானை இருகைகளும் கூப்பி வணங்க, கல்லோடு கட்டிக் கடலிலே போட்டாலும் நல்ல துணையாக நின்று காவல் காக்கவல்லது அவரது நல்ல நாமமான நமச்சிவாய மாத்திரமேயாகும்.*

தலம் : திருமறைக்காடு பண்: காந்தார பஞ்சமம்

பண்ணினேர் மொழியாளு மைபங்கரோ
மண்ணினார் வலஞ்செய் மறைக்காடரோ
கண்ணினாலு மைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே

**உரை:** *இனிய பண்ணின் இசைபோன்ற மொழிகளைப் பேசுகின்ற உமாதேவியின் தலைவரே, மண்ணில் உள்ளவர்கள் வலம் செய்து வணங்குகின்ற திருமறைக் காட்டும் பெருமானே, கண்ணினால் உங்களைப் கண்டுவணங்குவதற்குப் பூட்டப்பட்டிருக்கின்ற திருக்கோயிற் கதவுகளைத் திறந்து அருள்புரிய வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்
# 7ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தலம் : திருவெண்ணெய் நல்லூர் பண் : இந்தளம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே

**உரை:** *பித்தனே, பிறைசூடிய பெருமானே, அருளாளனே எந்த நேரமும் மறவாமல் உன்னையே நினைக்கின்றேன். நீயும் உன்னை என் மனத்துள் வைத்தாய். பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் உள்ள திருவருட்துறைத் தலத்தில் எழுந்தருளியுள்ள என் தந்தையே உனக்கு நான் வழிவழித் தொண்டன் (அடிமை) ஆகிவிட்டேன் இனி எக்காலமும் அல்லவென்ன மாட்டேன்.*

தலம் : திருமழபாடி பண் : நட்டராகம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

**உரை:** *பொன்மயமான மேனியை உடையவனே புலித்தோலை அரையில் அணிந்து, மின்னல் போன்ற செஞ்சடையில் கொன்றைமாலை அணிந்தவனே, என் மன்னனே, மாமணியே, திருமழபாடியுள் மாணிக்கமே, தாயானவனே உன்னையல்லால் இனி வேறு எவரையும் நினைக்க மாட்டேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : திருப்புகலூர் பண் : கொல்லி

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ் சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும் ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுற வில்லையே

**உரை:** *புலவர்களே! தம்மைப் புகழ்ந்தும் சார்ந்தும் போற்றினும் தொண்டர்களுக்கு எதுவும் தராத பொய் மனிதரைப் பாடாதீர்கள். எந்தை திருப்புகலூர்ப் பெருமானைப் பாடுங்கள். அவர் இம்மைக்கு வேண்டிய உணவும் உடையும் தந்து அம்மையில் சிவலோகப் பேற்றையும் தருவார். சந்தேகம் இல்லை.*

தலம் : திருவாரூர் பண் : கொல்லிக்கௌவானம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

**உரை:** *தில்லைவாழ் அந்தணரின் அடியார்க்கும் அடியேன். திருநீலகண்டர் எனும் குயவனார்க்கும் அடியேன். இல்லையென்னாது சிவனடியார்க்குத் தன் மனையாளையே கொடுத்த இயற்பகையார்க்கும் அடியேன். இளையான் குடிமாறனுக்கும் அடியேன். வெல்லற்கரிய மெய்பொருள் நாயனார்க்கும் அடியேன். சோலைசூழ் குன்றையூர் விறன்மிண்டர்க்கும் அடியேன். முல்லை மலர் சூடும் அமர் நீயார்க்கும் அடியேன். திருவாரூர்ப் பெருமானுக்கும் அடியேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : திருக்கச்சியேகம்பம் பண் : தக்கேசி

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடையானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே

***உரை:*** *ஆலகால விடந்தனை விரும்பியுண்டவனை, எமக்கு ஆதிப் பொருளானவனை, தேவர்களும் தொழுது போற்றும் பெருமைக்குரியவனை, சிந்திப்பார் சிந்தையில் இருப்பவனை, வாசனைகமழும் கூந்தலையுடைய உமையம்மை என்றும் வழிபடும் காலகாலனாயுள்ளவனை கச்சியேகம்பத்துள்ளா னனைக் காண்பதற்கு நான் கண்கள் பெற்றபேறு பெற்றேன்.*

தலம் : திருப்பாண்டிக்கொடுமுடி பண் : பழம்பஞ்சுரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தே னினிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதே த்துஞ் சீர்க்கரையூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனை நான்மறக்கினுஞ் சொல்லு நா நமச்சிவாயவே.

***உரை:*** *உனையன்றி வேறெதிலும் பற்றுவைக்காமல் உன்திருவடிகளையே மனதில் வைத்து வணங்குகின்றேன். உன்னருள் பெற்ற காரணத்தால் இனிப்பிறவாதநிலை அடைந்தேன். கற்றவர்கள் தொழுது வணங்குகின்ற திருக்கறையூரில் பாண்டிக்கொடு முடித் தலத்தில் எழுந்தருளியுள்ள நல்லத்தவத்தின் பேறாயுள்ளவனே உன்னை நான் மறந்தாலும் என்னுடைய நா நமச்சிவாய எனும் உன்நாமத்தை ஓதிக்கொண்டேயிருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் 8ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தலம் : திருப்பெருந்துறை — இராகம் : மோகனம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த் (து)
உன் விரை யார்கழற்(கு) என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்(து) உன்னைப் போற்றி
சய சய போற்றி யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே

***உரை:*** *உடலெல்லாம் மயிர்க்கூச்செறிந்து புளகாங்கிதமடைந்து உன்னு டைய திருவடிகளுக்கு என் தலையிற்கைகள் கூப்பி ஆனந்தக் கண்ணீர் சொரிய, உள்ளம் பொய்மை நீங்கி உன்னைப் போற்றி சயசய போற்றி என்று வாயார வாழ்த்திக் கைநெகிழவிடாமல் பிடித்தேன், என்னை ஆட் கொண்ட பெருமானே என்னைக் காத்தருள்வாய்.*

தலம் : உத்தரகோசமங்கை — இராகம் : மோகனம்

கடையவனேனைக் கருணையினால்
கலந்(து) ஆண்டு கொணட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தேல்
உடையவனே மன்னும் உத்தரகோச
மங்கைக்கு(கு) அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை:** *கடையவனாகிய என்னை உனது கருணையினால் ஆட்கொண்ட இடபவாகனனே என்னைக் கைவிட்டிடாதே. புலித்தோலை அணிந்தவனே, உத்தர கோசமங்கைப் பதியில் எழுந்தருளியுள்ள அரசே, சடாமுடியை உடையவனே, நான் தளர்ந்தேன் என்னைத் தாங்கிக் கொள்வாய்.*

தலம் : திருவண்ணாமலை இராகம் : மோகனம்

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்(து) அழுத்தி வனைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

**உரை:** *கல்லாத இழிந்த நாயினும் கடைப்பட்ட என்னை, திருப்பெருந் துறையில் வல்லாளனாய் வந்து, தெய்வப் பித்தேற்றி, கல்போன்ற என் மனதைப் பிசைந்து கனியச் செய்து, தன் கருணையாகிய வெள்ளத்தில் அழுத்தி என் பாவவினைகளைப் போக்கிய குருவைத் தில்லை சிதம்பரத்தில் உள்ள இடபவாகனனை அம்மானை பாடித் துதிப்போம்.*

தலம் : தில்லை இராகம் : மோகனம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கு அரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு என்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

**உரை:** *பூசுவது திருநீறு, பூண்பது பாம்பு, பேசுவது திருவாய் வேதம் போலும், பூசுவதும், பேசுவதும், பூண்பதுவும் கொண்டதேன். எவ்வுயிர்க்கும் ஈசன் ஆகிய அப்பெருமானின் கருணையே அது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : திருப்பெருந்துறை இராகம் : மோகனம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்(து) உரைக்கேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே

**உரை:** *பூமியிலும் ஆகாயத்திலும் பரந்துள்ள எம்பரனே, உன்னையன்றி வேறெதிலும் எனக்குப் பற்றில்லை. சிவபுரத்தில் செம்மையான அரசே இங்கு திருப்பெருந்துறையில் வந்தருளியவனே. என்னை ஆட்கொண்ட நீ அருளவில்லையா னால் நான் யாரை நோவேன். யாரிடம் சொல்வேன். கடல் சூழ்ந்த இந்த உலகில் இனி வாழமாட்டேன். உன்னிடம் வருக என்று அருள் புரிவாயே.*

தலம் : திருப்பெருந்துறை இராகம் : மோகனம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத்(து) அயனு(ம்) மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே

**உரை:** *சோதிவடிவானவனே, உலகெலாம் ஒளிவிளக்கானவனே, சுருண்ட கூந்தலையும், பணைத்த மார்பகங்களையுமுடைய உமையம்மையின் பாதியாயுள்ளவனே, பரமனே, பால் வெண்ணீற்றனே, தாமரையில் உறையும் பிரமனும், மாலும் அறியாத நீதியே, திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலிலே குருவானவனே, என் ஆதிப்பரம்பொருளே, அடியேன் அன்புடன் அழைத்தால் என்னஎன்று கேட்டு அருள்வாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : திருப்பெருந்துறை இராகம் : மோகனம்

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்(கு) உண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

**உரை:** *என்னை ஆட்கொண்டு என் உடலும் உயிரும் உடைமைகளையும் அருள்மலையாகிய நீயே ஏற்றுக்கொண்டாயே. எட்டுத் தோள்களும் மூன்று கண்களும் உடைய பெருமானே, இன்று எனக்கு இடையூறு ஏற்படுமோ, நீ எனக்கு நன்மை செய்வாய். தீமை செய்வாய் எதற்கும் நான் பொறுப்பாளியல்ல. எல்லாம் உன் செயலே.*

தலம் : திருப்பெருந்துறை இராகம் : மோகனம்

வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்(பு) இறப்பு சிவம்
வேண்டார் தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை இறை தாள்
பூண்டேன் புறம் போகேன் இனிப்
புறம் போகல் ஒட்டேனே.

**உரை:** *புகழ், செல்வம், மண்ணுலகு, விண்ணுலகு, பிறப்பு, இறப்பு எதுவும் வேண்டேன். சிவபெருமானை வேண்டாதாரைத் தீண்டவும் மாட்டேன். திருப்பெருந்துறைப் பெருமானின் திருவடிகளையே சேர்ந்தேன். இனி வேறெங்கும் போகேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : திருத்தோணிபுரம் இராகம் : மோகனம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே

***உரை:*** *அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பில் விளைந்த அமுதமே, பொய்மையைப் பெருக்கி வாழ்நாளை குறைக்கும் புழுத்தலைப் புலையனாகிய எனக்கு செம்மை யான சிவபதம் தந்த செல்வமே சிவபெருமானே இம்மையில் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன். நீ என்னை விட்டு இனிப் பிரிய மாட்டாய்.*

தலம் : திருத்தோணிபுரம் இராகம் : மோகனம்

பால்நினைந்(து) ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளு(து) இனியே

***உரை:*** *பிள்ளையின் பசியறிந்து பாலூட்டும் தாயிலும் பார்க்க இரங்கி நீ பாவியாகிய என்னுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி, ஒப்பில்லாததாகிய ஆனந்தத் தேனைச் சொரிந்து என் பின்னால் தொடர்ந்த செல்வமே சிவபெருமானே, நான் உன்னைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன், இனி நீ என்னை விட்டு விலகமாட்டாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : திருக்குற்றாலம் இராகம் : மோகனம்

உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்(து) அமர்ந்துறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே

**உரை:** *என் சுற்றத்தவரையோ, ஊரையோ, பேரையோ, கற்றாரையோ, நான் விரும்பவில்லை. நான் கற்றதும் போதும், குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள கூத்தனே, உன் திருவடிகளுக்கு கன்றை ஈன்ற பசுவின் மனம்போல உள்ளம் உருகி வேண்டுகின்றேன்.*

தலம் : தில்லை இராகம் : மோகனம்

கண்கள் இரண்டும் அவன் கழல்
கண்டு களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம் வாழ்வில் என்
வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு
மாறும் மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்ப்பாதம்
இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ(டு)
ஆடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டி நல் நாடுடையான் படை
ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண் களி கூர்வதோர் வேதகம்
வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படும் ஆயிடிலே

**உரை:** *தன் அன்பு வலையால் எனைக் கவர்ந்து பிடித்த சிவபெருமான் வந்து வெளிப்படாவிட்டால் என் இரண்டு கண்களும் அவன் திருவடிகளைக் கண்டு களித்திருக்க முடியாது. பெண்கள் வாழ்வில் என் வாழ்வு கலந்து இழிவடைதல் நிகழாது மீண்டும் பிறக்கின்ற இழிநிலை வராது. திருமால் பிரமனும் அறியா மலர்பாதத்தை வணங்கி இருக்க முடியாது. பண்ணுடன் பாடி ஆடும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. பாண்டி நாடுடைய பெருமானின் அருளாட்சியைப் பாடியிருக்கவும் முடியாது. விண்ணோரும் விரும்பும் பேரின்பமும் கிட்டி இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவிசைப்பா
# 9ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தலம் : தில்லையம்பலம் பண் : பஞ்சமம்

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

***உரை:*** *ஒளிர்வளர் விளக்கே ஒப்பிலாத பொருளே, உணர்வைக் கடந்த உணர்வே, தெளிந்த பளிங்கு போன்ற இரத்தின மலையே, மனதுள் இனிக்கும் தேனே, அன்புள்ளத்தில் ஆனந்தக் கனியே, திருவம்பலம் ஆடரங்காக அருட்கூத்தாடும் உன்னை தொண்டனாகிய யான் எப்படிச் சொல்வேன்.*

தலம் : திருவீழிமிழலை பண் : பஞ்சமம்

ஏகநா யகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே

***உரை:*** *ஏகத்தலைவனை, தேவர்க்கு அரசை, என் உயிர் அமுதை, ஒப்பில்லா இன்ப நாயகனை, திருமாலுக்கு அருள் செய்து மேகத்தையே பல்லாக்காக கொண்ட மேகநாயகனை திருவீழிமிழலையில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உள்ள ஆகாயமளவு உயர்ந்த கோயிலில் இருக்கும் யோக நாயகனை அன்றி வேறெதுவும் உண்டென நான் உணரமாட்டேன்.*

தலம் : *திருவீழிமிழலை* பண் : பஞ்சமம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர்மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

***உரை:*** *படித்தவர்கள் விரும்புகின்ற கற்பகக்கனி போன்றவனை, எல்லையில்லா கருணைக் கடலை, மற்றவர் அறியாத மாணிக்கமலை போன்றவனை, மதிப்பவர் மனத்திலுள்ள மணிவிளக்கை, முப்புரங் களை எரித்த எம்சிவனைத், திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் மன்ன வனைக் கண்டு கண்டு என் உள்ளம் குளிரக் கண்களும் குளிர்ந்த னவே.*

தலம் : *திருவாரூர்* பண் : பஞ்சமம்

பத்தியா யுணர்வோ ரருளைவாய் மடுத்துப்
பருகு தோறமுத மொத்தவர்க்கே
தித்தியா இருக்குந் தேவர்காளி வர்தந்
திருவுரு விருந்தவாபாரீர்
சத்தியாய்ச் சிவமாயுல கெலாம் படைத்த
தனிமுழு முதலுமாயதற்கோர்
வித்துமா யாரூராதியாய் வீதிவிடங்கராய்
நடங்குலாவினரே

***உரை:*** *பக்தியாய் உணர்வோர் அருளை உண்டு பருகும்தோறும் அமுதம் ஒத்து அவர்க்குத் தித்திக்கும் தேவாதி தேவன் திருவுருவத்தைப் பாருங்கள். சக்தியாயும், சிவமாயும் உலகெலாம் படைத்த தனிமுதலுமாய் அதற்கு ஓர் வித்துமாய் திருவாரூர்ப் பெருமானாய் வீதி விடங்கர் நடம்புரிகிறார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சேந்தனார் திருப்பல்லாண்டு
# 9ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தலம் : தில்லை பண் : பஞ்சமம்

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெலாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்அடி
யோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்தபித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

**உரை:** *தில்லைத்தலம் நிலைபெறுக, பக்தர்கள் வளர்க, வஞ்சகர்கள் அகலுக, பொன்மண்டபத்துள்ளே புகுந்து உலகமெலாம் விளங்க, அன்ன நடையுடைய உமையவள் மணாளனாகிய சிவன் அடியோமுக்கு அருள்புரிந்து பிறவிப்பிணி தொடராவண்ணம் வாழ்வளித்த பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம்.*

தலம் : தில்லை பண் : பஞ்சமம்

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்(கு)ஆட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரை:*** *ஆணவச் செருக்குடையோர் போங்கள், மெய்யடியார்கள் விரைந்து வாருங்கள், வாங்கியும் கொடுத்தும் பரம்பரையாக ஈசனுக்குத் தொண்டு செய்யுங்கள். தொண்டர் கூட்டத்தில் சேருங்கள். அண்டங்கடந்த அளவில்லா ஆனந்தப் பொருளாய், அன்றும், இன்றும், என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டு கூறுவோம்.*

தலம் : தில்லை பண் : பஞ்சமம்

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழறஉழறி
உமைமண வாளனுக்(கு) ஆட்
பாரும் விசும்பும் அறியும்பரிசு
நாம் பல்லாண்டு கூறுதுமே.

***உரை:*** *சிறப்பும் செல்வமும் பொலியச் சிவலோக நாயகனாகிய சிவபெருமானின் திருவடிக்கீழ் யாரும் பெறாத அறிவைப் பெற்றேன். நான் பெற்ற பேற்றை யார்தான் பெறுவார். ஊரும் உலகும் அறியும் வண்ணம் உமைமணவாளனுக்கு ஆட்படுபவனுக்கே பல்லாண்டு கூறுவோம்.*

தலம் : தில்லை பண் : பஞ்சமம்

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரை:*** *குழந்தையாயிருந்த உபமன்யு முனிவர் பால் வேண்டி அழ திருப்பாற் கடலை கொடுத்த பெருமான், திருமாலுக்குச் சக்கரப் படையைக் கொடுத் தவன். தில்லை மூவாயிரவர், செறிந்து வாழும் தில்லைச்சிற்றம்பலத்தில் அருள்பாலித்து ஐந்தொழில் நடனம் ஆடும் பெருமானுக்கு பல்லாண்டு கூறுவோம்.*

தலம் : தில்லை — பண் : பஞ்சமம்

எந்தை யெந்தாய் சுற்றமுற்று மெமக்கமு
தாமெம் பிரானென்றென்றுமே
சிந்தை செய்யுஞ் சிவன் சீரடியா
ரடிநாய் செப்புரை
அந்தமி லானந்தச் சேந்த னெனைப்புகுந்
தாண்டுகொண்ட டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று
பல்லாண்டு கூறுதுமே.

***உரை:*** *என் தந்தையும் தாயும் சுற்றமுமாகி எமக்கு அமுதுமானவன் என்ற நித்தமும் சிந்தித்துத் தொழுகின்ற சிவனடியார்களின் அடிமை நாயாகிய அந்தமில்லா ஆனந்தம் பெற்ற சேந்தன் ஆகிய என்னை ஆட்கொண்டு என்னுயிரைப் பிடித்த மலபந்தங்களை நீக்கிய பெருமானே உனக்குப் பல்லாண்டு கூறி வாழ்த்துவேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமூலர் திருமந்திரம்
# 10ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வமும்
ஒன்று கண்டீர் உலகுக்கு உயிர் ஆவது
நன்று கண்டீர் இனிநமச்சிவாயப் பழம்
தின்று கண்டோர்க்கு இது தித்தித்தவாறே

***உரை:*** *உலகிற்கு இறைவன் ஒருவனே என்பதை அறியுங்கள். உயர்களுக்கு உயிராய் உள்ளவனும் அந்த ஒருவனே என்பதையும் நன்றாக அறியுங்கள். அவனே நமச்சிவாய எனும் நாமங்கொண்டபிரான். அந்த நாமத்தை ஓதினோர் சிவஞானம் தித்திப்பரே.*

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே

***உரை:*** *ஈசன் தீயினும் வெம்மையானவன். நீரினும் குளிர்மையானவன். அப்படியிருந்தும் ஒருவரும் அவனை அறியவில்லை. குழந்தையினும் நல்லன், அன்பர்க்குப் பக்கத்தில் உள்ளவன். தாயினும் நல்லவன். அவன் ஞானமாகிய தாழ்சடையுடைய சிவனே.*

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நானிருந் தேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரை:*** *நந்தியெம்பெருமானாகிய சிவனருளால் மூலனிடம் சேர்ந்தேன். பின் அச்சிவனருளால் சதாசிவன் ஆனேன். அவன் அருளாலே மெய்ஞ்ஞானம் பெற்றேன். அவன் அருளாலே நான் ஞானநிலையில் இருந்தேனே.*

அன்புஞ் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

***உரை:*** *அறியாதவர் அன்பு வேறு சிவம் வேறு என்பர் அன்புதான் சிவம் என்பதை யாரும் அறியார். அன்பேசிவம் என்பதை அறிந்தால் அன்பே சிவமாய் இருப்பர்.*

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

***உரை:*** *தீவினையாளர் சிவசிவ என்னமாட்டார்கள். சிவசிவ என்று சொல்லத் தீவினை நீங்கும். சிவசிவ என்று சொல்லத் தேவரும் ஆவார்கள். சிவசிவ என்று சொல்லச் சிவகதி சித்திக்குமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# 11ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து

***உரை:*** *விநாயகனே கொடிய வினையைப் பேர்கக வல்லவன். அவனே பேராசையை நீக்க வல்லவன். அவனே விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் தலைவன். ஆதலால் அவனைக் கண்ணாகப் போற்றி வழிபடுங்கள்.*

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்உருவம் ஏது

***உரை:*** *உனக்கு ஆட்பட்ட அன்றும் உன் திருவுருவைக் காணாமலே ஆட்பட்டேன். இன்றும் காணவில்லை. என்றும் உன் பெருமானின் உருவம் எது என்று கேட்பார்க்கு என்ன சொல்வேன். உன் திருவுருவம்தான் எது எனக் காட்டு.*

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

***உரை:*** *முருகப்பெருமானே திருச்செந்தூர் முதல்வனே, திருமாலின் மருகனே, சிவன் மகனே, யானைமுகனின் தம்பியே உன்னுடைய தண்டையணிந்த திருவடிகளை என்றும் நம்பித் தொழுகின்றேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

***உரை:*** *உன்னையன்றி வேறொருவரையும் நம்பமாட்டேன். வேறொருவருக்கும் பின்னால் செல்ல மாட்டேன். பன்னிரு கைகளையுடைய அழகனே, தேவர்களின் தீவினை தீர்த்த வேலவனே திருச்செந்தில் முதல்வனே வணக்கம்.*

திருவாக்கும் செய்கருமம் கைக்கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

***உரை:*** *செல்வம் தரும், செய்தொழில் சிறக்கும், வாக்குச்சித்தியும், பெருமையும் உண்டாக்கும், நல்ல உருவைத்தரும், ஆதலால் தேவர்களும் விநாயகனை அன்புடன் கைகூப்பித் தொழுவார்கள்.*

சிந்தனைசெய்ய மனம் அமைத்தேன்
செப்பநா அமைத்தேன்
வந்தனைசெய்யத் தலை அமைத்தேன்
கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற் அன்பமைத்தேன்
மெய்அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு
இவையான் விதித்தனவே.

***உரை:*** *உன்னை சிந்தனை செய்ய மனம் வைத்தேன். உன் புகழ் சொல்ல நாவைத்தேன். வணங்கத் தலைவைத்தேன். தொழக் கைவைத்தேன். பற்றிப் பிடிக்க அன்பு வைத்தேன். புளகாங்கிதம் கொள்ள உடலை வைத்தேன். வெண்ணீறணியும் பெருமானுக்கு நான் இவற்றை விதித்து வைத்தேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சேக்கிழார் - பெரியபுராணம்
# 12ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்.

***உரை:*** *உலகெலாம் உணர்ந்து ஓதுவதற்கு அரியவன். நிலவும் கங்கையும் தங்கும் சடாமுடியையுடையவன். சோதி வடிவினர். தில்லையம்பலத்தில் ஆடுபவன். அவனுடைய மலர்போன்ற சிலம்பணிந்த திருவடிகளை வணங்குவோம்.*

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதிய நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி!போற்றி

***உரை:*** *தொடக்கமும், நடுவுமாகி, அளவிலா அளவுமாகி, சோதியாய் உணர்வும் ஆகி, தோன்றிய எல்லாப் பொருளுமாகி, ஏகனாகி, பெண்ணும் ஆணுமாகி, ஞானசொரூபமாய் தில்லையில் திருநடனம் புரியும் பெருமாளே போற்றி போற்றி.*

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி!

***உரை:*** *கற்பனைக்கெட்டாத சோதியாய், கருணை வடிவாய், அற்புதக் கோலமாய், வேத முடிவாய், ஞான சொரூபமாகி திருச்சிற்றம்பலத்துள் பெருமையுடன் நடம் புரியும் பெருமானின் திருவடிகளுக்குப் போற்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமேயாக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

***உரை:*** *சுந்தரர் தில்லையம்பலவாணரை வணங்கும்போது ஐந்து புலன்களும் கண்வழி செல்லவும், நான்கு கரணங்களும் சித்தத்தின் வழி நிற்கவும். முக்குணங்களும் சாத்வீக வழி நிற்கவும். சந்திரனைக் சூடிய சடாமுடியான் ஆடுகின்ற ஆனந்தத் திருக்கூத்தைக் கண்டு இன்பவெள்ளத்துள் திளைத்து எல்லையில்லா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.*

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

***உரை:*** *வேதநெறி தழைத்தோங்கவும், சைவநெறி விளங்கவும், மனித வர்க்கம் பொலியவும், தன் புனிதமான திருவாய் மலர்ந்து அழுத, செழிப்பு மிக்க வயல்சூழ்ந்த திருப்புகலி ஞானசம்பந்தரது பாதமலர்களைத் தலைமேற்கொண்டு தொழுவோம்.*

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

***உரை:*** *சிவனடியைச் சிந்திக்கும் அருள்தரும் சிவஞானம், பிறவிப் பிணியை அறவே மாற்றும் பாங்குடைய சிவஞானம், உவமையில்லாத கலைஞானம், உணர்தற்கரிய மெய்ஞானம், தவமுதல்வராகிய சம்பந்தர் உமைகையில் ஞானப்பால் உண்டவுடனே சித்தித்தது.*

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அருணகிரிநாதர் திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே.

**உரை:** *பழமும், அப்பமும், அவலும், பொரியும் தன்கையில் ஏந்திய யானைமுகனின் திருவடிகளை வணங்கி, கற்றிடும், அடியவர் புத்தியில் இருப்பவரே கற்பகனே என வினைகள் வரைந்து போகும். பூமத்த மலரும், சந்திரனும் தன் சடையில் வைத்துள்ள சிவபெரு மானின் மகனாகி, திரண்ட புயங்களையுடைய மதயானை வடிவும் மத்தள வயிறும் கொண்டவனும், உத்தமியான உமையவள் மகனை இதழ் விரிந்த பூக்கொண்டு வணங்குவோம்.*

இறவாமற் பிறமால் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வை தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

**உரை:** *எனக்கு இறப்புப் பிறப்பின்றிய பெருவாழ்வு தரும் குருவாகி வந்து அருள்வாயே. குறமாது வள்ளியை சேர்பவனே. குகனே, குமரேசனே, கரியானைமுகனுக்கு இளையவனே, கதிர்காமக் பெருமானே உனைத் தொழுதேன்.*

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனைவதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்தபெரு மாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரை:*** *ஏறு போன்ற மயிலில் ஏறி விளையாடும் முகம் ஒன்று. சிவனுக்கு ஓம் எனும் ஞானமொழிபேசிய முகம் ஒன்று. தங்கள் குறைகளை கூறும் அடியார்களின் வினைகளைத் தீர்த்த முகம் ஒன்று. கிரவுஞ்ச மலையினை பிளந்த வேல் எந்திய முகம் ஒன்று. எதிர்த்த சூரபன்மனைக் கொன்றமுகம் ஒன்று. வள்ளியை மணம் செய்த முகம் ஒன்று. இவ்விதமான ஆறுதிருமுகங்களை யுடைய ஆதிஅருணாசலப்பதியில் அமர்ந்த பெருமானே நீ ஆறுமுகமான பொருளை எனக்கு உணர்த்த வேண்டும்.*

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் ஏழில் நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

***உரை:*** *இசைவான இடப வாகனமும், யானைத் தோல் போர்வையும் அழகான திருநீறும், முப்புரிநூலும், புலித்தோலாடையும் மழுவும், மானும் ஏந்தி, தோடும், தலைமாலையும், முடிமேல் அணிந்த ஈசன் தந்த குருநாதனே. வலிமிகுந்த சூரனை தன் இனத்துடன் அழியச் செய்தவனே. வேல் ஏந்திய பெருமானே யமதூதர்கள் பாசக் கயிற்றுடன் வரும்போது என்துயர் தீர்க்க மாமயிலில் ஏறிவந்து காக்கவேண்டும் பெருமானே.*

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரை:*** *நான் பக்தி கொண்டு உன்னைப் பலமுறையும் திருப்புகழ் பாடினேன். என்னை முத்தன் ஆகும்படி பெருவாழ்வாகிய முத்தியை அடைவதற்கு அருள்வாய். உத்தமமான சற்குண நேசனே ஒப்பில்லாத மலைமீது படைவீடு கொண்டவனே, வித்தகனே, ஞான சத்தினிபாதனே வெற்றிவேலாயுதப் பெருமானே.*

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே

***உரை:*** *தேவலோகத்துக் கற்பக தருவும், காமதேனுவும், சிந்தா மணியும் திருப் பாற்கடல் அமுதமும், பெற்றது போல இன்பரசத்தேன் பருகி இன்பமுற அருள்வாய். தம்பி முருகனுக்கு வள்ளியை மணமுடித்து வைக்க வனம் சென்றவனே, தந்தை விருப்பால் மாங்கனி பெற்ற கையோனே, அன்பர்களுக்கு நிலையான மெய்ப் பொருளான வனே ஐந்து கரத்து யானைமுகப் பெருமானே.*

## வாழ்த்து (கந்தபுராணம்)

வான் முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

***உரை:*** *மழை குறைவிலாது பெய்க! நாட்டில் வளம் பொலிக! அரசாட்சி நீதிதவறாது செய்க! உயிர்கள் யாவும் ஒரு குறையுமின்றி வாழ்க! நான்கு வேதங்கள் கூறும் அறங்கள் ஓங்குக! நல்லதவம், யாகங்கள், செழிக்குக! மேன்மையான சைவநீதி உலகமெல்லாம் விளங்குக.*

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் அருளிய
# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசைபாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந்தருளி
மாயப்பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடித்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய துணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக துலமும் சதுர்முக சூஷ்மமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசெனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடமென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழிகாட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!
(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளவையார் அருளிய
## விநாயகர் அகவலுக்கான உரை

குளிர்ந்த சந்தனக் கலவை அணிந்த தாமரைபோன்ற
பாதச்சிலம்புகள் ஓங்காரநாதம் செய்ய
பொன் அரை ஞாணும் வெண்பட்டாடையும்
அழகிய இடையில் அழகு பிரகாசிக்க
குடம் பொன்ற வயிறும் பருத்த ஒற்றைக் கொம்பும்
யானை முகமும், முகத்தில் சிந்தூரப் பொட்டும்
ஐந்து கைகளும் அங்குசம் பாசமும்
என் நெஞ்சில் நிலைத்திருக்கும் நீலத்திருமேனியும்
தொங்குகின்ற வாயும் நாலு பெரிய புயங்களும்
சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய மூன்று கண்களும் கன்ன மதம்,
பீஜ மதம், கபோ மதம் எனும் மும்மதமும்
இரு செவிகளும் ஒளி பொருந்திய கிரீடமும்
முப்புரிநூல் பிரகாசிக்கும் மார்பும்
சொல்லும் பொருளும் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நிறைந்த கற்பக விநாயகனே.
மா, பலா, வழைப் பழங்களைச் சுவைக்கும், பெருச்சாளி வாகனனே
இப்பொழுதே என்னை ஆட்கொள்ளத் திருவுளம் கொண்டு
தாய்போல அன்பு செய்து குருவடிவாய் வந்து
முடிவில்லாத பிறவிப் பிணியை இல்லாமற்செய்து
சிவாயநம எனும் மந்திரப் பொருளை தெளிவாக உணரவும்
இம்மந்திரம் மனதில் பதிந்து அருள் ஒளியோடு கலக்க
இப்பூமியில் குருவடிவாகிவந்து
திருவடி தீட்சை வைத்து உண்மைப் பொருளை உணர்த்தி
பிறவித் துன்பத்தால் வாடாமல் மகிழச் செய்து
தேவரீர் கையிலுள்ள கொம்பாயுதத்தால் என் வினை நீக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் தெவிட்டாத மந்திர உபதேசத்தைச் செவிவழிசெய்து

சுவைதரும் சிவஞான உணர்வின் தெளிவையும் தந்து

ஐம்புலன்களை அடக்கும் உபாயத்தை

என் மீது கொண்ட கருணையால் இனிதாய் அருளி

முப்பத்தாறு தத்துவக் கருவிகளையும் ஒடுக்கும் வழிஅறிவித்து

நல்வினைதீவினை இரண்டையும் நீக்கி மலநாசம் செய்து

ஞானசாதனமான கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் ஆகிய நான்கு படிகளையும் அடையச் செய்து

ஆணவம் கன்மம் மாயை மலங்களின் மயக்கத்தை நீக்கி

உடலிலுள்ள ஒன்பது வாயில்களையும் ஓங்கார மந்திரத்தால் அடக்கும் முறையையும் காட்டி

ஆறு ஆதாரங்களிலும் சுழுமுனை வழியே பிராணவாயு செல்லுமாறு அடக்கும் நிலையையும், நிலைபெயராது இருத்திப் பேச்சினை நீக்கி,

இடைகலை, பிங்கலைக்குரிய ஒவ்வொர் எழுத்தையும் அறிவித்து

சுழுமுனை நாடி முடிவில் தலை ஓட்டில் உள்ள சகஸ்ர தளத்தைக் காட்டி

சூரியன் சந்திரன் அக்கினியாகிய மூன்று மண்டலங்களையும் சேர்ந்துள்ள முள்ளந்தண்டிலிருந்து

தொங்குகின்ற பாம்பைப் போல் குண்டலி சக்தியோடு சேர்ந்த உரைக்கக் கூடாத அசபா மந்திரத்தை

உரைக்கக்கூடிய ஓம் எனும் மந்திரத்தை எனக்குக் கூறியும்

மூலாதாரத்திலிருந்து எரிகின்ற விந்து அக்கினியை

பிராணாயாமத்தினால் எழுப்பும் கருத்தை உணர்த்தியும்

சகஸ்ரதளத்தில் அமுதம் சுரக்கும் நலையினையும் சூரியன் தன்மையையும்

குமுதப்பூவின் நண்பனான சந்திரன் இயல்பையும்

ஆறாதாரத்தின் நடுவாகிய கண்டச்சக்கரத்தின் பதினாறு இதழ்களுடன் கூடிய நிலையையும்

உடலாகிய இயந்திரத்தில் உறுப்புகள் ஒன்றையொன்று இயக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையையும் காட்டி

ஆறுமுகங்களுடன் வியாபகமாய் இருக்கும் தன்மையும் நான்கு முகங்களோடு எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும்

தியானிக்கும் முகங்களோடு கூடிய உருவங்களாக எழுந்தருளியும்

சூக்கும உடலின் தன்மையை நன்கு விளக்குமாறு

இவ்வுடலை இயக்கும் எட்டுத்தொகுதி உறுப்புகளின் நிலையைக் காண்பித்து

தலையோட்டுத் துவாரம் வழியே துவாதசாந்தவெளியினைக் காட்டி

துவாதசாந்தத்தில் இருத்திச் சாலோக முத்தியைத் தந்து

நீ அறிவு வடிவினன் என்பதையுணர்த்திச் சாமீப இன்பத்தைத்தந்து

வினைகளின் மூலமாயுள்ள ஆணவமலத்தை அடங்கச் செய்து

சொல்லும் மனமும் அடங்கிப் பதி ஞானத்தால் பேரின்பம் நுகருமாறு

எனது மனம் சிவமேயாகும் படி செய்து.

இருட்டைச் சார்ந்த போதும், ஒளியைச் சார்ந்த போதும் அவற்றின் மயமாய் ஞான உணர்வில் என்னைத் திளைக்கச் செய்து

அளவில்லாத பேரின்பத்தைத் தந்து

பிறவித் துன்பதை அகற்றி சன்மார்க்க நெறிகாட்டி

சத்தத்தை இயக்கி அதில் பரந்துள்ள சதாசிவமூர்த்தியைக் காட்டி, சித்தத்திலே சிவலிங்கத்தைக் காட்டி

அணுவிற் சிறிதாயும் அண்டத்தின் விரிவாயும் பரந்து வீற்றிருக்கும்

கனுமுற்றிய கருப்பஞ்சாறு போன்றினிக்கும் பேரின்பத்தை அத்துவிதமாய் உணரச் செய்து

சிவனடியார் வேடமும், நீறும் என்னில் நிலைக்கச் செய்து

மெய்யடியார்களுடன் என்னையும் சேர்த்து

ஐந்தெழுத்தில் அடங்கியுள்ள பதிபசுபாச உண்மைகளை என்மனதில் நிலை நிறுத்தியும்

உண்மை நிலையை யுணர்த்தி என்னை அடிமை கொண்டருளிய

பேராற்றல் படைத்தவனே உனது மணம் வீசும் பாத மலர்களைப் புகலிடமாகக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருக்கைலாயப் பதிகம்

## போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயலை மலையானே போற்றி போற்றி (1)

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்கு மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (2)

மருவார் புரமூன்றும் மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
யுள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (4)

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (5)

சில்லுருவாயச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராயப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (6)

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணும் மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழி யேழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (8)

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
யல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (9)

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலி போற்றி
யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (10)

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளியவை
# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறந்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க!

ஈசனடி போற்றி எந்தை யடிபோற்றி!
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி!
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி!

ஆராத இன்பம் அருளு மலைபோற்றி!
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பலவிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய், அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்ச் சேயாய் நணியானே!
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர் களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே தேனா ரமுதே சிவபுரனே!
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே!
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே!
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே!
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப்புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகச் சிறப்பு உரை

**வெண்பா**

***தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி***
***அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே - எல்லை***
***மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்***
***திருவா சகம்என்னும் தேன்.***

**உரை:** *1-5 - நமச்சியவாய என்னும் திருவைத்தெழுத்து மந்திரம் வாழ்க! எல்லாவற்றிற்கும் தலைவனாக விளங்குபவனின் திருவருட்சக்தி வாழ்க! கண்ணிமை ஒருகாற் பொருந்தும் ஒரு சிறு நேரமும், என் நெஞ்சினின்றும் அகலாதவனுடைய திருவடி வாழ்க! திருப்பெருந் துறையில் எழுந்தருளி எளியேனை ஆட்கொண்டருளிய குருநாதனான ஞானாசாரியரின் திருவடி வாழ்க! ஆகமங்களின் உட்பொருளாக விளங்கி அணுகி அருள் புரிபவனது திருவடி வாழ்க! ஒருவனாக இருந்தே பல உருவங்களைக் கொள்பவனாய், எப்பொருளிலும் தங்குபவனது திருவடி உள்ளத்தில் என்றும் நிலைபெறுக.*

**உரை:** *6-10 - எளியேனது மனவோட்டத்தைப் போக்கி என்னை அடிமைகொண்ட பேரரசனின் திருவடிகள் உயர்ந்து விளங்குக! பிறவியாகிய மரத்தை வேருடன் அறுக்கும் தலைக்கோலம் உடைய பெருமானின் கழல் அணிந்த திருவடிகள் வெற்றியுறுக! அன்பில்லாத புறநெறியினர்க்கு எட்டாத தொலைவில் இருப்பவனின் பூப்போன்ற மெல்லிய அழகிய திருவடிகள் வெற்றியுறுக! கைகூப்பி வணங்கும் அன்பர்கள் அகத்தே நினைந்து மகிழ்தற்கு உரிய தலைவனின் திருவடிகள் வெற்றியுறுக! தலைமேற் கைகூப்பும் அன்பரை உயரும்படி செய்யும் சிறப்புடையவனின் திருவடிகள் மேம்படுக!*

**உரை:** *11-16 - எப்பொருளையும் ஆள்வோன் திருவடிக்கு வணக்கம். எம் தந்தையின் திருவடிக்கு வணக்கம். ஒளி வடிவினனின் திருவடிக்கு வணக்கம். சிவபெருமானின் சிவந்த அடிக்கு வணக்கம். அன்பர்களின் அன்பில் விளங்கி நிற்கும் குற்றமற்றவனது திருவடிக்கு வணக்கம். வஞ்சகம் மிக்க பிறவித் துன்பங்களை வேருடன் அறுக்கும் அரசனது திருவடிக்கு வணக்கம். சிறப்பு மிகுந்த திருப்பெருந்துறையில் தோன்றி வெளிவந்த நம்முடைய தேவனின் திருவடிக்கு வணக்கம். நுகர்ந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத பேரின்பத்தை அளித்தருளும் மலைபோன்றவனுக்கு வணக்கம்.

**உரை:** 17-22 - சிவபெருமானாகிய அவன் என் நினைவின் உள்ளே நிலைபெற இருந்த அத்தன்மையினால், அவனது திருவருளாலே, அவனுடைய திருவடிகளை வணங்கி வந்த வழிபாட்டினாலே நெற்றிக் கண்ணராகிய அவ்விறைவன் (ஞானாசாரியனாக எழுந்தருளி) வந்து என்மீது திருவருள் நோக்கத்தைச் செய்து ( அடிமையாகிய என் பழைய வரலாறுகளையும் ஆண்டானாகிய தன்னியல்புகளையும்) காட்டி (உணர்த்தி)யருள, அக்காட்சி ஞானத்தைப் (பெற்றேன்; அங்ஙனம்) பெற்றமையால், யான் பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாத தூய திருவருளின் வசப்பட்டு நின்று பேரின்பத்துள் அமிழ்ந்தி என் உள்ளம் மகிழும்படியும், முற்பிறவிகளில் செய்த தீவினைகள் முற்றும் நீக்கி ஒழியும்படியும் சிவபுராணம் என்னும் இக்கலிவெண்பாவினை யான் சொல்லித் துதிக்க முன்படுகிறேன்.

**உரை:** 23-25 - வானுலகில் நிறைந்து, மண்ணுலகில் நிறைந்து இவற்றிற்கும் மேம்பட்டு அப்பாலாய் நிறைந்தவனே! விளக்கம் மிகுந்த ஒளி வடிவினனே! எண்ணிக்கையின் அளவினையும் கடந்து, முடிவு இல்லாமல் விரிந்து நிற்பவனே! நினது பெருஞ்சிறப்பைத் தீவினையை உடைய யான், புகழ்ந்து கூறும் முறை ஒன்றினையும் அறியாதவனாய் இருக்கின்றேன்.

**உரை:** 26-31 - புல்லாகியும், பலவகைப் பூண்டுகளாகியும், புழுவாகியும், பலதிற மரங்களாகியும், பற்பல விலங்குகளாகியும் பலவகைப் பறவைகளா கியும், பாம்புகளாகியும், கற்பாறைகளின் உள்ளாகியும், மனிதர்களா கியும், பேய்களாகியும், பூதக் கூட்டங்களாகியும், வலிய அசுரர்களா கியும், முனிவர்களாகியும், தேவர்களாகியும் வருகின்ற அசையாப் பொருளும், அசையும் பொருளும் ஆகிய இவைகளினுள்ளே, யான் எல்லாப் பிறவிகளிலும் பிறந்து இளைப்படைந்தேன்.

**உரை:** 32-35 - எங்கள் பெருமானே! நிலைபெற்ற பேரின்பமடைதற்கு ஏதுவாகிய உனது அழகிய திருவடிகளைக் காணப்பெற்று இன்றைக்குப் பாசநீக்கத்தினை அடைந்தேன். யான் ஈடேறும்படி என் உள்ளத்தினுள்ளே ஓம் என்னும் வடிவமாய் நின்ற மெய்ப்பொருளே! குற்றம் அற்றவனே! இடபத்தை ஊர்பவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள் தலைவனே! என்று துதிக்க, மேல் உயர்ந்தும் கீழ் ஆழ்ந்தும் அவற்றுக்கு எட்டாமல் அகன்று நுண்ணி யனாய் இருப்பவனே!

**உரை:** *36-40 - வெம்மை உடையவனே! குளிர்ச்சி உடையவனே! வேள்வி வேட்கும் தலைவனின் உள்ளத்தில் விளங்கும் தூயவனே! பொய்யாகியவை அனைத்தும் அகன்று போகும் படி குருவடிவில் வந்து அருள்செய்து, உண்மை அறிவாகித் திகழ்கின்ற நிலையான பேரொளியே! எந்த வகையான அறிவும் இல்லாத எளியேனுக்கு இன்பதைத் தந்தருளிய பெருமானே! அறியாமையை நீங்கச் செய்கின்ற நல்ல அறிவாக இருப்பவனே!*

**உரை:** *41-45 - ஆக்கப்படுதலும், ஒருகால அளவில் நிற்றலும், முடிதலும் இல்லாதவனே! எல்லா உலகங்களையும் நீயே படைப்பாய்! காப்பாய்! அழிப்பாய்! மலபரிபாகம் வரும் வரைக்கும் உயிர்களை பலவகைப் பிறவிகளிற் செலுத்துவாய்! நீயே முடிவில் உயிர்களுக்கு அருளையும் தருவாய்! அவ்வருட்பேற்றின் பொருட்டு என்னை நினது திருவடித் தொண்டில் புகும்படி செய்வாய்! மலரின் மணம்போல் எங்கும் வியாபகமாய் இசைந்திருப்பவனே. அன்பில்லாதவர்களுக்கு அடைதற்கு அரியவனே! அன்பர்களுக்கு எளியவனே! சொல்லுக்கும் நினைவுக்கும் அப்பாற்பட்டு (கடந்து) மறைபொருளாய் நிற்பவனே.*

**உரை:** *46-50 - கறந்த பாலிலே சருக்கரையும் தேனும் கலந்தாற்போல, அன்பிற் சிறந்த அடியவர்களின் உள்ளத்தில் தேன்போல் இனிமையாக ஊறி, நிலைபெறத் தங்கி எடுத்த பிறவியை ஒழிக்கின்ற எங்கள் பெருமானே! மண், புனல், அனல், கால், வான் என்னும் ஐம்பெரும் பூதப் பொருள்களிலும் இரண்டறக் கலந்து நிற்றலால், பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை என்னும் ஐந்து நிறங்களை உடைய பெருமானே! தேவர்கள் போற்றவும், நீ அவர்களுக்கு வெளிப்படாமல் மறைந்திருந்தாய்.*

**உரை:** *51-61 - குற்றம் அற்றவனே! நீ, பெரும் பாவியேனை என் அறிவு மறையும்படி மூடிய ஆவணமாகிய இருள் மலத்தை மாய்விக்கும் படியாக, நல்வினை, தீவினை, என்னும் வலிமையான கயிற்றினால் கட்டி, வெளியே தோலைப் போர்வையாக அமைத்து எல்லா இடங்களிலும் உள்ள புழுக்களும், அழுக்குகளும் தெரியாமல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்து, அழுக்கு வடிகின்ற ஒன்பது வாயில்களை உடைய உடல் ஆகிய குடிசையைக் கொடுத்து உதவி செய்து யான் மயங்கி வருத்தும்படி புலன்கள் ஐந்தும் மாயச் செயல்களைச் செய்ய, அவற்றை எதிர்த்துத் தடுக்கும் மனத்தோடு உன்னிடத்து கலந்த அன்புடையவனாகி நெகிழ்ந்து உள்ளே உருகும் நற்பண்பு சிறிதும் இல்லாத சிறியேனை உய்வித்தற்கு இந்நிலத்தின் கண்ணே குருவடிவில் வந்து அருள் செய்து, பெருமை மிக்க திருவடிகளையும் காட்டி, நாயினும் இழிவாய்க் கிடந்த எழியேனுக்குத் தாயினும் சிறந்த அருள் வள்ளலான மெய்ப்பொருளே!

**உரை:** *62-66* - குற்றம் இல்லாத ஒளி விரிந்த மலரின் சுடரே! ஒளி வடிவினனே!இனிமை நிறைந்த அமுதமே சிவபுரத்தின் தலைவனே! மும்மலம் ஆகிய பாசங்களின் தொடர்பை நீக்க, என் அறிவை வளர்க்கும் ஆசிரியனே! அன்பினாற் பெரிதும் இருளைச் செய்து, என் நெஞ்சில் இருந்த வஞ்சகங்கள் கெடும்படி அதனைவிட்டு அகலாமல் தங்கிய பெரிய அருள்வெள்ளப் பெருக்காகிய நதியே.

**உரை:** *67-70* - தெவிட்டாத அமுதமே! அளவுக்குள் அடங்காத பெருமையை உடையவரே! ஆராய்ந்து தியானிக்காதவர்களின் உள்ளத்தில் வெளிப்படாமல் மறைந்து விடுகின்ற ஞானமாகிய ஒளியாகத் திகழ்பவனே! நீரைப்போல என் நெஞ்சத்தை உருச் செய்து, என் உயிர்க்கு உயிராய் நிற்பவனே! இருவினை பயனாகிய இன்பமும் துன்பமும் இல்லாதவனே! தம் செயலற்ற ஞானிகளின் இன்ப துன்பங் களை உன்னுடையவாகக் கொள்பவனே!

**உரை:** *71-76* - அன்புடையவர்களுக்கு அவர்களிலும் மிக்க அன்பை உடையவனே! எல்லாவற்றிற்கும் முதலாக இருப்பவனே! முடிவும் நடுவும் ஆக விளங்கி அவை அல்லாதவனுமாகத் திகழ்பவனே! வலிய இழுத்து என்னை அடிமை கொண்ட என் தந்தையாகிய சிவபெருமானே! கூரிய சிவஞானத்தினால் அன்பு கொண்டு உணர்பவர்கள், தமது மனத்திலே தற்போத முனைப்பால் அறிதற்கரிய ஞேயமாகிய பரம்பொருளே! உயிரின் கட்டுணர்வாகிய நுண்ணறிவுக்கு எட்டாத பேரின்ப அநுபவத் தைத் தரும் பொருளே!

**உரை:** *77-83* - இறப்பும் பிறப்பும் வாழ்தலும் இல்லாத தூய பரம்பொருளே! எல்லாவற்றையும் எல்லோரையும் காக்கின்ற எங்கள் அரசனே! காண்பதற்கு அரிய பெரிய ஒளியே ஆறுபோலப் பெருகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இன்பமாகிய வெள்ளமே! அப்பனே! யாவர்க்கும் மேலானவனே! நிலைபெற்ற அழகுமிக்க சுடரும் ஒளியாயும் சொல்லுதற்கு இயலாத நுண்ணிய உணர்வாயும், சடமும் சித்துமாக மாறுபட்ட பொருள்களை யுடைய இவ்வுலகத்தின் கண், வேறு வேறாக வந்த தசகாரிய விளக்க அறிவாயும் விளங்கித் தெளிவைத் தருபவனே! ஊற்றைப் போலச் சுரக்கின்ற உண்பதற்கினிய அரிய அமிழ்தம் போல்பவனே! எப்பொருட் கும் எல்லாவுயிர்க்கும் உரிய தலைவனே!*

***உரை:*** *84-89 - வேறு வேறு மாறுபாடுகளை அடைகின்ற, தசையால் ஆகிய இவ்வுடம்பின் உள்ளே அடைபட்டு கிடத்தலை, இனியும் யான் பொறுக்க மாட்டேன். எங்கள் தலைவனே! தீவினைகளை அழிப்பவனே! நினக்கு அடைக்கலம் என்று அலறிக் கதறிப் போற்றியும் புகழ்ந்தும் தியானத்தில் இருந்து பொய்மைகள் அழிந்து மெய்யருள் நிலையைப் பெற்றவர்கள் மறுபடியும் இவ்வுலகின் கண் வந்து வினைவயப்பட்ட பிறவியை அடையாதபடி வஞ்சகம் மிகுந்த ஐம்புலன்களின் வீடாக இவ்வுடம்பின் கட்டினை அழிக்க வல்லவனே! நடு இருளிலே இடை விடாமல் நடனம் இயற்றும் தலைவனே!*

***உரை:*** *90-95 - தில்லைச் சிற்றம்பலத்தில் கூத்தாடுபவனே! தெற்கே உள்ள பாண்டிநாட்டை உடையவனே! துன்பத்தை விளைவிக்கின்ற பிறவியின் வேரை அறுப்பவனே! உனக்கு அடைக்கலம் என்று அரற்றி, அளவிட்டுச் சொல்ல முடியாத புகழை உடையவனே இயன்ற அளவில் புகழ்ந்து துதித்து அவனது திருவடிக்கீழ் இருந்து சொல்லிய சிவபுராணம் என்னும் இச்செய்யுளின் பொருளை உணர்ந்து ஓதவல்லவர்கள். சிவபுரமாகிய சிவலோகத்தின் கண்ணே செல்வார்கள். அங்கேதம்மைப் பலரும் புகழ்ந்து போற்றத் தாம் சிவபிரானைப் பணிந்து அவனது திருவடியின் கீழ் இன்புற்று இருப்பார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகள்
# தில்லையில் அருளிய திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளு
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மி
னத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (1

**உரை:** *நல்ல முத்து மாலையையும் மலர் மாலையையும் தொங்கவிட்டு, பயிர் முளைகளிட்ட குடம், நறும் புகைக்கலசம், நல்ல விளக்கு என்பவற்றை வைப்பீர்களாக. உருத்திர சக்தியும் திருமகளும், நிலமகளும், கலைமகளும் பல்லூழிவாழ வெனப்பாடும் பல்லாண்டு பாடுவீராக. கணபதி சத்தியும் காழியும் உமையும் கங்கைமாதும் எழுந்து வந்து இறைவனுக்கு வீசுவதற்குக் (கவரி மயிரினாலாகிய) சாமரத்தைக் கைப்பிடிப்பீராக. ஆசிரியனும் திருவையா றமர்ந்தானும் அப்பனுமாகியவனைப் பாடி அவனுக்கு திருமுழுக்காட்ட அழகிய வாசனைப்பொடியை நாம் இடிப்போமாக.*

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
றேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. (2

**உரை:** *கொன்றை மலர் பொருந்தி நீண்ட சடையையுடைய எம்பெருமானுக்கு அழகிய திருச்சுண்ணம் சித்தப்படுத்த வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்காய் வடுவின் பிளவுபோன்ற கண்ணுடைய நங்கையீரே, வாருங்கள், வந்து விரைவிற் பாடுங்கள். அடியாராயினார் வெளியே நில்லாதபடி அவர்களை அழையுங்கள், ஆடுங்கள், வணக்கஞ் செய்யுங்கள். எமது தலைவனும் நாடகமாடியுமான கடவுள் தனது சத்தியும் தானுமாக வந்து எம்மை ஆண்டருளும்படி, செவ்விய பொன் போலொளி செய்யும் வாசனைப் பொடியை நாம் இடிப்போமாக.

சுந்தர நீறணிந் தும்மொழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
யிந்திரன் கற்பக நாட்டியெங்கு
மெழிற்சுடர் வைத்துக் கொடியெடுமி
னந்தரர் கோனயன் றன்பெருமா
னாழியா னாதனல் வேலன்றாதை
யெந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே. (3

**உரை:** சாந்து, திலக முதலியவற்றோடு அழகிய திருநீறு தரித்து, சுண்ணம் இடிக்கும் இடத்தைச் சாணத்தால் மெழுகி, தனிப்பொன் பொடியைத் தூவி, நவமணிகளாகிய நிதிகளைப் பலவிடங்களில் வைத்து, இந்திரனுக்குரிய கற்பகத் தோகை நட்டு, எவ்விடங்களிலும் அழகிய தீபங்கள் வைத்துக் கொடிகளை எடுப்பித்துக் கட்டுங்கள். விண்ணவர் தலைவனாய், அயனுக்கு முதல்வனாய், சக்கராயுதமுடையானாகிய திருமாலுக்கு நாயகனாய், சிறந்த முருகனார் தந்தையாய், இருக்கும் எம்போலியரையும் ஆட்கொள்ளும், உமை கணவனுக்குத் தக்க அழகிய வாசனைப் பொடியை நாம் இடிப்போமாக.

காசணி மின்களு லக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய வடியவர்க
ணின்று நிலாவுக வென்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. (4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரை:*** *உலக்கைகளுக்கெல்லாம், பொன் அல்லது மணி வடங் கட்டுங்கள். நிறமுடைய உரல்களுக்குப் பட்டுச் சீலையைச் சுற்றுங் கள். இறைவன்பாற் காதலுடைய அடியார்கள் எப்போதும் நிலைத்து வாழ்கவென்று வாழ்த்துப் பாடலியம்பி நாடெல்லாம் வியந்து கொண் டாடுகின்ற காஞ்சிமா நகரிலுள்ள திருவேகாம்பர நாதரது செம் பொன்னினாலாகிய திருக்கோயிலைப் பாடி இருவினையாய அல்லது நிகழ்வினையாகிய கட்டினை நீக்கி நின்று பாடி அழகிய சுண்ணம் இடிப்போமாக.*

அறுகெடுப் பாரய னும்மரியு
மன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (5

***உரை:*** *அழகிய புன்சிரிப்புடைய சிவந்த இதழுடைய தோழியரே, திருமாலும் நான்முகனும் குடவிளக்கேந்துவர். அவர்களைத் தவிர, ஏனையோராகிய இந்திரன் முதலிய வானுலகத் தலைவர்கள், (தம் முட்பொருது) முறுமுறுக் கின்ற வானவர் கூட்டங்கள் ஆகிய எல்லோ ரும், நமக்கு பின் அல்லாமல், முன்னாக இறைவன் விருதுகளை யெடுக்க இடங்கொடுக்கமாட்டோம். ஒருங்கு செல்லுதலையுடைய முப்புரத்து எய்தெரித்த வில்லுடையனாகிய திருவேகம்பனது செம் பொன்னினாலியன்ற திருக்கோயிற் சிறப்பைப் பாடி முக்கண்ணுடைய தந்தை திருமுழுக்காடுதற்கு,அழகிய வாசனைப் பொடி இடிப்போமாக.*

உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க வடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்துநாமே. (6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை:** *உலகம் எல்லாம் உரலாக, இருக்கின்ற உலக்கைகள் பல போதா, இன்னும் வேண்டும் என்று பெரியோர் தூண்டுகின்றார்கள். காண்பதற்கு உலகங்கள், போதமாட்டாவென்று சொல்லும் படியாக, உலக்கை யோச்சுவாரொடு கலந்து கொள்வதற்கு அடியார்கள் வந்து நிற்கின்றார்கள். நன்மையுண்டாக்கும் பொருட்டு நம்மையாட் கொண்டருளி தனது அன்றலர்ந்த புதுமலர் போன்ற திருவடிகளை நமது சென்னிமேற் சூடும் பொருட்டுக் கொடுத்த பனிமலையரசன் மருகனாகிய பெருமானை இடைவிடாது பாடி மகிழ்ந்து அழகிய வாசனைப் பொடியை இடிப்போமாக.*

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடபொற் சுண்ண மிடித்துநாமே. (7

**உரை:** *கைவளையுந் தோள்வளையும் அசைந்தசைந் தொலிப்ப அடியார் கூட்டம் புறப்பட்டு (அரகரவென்று) விடாது முழங்க, உலகினர் (அருள்பெற்ற) நம்மை இகழ்ந்து உரை செய்ய, நாமும் அவர்கள் (இயல்பினை) யெண்ணி நகையாட, தனது மென்மையாகிய திருவடியிலணிந்த பாடகமானது ஒலித்தலையுடைய அம்மை பாகனாகிய நமது மேலாகிய மேலோனுக்கு, பொன்மலையாய மேருவைப் போன்ற மன்னனுக்குத் திருமுழுக்குக்காக, அழகிய சுண்ணத்தை இடிப்போமாக.*

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோற்றெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
யாட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரை:*** *ஒளிபொருந்திய நீண்ட கண்களையுடைய அழகிய இளமாதர்களே, வரிகளையுடைய உங்கள் கைவளையல்கள் ஒலிப்ப, வளவிய நகில்கள் மேலெழுந்து விளங்க, புயமும் நெற்றியும் (நீற்றினால்) ஒருங்கு சேர்ந்து மிளிர, எமது பெருமானே வணக்கம், வணக்கம், என்று இடைவிடாதியம்பி, புதிதாய்ப் பூத்த மலர்கள் நாணும்படியான திருவடிகளை, நாயினுங் கீழ்ப்பட்ட நமக்குக் காட்டி இப்பிறவியிலே நம்மை ஆண்டு கொண்டருளிய சிறப்புக்களை ஓயாது பாடி, அவன் முழுகத் திருப்பொற் சுண்ணம் இடிப்போமாக.*

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்ச ணிறையவட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
யையன ணிதில்லை வாணனுக்கே
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (9

***உரை:*** *நிலவுலகம் முழுவதும் உரலாகவும் (மலையுட்) பெரிய மேருவாகிய உலக்கையை உரல் நடுவில் நாட்டி உண்மையென்னும் மஞ்சள் உரல் நிரம்பப் போட்டு, மேன்மை மிக்க அழகனாகிய திருப்பெருந்துறையானது செவ்விய திருப்பாதங்களை இடைவிடாது பாடி, நேர்மையான பொன்னினாலாகிய உலக்கை வலது கையிற் கொண்டு, தலைவனாகிய அழகிய தில்லை நாதனுக்குத் திருமுழுக்கிட, பொற்சுண்ணம் இடிப்போமாக*

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
வத்தன் கருணையொ டாடவாட
வாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரை:*** *முத்துமாலை அணியப்பட்ட நகில்கள் அசைந்தாடவும், வண்டுக் கூட்டங்கள் நெருங்கிச் சூழுங் கூந்தலானது அசைந்தாடவும் மனமானது சிவபெருமான்பால் இடைவிடாது பயிலவும் (மன உருக் கத்தினால்) செவ்விய கயல் மீன்களின் கண்போன்ற கண்களில்* (ஆனந்தக்) கண்ணீரானது அசைந்திலங்க, நமது காதலாகிய மாலா னது எமது தலைவன்பால் இடைவிடாது பற்ற, பிறவிகள் (நமக்கன்றி) ஏனையோர்பால் நிலவியொழிய, எந்தை திருவருளின் வழி நாம் என்றும் பழகப்பழக, இறைவன் முழுக்கியற்ற, பொற்சுண்ணம் இடிப்போமாக.

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
யாடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (11

***உரை:*** *(நங்கையரே) உங்கள் வாயைத் திறந்து பல்லின் நிலவொளியானது பக்கத்திலே கதிர்வீச, அழகிய பவளம் போன்ற உதடுகள் துடிப்பு, நம்மை இறைவன் ஆண்ட விதத்தைப் பாடுங்கள். நம்மைத் தொண்டராகக் கொண்டருளிய விதத்தையும் இடைவிடாது பாடி, எமது பிரானைத் தேடுமின்கள். அங்ஙனம் தேடி காணாவிடின் திகிலடைந்து, பின் தெளிந்து, மனமகிழ ஆடுங்கள். ஆடித் (தில்லை) யம்பலத்திலே நடமாடிய பெருமான் திருமுழுக்கிடப், பொற்சுண்ணம் இடிப்போமாக.*

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
யகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோட்
பையர வல்குன் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே (12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை:** *செந்தாமரைப் பூப்போன்ற, செவ்வரி படர்ந்த இரு கண்களையும் பொன்னாலாகிய கங்கணமணிந்த தோள்களையும், பாம்பின் படம் போன்ற அரை முன்பக்கமுமுடைய அழகிய மாதர்களே, (நஞ்சின்) கருநிறம் பொருந்திய திருக்கழுத்துடையானை,வானுலகினர்க்கு அமுத மானானை, மாணிக்கம் போலுஞ் செம்மேனியோடு நடிக்குந் திருக் கூத்துடையானை, தலைவனை, தலைவர்க்கு வள்ளலை, நம்மைத் தன்வயப்படுத்தி ஆண்டு கொண்டருளி, தனது அரிய தன்மையைக் காண்பிக்கும், பொய்யர்க்குப் பொய்யனாய், உண்மையாளரது மெய்ப் பொருளாயுள்ளவனைப் பாடித் திருப்பொற்சுண்ணம் இடிப்போமாக.*

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீ
ரென்னுடை யாரமு தெங்களப்ப
னெம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன்
றமைய னெம்மையன் றாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. (13

**உரை:** *மின்னல் போலொளிரும் இடையினையும் செவ்விய பவளவாயினையும் கரிய கண்ணினையும், வெள்ளிய பல்லினையும், இசைதங்கிய மெல்லிய சொல்லினையும் உடைய மங்கையரே, என்னை உடையவனாகிய, கிடைத்தற்கரிய அமுதம் போன்ற நமது தந்தையாகிய எமது பிரான், பனிமலை யரசன் மகளாகிய உமை யம்மைக்கு, தன்னை உடைய கணவனுமானவன், மகனுமாவன், தகப்பனுமாவன், தமையனுமாவன். (அத்தகைய) எமது தலைவனது திருவடிகளைப் பாடி, பொன்னினாலாகிய அணியணிந்த நகிலுடைய பெண்டிரே, நாம் திருப்பொற் சுண்ணம் இடிப்போமாக.*

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப வராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. (14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை:** *செவ்விய நகையணிந்த பெண்களே, சங்கினாலாகிய கை வளையல் ஒலிப்ப, காற்சதங்கை ஓசையிடப் (பின்னே நீண்டு தாழ்கின்ற) கூந்தலிற் சுற்றிய மாலை சுழல, செவ்விய (கொவ்வைக்) கனிபோன்ற வாயும் உதடுந் துடிப்ப, சிவலோகச் சிறப்பைப் பாடிக் கங்கை இரைச்சலிடுவதைக் கேட்டுப் பாம்பு இரைச்சலிடும், தொகு தியாய சடைமுடியான் திருவடிக்கே, மிகுந்த அன்பினாலே, நகில்கள் பால் சுரக்க, திருப்பொற்சுண்ணம் இடிப்போமாக.*

ஞானக் கரும்பின் றெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. (15

**உரை:** *அகன்ற குவளை போன்ற கண்ணுடைய அழகிய மாதரீர், சிவஞானமாகிய கரும்பின் சாரத்தை, சர்க்கரைப்பாகை, எய்துதற்கெட்டாத நன்மையை, என்றுங் கெடாததேனை, முக்கனியின் சுவையானவனை, உள்ளத்திற் புகுந்து இனிமை தரவல்ல தலைவனை (நமது) பிறவியைத் தொலைத் தாட்கொண்டருளிய திருநடமிடும் பெருமானை, நாவிலே தழும்பேறும்படியாக இடைவிடாது வாழ்த்தித் திருப்பொற்சுண்ணம் இடிப்போமாக.*

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேற்
றேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக னாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. (16

**உரை:** *நாமும் அன்பர்களோடு போய் உய்திக்குரியராகும் வகையாக நம்மை ஆண்டுகொண்ட வகைகளைப் பாடி வானுலகத்துள்ள இமையவர்கள் சொப்பனத்திலுங் காணமுடியாத செவ்விய திருவடிக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலங்களை நமக்கு காட்டும், சிறப்புடைய காலையுருவைத் தன் பாலே கொண்ட வெற்றிக் கொடியுடையானாகிய சிவபெருமானாகிய திரிபுரமெரித்த வெற்றிவீரனது திருப்பெயர்களை, இடைவிடாது பாடிச் செம்பொன்போல ஒளிசெய்யுந் திருப்பொற்சுண்ணத்தை இடிப்போமாக.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்து
மூனக மாமழுச் சூலம்பாடி
யும்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. (17

**உரை:** தன்னுள்ளே தேனையடக்கிய, பெருமை பொருந்திய கொன்றை மாலையைப் பாடி, சிவனது திருநகரைப் பாடி, அழகிய சடைமேல் வைக்கப்பட்ட, வான்கண் விளங்குகின்ற சிறந்த இளம் பிறையைப் பாடி, திருமாலாகிய காலையூர்தியைப் பாடி, இறைவன் வலக்கரத்திற் கொண்டுள்ள, பகைவர் தசைகொண்ட மழுவையும் முத்தலை வேலையும் பாடி, மேலுலகினரும் இவ்வுலகினரும் பிழைக்கும்படியாக, அந்தக் காலத்திலே, தனதுணவாக நஞ்சினை இறைவன் உண்டதைப் பாடித் திருப்பொற் சுண்ணம் இடிப்போமாக.

அயன்றலை கொண்டு செண்டாடல்பாடி
யருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
யியைந்தன முப்புர மெய்தல்பாடி
யேழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே. (18

**உரை:** பிரமனுடைய தலையைக் கிள்ளிப் பந்தாடியதைப் பாடி, தக்கன் வேள்வியில், பகலவன் பல்லைப் பிடுங்கினமையைப் பாடி, கயாசுரனைக் கொன்று அவன் தோலைப் போர்த்துக் கொண்டமை பாடி, யமனைத் திருவடியால் உதைத்தமைப் பாடி, ஒருங்கு சேர்ந்துலவிய திரிபுரத்தை அம்பாலெய் தொழித்தமைபாடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிற்றறிவுடைய அடியேங்களை ஆட்கொண்டருளிய நன்மையைப் பாடி, பாடலுக்கேற்பத் தொடர்ந்து ஆடி, நம்முடைய தலைவர்க்குத் திருப் பொற்சுண்ணம் இடிப்போமாக.*

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மே
லிட்டுநின் றாடு மரவம்பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே. (19

***உரை:*** *வட்டமா (கிய இண்டையா) யமைந்துள்ள கொன்றைப் பூமாலையைப் பாடி, (இறைவன் சூடும்) ஊமத்தை மலரைப் பாடி, பிறையைப் பாடித் தெய்வத் தொண்டர்கள் வதியும் அழகிய தில்லை நகரைப் பாடி, அங்குள்ள ஞானசபையில் நடமாடும் நமது (பெருஞ்) செல்வமாகிய பெருமானைப் பாடி, அவன் அறையிற் கட்டிய பெரும் பாம்பாகிய அரைநாண் கச்சையைப்பாடி, கையிற் கட்டிய (பாம்பாகிய) காப்பினைப் பாடி, மூடிய கையின்மேல் விட்டு ஆட்டிய பாம்பினைப் பாடி, ஆண்டவனுக்குத் திருப்பொற்சுண்ணம் இடிப்போமாக.*

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. (20

***உரை:*** *வேதநூலும் அதனுட் கூறப்படும் வேள்விகளும் தோன்றி நிகழ்தற்குக் காரணமானவர்க்கு, (மெய்யர்க்கு) மெய்யாயும் (பொய்யார்க்கு) பொய்யாயும் இருப்பவர்க்கு, ஒளியும் இருளும் ஆனவர்க்குத், துன்பமும் இன்பமுமானவர்க்கு பாதியாய பெண்ணுருவல்லது ஆணுருவாகியும், இருமையுங் கலந்த முழுவடிவாயும் ஆனவர்க்கு, உயிர்களது கட்டிற்கும் வீட்டிற்குங் காரணமானவர்க்கு உலகிற்கு முதலுமுடிவும் ஆனவர்க்குத் திருமுழுக்கிடத் திருப்பொற் சுண்ணம் இடிப்போமாக.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள்வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார மளியின்மே னின்றும் புரண் டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். (1

**உரை:** *ஒளிபொருந்திய நீண்ட கண்ணையுடைய பெண்ணே! முதலும் முடிவுமில்லாத, காண்டற்கரிய பெருமையுடைய ஒளியானவனை நாங்கள் பாடுதலைக் கேட்டும், நீ (இன்னும்) துயில்கின்றனையோ? உன் செவிதான், சொல்லுவதைக் கேளாத வலிய செவியோ? பெரிய கடவுளது நெடிய சிலம்பணிந்த திருவடிகளை நாங்கள் வாழ்த்திய வாழ்த்தின் ஓசையானது தெருவின்கட் கேட்ட அளவிலேயே ஒருத்தி பொருமியழுது, உடம்பு. மறந்து, மலர் நிறைந்த படுக்கை மேலிருந்து கீழே விழுந்து புரண்டு இந்நிலத்தே 'எம்பாவாய்' என்று முடியுந் திருப்பர்டுக்களாலாய பகுதி என்பது கருத்து. பொருள் கொள்ளு மிடத்து, விளித்தொடர்களை முதலிற் கொள்வது காண்க. ஒன்றிற்கு மாகாதவள் போல் (மூர்ச்சித்துக்) கிடக்கலாயினள். இது என்ன நிலைபார். அவள்செயல் அவ்வாறிருக்க, எங்கள் தோழியாகிய உன் தன்மை (விழித்தெழாதிருக்கும்) இந்நிலையோ? இது என்ன? எமது கண்பாஸ்வ போன்றவளே! சொல்லுவதை ஏற்பாயாக; ஆய்வாயாக.*

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகனாம்
பேசும்போ தெப்போ திப்போதார மளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
யேசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ளீசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய். (2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை:** *செவ்விய அணிகளை அணிந்தவளே! மேலாகிய ஒளியான பெருமான்பாற் பிணிப்பாகிய அன்பு வைத்து நாம் எலும்பு வடிவமாம்பாடி இரவும் பகலும் அவனது சீரைப் பேசுதற்குரிய காலம் எக்காலம்? இந்த மலர் நிறைந்த படுக்கையின் கண்ணே நீ விருப்பம் வைத்தனை போலும்! (என்று எழுப்பும் பெண்டிர் கூற, துயில் நீங்கா மாது கூறுவாள்) நங்கையர்களே! சீ,சீ,(நீங்கள் பேசும் நகைமொழிகளுள்) இம்மொழி களுஞ் சிலவாகும் போலும், நீங்கள் விளையாடி வைப்பதற்கு இதுவோ சமயம்? (என்றாள்). (பிறமாதர்கள் கூறுவார்கள்.) எமது கண்பார்வை போன்ற தோழி! (இப்படி தூக்கத்திற் குழறாதே) விண்ணோர்கள் வழிபட, அவர்களுக்குத் தோன்றாத திருவடிகளை நமக்கத் தந்தருள வந்தருளுங் குருவாகிய சிவலோக நாதன், தில்லை ஞான சபையாண்டவன் ஆகிய பெருமானுக்கு நம் அன்பு எவ்வாறிருக்க வேண்டும்? நாம் யார்? அடிமைகளல்லவோ! சிந்தி: சொல்வதைக் கேள்.*

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதி ரெழுந்தென்
      னத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
      பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
      வெத்தோநின் னன்புடமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
      யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். (3

**உரை:** *முத்துப் போன்ற வெள்ளிய பற்களையுடையவளே! முன்னேயெல்லாம், எங்களுக்கெதிராக எழுந்து வந்து, எனது தந்தையே, இன்பனே அமுதம் போன்றவனே என்மறு இறைவனை வாழ்த்தி, மிகவும் அதிகமாக வாயூறி இனிமைபயக்கும் படியாக அவன் புகழைப் பேசுகின்ற தன்மையுடையாய். இன்று நாங்கள் அழைத்தும் நீ எழுந்து வந்து வாயிற்கதவைத் திறாதிருக்கின்றாய் (என்று பலமாதர் தங்கள் தோழி ஒருத்தியைத் துயிலுணர்த்தத்) தோழி கூறுவாள்: இறைவன்பால் மிகுந்த பற்றுள்ளவர்கள் நீங்கள். ஆண்டவனுடைய பழைய தொண்டர்கள், மிகுந்த உரிமை உடையவர்கள், புதிதாக வந்த அடியேங்களது சிறுமையை ஒழித்து நீங்கள் எங்களை ஆட்கொண்டால், அது கெடுதியா? என்ற அளவில் (எழுப்பிய மாதர்கள் கூறுவார்கள்) நீ அன்புடையாயென்பது ஏமாற்றமா? உன் தன்மையெல்லாம் நாங்கள் தெரியாதவர்களா? மனந்தூயதாகப் பெற்றவர், நமது பெருமானைப்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடமாட்டார்களா? எங்களுக்கு வேண்டியது (நீ பாட வேண்டும் என்னும்) இவ்வளவுதானே!எமது பாவைபோல்வாய்! நீ இதை சிந்தி; சொல்வதைக் கேள்.*

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின் றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். (4

***உரை:*** *ஒளியுடைய முத்துப்போன்ற பல்லினை உடையாய்! இன்னும் உனக்குப் பொழுது விடியவில்லையோ? (என்று பல மாதர் ஒருத்தியை எழுப்புவான் வினவ) அவள் அழகிய கிளிபோன்ற சொல்லினர் எல்லோரும் வந்துவிட்டார்கள்ா? (என்று கேட்கப் பிறர் கூறுவார்கள்) வந்தவர்களைக் கணக்கிட்டு கொண்டு உள்ளபடி சொல்லுகிறோம். அதுவரையும், கண்ணினைத் துயிலச் செய்து வீணாக நேரத்தைக் கழித்துவிடாதே விண்ணவர் யாவரும் ஒப்பற்ற அமுதமாய் உள்ளவனை, ஞானநூல் கூறும் மேலான பொருளானவனை நமது கண்களுக்கு இனிய காட்சி தருவானை நாம் பாடி அழுது மனம் முழுதும் கனியும்படி உருகுவோமாக. நாங்கள் வந்திருக்கிறவர்களை எண்ணமுடியாது நீயே எழுந்துவந்து அவர்களை எண்ணிப் பார்த்து, குறையுமானால் (மீண்டும் போய்த்) தூங்குக.*

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். (5

***உரை:*** *மயிர்ச் சாந்தணிந்த கூந்தலுடையாய்! அரி அடியை அறியமுடியாத, அயன் முடியைக் காணக்கூடாத, மலைபோன்ற நெடு மேனியனை நாம் அறியக்கூடும் என்று நினைக்கும்படியாக,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(வேடிக்கையாகப்) பொய்களையே பேசுகின்ற, பாலுந் தேனும் ஊறினாற் போன்ற இதழையுடைய தந்திரக்காரியே, இவ்வுலகினரும் வானுல கினரும் பிற உலகினரும் அறிவதற்கு அரியவனுடைய திருவடிவத்தை சிறியோமை அடிமையாகக் கொண்டு குற்றம் பொறுத்துச் சீர்செய்யும் பெருங்குணத்தையும் வியந்துபாடிச் சிவபெருமானே, சிவபெருமானே என சரணடையும் குரல் எழுப்பியும் அதைக் கேட்டுணராது துயில் நீங்காதிருக்கின்றாய். எம்பாவாய் இதுவோ உன் தன்மை, நாங்கள் சொல்லுவதை ஏற்றுச் சிந்திப்பாயாக.*

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித் தாட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோரெம்பாவாய் (6

***உரை:*** *(மான்போன்ற விழியுடைய) பெண்ணே நீ நேற்று உங்களை நாளையன்று நானே வந்து துயிலுணர்த்துவேன்' என்று கூறியும், இன்று (நாங்கள் உன்னை எழுப்பவ்நத பின்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாய்; நீ சொன்ன சொல்) போயின திக்கினைச் சொல்ல மாட்டாயா? இன்னும் (பொழுது) விடியவில்லையோ? வானுலகும் மண்ணுலகும் ஏனையவும் அறியக்கூடிய பெருமான் தானாகவே வலிய எழுந்தருளி வந்து நமக்கு முதற்கருணை காட்டி ஆண்டருளும் பெருமை மிக்க நெடிய கழலணிந்த திருவடிகளைப் பாடிவந்தவர்களாகிய (எங்களுக்கு) நீ உன் வாய்திறந்து ஒன்றும் பேசாது தூங்குகிறது பாடி உடலுமுருகப் பெறாய் உனக்கே இது பொருத்தம், நமக்கும் பிறர்க்கும் தலைவனாகியவனை நீ பாடு வாயாக. இது காளி, ரௌத்திரியைத் துயிலெழுப்புவதாகக் கூறியதெ்ன்ப.*

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். (7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை:** *தாயே (உனது விளையாடல்களுள்) இவைகளுஞ் சில போலும்! தேவர்கள் பலரும் எண்ணிடுதற் கரியவனாகிய ஒப்பற்றவன் பெரும் புகழுடையவனாகிய பெருமானது சங்கு முதலியவற்றின் ஒலிகள் கேட்கவும் 'சிவா' என்று வாயைத் திறப்பாய். 'தென்னவனே' என்று சொல்லு முன்னம் தழலிடைப்பட்ட மெழுகு போல (ஆனால் இப்போது) எனது இனிய தலைவன் எனது வேந்தன், இன்னமும் தானவன் என்று நாங்களெல்லாரும் தனித்தனியே இயம்பினோம். இன்னமும் தூங்கு கின்றாயோ! அன்பில்லாத திண்ணிய மனமுடைய அறிவிலார் போலச் சும்மா படுத்திருக்கின்றாயே. துயிலின் சிறப்புத்தான் என்னென்றுரைப்பன்.*

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். (8

**உரை:** *கோழி கூவவும், பிற பறவைகள் எங்கும் ஓசையெழுப்புகின்றன. திருப்பள்ளியெழுச்சியை உணர்த்த, வெண் சங்கமானது எவ்விடத்தும் முழங்குகின்றது. ஒப்பற்ற மேலான ஒளியானவனும், ஒப்பற்ற மேலான அருளுடையவனுமாகிய பெருமானுடைய நிகரில்லாத உயர்ந்த புகழ்களை நாங்கள் பாடினோம். அவற்றை நீ கேட்கவில்லையா? நீ நன்றாக வாழ்வாய், இது எத்தகையான தூக்கமோ, தெரியவில்லை. வாய்திறக்க மாட்டேன் என்கிறாயே! நமது அரசன் பால் அன்புடைமை யாகும் திறமும் இம்முறையமோ! கற்பகாலங்களுக்கெல்லையாய தலைவனாய் விளங்கிய ஒருத்தனாகிய உமைபாகனையே பாடுக.*

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். (9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை:** *முற்பட்டவனாகிய பண்டைப் பொருள் யாவற்றிற்கும் பழமையான மெய்ப்பொருளே, பிற்பட்ட புதுமையின்பத்திற்கும் பழமையானவாறே மீண்டும் புதுமை நலந்தரும் தன்மையனே, உன்னை ஆண்டவனாகப்பெற்ற சிறப்புடைய உன்னடிமைகளாகிய யாங்கள் உன் தொண்டர்களது திருவடி களை வணங்குவோம். அவ்வாறே அவர்களுக்கே (உறவினர் போல்) உரிமையராய் ஒழுகுவோம். அவர்களே எங்கள் கணவராவார்கள். அவர்கள் விரும்பிக் கட்டளையிட்ட முறையே அவர்கட்கு அடிமையாய்க் குற்றவேல் செய்வோம். இந்த முறையே எங்களுக்குக் கிடைக்குமாறு எம்பெருமானே அருள் புரிவையாயின் எவ்வகையான குறைபாடும் (தேவையும்) இல்லாதவர் களாயிருப்போம்.*

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (10

**உரை:** *கீழுலகம் ஏழினுக்குங் கீழாய் சொல்லினளவைக் கடந்ததாய் உள்ளன திருவடிக் கமலங்கள். மலர் நிறைந்த அழகு செய்யுந் திருமுடியும் எல்லாப் பொருள்களின் முடிவாயுள்ளது. அவன் திருமேனியில் ஒரு பகுதி யில் அம்மை இருப்பள். ஒரு திருவடிவமுடையனல்லன், ஞான நூல்கள் முதலா, வானுலகினரும் மண்ணுலகினரும் ஆகிய எல்லாரும் புகழ்ந்தாலும், புகழ்ச்சி முற்றுப்பெறாத ஒப்பற்ற உயிர்த் துணைவன், அடியார் உள்ளத் தினன், குற்றமற்ற சங்காரப் பெருமானது கோயிலின்கண் உள்ள குற்றமற்ற உயர்ந்த இனத்தினராகிய பெண் குழந்தைகளே! அவன் ஊர் யாது?அவன் பேர் யாது? அவனுக்கு யார் உறவினர்? யார் பக்கத்திலுள்ளவர்கள்? அவனைப் பாடும் வகை யாது சொல்லுவீராக.*

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையா வழியடியோம் வாழ்ந்தோங்காணா ரழல்போற்
செய்யா வெண்ணீறாடிச் செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண்டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். (11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரை:*** *நிறைந்த நெருப்புப்போல முழுதுஞ் செம்மை நிறமுடைய மேனியனே! வெள்ளிய தீருநீற்றுப் பொடியில் மூழ்கினவனே, ஒப்பற்ற வீட்டுச் செல்வனே, நுண்ணிய இடையும் மைபொருந்திய நெடிய கண்ணுமுடைய உமையம்மை கணவனே. தலைவனே, வண்டுகள் நிரம்பி அகன்ற தடாகத்திற் புகுந்து 'முகேர்' என்ற ஒலியெழும்படியாக நீரினைக் கையாலிறைத்து முழுகி உன் திருவடிகளைப்பாடி, உனது பரம்பரை யடிமைகளாக நாங்கள் வாழ்ந்தோம். (நீ பக்குவத்திற்கேற்பப் படிப்படியாக) அழகாக ஆட்கொண்டருளும் திருவிளையாட்டினாலே, உய்தி கூடுகின்ற வர்கள் பிழைத்துக் கதிசேரும் வகைகளிளெல்லாம் யாங்களும் படிப்படியாக உய்திகூடி முடித்தோம். இனி நாங்கள் இளைத்துப் போகாமல் எங்களை நீ காப்பாற்றுவாயாக*

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையாள் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். (12

***உரை:*** *(நம்மைப்) பிணித்த பிறவித் துன்பம் ஒழியும்படி, நாம் மகிழ்ந்து முழுகும் புனித நீருடையான், அழகிய தில்லை ஞானசபையின் கண், அனல் எந்தி நடம் புரிகின்ற கூத்துவல்லான் இந்த ஞாலத்தையும் வானுலகத்தையும் நாம் எல்லாரையும் தோற்றுவித்தும் நிலைபெறுத்தியும் ஒடுக்கியும் விளையாடுபவன். (ஆகிய பெருமானுடைய) புகழ்ச் சொற் களையுமுரைத்து, (சங்கினாகிய) வளையல்கள் ஒலிக்கவும் நீண்ட (மேகலைகளாகிய) ஆடைகள் அசைந்து ஓசையெழுப்பவும் அழகிய கூந்தலின் மீது வண்டுகள் ரீங்காரஞ் செய்யவும் மலர்கள் விளங்குகின்ற பொய்கையில் ஆடி, நம்மை உடைய பெருமானது பொங்கழல்களை வணங்கி துதித்துப் பெரிய (மலைச்) சுனைநீரிலே ஆடுவோமாக.*

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந் தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை:** *நீர் மிகுந்த பொய்கையானது பசிய கருங்குவளை மலர்களை உடைமையானும், எமது பெருமாட்டியாகிய உமையம்மை, கருங்குவளை நிறமுடைமையானும், பொய்கையானது செந்தாமரைப் புது மலருடைமையானும், எமது பெருமான் செந்தாமரை நிறமுடைய திருமேனியனாதலானும், பொய்கையானது அழகிய (குருகினமென்னப் படும்) நீர்ப்பறவைகளுடைமையானும் பெருமான் திருமேனியின் கண் குருகினமாய் குருக்கத்தி மலர்த் தொடையலும் பெருமாட்டி, தனது உறுப்பின் கண் சங்க வளையல் தொகுதியுமுடைமையானும், பொய்கையானது ஒலியுடைமையானும், பெருமானும் பெருமாட்டியும் பின்னிக் கிடக்கும் பாம்பினை அணிந்தமையானும், பொய்கையினகத்தே உடல் அழுக்கைக் கழுவுதற்பொருட்டு மூழ்குவார் சார்தலானும் பெருமான் பிராட்டி, என்பர் தம்மிடத்தே மும்மல நீக்கமுறுவார் வந்து அடைதலானும், இறைவனையும் இறைவியையுமொத்த பொய்கையில் இறங்கி நமது சங்கம் நீர்பாயப் பெற்று ஒலிக்கவும் அதனோடு நமது காற்சிலம்புகளும் நீர் பாயப் பெற்றுக் கலந்தொலிக்கவும், நகில்கள் மகிழ்ச்சியாற் பூரிக்கவும் முழுகுகின்ற நீர் மேலெழவும், தாமரை படர்ந்த அழகிய நீருட்பாய்ந்து ஆடுவோமாக.*

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (14

**உரை:** *காதிற்பிணைத்த தோடு ஆடும்படியாகவும், உடம்பிலணியப்பட்ட பசிய (பொன்னாலாகிய) அணிகள் ஆடவும், கூந்தல் மாலையாடவும், மாலையைச் சுற்றும் வண்டுக் கூட்டம் சுழலவும், குளிர்ந்த நீருள் மூழ்கி, தில்லைச் சிற்றம்பலத்தைப் புகழ்ந்துப்பாடி, அறிவுநூற் பொருளினைப் பாடி, இறைவன் அப்பொருளாய் நிற்கும் முறையையும் பாடி ஒளியுருவனின் ஆற்றலைப்பாடி, அவன் சென்னியிற் சூடப்பெற்றுச் சூழ்ந்துள்ள கொன்றை மாலையையும் பாடி, அவன் ஆதியான முறையையும் பாடி, அந்தமான முறையையும் பாடி, (பிறரில் நின்று நம்மை) வேறுபடுத்திச் சிறப்பாக வளர்த்துக் காத்த வளையல் நிரைத்த கையையுடைய அம்மையின் திருவடிச் சிறப்பினைப் பாடி நீராடுவோமாக.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறு
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (15

**உரை:** *கச்சணிந்த அழகிய அணியுடன் கூடிய நகிலுடைய நங்கையீர்! ஒருத்தி ஒவ்வொரு சமயத்திலே எம்பெருமான் என்று சொல்லிச் சொல்லியே, நமது தலைவனுடைய புகழினை ஒரு தரத்தோடு நிறுத்தாது வாய் ஓயாது பேசுவாள். மனமகிழ்ச்சி மிகக்கூர்தலினால், ஒருகாலும் நீர்வற்றாத நீண்ட அருவிகளைக் கண்கள் இடைவிடாது பெய்ய, நிலத்தின் மிசை ஒரே முறையாக எழாது வணங்கு தலையுடையாள், வானவர்களை ஒருகாலும் வணங்கமாட்டாள். பெரிய மன்னனாகிய இறைவனுக்கு இவ்வாறு அன்பால் மாலுடையள் ஆகும் விதத்தை யும் இவ்வாறு ஆண்டுகொள்ள வல்ல அறிஞராகிய ஒப்பற்ற பெருமான் யாரோ, அவரது திருவடிகளையும் நாம் பாடி, அழகிய தோற்றமுடைய புதுப்புனல் நிறைந்த பொய்கையில் வீழ்ந்து ஆடுவோமாக.*

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந் துடையா
ளென்னத் திகழ் தெம்மையாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். (16

**உரை:***மேகமே, கார்காலத்திற்கு முன்னே, இந்தக் கடலைக் குடித்து அதனை நீர் குறையச்செய்து, மேல்வானில் எழுந்து, எம்மையுடை யாளாகிய உமையம்மை திருமேனி போல நீலநிறத்தோடு விளங்கி, அவளது சிற்றிடைபோல மின்னல் விடுத்து விளங்கி எங்கள் பெருமாட்டி திருப்பாதங்களின் மேலுள்ள அழகிய பொன் சிலம்பு போல முழங்கி, அவளது திருப்புருவம் போல வானவில் வீசி, அம்மையை விட்டு நீங்கப் பெறாத எமது வேந்தனாகிய சிவபெருமான் பிறரினும் முற்பட்டும், அவனடிய வர்களுக்கும் அம்மை (அவள் அடியாராகிய) நமக்கும் முந்திப் பொழியும் இனிய அருள்போல நீரினைப் பெய்வாயாக.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்கண ரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (17

**உரை:** *வாசனை (இயற்கையாக) கொண்ட கரிய கூந்தலையுடையாளே, சிவந்த கண்களையுடைய திருமாலிடத்தும், நான்முகனிடத்தும், பிற விண்ணவர் களிடத்தும் வேறெவ்விடத்தும் இல்லாத ஒப்பற்ற பேரின்பம் நம்மைச் சாரும்படியாகச் சிறியோங்களாகிய நம்மைப் பாராட்டி, இவ்வுலகிலே நமது வீடுகள் தோறும் எழுந்தருளி வந்து செந்தாமரை மலர்போன்ற அழகிய திருவடிகளைக் காட்டியருளும் அண்ணலை, அழகிய கருணை நோக்குடைய மன்னனை, அடிமைகளாகிய நமக்கு கிடைத்தற்கரிய அமுதத்தை, நமது தலைவனை நாம் பாடி, அழகு மிகுந்து விளங்கு படியாகத் தாமரைத் தடாகத்தின் புதுப்புனலில் வீழ்ந்து முழுகுவோமாக.*

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (18

**உரை:** *மாதே! அண்ணாமலையுறையும் அண்ணலின் திருவடித் தாமரைகளின் பாற்போய் வணங்கும் வானவர் மகுடங்களிலுள்ள இரத்தினங்களின் தொகுதி (இறைவன் பேரொளி முன்) சிறப்பு விளக்கமிழந்தாற்போல, (வான்) இடம் நிறையுங் கதிரவனது கதிர்கள் தோன்ற, இருளானது மறைய, நட்சத்திரங்கள் குளிர்ச்சி பொருந்திய தமது ஒளிமங்கி யொழிய, அப்போழ்திலே, ஆணாகிப், பெண்ணாகி, அலியாகி விளக்க மிக்க ஒளி பொருந்திய வானுலகமாகிய மண்ணுலகமாகி, இவ்வளவிற்கும் வேறாய பொருளாகி, அன்பர்க்குப் பெருமை மிக்க அமுதமுமாய் நின்ற பெருமானது திருவடிகளைப் பாடி இப்புதுப்புனலில் வீழ்ந்து முழ்குவோமாக.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற்பிள்ளை யுனக்கே யடைக்கல மென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போம்கேள்
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய் (19

***உரை:*** *எங்கள் தலைவனே உன் கையில் உள்ள பிள்ளை உனக்கே சரண் என்னும் பழமொழியைப் புதுப்பிக்கின்றோமென்று நீ சொல்லக் கூடியதை அஞ்சி, உனக்கு ஒரு விண்ணப்பஞ் செய்கின்றோம், நீ கேட்டருள் வாயாக. எமது நகில்கள், நினது அன்பரல்லாதார் புயங்களைத் தழுவா தொழிக எங்கள் கைகள் உனக்கன்றி (வேறு தேவர்க்கு) எவ்வகையான தொண்டுஞ் செய்யாதொழிக. இரவும் பகலும் எங்கள் கண்கள் நின்னைத் தவிர வேறொன்றையுங்காணாதொழிக. இந்நிலவுலகில் இம்முறையே எங்க ளுக்கு ஐயனே நீ அருள் புரிவையாயின், பகலவன் எத்திசையில் உதித்தால் எங்களுக்கு என்ன? (எது எப்படியானாலும் கவலை யாதுமில்லை)*

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். (20

***உரை:*** *எங்களை காப்பாற்றும் பெருமானே! எப்பொருட்கும் முதலாயுள்ள உனது திருவடிக் கமலங்களை எங்களுக்குக் கொடுத்தருள்க. எவற்றிற்கும் முடிவாயுள்ள செவ்விய இளங்குழை போன்ற மெல்லிய திருவடிகளை எமக்கு கொடுத்தருள்க. எல்லா உயிர்களும் தோன்றுதற் கேதுவாகிய திருவடிகளுக்கு வணக்கம். எல்லா உயிர்களும் நிலைபெறுதற்குரிய பாதுகாப்பாகிய அழகிய கழலணிந்த திருவடிகளுக்கு வணக்கம். எல்லா உயிர்களும் முடிவெய்துதற் கேதுவாகிய திருவடிகளிரண்டிற்கும் வணக்கம். திருமாலும் பிரமனும் (செருக்கினாற்) காணவொண்ணாத தாமரை மலர்களுக்கு வணக்கம். நாங்கள், உய்தி கூடும்படி, அடிமையாக்கி ஆண்டருளும் பொற்பூம்பாதங்களுக்கு வணக்கம் (அவ்வாறு) வணங்கி நாம், நீர் நிறைந்த துறையின் கண் முழுகுவோமாக. நாம் ஆடும் மார்கழி நீர்க்கு வணக்கம்.*

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த உடற்கூற்று வண்ணம்

திருச்சிற்றம்பலம்

தன தன தான தன தன தான
  தந்த தனந்தன தந்த தனந்த
தனன தனந்த தனன தனந்த
  தானன தானன தானன தந்த
தந்ததன தான தனதான.

ஒருமடமாது மொருவனுமாகி
  யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
  வூறுசுரோணித மீதுகலந்து -

பனியிலொர்பாதி சிறுதுளிமாது
  பண்டியில்வந்து புகுந்துதிரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
  பார்வை மெய்வாய் செவிகால் கைகளென்ற -

உருவமுமாகி யுயிர்வளர்மாத
  மொன்பதுமொன்று நிறைந்து மடந்தை
யுதரமகன்று புவியில்விழுந்து
  யோகமும் வாரமுநாளுமறிந்து -

மகளிர்கள்சேனை தரவணையாடை
  மண்படவுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில்கொங்கை யமுதமருந்தி
  யோரறிவீரறி வாகிவளர்ந்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிநகையூற லிதழ்மடவாரு
வந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலை மொழிந்து
வாவிருபோவென நாமம் விளம்ப -

உடைமணியாடை யரைவடமாட
வுண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடி நடந்து - அஞ்கவயதாகி விளையாடியே.

உயர்தருஞான குருவுபதேச
முத்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து -

மயிர்முடிகோதி மறுபதநீல
வண்டிமிர் தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க -

மதனசொரூப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு -

மனதுபொறாம லவர்பிறகோடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி -

ஒருமுதலாகி முதுபொருளாயி
ருந்ததனங்களும் வம்பிலிழந்து
மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமையுமாறி யிளமையுமாறி
    வன்பல்விழுந்திரு கண்களிருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
    வாதவிரோத குரோதமடைந்து -செங்கை யினிலோர் தடியுமாகியே.

வருவதுபோவ தொருமுதுகூனு
    மந்தியெனும்படி குந்திநடந்து
மதியுமழிந்து செவிதிமிர்வந்து
    வாயறியாமல் விடாமன் மொழிந்து -

துயில்வருநேர மிருமல்பொறாது
    தொண்டையு நெஞ்சமு முலர்ந்துவறண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
    தோகையர் பாலர்கள் கோரணிகொண்டு -

கலியுகமீதி லிவர்மரியாதை
    கண்டிடுமென்பவர் சஞ்சலமிஞ்ச
கலகலவென்று மலசலம் வந்து
    கால்வழி மேல்வழி சாரநடந்து -

தெளிவு மிராம லுரைதடுமாறி
    சிந்தையு நெஞ்சமு முலைந்துமருண்டு
திடமுமுலைந்து மிகவுமலைந்து
    தேறிநலாதர வேதென நொந்து -

மறையவன்வேத னெழுதியவாறு
    வந்ததுகண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியெனதொந்த
    மேதினி வாழ்வுநி லாதினிநின்ற -

கடன்முறை பேசு மெனவுரை நாவு
    றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிடவந்து
    பூதமு நாலுசு வாசமு நின்று - நெஞ்சு தடுமாறி வருநேரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர் பிறைபோல வெயிறுமுரோம
முஞ்சடையுஞ் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல் யமதூதர்கள் வந்து -

வலைகொடு வீசி யுயிர்கொடுபோக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் காலமறிந்து -

பழையவர் காணு மெனுமயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர்பந்த
ரிடுமெனவந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியுமென்று -

பலரையுமேவி முதியவர் தாமி
ருந்தசவங்கழு வுஞ்சிலரென்று
பணிதுகில் தொங்கல் களபமணிந்து
பாவகமே செய்து நாறுமுடம்பை -

வரிசை கெடாம லெடுமெனவொடி
வந்திளமைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலையடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து -

விறகிடமூடி யழல்கொடு போட
வெந்து விழுந்துமு றிந்து நிணங்க
ளுருகி யெலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறு மிலாத வுடம்மை - நம்புமடி யேனை யினியாளுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## பட்டினத்துப்பிள்ளையார் பாடல்
## தாயாருக்குத் தகனக்கிரியை செய்கையிற் பாடியது

வெண்பா

ஐயிரண்டு திங்களாக யங்கமெலா நொந்துபெற்றுப்,
பையலென்ற போதே பரிந்தெடுத்துச், - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை,
எப்பிறப்பிற் காண்பே னினி?

**உரை:** *பத்துமாதங்கள் ஐயோ வென்னுமாறு சுமந்து கான்முதற்றலை யளவுள்ள உறுப்புக்க ளனைத்தும் வருத்தமடைந்து பிரசவித்து, ஆண்குழந்தையென அருகிலுள்ளார் கூறக் கேட்டவுடனே விரும்பிக் கைதனிலெடுத்துச் செவ்விய இரண்டு கையினிடத்திற் றாங்கிப், பொன்னணிபூண்ட ஸ்தனங்களிலுள்ள பாலினை யுண்ணுமா றளித்த அன்னையை, இனி எந்தப் பிறப்பிற் காணப் போகின்றேன்? (காணேன் என்பது கருத்து) (எ-று)*

முந்திக் தவங்கிடந்து, முந்நூறு நாளளவும்
அந்திபக லாச்சிவனை யாதரித்து - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழன்மூட்டு வேன்?

**உரை:** *(சந்தானம் வேண்டுமென) முன்னே தவஞ் செய்துகிடந்து, (அத்தப் பேற்றால்) கருப்பதிந்த நாள்முதல் முந்நூறுநாள் வரையும் இரவிலும் பகலிலும் ஆகச் சிவபெருமானைப் பிரார்த்தித்து, வயிறு முன்தள்ள என்னைச் சுமந்து பிரசவித்த அன்னைக்கோ பற்றி யெரியும் வண்ணம் தீயைப்பற்ற வைப்பேன்? (என்று)*

வட்டிலிலுந், தொட்டிலிலு, மார்மேலுந், தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

**உரை:** *துணியா லுண்டாக்கப்படுகின்ற ஏணையிலும் மர முதலிய வற்றாற் அமைக்கப்பட்ட தொட்டிலிலும், தனது மார்பகத்தும், புயத்தின்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீதும், மஞ்சத்திலும் இருத்தி, என்னை விரும்பி முற்றிலுங் கக்கத்தில் வைத்துக் காப்பாற்றி சிறப்பனைத்துஞ் செய்யும் அன்னைக்கோ கட்டையில் வைத்துத் தீயை பற்ற வைப்பேன்? (எ-று)*

நொந்து, சுமந்துபெற்று, நோவாம லேந்திமுலை
தந்து, வளர்த்தெடுத்துத் தாளாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்?

***உரை:*** *(அதிகப்) பிரயாசையுடன் வயிற்றில் (பத்துமாதம் வரையில்) தாங்கிப், பின் வருந்திப் பிரசவித்து, எனக்கு நோகாதவண்ணம் கையிற்றாங்கிப் பாலூட்டி, வளர்த்து உயர்த்தி, தாழ்ச்சியின்றி இரவும் பகலும் கையில் தாங்கி, என்றனை வளர்த்த அன்னைக்கோ உடலத்தில் தீயெரிய வைப்பேன்? (எ-று)*

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்,- உருசியுள்ள
தேனே! அமர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே; எனவழைத்த வாய்க்கு?

***உரை:*** *என்னைப் பெற்ற தாய்க்கு வரிசை வைத்துக் கண்டு களிப்பு றாமல், (என்னைச்) சுவையுள்ள தேனே யெனவும், அமுதமே யென வும், செல்வத்தினையுந் திரவியத்தினையு முடைய அரசனே! எனவும் விளித்த வாய்க்கு அரிசியையோ நானிடா நிற்பேன்? (எ-று)*

அள்ளி யிடுவ தரிசியோ? தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே! எனவழைத்த வாய்க்கு.

***உரை:*** *மெல்லெனத் தன் முகத்தின்மீது என்முகத்தினை வைத்து முத்தமிட்டு, எனது புதல்வா! என்று விளித்த வாய்க்கு அரிசியையோ அள்ளிப்போடுவது? அதுவுமல்லாமல் கூச்சமின்றிக் கொள்ளியையும் வைப்பேனோ? (எ-று)*

விருத்தம்

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே;
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்;
அன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே;
யானு மிட்டதீ மூள்க! மூள்கவே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரை:*** *முதலில் (சிவபெருமானால்) இடப்பட்ட நெருப்பு திரிபுரத்தின் கண் (மூண்டெரிந்தது) ; அதன்பின்னர் வானரருட் சிறந்த அனுமானால் இடப்பட்ட நெருப்பு அழகிய இலங்கா நகரத்துள் (மூண்டெரிந்தது); என் மாதா எனக்கிட்ட நெருப்பு வயிற்றின் அடியில் (மூண்டெரியா நின்றது); ஆதலின், நானும் என் அன்னையி னுடலிலிட்ட நெருப்புப் பற்றுக! பற்றுக!! (எ-று)*

வெண்பா

வேகுதே தீயதனில்; வெந்துபொடி சாம்ப
லாகுதே, பாவியே னையகோ! - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

***உரை:*** *வானிற் பறக்குங் குருவிகள் என்னேரே பறவா வண்ணம் என்னைப் பாராட்டி, இவனால் யான் அனைத்து முடையேனாவே னென எண்ணி என்னை வளர்த்த அங்கங்கள் நெருப்பினில் வேகின்றதே; வேவானின்று பொடியான சாம்பலாக ஆகின்றதே; இதனைக் கண்டு மிருக்கின்றேன். ஐயகோ (எ-று)*

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ! - சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய்.

***உரை:*** *அருணாசல வடிவாக விளங்கும் ஞானவுருவனே! எப்பொழுதும் உன்னையே தியானித்து மகிழ்வுடன் வரம் வேண்டி என்னைப் பெற்ற அன்னை வெந்துபோயினளோ! உனது திருவடி நிழலில்வந்து சேர்ந்தாளோ? என்னை மறந்துவிட்டாளோ அறிகிலேன்.(எ-று)*

வீற்றிருந்தா ளன்னை; வீதிதனி லிருந்தாள்!
நேற்றிருந்தாள்; இன்றுவெந்து நீறானாள்; - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள்! ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

***உரை:*** *தாயானவள் சுகமாகவிருந்தாள்; வீதியிலுமுலாவி யிருந்தனள்; நேற்று உயிரோடிருந்தனள்; இத்தினம் வேவுற்று சாம்பலாயினள்; இஃதென்னையென வருந்தாமல் பால் தெளித்தற்கு அனைவரும் வாருங்கள்! அனைத்தும் சிவமயமே யாகும். (எ-று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இராமலிங்க வள்ளலார் அருளிய திருவருட்பா

திருச்சிற்றம்பலம்

அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயின் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நலைமையும் வேண்டுவனே 01

அருட்சோதி தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகள் எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத்தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம் 02

வாழைஅடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவன் அன்றோ வகைஅறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இது தருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யான் உனக்கு
மகன் அலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ
கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள்இப் பொழுதே
03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதும்இந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடல்உயிரா தியஎல்லாம் நீஎடுத்துக் கொண்டுன்
உடல்உயிரா தியஎல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாய்என் கண்ணுள்
மணியேஎன் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேஎன் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராச மணியே 04

தடித்தஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால்
தாயுடன் அணைப்பள் தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்இங்
கெனக்குப் பேசிய தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத் தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்ததுபோதும் அணைத்திடல் வேண்டும்
அம்மைஅப் பாஇனி ஆற்றேன் 05

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்க வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே! 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும் உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும்உண்டு
ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும் உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம் உறும்
உளம்உண்டு வளமும் உண்டு
தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும் உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயில் அரசே
தார்உண்டு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே 07

கலைநிறை கணபதி சரணஞ் சரணம்
கஜமுக குணபதி சரணஞ் சரணம்
தலைவநின் இணையடி சரணஞ் சரணம்
சரவணபவகுக சரணஞ் சரணம்
சிலைமலை யுடையவ சரணஞ் சரணம்
சிவசிவ சிவசிவ சரணஞ் சரணம்
உலைவறு மொருபரை சரணஞ் சரணம்
உமைசிவை யம்பிகை சரணஞ் சரணம் 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியாறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோரென்
நேருறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளா யேழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தம்மைக் கண்டேயிளைத்தேன் 09

தேன்கலந்த திருவமுதாந் தேவாரத்
திருப்பாட்டைத் தினமுநாடி
நான்கலந்து பாடுங் கால் நானறியேன்
எனைஎனநீ நவிறபாட்டை
வான்கலந்த வடலூர் வாழ்இராமலிங்கம்
மணியேயான் வழுத்துங்காலை
ஊன் கலந்த உயிரெல்லாம் உளமெல்லாம்
உணர்வெல்லாம் உருகுமாமே? 10

பெற்றதாய்தனை மகமறந்தாலும்
பிள்ளையைப் பெறுந்தாய் மறந்தாலும்
உற்றதேகத்தை உயிர்மறந்தாலும்
உயிரைமேவிய உடல்மறந்தாலும்
கற்றநெஞ்சகங் கலைமறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவ ருள்ளிருந்தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே 11

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்துவ விரதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

விடயம்

1. ஆவணி ஞாயிறு
2. விநாயக சதுர்த்தி
3. நவராத்திரி விரதம்
4. தீபத்திருநாள்
5. கந்த சஷ்டி விரதம்
6. திருவெம்பாவை
7. திருவாதிரை
8. சூரிய வழிபாடு
9. தைப்பூசம்
10. சோமவார விரதம்
11. சிவராத்திரி விரதம்
12. மாசி மகம்
13. பிரதோஷ விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆவணி ஞாயிறு

ஆவணி சிங்க இராசிக்குரிய மாதம். சிங்க இராசியில் சூரியன் சஞ்சரிக்குங் காலம் அது. சூரிய பகவானது ஆட்சிக்குட்பட்ட இராசி சிங்கராசி. சூரியனது மற்றொரு பெயர் ஞாயிறு என்பது. அப்பெயர் தாங்கிய நாள், சிறப்பாக ஆவணி மாதத்தில் வரும் ஞாயிறு. சூரிய வழி பாட்டிற்குரிய சிறந்த நாளாகப் போற்றப்படும்.

பூமியின் ஆக்கங்கள் அனைத்திற்கும் மூலம் எனப்படக்கூடிய நிலை சூரியனுக்குண்டு. அதனால் சூரியன் தெய்வீக நிலையை அடைந்து வணக்கத்திற்குள்ளாகின்றான். நவகோள்களின் தலைமைத்துவமும் சூரியனுக்குண்டு. அதனால் ஆவணி ஞாயிறு சைவர்களின் விரத தினங்களுள் ஒன்றாகிச் சிறப்புப் பெறுகின்றது. விரதம் அனுட்டிப்போர் அன்று அதிகாலை நித்திரை விட்டெழுந்து, செய்யவேண்டிய கடன்களை நிறைவு செய்து, பசுவின் சாணம் அல்லது மஞ்சள்நீர் கொண்டு வீட்டு முற்றத்தைப் புனிதப்படுத்தி மாக்கோலமிட்டுப் பூரண கும்பம் வைத்துச் சூரியனை வணங்கிக் கொண்டு முற்றத்திலேயே சூரிய பொங்கலைச் செய்யவேண்டும். பொங்கல் நிறைவாகியதும் நிவேதனம் நடைபெறும். பூக்கள் - சிறப்பாகச் செந்நிறப் பூக்கள் மாம்பழம், வாழைப்பழம் முதலிய பழவகைகள், வெற்றிலை பாக்கு, இளநீர், பொங்கல் முதலியன நிவேதனமாகும். தீப, தூப ஆராதனைகள், திருமுறைப் பாராயணம் என்பனவும் தொடரும். பின்னர் திருக்கோவில் சென்று சுவாமி தரிசனஞ் செய்தபின் வீடு வந்து சுற்றஞ் சூழ உணவு கொள்ளலாம். பிதிர் காரகனாகிய சூரியனை வழிபடுவதாற் கண்பார்வை பிரகாசமடையுமென்றும், உடற்பிணிகள் நீங்குமென்றுஞ் சொல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத காலத்தின் ஆரம்பத்தில் இயற்கையை வழிபடும் முறைமை இருந்திருக்கின்றது. அந்த முறைமை சிவ வழிபாட்டின் ஆரம்ப படியாக அமைந்தது. அன்று வழிபாட்டுத் தலங்கள் இருந்தனவென்று சொல்ல முடியவில்லை. சூரியன், சோமன், அக்கினி, வருணன் என்று அன்றைய வழிபாட்டுத் தெய்வங்கள் அமைந்திருந்தன. இவை சிவ வடிவங்களாகவே கொள்ளப் பட்டன.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாயட்ட மூர்த்தமாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும்
பிறவுருவும் தம்முருவுந் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன்ச டையடிகள் நின்றவாறே.

என்னும் அப்பர் சுவாமிகள் தேவாரம் அந்த எமது எண்ணத்தை உறுதிசெய்கின்றது. நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம், ஞாயிறு, திங்கள், ஆன்மா என்னும் எட்டும் சிவ பிரானது அட்டமூர்த்தங்கள் என்று சொல்லப்படுகின்றன.

அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்
அருக்க னாவா னரனுரு வல்லனோ
-------------------------------------
-------------------------------------

என்னும் அப்பர் சுவாமிகளின் மற்றொரு தேவாரம் அருக்கன் சிவன் தான் என்கின்றது. இதனால் ஞாயிறு சிவசூரிய மூர்த்தி என்றழைக்கப்பட்டார். இருக்கு, யசூர், சாமம், அதர்வம் என்னும் வேதங்கள், திருமுருகாற்றுப் படை, சிலப்பதிகாரம் முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் எல்லாம் சூரியனைப் போற்றுகின்றன. சூரிய வழிபாடு சிவ வழிபாடுதான் என்று கண்ட மக்கள்

'பெருக்க நுகர்வினைப் பேரொளியாய் எங்கும்
அருக்கனென நிற்கு மருள்'

என்று அருக்கனிடத்துத் திருவருட்டன்மையைக் கண்டனர். இருளை நீக்குதல், ஒளிமயமாக்குதல் என்றுந் தொழில்கள் அருக்கனுக்கும் திருவருளுக்கும் பொதுவாயின. அதனாற் சிவசம்பந்தம் தெளிவு பெறுகின்றது. அது காரணமாகவே எமது வழிபாட்டு வேளை களிலெல்லாம் சூரிய வழிபாட்டிற்குச் சிறப்பான இடங் கொடுக்கின்றோம். எமது வீடுகளில் நடைபெறும் கிரியைகளில் ஆதித்தன் வழிபாட்டிற்குரிய முக்கியத்துவம் நாம் அறிந்ததுதான். ஆலயங்களிற்கூட அதிகாலைப் பூசை வேளையில் சூரிய வழிபாடு நடைபெறுகின்றது. சில ஆலயங்களில் சூரியனுக்கென்றே தனித்தவோர் சந்நிதியும் உண்டு. அவ் வண்ணமாய சூரிய பகவானைச் சிவமூர்த்தமாகக் கண்டு வழிபட்டுப் பெரும் பயனடைவோம்.

விரதம் என்பது வினைமாசு தீர்ந்து அந்தக்
கரணங்கள் தூயவாதற் பொருட்டு துறந்தோராற்
காக்கப்படுவது. அது இன்ன அறஞ் செய்வ
லெனவும் இன்ன பாவம் ஒழிவலெனவும் தம்
ஆற்றலுக்கேற்ப வரைந்து கொள்வதாகும்.
- பரிமேலழகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயக சதுர்த்தி விரதம்

எந்தவொரு கருமத்தைத் தொடங்கும் போதும், சைவர்களாகிய நாம் விநாயகரை வழிபடுவதை எமது வழக்கமாக்கிக் கொண்டுள்ளோம். விநாயகனை வழிபட்டுத் தொடங்கும் கருமங்கள் எல்லாம் எந்தவித முட்டுமின்றித் தொடருமென்பது சைவர்கள் நம்பிக்கை. விக்கினங்களை நீக்குபவன் என்பதால், இடையூறுகள் இடையே புகுந்து குறுக்கீடு செய்யாவகை காத்தருள வேண்டுமென வேண்டிக் கொள்வது போன்று ஆரம்பத்திலேயே விநாயகனுக்கு வணக்கம் செலுத்துகின்றோம். இந்த எண்ணப் பிரதிபலிப்பாகவே அவரை விக்னேஸ்வரன் என்றுங் குறிப்பிடுகின்றோம்.

வயிரவர் வழிபாடு போன்று விநாயக வழிபாடும் எளிதானது. அதைவிட எளிதானது என்றுஞ் சொல்லலாம். ஆல், அரசு முதலான மரத்தடிகளிலும் ஆற்றங்கரை, குளத்தங்கரை, தெருக்களின் சந்திப்பு முதலான இடங்களிலும் விநாயகரை வழிபடுகின்றோம். பசுவின் சாணி, மஞ்சள் மா, சந்தனம் முதலியவை கொண்டு பிள்ளையார் பிடிக்கலாம். அதிலே அறுகைச் சாத்தி வழிபட முடியும். விநாயகரை வழிபடும்போது மூன்று முறை சிரசிலே குட்டி வலக்கையால் இடக்காதையும் இடக் கையால் வலக்காதையும் பிடித்துக்கொண்டு மூன்று முறை தோப்புக்கரணம் போட்டு வணங்குவது உவப்பான வழிபாடாகும். உடல் நலமில்லாதவர்கள், சிறப்பாக உடல் நலமில்லாத பெண்கள் தோப்புக்கரணம் போட்டு வழிபடுதலைத் தவிர்த்துக் கொள்ளுதல் விரும்பக்கூடியது.

விநாயகரை நினைந்து அநுட்டிக்கப்படக்கூடிய சிறப்பான விரதங்கள் மூன்று. அவற்றுள் விநாயகர் சதுர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பானதெனச் சிந்திக்கப்படும். மாதந்தோறும் சதுர்த்தித் திதி இரு முறை வரும். அவற்றில் தேய்பிறைக் காலத்திய சதுர்த்தி சங்கடஹர சதுர்த்தி எனப் பெயர் பெறும். துன்பந்தரும் நிலைமைகளை நீக்கிக்கொள்ள வேண்டி இந்தச் சதுர்த்தி விரதம் அனுட்டிக்கப்படும். ஆவணி மாத வளர்பிறைக் காலத்திய சதுர்த்தியே விநாயக சதுர்த்தி எனப்படும். விநாயகர் தோற்றிய தினம் அது என்பதொரு கருத்து நிலவுவதே அதற்கான காரணமாகலாம். விநாயக சதுர்த்தி என்று தொடர்ந்து விரதம் அனுட்டிக்க விரும்புவோர் ஆவணி மாதத்து வளர்பிறைக் காலத்திய சதுர்த்தியிலே ஆரம்பித்து மாதந்தோறும் வரும் சதுர்த்தித் திதிகளும் தொடரவேண்டும். இப்படி இருபத்தொரு ஆண்டுகள் விரதமிருக்கலாம். இருபத்தொரு ஆண்டுகள் தொடர்ந்து விரதத்தை அனுட்டிக்க முடியாதவர்கள் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து அனுட்டித்து நிறைவு செய்யலாம். அதுவும் முடியவில்லையெனில் இருபத்தொரு சதுர்த்தித் தினங்களுக்குக் குறையாது விரதத்தைக் கைக்கொண்டு அடுத்துவரும் விநாயக சதுர்த்தியிலே நிறைவு செய்யலாம்.

விரதமிருப்போர் அதிகாலை நித்திரை விட்டெழுந்து செய்யவேண்டிய காலைக்கடன்களை முடிக்கும்வகை நித்திய கரும விதிகளை நிறைவு செய்து, வீட்டில் ஓரிடத்தைப் புனிதப்படுத்தி மாலை, தோரணம் என்பவற்றால் அலங்கரித்து விநாயகரை எழுந்தருளப் பண்ணி வழிபடலாம். விநாயகர் திருவுருவை வசதிக்கேற்ப, சாணம், மஞ்சள் மா கொண்டும் அமைக்கலாம். தங்கம் வெள்ளி என்பவற்றால் ஆக்கப்பட்ட திருவுருவையும் பயன்படுத்தலாம். தோத்திர பாராயணம், நிவேதனம், தீபாராதனை என்பன செய்து வழிபடலாம். இருபத்தொரு பத்திரம், இருபத்தொரு பூ, இருபத்தொரு அறுகம்புல் என்பவை கொண்டு தனித்தனி அர்ச்சித்தல் சிறப்பானதென்பர். பின்னர் ஆலயமொன்றுக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்தபின் மதிய உணவு கொள்ளலாம். இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவைத் தவிர்த்தல் நல்லது. விடமுடியாதவர்கள் பால் பழம் அல்லது பலகார வகை உண்ணலாம். நண்பகல் வேளை சதுர்த்தி நிற்குந் தினமே விரதத்திற்குரிய தினமாகக் கொள்ளப்பட வேண்டும்.

ஒரு சந்தர்ப்பத்தில் விநாயகப் பெருமான் தேவர்கள் முன்னிலையில் விகடக்கூத்தாடினார். அந்தவேளை அவருடைய உடல், தொந்தி என்பவற்றின் அசைவைப் பார்த்துச் சந்திரன் சிரித்து விட்டான். இதனை அவதானித்த விநாயகர் சந்திரனைப் பார்த்து, 'பெரியவர்கள் முன்னிலையில் நீ, அடக்கமின்றிச் சிரித்துவிட்டாய். ஆனபடியால் நீ சண்டாளனாகக் கடவாய்,' என்று சபித்து விட்டார். விநாயகர் சாபத்தினால், சந்திரன் ஒளிமழுங்கி மறையவிருந்த சந்தர்ப்பத்தில் இந்திரன் உபதேசப்படி இருபத்தொரு வருடங்கள் சதுர்த்தி விரதத்தை அநுட்டித்தான். மகிழ்ந்த விநாயகர் விமோசனம் அளித்தார். ஆவணிப் பூர்வச் சதுர்த்தியன்று மட்டும் உன்னைப் பார்ப்பவர்கள் சண்டாளர்கள் ஆவர். ஏனைய காலங்களிற் புனிதம் போற்றப்படும். என்று சந்திரனுக்கு வாழ்வளித் ததாக ஒரு செய்தி உண்டு. விரத அனுட்டானங்கள் மனதைத் தூய்மை செய்வன.

*1999.08.31*இல் இலங்கை வானொலியிற் பதிவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நவராத்திரி விரதம்

நிலத்தின் கீழ்ப்பல் லுலோகங்கள் ஆயினை
நீரின் மீது மலையும் நதிகளும்
சாருங்காடும் சுனையும் ஆயினை
குலத்தி லெண்ணற்ற பூண்டு பயிரினம்
கூட்டி வைத்துப் பலநலந் துய்த்தனை
புலத்தை யிட்டிங் குயிர்கள் செய்தாய் அன்னே
போற்றி போற்றி நினதருள் போற்றியே.

என்பது மகாகவி பாரதியார் மகாசக்தியை வாழ்த்திய பாடல்களுள் ஒன்று.

'எந்தப் பொருளிலுமே - உள்ளேநின்று
இயங்கி இருப்பவளே.'

என்பது மகா சக்திக்கு விண்ணப்பம் என்னுந் தலைப்பில் பாரதியார் குறிப்பிடுங் குறியீடு.

தோற்றங்கள் சக்தியின் விம்பங்கள். இயக்கங்கள் சக்தியின் புலப்பாடுகள். தோற்றங்களையோ செயற்பாடு களையோ பிரித்தெண்ணமுடிவதில்லை. அவை ஒன்றாகிய சம்பந்தமுடையன. உலகம் முழுமையுமே சிவம் சக்தி என்பவற்றின் வடிவுதான். பொருள்கள் எல்லாமே ஏதோ ஒருவகைப் பண்பைச் சார்ந்தவை. பண்பு இல்லையெனிற் பண்பைச் சார்ந்தவையான பொருள்களும் - பண்பிகளும் - இல்லையென்றாகிவிடும். குணத்தை உடையவை குணிகளு பண்பை உடையவை பண்பி; குணம் இல்லையெனில் குணத்தையுடைய பொருளாகிய குணியும் இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பு இல்லையெனில் பண்பையுடைய பொருளாகிய பண்பியும் இருக்கமுடியாது. முடிவு அவை பிரிக்க முடியாதவை என்பது. சிவம் சக்தி இரண்டும் இந்த வகையின. பிரிக்க முடியாதவை. அதனாலேதான் 'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்' என்று திருவருட்பயன் குறிப்பிட்டது போலும். சிவத்தினின்றும் பிரிக்க முடியாததாகிய சக்தியைப் பெண்மையாகக் கண்டு வழிபடும் மரபொன்று எம்மிடை உண்டு. அதுமட்டுமன்றிச் சக்தியின் நிலையைச் சிவத்தின் செம்பாதியாகக் கண்டு இறையை அர்த்தநாரீஸ்வரராக்கி மன அமைதி காணுகின்றனர். ஆன்மாக்கள் சக்தியின் தோற்றங்கள். எனவே பிள்ளைகள்; அங்கே அன்னையுடனான தொடர்பு வலுவுடையதாக இருக்கும். 'தாயேயாகி வளர்த்தனை போற்றி' என்னுந் திருவாசகப் பகுதியும் இறைவியின் கருணைப் பிரவாகத்தைக் காட்டுவதாக அமைகின்றது.

இவ்வகை, சிவத்தினும் வேறாகாத சக்தியை வியந்து போற்றுவதாயமைந்த விழாக்களுள்ளே நவராத்திரி விழா மேன்மை பெறும். இந்த விழாவினை ருதுவிற்கு ஒன்றாகக் கொண்டாடும் முறைமை ஒன்றும் உண்டு. எமது ஈழநாட்டில் வருடத்தில் இருமுறை கொண்டாடும் முறைமை சில சில பகுதிகளில் உண்டு. வசந்தருது மாதமாகிய சித்திரையில் வளர்பிறைக்காலப் பிரதமைத் திதியை ஆரம்ப நாளாகக் கொண்டு நவமியில் வாணி விழாவும், தசமியில் வன்னி வாழை வெட்டும் நடைபெறும். வசந்தருதுவிற் கொண்டாடப்படுவது காரணமாக இதனை வசந்த நவராத்திரி என்பர். ஈழத்தில் முனீஸ்வரம் தேவாலயத்தில் இவ்விழா சிறப்பாக நடைபெறுவதுண்டு. ஈழநாட்டின் சகல பகுதிகளிலும், ஆலயங்கள், பாடசாலைகள், நூல் நிலையங்கள், வர்த்தகத் தாபனங்கள், தொழிலகங்கள், வீடுகள் என்று எல்லா இடங்களிலும் கன்னி இராசியிற் சூரியன் சஞ்சரிக்கும் புரட்டாதி மாதத்திலேயே நவராத்திரியைக் கொண்டாடுவர். புரட்டாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்பிறைப் பிரதமையைக் கும்பம் வைத்து ஆரம்பிக்கும் நாளாகக் கொண்டு நவமியை ஒன்பதாவது நாளான வாணி விழாத் தினமாகவும், தசமியை வன்னி வாழை வெட்டும் மானம்பூ விழாவாகவுங் கொண்டாடுவர். அமாவாசைத் தொடர்பின்றி, அதிகாலையில் - சூரியோதயத்தில் - பிரதமைத் திதி நிற்கும் நாள்தான் நவராத்திரி ஆரம்ப தினமாக அமையவேண்டும்.

அன்னையை வழிபட உவப்பான காலம் இரவு என்பர். அதனாலேதான் இந்த விழா இரவிற் கொண்டாடப்படுவதாகி நவராத்திரி என்றாயிற்று. உலகிற் காணப்படுவனவெல்லாம் சிவம் சக்தி வழிபாட்டு நிலைக்களன்களே! அவற்றின் இயக்கங் களெல்லாம் சக்தியின் வடிவங்கள், என்று உணரவேண்டும். 'சந்திர ஒளியில் அவளைக் கண்டேன்; சரணம் என்று புகுந்து கொண்டேன்;' என்னும் பாரதி பாடற் பகுதி எமது இந்தச் சிந்தனைக்கு உறுதுணையாகின்றது. 'முன்னை நமதிச்சையினாற் பிறந்தோமில்லை; முதலிறுதி இடை நமது வசத்திலில்லை;' என்பனவாய கருத்துக்கள் மனைவாழ்வு, பொருளெல்லாம் அவள் தந்த பிச்சை என்றும், அவள் மலரடியே துணையென்றும் வாழ்த்த வைக்கின்றன. எல்லாமே தெய்வீகத்தின் பரிணமிப்பு என்று உணரும் நிலை மனிதனுக்குண்டு. இந்த இடத்திலேதான் மனிதனிடத்துள்ள தெய்வீக உணர்வின் உணர்வை அளவிடமுடியும். இந்தவகை உணர்வு மனிதனுக்கு வேண்டிய, மனித வாழ்விற்கு வேண்டிய பரிமாணங்களைத் தனித்தனி சிந்திக்க வைக்கின்றது. வாழ்வின் அடிப்படையாக வீரம், செல்வம், கல்வி என்பன அமைகின்றன. வாழ்வு முழுமைபெற மூன்று தகுதியும் நிரம்ப வேண்டும். ஏதோ ஓரளவில் இவை ஒவ்வொருவரிடத்தும் நிரம்பியுள்ளன. மூன்றினதும் பூரணத்துவந்தான் நிறைந்த வாழ்வு என்று சிந்திக்க வேண்டும். இவற்றுள் எந்த ஒன்றும் இல்லையெனில் அது வாழ்வாகாது. அப்படி அமையவும் முடியாது. செயல், முயற்சி, உறுதி, ஊக்கம், திறமை என்பவற்றின் திரண்ட நிலைதான் வீரமாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகை வீரநினைவுடன் நவராத்திரிக்கால முதல் மூன்று தினங்களும் துர்க்கை வழிபாடு நடைபெறும். தனம், கேள்வி, கருணை, வழிபாடு முதலியனவெல்லாம் செல்வம் என்னும் பகுதியில் அடங்கலாம். இவ்வகை எண்ணப் பாங்குடன் நடுநின்ற மூன்று தினங்களும் ஸ்ரீமகாலட்சுமியை வழிபடுவதாக அமையும். நவராத்திரி விழாவின் இறுதி மூன்று தினங்களும் கல்வித் தெய்வக் கொள்கைக்கு உரியவரான கலைமகளை வழிபடுவோம். நூலறிவு, நுண்ணறிவு, பகுத்தறிவு, தெய்வ உணர்வு எல்லாம் இந்தக் கல்வியுணர்வுள் அடங்கும்.

துர்க்கை - பார்வதி; பரமசிவன் சக்தி; அவன் பாகத் துறைபவள். இறைவன் செம்பாதி வடிவு சக்தி. மகாலட்சுமி மகா விஷ்ணுவின் சக்தி; அவன் மார்பில் உறைபவள். சரஸ்வதி பிரமன் சக்தி. அவன் நாவினை இருப்பிடமாகக் கொண்டவள். உடம்பின் பாகத்தினை, மார்பினை நாவினை இடங்கொண்டமை, காயம், மனம், வாக்கு என்பவற்றின் தூய்மையைச் சிந்திக்கச் செய்வது மனம், வாக்கு, காயம் என்னும் அமைதி கொண்டு திரிகரண சுத்தி குறியீடு செய்யப்படும் என்பர் அறிஞர்.

கன்னி மாதமாகிய புரட்டாதியில் நடைபெறும் நவராத்திரி விழாவினைச் சைவ நிறுவனங்கள் அனைத்தும் கும்பம் வைத்து வழிபடும் முறைமை உண்டு. அதனால் நவராத்திரியைக் கும்பம் வைத்தல் என்னும் தொடராலும் கிராமப்புறங்களிற் குறிப்பிடுவர். கும்பம் வைத்து வழிபடும் முறைமை சைவ விழாக்கள் எல்லாவற்றிலும் இடம் பெற்றாலும், நவராத்திரிக் கும்பம் சிறப்பானது என்பது சொல் உபயோகங்கொண்டு பெறப்படும்.

ஆலயங்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்கூடங்கள், அலுவலகங்கள் என்று எல்லாச் சைவ நிறுவனங்களிலும் புரட்டாதி வளர்பிறைப் பிரதமையன்று கும்பம் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு தொடங்குவர். புனிதமான ஓரிடத்தில் வாழையிலையிற் புனிதமான மண் பரவி மண் பானையில் நீர் நிறைத்துக் கும்பம் வைக்கப்படும். கும்பத்தைச் சூழ நவதானியம் விதைக்கப்படும். நவதானியத்திற்கு அன்றுமட்டும் நீர் தெளிப்பர். தொடர்ந்து வருந் தினங்களில் நீர் தெளிக்கவேண்டியதில்லை. கும்பம் மண்பானையில் வைக்கப்பட்டுள்ளமையால் பானையிலிருந்து கசியும் நீரே நவதானியம் முளை கொண்டு வளர்வதற்குப் போதியதாகும். கும்பத்திற்கு அண்மையாகச் சக்திகளின் படங்களும் தொங்க விடப்படலாம். தீபம் ஒன்று அணையாததாகத் தொடர்ந்து சுடர் விட்டுக் கொண்டே இருப்பது நல்லது. நாளும் மலர்கள் கொண்டு அலங்கரிப்பதோடு அவல், கடலை, நாவற்பழம், கற்கண்டு முதலியவற்றை விசேட நிவேதனங்களாகக் கொள்ளலாம். வழமையான நிவேதனப் பொருள்களாக வெற்றிலை பாக்கு, பழம், இளநீர் என்பனவும் நிவேதிக்கப்பட வேண்டும். தீப தூப ஆராதனைகள் நிறைவாகியதும் அபிராமி அந்தாதி, சகலகலாவல்லிமாலை, அபிராமிப் பதிகம் முதலியவற்றைப் பாராயணஞ் செய்யலாம். இறுதியில் பிரசாதம் பெற்று நிறைவு காணலாம். இவ்வண்ணம் முதல் மூன்று தினங்கள் வீரம் வேண்டித் துர்க்கை சிந்தனையுடனும், அடுத்து வரும் மூன்று தினங்களும் செல்வம் வேண்டி மகாலட்சுமி சிந்தனையுடனும் தொடர்ந்துள்ள இறுதி மூன்று தினங்களும் கல்வி வேண்டிக் கலைவாணி சிந்தனையுடனும் வழிபடுதல் நல்லது. ஒன்பதாவது நாள் மகா நவமி. இந்த மகா நவமி காரணமாகவே நவராத்திரி மகா நோன்பு ஆயிற்று என்பர். பத்தாவது நாள் கன்னி வாழை வெட்டுதல் நடைபெறும். அத்துடன் கும்பச் சரிவும் இடம்பெறும். கும்பத்திலுள்ள நீர் தீர்த்தக்கிணற்றிலோ ஆற்றிலோ, கடலிலோ சங்கமமாக்கப்படும். அம்பாள் ஆலயம் ஒன்றில் நடைபெறும் போது அம்பாளுக்கே அந்த நீர்கொண்டு அபிஷேகம் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாவது நாள் இரவு பூசனை நடைபெறும் முன்பாக கல்வியாளர்கள் தம் விருப்பிற்குரிய நூலொன்றைப் பூசையில் வைப்பர். அடுத்தநாள் விஜயதசமிப் பூசை முடிவது வரை கல்வி முயற்சிகளைக் கைவிட்டு வாணி வழிபாட்டுடன் இருப்பர். தொழிலாளர்கள் கலைஞர்கள் என்று எல்லோரும் தத்தமக்கு மிகுதியும் வேண்டியதொரு ஆயுதத்தைப் பூசையில் வைத்து வழிபாட்டிற் பொழுதைச் செலவு செய்வர். விஜயதசமி நிறைவாகியதும் தாம் கொடுத்ததைப் பக்தி சிரத்தையோடு பெற்றுத் தொழிலை ஆரம்பிப்பர்.

நவராத்திரி விரதம் அனுட்டிக்க விரும்புவோர் முதலாம் நாளிலிருந்து எட்டாவது நாள் வரை இரவிற் பால் பழம் உண்டு அல்லது பலகாரம் உண்டு ஒன்பதாவது நாள் உபவாசமிருந்து பத்தாவது நாள் விஜயதசமிப் பூசை கண்டு பாரணை நிறைவு செய்யலாம். முடியாதவர்கள் நாளும் ஒரு நேர உணவு கொண்டு ஒன்பதாவது நாள் உபவாசத்துடனோ உபவாசம் இல்லாமலோ பத்தாவது நாள் பாரணை நிறைவு காணலாம்.

தசரா என்பது வட இந்தியர்களது பண்டிகை ஒன்று. இந்தப் பண்டிகையின் இறுதிநாள் விழா தான் சைவர்களது நவராத்திரிக்குப் பின் பத்தாவதாக இணைக்கப்பட்டது என்பதொரு கருத்தும் உண்டு.

நவராத்திரி விழாவை வீடுகளிற் கொலு அமைத்து வழிபடும் முறை கவர்ச்சிகரமானது. ஐந்து படி அல்லது ஏழுபடி வரக்கூடிய வகையில் படிமுறை மேடையை அமைத்து அலங்காரப் பொம்மைகளை ஒழுங்காக அடுக்கி வைப்பர். அங்கே புனிதம் பேணப்படும். பக்கலிற் கும்பமும் வைத்து வழிபடுவர். மற்றொரு வகையாகவும் நடைமுறைப் படுத்துவர். முதலாம் நாள் ஒரு வயதுச் சிறுமி, இரண்டாம் நாள் இரண்டு வயதுச் சிறுமி, மூன்றாம் நாள் மூன்று வயதுச் சிறுமி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமையில் ஒன்பது நாளும் ஒன்பதின் மலரைத் தெரிவு செய்து அலங்கரித்து அமரச்செய்து பூசை செய்தல் அவ்வகையானது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சுமங்கலியைப் புனித நெறியில் அலங்கார பூஜிதையாக்கிப் பூசை செய்து உபசரிப்பது மற்றொரு முறை.

கம்பர் மகன் அம்பிகாபதி, மன்னன் மகள் அமராவதியை விரும்பிவிட்டான். அமராவதியும் அம்பிகாபதியிடம் மனதைப் பறிகொடுத்தாள். செய்தி மன்னனுக்கு எட்டியது. உண்மையை அறிந்துகொள்ளத் தன் பார்வையில் அறிந்துகொள்ள விரும்பிய மன்னன் ஒரு விருந்து வைபவத்திற்கு ஒழுங்கு செய்கின்றான். முக்கிய பிரமுகர்களுடன் கம்பர் அம்பிகாபதி என்போரும் விருந்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். அரசனது தந்திரத்தை உணர்ந்து கொண்ட கம்பர் அம்பிகாபதியைத் தன் பக்கலிலேயே அமர்த்திக் கொள்ளுகின்றார். விருந்திலே கலந்துகொண்ட மன்னன் எல்லாவற்றையும் அவதானிக்கக்கூடியதொரு வசதியான இடத்தில் அமர்ந்து கொள்கின்றான். விருந்திற்கான உணவு பரிமாறல் ஆரம்பமாகின்றது. உணவு பரிமாறும் பிரதான பாத்திரங்களுள் ஒருவர் அமராவதி. மன்னவ குமாரியின் பூப்போன்ற பாதங்கள் நிலத்திற்படும் போது ஏற்படுந் தாக்கத்தினை அம்பிகாபதியாற் பொறுக்கமுடியவில்லை. அவள் காலிற் பட்ட கொப்புளங்கள் அம்பிகாவதியின் உள்ளத்திற் பொங்கின. அவன் வாயில் அருமந்ததொரு பாடலாக வெளிவந்தது.

> 'இட்டவடி நோக எடுத்தவடி கொப்பளிக்க
> வட்டில் சுமந்து மருங்கசைய' -

என்று இரண்டு அடிகள் அவன் உள்ளக் குமுறலைப் பிரதிபலிப்பனவாக வெளிவந்தன. எல்லாவற்றையும் எதிர் பார்த்த நிலையிலிருந்த கம்பர், மைந்தன் பாடல் விபரீதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவிக்கப் போகின்றதே என்பதை உன்னி கலைமகளை மனதார வேண்டி மைந்தனின் பாடற் பின் பகுதியைப் பூரணப்படுத்துகின்றார்.

- 'கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று கூவுவாள் நாவின்
வழங்கோசை வையம் பெறும்.'

என்று பாடல் நிறைவு பெறுகின்றது. மன்னன், தெருவிலே வருபவர் யார் என்று பார்த்து வருமாறு ஆளைப் போக்கினான். ஒரு கிழவி கொட்டிக்கிழங்கு விற்பனை செய்வதாகச் செய்தி வந்தது. அங்கே கொட்டிக்கிழங்கு விற்றவள் வேறு யாருமில்லை. அம்பிகாபதியைக் காப்பாற்றுவதற்காகக் கம்பன் வேண்டுதலால் வந்த வாணியேதான். கம்பன் உபாசனை அவ்வளவு உயர்வானது. அதனால் கலைமகள் உதவவேண்டி நேரிலேயே தோற்றமளித்தாள் என்பது. இவ்வண்ணம் காளமேகப்புலவர், அபிராமிப்பட்டர் என்போர் வாணியின் திருவருளாற் காப்பற்றப்பட்டமையை இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. அவ்வழி நாமும் கலைமகள் கடைக்கண் பார்வையைப் பெற முயல்வோமாக.

*1999.10.04*இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தீபத் திருநாள்

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்

என்பது திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளதொரு உண்மை. பிறப்பு, குணம், அறிவு என்பவற்றால் மக்களெய்தும் பெருமைக்கும் மற்றைச் சிறுமைக்கும் உரைகல் அவரவர் செய்யுங் கருமமே! வேறொன்றுமில்லை என்பது அக்குறள் தந்துகொண்டிருக்குங் கருத்து. உயர் தகுதியுள்ளவிடத்துத் தோன்றிவிட்டா ரென்பதாலோ, நல்ல குணப் பண்புடை யார் சூழலையுடையவர் என்பதாலோ, அறிவுச் சுடர் ஒளிரும் சூழலிலே தோன்றிவிட்டார் என்பதாலோ ஒருவர் பெரியவராகிவிட முடியாது. எது எப்படி இருப்பினும் அவர் செயல்தான் அவரை அவராக விளக்கம் செய்ய முடியும். இது பொய்யாமொழியாரின் தெளிவான உண்மை.

பிரம விஷ்ணுக்கள் இருவரும் உலகத் தோற்றங்களை உருவாக்கும் பணிவழி நிற்பவரென்றும், படைக்கப் பட்டவற்றை அவ்வவற்றுக்குரிய காலபரியந்தம் காத்தருளு பவரென்றும் தெய்வ நிலையைச் சார்ந்தவர்கள். படைத்தற் கடவுளென்றும் காத்தற் கடவுளென்றும் தகுதி கண்ட வர்கள். அவர்கள் பணி இரண்டுமே உயர்ந்தவை தான். அந்தப் பணிகள் சிவன் தலைமையில் நடந்தவை. இந்த நிலைமையை மறந்த பிரமன் யான் உன் தந்தை என்ற திருமாலிடம், நீ எப்படி வேண்டுமானாலும் சொல்லு' ''யாம் பிரமமேகாண்; என்று ஆணவத்தின் தலை நின்றான். ‘முன்பொருமுறை நீ தூணிடைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தா யல்லவா. தூணைப் பிளந்து கொண்டுதானே வந்தாய்' அப்படியெனில் அந்தத் தூண் உனக்குத் தந்தையாகி உயர்ந்த பொருளாகுமோ; என்று நையாண்டியும் செய்தான். இருவருந் தம்மை மறந்தனர். சிவன் தந்த ஆயுதங்களைப் பயன்படுத்திப் பெரும் போரிட்டனர். தனித்தனி தாந்தாமே முழு முதல் என்ற வெறி அவர்களிடையே ஆட்டம் போடத் தொடங்கியது.

'மல்லலுறு மேலுலகு மாதிரமு மேனைத்
தொல்லுலகு மேருவொடு சுற்றுகடல் ஏழும்
ஒல்லென விரைந்தெழும் உயிர்த்தொகையும் அல்லா
லெல்லையில் பொருட்டிறனும் யான்நெடிது நோக்கி.'

'இப்பொருள் அனைத்துமுனம் யான்பயந்த தென்றால்
ஒப்பிலை யெனக்கு........................'

என்று பிரமன் தன் வீரப் பிரதாபமெல்லாங் கூறித் திருமாலுடன் போரிட்டான்.! 'நீ உற்பத்தி செய்தவற்றையும், ஏன்? உன்னையுங்கூட யானே தோற்றுவித்துக் காக் கின்றேன். உன்னையும், உன்னை உள்ளிட்ட அத்தனை பேரையும் யான் காக்கவில்லையென்றால் இன்று நீயுமில்லை; உலகும் இல்லை என்றாகியிருக்குமே! ஆகவே நான்தான் முழுமுதல் என்பதை அறிந்துகொள்' என்று சொல்லிக்கொண்டே திருமாலும் போரைத் தொடரப் பல்லாண்டுகள் உலகு துன்பத்துடனாகியது. பல்லாயிரம் வருடங்களாக போரிட்ட இவர்கள் சிவன் கொடுத்த ஆயுதங்களையே பயன்படுத்தினர். ஆயினுந் தங்களுக்கு மேலொருவன் உளன் என்பதை அந்த இடத்துஒரு சிறிதுஞ் சிந்திக்கவில்லை. இந்த நிலையில் அவர்களிடையே ஒரு சோதி தோன்றியது. எங்கிருந்தோ சில வார்த்தைகளும் கேட்டன. 'இந்தச் சோதியின் அடியை ஒருவரும் முடியை ஒருவரும் காண வேண்டும். யார் முதலிற் காண்கின்றாரோ அவர்தான் முழுமுதல் என்று அறிந்துகொள்க' என்பதுதான் அங்கு கேட்ட செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய சோதி கேட்ட அறிவுறுத்தல் என்பன தம் சக்திக்கு அப்பாற்பட்டவை. எனவே தமக்கு மேலானதொரு சக்தி இருக்க வேண்டும் என அந்த வேளையிலும் அவர்கள் எண்ணவில்லை. திருமாலும் பன்றியாய் நிலத்தைக் கிண்டிக் கொண்டு அடியைக் காணவேண்டிக் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார். பித்துப் பிடித்துப் பேதைமையுற்றுப் பிரமத்தை அறியாது நின்ற பிரமன் திருமாலை முந்திவிடவேண்டுமே என்ற வேகத்தில் அன்னமெனும் உயர்வகை ஏவுகணையின் உதவிகொண்டு மின்னல் வேகத்தில் முடியை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். காலக்கழிவு களைப்பைக் கொடுத்ததே தவிரப் பயன் காண வைத்திலது. அன்னப்பறவை சோதி சொரூபனின் நெற்றியிடத்தை அடைந்து கொண்டிருந்த வேளை ஒரு தாழம்பூ மேலிருந்து கீழ்நோக்கி வந்துகொண்டிருந்தது. அதனைக் கண்ட பிரமதேவர் அதன் பிரயாண வரலாற்றைக் கண்டறிய முற்பட்டார். க்ஷதான் இந்தச் சோதியின் முடியிலிருந்து தவறியதாற் கீழ்நோக்கி வந்து கொண்டிருக் கின்றேனென்றும், பல்லாயிரம் ஆண்டுகள் தொடர்ந்த பயணத்தில் இன்று நெற்றிவரைதான் வந்துள்ளேன். நீங்கள் எப்படித்தான் முடியைக் காணப்போகிறீர்களோ தெரியவில்லை; என்றும் அது கூறியது. பிரமனின் குறுக்கு மூளை உடனடியாக வேலை செய்தது. எந்தவகை முயற்சி செய்தும் முடியைக் காண இனி வாய்ப்பில்லை என்பதை நன்றாக உணர்ந்து கொண்டவன் தாழம்பூவிடம் கூனிக் குறுகினான். பூவே எனக்காக ஒரு சிறு பொய் சொல்ல வேண்டும். முடியைப் பார்த்தேன் என்று யான் சொல்லுவேன். அந்த நேரம் உடனிருந்து நீயும் பார்த்ததாகச் சொல்ல வேண்டும். இருவரும் அங்கிருந்துதான் வருகின்றோ மெனச் சமாளித்துவிடலாம் என்றும், பிரமதேவர் எல்லாம் நிறை வாகி முழுமுதலாய் அமர்ந்து இருப்பதாக நினைந்து கொண்டே சொல்லுகின்றார். களைப்பிற்குள்ளாகிய திருமால் இவர்களுக்கு முன்பாகவே தன் தோல்வியைச் சமர்ப்பணமாக்கி ஆற்றாமையை நிவேதனமாக்கி நிலத்தைப் பார்த்தபடி நின்று கொண்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம்பாவத்தின் சொரூபமாகத் தாழம்பூ உடனாகி வருகை தந்த பிரமன் தாம் முடியைக் கண்டுவிட்டோமென்றும் சாட்சியாகத் தாழம்பூவை அழைத்து வந்தோமென்றும் குறிப்பிட்டுத் தாழம்பூவைப் பார்க்க, அதுவும் ஆமாம் என்றது. என்றவர்கள் சோதியை உற்று நோக்கி அதிர்ந்தனர். சிவன்தான் சோதியென நின்றமையை உணர்ந்தனர். வணங்கினர். பிழைக்கு இரங்கினர்; ஏங்கினர். இறையேயென வேண்டினர். அழுதனர்; தொழுதனர். எல்லோரும் சோதியை வழுத்தினர். பொய்ம்மையில் அழுந்திய பிரமதேவரும் தாழம்பூவும் தண்டனை பெறத் தவறவில்லை. இறைவன் பூசைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாத பூ என்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது தாழம்பூ. பிரமதேவருக்கு ஆலயமோ வழிபாடோ கிடையாது.

'திருமுடி கண்டே னென்று திசைமுகன் பொய்யு ரைப்ப
விருமடி கரியா நிற்ப விருவர்க்குஞ் சாப மெய்த
மருமடி யவர்கள் கைதை மலர்சிவன் முடியிற் சாத்தார்
பெருமிடி வரினும் பொய்ச்சொற் பிதற்றிடார் பெரியோராவார்'

என்னுங் கமலை ஞானப்பிரகாசர் அருளிச் செய்த புட்பவிதி எனும் நூலிலுள்ள பாடல் இச்செய்தியை உறுதி செய் கின்றது. பெரும்மிடி வரினும் பொய்ச்சொல் பிதற்றிடார் பெரியர் என்கின்றது பாடல். எனவே பிரமதேவர் யார் என்பது புரிகின்றதல்லவா! தேவாசுர யுத்தத்தின் போது முருகன் சூரபதுமன் முன்பாக நினைக்க முடியாத ஒளிப் பிரவாகத்துடன் நின்றானல்லவா! அந்த மாதிரி இங்கேயும் பிரம விட்டுணுக்களின் முன் சோதிப்பிழம்பென நிற்கின்றான். அந்த வடிவைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கலாம் போல் தெரிகிறது. தம் நிலையையுந் தவறையும் உணர்ந்த இருவரும் இதே வடிவை என்றும் பார்த்திருக்க அருளவேண்டுமென வேண்டுகின்றனர். யாம் மீண்டும் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தில் அதாவது திருக்கார்த்திகையினன்று இவ்வண்ணம் காட்சி தருவோம் என்று இறைவன் அருளிச் செய்கின்றான். அந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமே திருக்கார்த்திகைத் தினமாக தீபத் திருநாளாக அமைகின்றது. சித்திரகுப்தர் பிறந்த நாளாகிய சித்திரைச் சித்திரை பூரணையுடனாகிச் சிறப்புறுவது போன்று திருக்கார்த்திகையும் அவ்வண்ணமாகிய சிறப்பைப் சிலபோது பெறுகின்றது.

இறைவன் சோதிவடிவினனாகி மீண்டும் காட்சிதரும் அந்தநாள் முருக விரத சிறப்புத் தினமான திருக்கார்த்திகை உடனாகி மேலும் சிறப்புப் பெறுகின்றது. இருளை நீக்குவது ஒளி. பிரமா விஷ்ணு என்போரின் மனவிருளை நீக்கிய ஒளி சோதிவடிவு. அந்தச் சோதி வடிவை நினைந்து அந்த நாளிலே தீபங்களை மிகுதியாக ஏற்றிச் சோதிப் பிரபையை மிகுதியாக்குகின்றோம். ஒரு பொருளையும் பார்க்கவிடாது எல்லாவற்றையும் தன்னுள் அகப்படுத்தித் தன் கரிந்த நிலையை மட்டுங் காட்டுவது இருள். ஆனால் மலவிருளோ எந்தவொன்றையுங் காண விடாதே அதேவேளை தன்னையும் காணவிடாது அறிவை மயங்க வைத்திருப்பது மலவிருள். அதை அகற்றவல்லது திருவருள் எனும் இறைசோதி. அந்த நினைவை மனத்துக் கொண்டுதான் விளக்கீட்டினை யாம் பெரிதுபடுத்துகின்றோம். விளக்கீட்டுத் திருநாளில் எந்தவொரு இடத்திலும் நாம் இருளைப் பார்க்க விரும்புவதில்லை. அதனால் வீட்டின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் தீபங்களைச் சுடரச் செய்கின்றோம். அந்த அளவுடன் நின்றுவிடாது வீட்டின் பின்புறம் பக்கங்களென்றும், தோட்டம் துரவு என்றும், தொழிலிடங்கள், பிராணிகள் வளர்ப்பிடங்கள், வர்த்தக நிலையங்கள், நீர் பெறுமிடங்களாய கிணற்றுச் சூழல், தொட்டிச் சூழல் என்றும் எங்குமே தீபங்களைச் சுடர வைக்கின்றோம். ஆலயங்களிலும் தீபங்கள் சுடரும். வீட்டின் முன்புறத்தே வாழைத் தண்டினை அல்லது அதுபோன்ற வேறொன்றினை நாட்டித் தேங்காய்ப் பாதியுள் பழைய தூய பருத்திநூல் வைத்துத் தேங்காய் நெய்கொண்டு நிறைத்து நீண்ட நேரம் எரியவிடும் முறைமையும் உண்டு. சிறிய கிண்ணம் போன்ற சட்டிகளில் தீபங்களை ஒளிர வைத்து வரிசைப்படுத்தி அழகு காண்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை. இப்படித் தீப வரிசையின் அழகை அனுபவிக்கும் மற்றொரு விழாவும் உண்டு. தீபாவளி தீபாவலி என்னும் பெயர்களான் அது வழங்கும். தீப ஆவளி என்றோ, தீப ஆவலி என்றோ அது கொள்ளப்படும். ஆவளி ஆவலி என்பன வரிசை என்று பொருள் தருவன. அந்த விழாவும் மலநீக்கம் ஒளிவியாபகம் என்பதையே குறியாகக் கொண்டது.

விளக்கீட்டின் போது ஆலயங்களில் கமுகு போன்ற உயர்ந்த மரங்களை நாட்டி உலர்ந்த தென்னோலை, கமுகோலை, பனையோலை, வாழைச்சருகு போன்றவற்றை நிறைவாகக் கட்டிப் பெரியதொரு தீபமாக எரிய வைப்பர். இறைவன் ஜோதி வடிவில் நின்ற நிலையைக் காண விழைந்த மக்களது ஆசையே இந்த வடிவாகியது. இதனைச் சொக்கப்பானை கொளுத்துதல் என்பர். பஞ்சபூதத் தலங் களுள் தேயுந் தலமாகிய திருவண்ணாமலையில் வருடா வருடம் இவ்விழா மிகப் பெரிய அளவிற் கொண்டா டப்படுகிறது. சைவ சமய புண்ணிய காலம் என்னும் நூலின் ஆசிரியர் பண்டிதர் த. சுப்பிரமணியன் இந்த வைபவத்தைச் சுட்கப்பனை என்றே குறிப்பிட்டுள்ளார்கள். சுட்கம் - வரட்சி. இந்தச் சொல்லடியாகவே இது தோன்றியிருக்க வேண்டுமென்றும் காலப்போக்கிற் சுட்கப்பனை சொக்கப் பானை ஆகியிருக்கலாம் என்றும் அவர் கருதுகின்றார்.

இந்தத் தீபத் திருநாளினைப் பண்டை மக்கள் வேறொரு வகையாகப் பார்த்திருக்கின்றனர். ஈரடியாலே மூவுலகளந்த சம்பவத்தில் மறைந்த மாவலிச்சக்கரவர்த்தி தன்னை மக்கள் ஒருநாளெனினும் நினையவேண்டும் என இறுதி நிலையில் வேண்டியமை காரணமாக இந்தத் தினத்தில் அந்த நினைவு கொள்ளப்பட்டதென்றும், அந்தக் காலத்திய வீட்டு மண் சுவர்களில் மாவலியுங் கண்டியோ என்று கேட்டு அன்று மாலையில் நீரிற் கரைக்கப்பட்ட மாவினைத் தெளித்தார்கள் என்றும் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலத்தில் மறைந்தவர்கள் காரணமான பிதிர்கள் அந்த வேளையில் அதாவது கார்த்திகை விளக்கீட்டு மாலையில் பிரீதி செய்யப்பட்டனர் என்பதொரு கருத்தும் உண்டு. நல்ல உணவு வகைகளை, கறி வகைகளைச் சமைத்து வீட்டில் வழிபாடு செய்யுமிடத்தைப் புனிதப்படுத்தி வாழையிலை பரப்பி நீர் தெளித்து நிவேதிப்பர். மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் முதலான பழவகைகள் இளநீர், வெற்றிலை பாக்கு முதலிய வையும் நிவேதனமாகும். சுற்றிவர அலங்காரமாகத் தீபங்கள் வைக்கப்படும். சாம்பிராணித் தூபம் கருப்பூர தீபம் என்பன கொண்டு அஞ்சலித்து மலரிட்டு வணங்கித் திருமுறை ஓதி நிறைவு காண்பர். பிதிர்கள் அந்த நிவேதனத்தைச் சுவைத்தன வென்று பண்டை மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கையுடனேயே இன்றும் பல சந்தர்ப்பங்களில் நிவேதனங்கள் இடம் பெறுகின்றன.

தீபத்திருநாள் திருக்கார்த்திகைக் குமராலய தீபத்திருநாள் என்றும், பூரணையுடனாகிய நாளைச் சர்வாலய தீபத்திருநாள் என்றும், சர்வாலய தீபத் திருநாளிலே தான் வீடுகளிலும் கொண்டாடப்படும் என்றும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். சில காலங்களில் எல்லாம் ஒரேநாளில் நடப்பனவாகவும் அமையலாம். என்பைப் பெண்ணாக்கி அற்புதம் செய்த திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பாடியருளிய தேவாரம்,

'வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலர் கொண்டாடும்
விளக்கீடு காணதே போதியோ பூம்பாவாய்'

என்பது. இந்தப் புனித நாளிற் சிவத்தை வழிபட்டுச் சிவவழித் தலைப்படுவோமாக.

*1999.11.18*இல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கந்த ஷஷ்டி விரதம்

மும்மல நீக்கத்தினைக் கருதுவதாகவும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னுங் குற்றங்களினின்றும் நீங்க வேண்டியும். முருகனை வேண்டி ஆறுநாள்கள் தொடர்ந்து அனுட்டிக்கப்படுவது கந்த சஷ்டி விரதமாகும். புத்திரப்பேறு கருதியும் இந்த விரதம் அனுட்டிக்கப்படும். லௌகீக விருப்புக்கள் எதனையுஞ் சிந்திக்காத வகையிலும் இந்த விரதத்தினைக் கைக்கொள்பவர்கள் உண்டு.

ஆணை, உறுதி, இலட்சியம், நோன்பு முதலான கருத்துக்களைத் தருவதொரு சொல் விரதம். க்ஷமனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கல்.....; என்பதொரு தொடரினைத் திருக்குறள் தவம் என்னும் அதிகாரத்திற்குப் பரிமேலழகர் எழுதியுள்ள அதிகார அறிமுகக் குறிப்பிற் காண்கின்றோம். மெய், வாய், கண், மூக்குச், செவி என்னும் ஐம்பொறிகளையும் அவ்வவற்றின் இச்சைவழிப் போகவிடாது அடக்கவல்ல மனத்தினை நெறிப்படுத்தும் வகையில் உணவைச் சுருக்கியோ அல்லது உணவைத் தவிர்த்தோ உடல் ஊக்குவிப்பைக் குறைப்பது கொண்டு மனம், வாக்குக், காயம் என்பவற்றால் இறைவனைச் சிந்தித்துப், போற்றிப் பிரார்த்தித்து வீழ்ந்து வணங்கி, அல்லது அங்கப் பிரதஷணம் செய்து அடியழித்து வழிபட்டு எந்தவேளையும் இறை சிந்தனையுடனாகி நிற்க வைப்பன விரதங்கள் என்பது துணிபு. அந்த வரிசையில் அமைந்த உத்தமமானதொரு விரதந்தான் கந்தசஷ்டி நோன்பு என்பது. சிவதீட்சை பெற்றவர்கள் மட்டுந்தான் இந்த விரதத்தினை அனுட்டிக்க முடியும். அவர்கள்தான் சைவசமயிகள் என்பது இந்த இடத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதத்தகும்.

இவ்வகை வழிபாடுகள் இருவேறு வகையினவாக அமையும். ஒருவகை, தமது சொந்தத் தேவையின் பொருட்டுச் செய்யப்படு பவை. மற்றொரு வகை எல்லோர்க்கும் நலம் வேண்டிச் செய்யப்படு பவை. **மேன்மை கொள் சைவநீதி** வாழவேண்டும், **குறைவிலாது உயிர்கள் வாழும் பொருட்டு** எனும் புராணச் செய்தியைப் பாராயணஞ் செய்து இன்புறுவோம். **'வாழ்க அந்தணர்....'** என்று தொடங்குந் திருப்பாடலும் அவ்வகை அமைதியுடையது. **'உடலுள் உறுசூலை தவிர்த்தருள்வாய்'** என்னுமிடத்து ஒருவருக்காக வேண்டுதல் செய்வது என்று புலனாகின்றது. இவ்வகை வேண்டுதல்கள், நிகழும் விரதங்கள், திதியை ஆதாரமாகக் கொள்வனவென்றும், நாளினை ஆதாரமாகக் கொள்வன வென்றும், நட்சத்திரத்தை ஆதாரமாகக் கொள்வன வென்றும் அமைகின்றன. கந்த சஷ்டி விரதம் ஐப்பசி வளர்பிறைப் பிரதமை தொடக்கமாகவும் சஷ்டி ஈறாகவும் வரும் ஆறு தினங்கள் கொள்ளப்படுவது. அசுரர்களுடன் கடுஞ்சமர் புரிந்து கந்தப் பெருமான் சூரபதுமனை ஆட்கொண்ட ருளிய காலம் அது.

சிவன் மருமகனாக வந்தமையை நினைந்து இறுமாந்து சிவ நிந்தனை செய்யும் வகையில் தக்கப் பிரஜாபதி ஒரு யாகஞ் செய்கின்றான். சிவனுக்கு முதன்மை இல்லாத யாகம். தக்கனுக்குப் பயந்த தேவர்கள் சிவநிந்தையுடனான இந்த யாகத்திற்கு வருகை தந்து பார்த்திருந்தனர். அந்தக் குற்றங் காரணமாகப் பின்னொருகால் சூரபதுமனால் துன்புறுத்தப் பட்டனர். சிவனை வேண்டுதல் செய்து, நோன்புகள் பல அனுட்டித்து அவன் பெற்ற வரங்கள் அழிவிற்கு இடமில்லை யென்றாகும்படி பெற்ற வரங்கள் - சூரபதுமன் மதியைக் கூர்ப்படையச் செய்வதற்கு மாறாக உண்மை அறிவைப் பிரகாசிக்கவிடாது மழுங்கடித்து விட்டன. கொடூரம் மலிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தினனானான். ஆணவத்தின் வடிவமென்ன நின்றான். கன்மமலம், மாயாமலமென்னச் சிங்கன் தாரகன் எனுந் தம்பியர் இருவர். முழுமுதலென்ன முருகனையும் ஆன்மாக்களெனத் தேவர்களையுங் காண வைக்கின்றது கந்தபுராணம்.

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கடலப் போதின் வீற்றிருந் தருளி னானே.

என்னுங் கந்தபுராணத் திருப்பாடல் முழுமுதலே முருகன் திருவுருவில் வந்துள்ளான் என்கின்றது. அந்த முழுமுதல் தான் முருகன் எனும் உருவில் தம்முடன் போர் புரிகின்றான் என்று சூரன் உணர்கின்றான்.

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் இந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணனாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றே.

என்றுள்ளதொரு திருப்பாடல் சூரபதுமன் முருகனைக் காணுமாறு கூறுகின்றது. தேவர்களைச் சிறை கொண்டதினாற் கிடைத்த பெருவாழ்வு என அந்தச் சந்தர்ப்பத்தில் சூரபதுமன் எண்ணு கின்றான். சூழுதல் வேண்டும்; தொழுதிடல் வேண்டும்; துதித்திடல் வேண்டும் என்று அவன் மனம் அவலமடைகின்றது. ஆனால் மானம் என்பதொன்று தடை செய்கின்றதே என்று வருந்துகின்றான்.

இந்த வகையிலும் சூரன் தாரகன் சிங்கன் என்போர் வலுவை இழந்தனர். ஐப்பசி மாத வளர்பிறைக்கால முதல் ஆறு நாள்கள் தான் அவர்கள் உடல் வலு இழப்பிற்குரிய காலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது. அதே காலம் முனிவர்கள் தேவர்கள் என்போரால் விரதகாலமாகக் கொள்ளப்பட்டது.

வெற்பொடும் அவுணன் தன்னை ஓட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாருஞ்
சொற்படு துலையின் திங்கட் சுக்கில பக்கந் தன்னில்
முற்பக லாதி யாக மூவிரு வைகல் நோற்றார்.

என்று கந்தபுராணங் குறிப்பிடும் அந்தக் காலமே பூவுலகத்து மானிடரின் விரதகாலமும் ஆயது. துலையின் திங்கள், ஐப்பசி மாதம்; சுக்கில பக்கம், வளர்பிறைக் காலம்; முற்பகலாதியாக மூவிரு வைகல், ஆரம்பந் தொடக்கமாக ஆறு தினங்கள். ஐப்பசி மாதத்து வளர்பிறைக் காலத்து ஆரம்பம் தொடக்கமாகப் - பிரதமைத் திதி தொடக்கமாக ஆறுதினங்கள் அதாவது ஆறாவது தினமாகிய சஷ்டி இறுதியாக என்பது பெறப்படும்.

கந்த சஷ்டி விரத அநுட்டானத்தை விரும்புபவர்கள் ஆரம்பிக்குங் காலத்திலிருந்து ஆறு வருடங்களோ அல்லது பன்னிரண்டு வருடங்களோ தொடர்ந்து கைக்கொள்ள வேண்டும். எந்த விதிக்கமைய முதலாண்டில் விரதம் அநுட்டிக்கப்பட்டதோ அஃதேபோன்று தொடரும் ஆண்டு களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். அதாவது முதலாம் ஆண்டில் ஆறுநாள்களும் உபவாசமிருந்து விரதம் அநுட்டிக்கப்பட்டிருந்தால் தொடரும் ஆண்டுகளிலும் அவ்வண்ணமே அநுட்டிக்கப்படவேண்டும் என்பது. முதலாண்டில் எல்லா நாள்களும் மதிய உணவு மட்டும் உண்டு விரதம் அநுட்டிக்கும் முறைமை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் தொடர்ந்த ஆண்டுகளிலும் அந்த நியதியையே தொடர வேண்டும். ஆறாவது ஆண்டின் முடிபிலோ, அல்லது பன்னிரண்டாவது ஆண்டின் நிறைவிலோ விரதோத்தியானத்து டன் நோன்பு பூரணப்படுத்தப்பட வேண்டும். விரதோத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானம், விரத முடிபிற்செய்யப்படும் கிரியை. கந்த சஷ்டி விரதோத்தியானம் ஒரு முருகன் கோயிலில் இடம்பெறுவது நல்லது. யான் கைக்கொண்ட விரதத்தின் மூலம் எனக்குப் பொருத்தமான பயன் கிடைக்கவேண்டுமெனச் சிறப்பாக வேண்டுதல் செய்து சங்கற்பித்தல் அவ்வகை விரதோத்தியான மாகும். விசேட அபிஷேகம், அர்ச்சனை செய்து காப்பு, தருப்பை என்பவற்றை வெற்றிலை பாக்கு உடனாக அரிசி காய் கறி தட்சணை சேர்த்து அர்ச்சகரிடம் சமர்ப்பித்து அவர்களிடமிருந்து வாழ்த்துதலைப் பெறவேண்டும். விரத அநுட்டானத்தில் ஈடுபட்டோர் தத்தம் பொருள் வசதிக்கேற்ப விரதோத்தியானக் கிரியையைப் பெரிதாகவோ சிறிதாகவோ கொள்ள முடியும்.

கந்தப் பெருமான் அசுரரை அழித்து அமரரைக் காத்த போரின் நினைவாகவே கந்த சஷ்டி விரதம் அமைகிறது. ஐப்பசி வளர்பிறைக் காலத்திய ஆரம்ப ஆறுதினங்கள் அதற்கென்ற மைந்தவை. இந்த விரத அநுட்டானத்திற் பங்குகொள்ள விரும்புவோர் ஐப்பசி அமாவாசையன்று காலைக் கடன்களை நிறைவு செய்து சைவ அநுட்டான விதிப்படி வேண்டியன இயற்றி ஆலய வழிபாடு செய்து வீடு, வீட்டுச் சுற்றுப்புறத் தூய்மை பேணி மதிய உணவு கொள்ள வேண்டும். மற்றை இருவேளைகளும் உணவைத் தவிர்க்க வேண்டும். விரத அநுட்டானத்திற்கு ஒருவன் தன்னை ஆயத்தம் செய்யும் வகையில் இத்தினத்தைப் பயன்கொள்ளலாம். அடுத்த நாள் பிரதமைத் திதியன்று வைகறையிலே துயிலுணர்ந்து நித்திய கரும விதிகளை முறைப்படி கவனித்துத் தன்னைப் புனிதனாக்கிக் கொண்டு முருகன் ஆலயம் ஒன்றிற்குச் சென்று அங்கு நடைபெறும் கூட்டு வழிபாடு, முருக நாம பஜனை, புராணப் படிப்புக் கேட்டல், புராணம் வாசித்தல் முதலான வழிபாட்டு முயற்சிகளில் ஆறுநாள்களும் ஈடுபடலாம். ஆறு நாள்களும் உபவாசமிருத்தலாகிய விரத அநுட்டானம் உயர்வானது. ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்களும் உபவாசமாக ஆலயத்திலிருந்து விரதம் அநுட்டிக்க விரும்புவோர் காப்புக் கட்டித் தருப்பை அணிந்து சங்கற்பித்துத் தொடரலாம். நீரும் அருந்தக் கூடாது. ஆலயத்தில், விரதமநுட்டிப்போருக்கு எனப் பானகம் என்றொரு நீராகாரம் கொடுப்பார்கள் அதனை உண்ணலாம். உண்ணவுந்தான் வேண்டும். காரணம் பட்டினி போடப்பட்டுள்ள வயிற்றில் வெளியாகும் அதிக சக்தி மிக்க வெப்பம், வாய்வு, பித்தம் முதலானவற்றின் தாக்கத்தைச் சமப்படுத்தி உடம்பின் சமநிலையைப் பேணுவதாம். செவ்விளநீர், தேசிக்காய்ப்புளி, சருக்கரை முதலியன கொண்டு இந்தப் பானகம் தயாரிக்கப்படும். இந்த வகை தொடரும்போது ஆறாவது நாள் சூரசம்ஹாரம் நிறைவாகியதும் இரவு துயில் கொள்ளாதிருப்பது நல்லது. இரவு முழுவதும் சிவசிந்தனையுடன் பொழுது போகவேண்டும். கந்தப்பெருமான் கதைகளைக் கேட்டல் வாசித்தல், திருமுறை களைப் பாராயணஞ் செய்தல் முதலியன பயன்பாடுடையன. ஏழாவது நாள் அதிகாலை செய்ய வேண்டியன செய்து தூயராகி ஆலயஞ் சென்று பாரணைப் பூசை கண்டு வீடுவந்து சிவனடியார்களை அமுது செய்வித்து உறவினருடன் தாமும் உண்ணலாம். அது நீராகாரமாயிருப்பது விரும்பக்கூடியது. அன்று அந்த ஒரு நேர உணவுடன் நிறுத்திக்கொண்டு எட்டாவது தினத்திலிருந்து வழமைக்குத் திரும்பலாம்.

உபவாசமிருக்க முடியாதவர்கள் முதல் ஐந்து தினங்களும் இரவிற் பால் பழம் உண்ணலாம்; அல்லது பலகாரம் உண்ண லாம். ஆறாவது நாள் மட்டும் உபவாசமிருந்து பூரணப்படுத்த லாம். அதுவும் முடியாதவர்கள் முதல் ஐந்து தினங்களும் நண்பகல் உணவை உண்டு ஆறாவது நாள் உபவாசமிருந்து நிறைவு காணலாம். அவரவர் உடல் நலத்திற்குப் பொருந்தும் வகை விரதம் இப்படி அமைய வேண்டும் என்று தீர்மானிக்கும் பொறுப்பு அவரவரையே சாரும். ஆலயங்களிற் பூசை தரிசித்து விரதம் அநுட்டிக்கும் முறை இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு வகை தாமே வீடுகளிற் பூசை செய்வது. முதலில் விக்கினங்கள் ஏற்படாவகை வேண்டி விநாயகனை வழிபட்டபின் விரத நாயகராகிய கந்தப்பெருமானை விம்பத்தில், வணங்கிக் கும்பத்தில் எழுந்தருளுமாறு வேண்டி நடுவே ஒரு நாயக கும்பமும் சூழ எட்டுக் கும்பங்களும் வைத்து ஆவாகனம் செய்யவேண்டும். ஆவாகனம் எல்லாம் வல்ல இறைவனை அன்பினாற் பணிந்து தமக்கு எதிர்முகமாகக் கும்பத்தில் எழுந்திருந்து அருளுமாறு வேண்டுதல், நிவேதனம் தீபதூப ஆராதனை திருமுறைப் பாராயணம், கந்தபுராணம் படித்தல் என்பன செய்யலாம். ஆலயஞ் சென்று தரிசித்தும் வரலாம். உணவு கொள்வது அவரவர் உடல் நலத்தைப் பொறுத்தது. இரவு வெறுந் தரையைத் தூய்மை செய்து துயில் கொள்ளலாம். குறிப்பிட்ட ஒழுங்கிற்கமைவாக இந்த விரதத்தை அநுட்டிப் போர் ஞான சொரூபராய் முருகன் திருவடிநீழலில் உயர்வாழ்வு பெறுவர்.

*1999.11.11*இல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியது.

பூசை வழிபாட்டில் ஈடுபாட்டையும் பரிமளிப்பையும் பெருக்குவதற்காக ஏற்பட்ட ஒருவகை நியமங்கள் தான் விரதங்கள் என்ற பெயரில் இருக்கின்றன. விரதம் என்ற பெயர்க் காரணத்தை ஆராய்ந்தால் அது விளங்கும்.

இலக்கியகலாநிதி பண்டிதமணி மு. கந்தையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருவெம்பாவை

மார்கழி மாதத்தில் நோற்கப்படும் சிறப்பானதொரு விரதம் திருவெம்பாவை. மார்கழித் திருவாதிரையை இறுதி நாளகக் கொண்ட பத்து நாள்கள் இதற்குரிய காலமாகும். மார்கழி நீராடற்குரிய காலமென்று கன்னியர்களாற் கொள்ளப்பட்ட காலமும் இதுவே. கன்னியர்களின் இந்த நீராடலையே மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவை என்னும் பெயரிற் பாடிவைத்தார் என்ற கருத்தும் உண்டு. மார்கழி நீராடல் மார்கழி முழுமையாக நிகழ்வது என்பதொரு கருத்தும் உண்டு.

அதிகாலையில் மாழ்கழி நீராடச் சென்ற கன்னியர்கள் பார்வதி தேவியை ஈர மணலில் உருவாக்கம் செய்து வழிபட்டனர். பார்வதிப் பாவையை வழிபட்டு அனுட்டிக்கப் பட்ட நோன்பு பாவை நோன்பு என்றாயிற்று. பாவை என்றது பார்வதிப்பாவையை. உயர்ந்த குணநலம் பொருந்திய கணவர் கிடைக்க வேண்டுமென்று வேண்டுதல் செய்து கன்னியர்கள் இந்த நோன்பை அனுட்டிப்பர். எனவே கன்னியர்கள் விரும்பி நோற்பதற்கு உரிய நோன்பு இது என்பது தெரிகிறது.

திருவெம்பாவை பற்றிய திருவாசகத் திருவுள்ளக்கிடை, அப்பகுதியின் உள்ளடக்கமான உயிர்ப்பொருள் எனச் 'சக்தியை வியந்தது' என்று குறிப்பிடுகின்றது. சக்தி என்றது பார்வதி தேவியாரை. பார்வதிதேவியாரைப் பாவையாக முன்னர் கண்டோம். எனவே பார்வதிதேவியை வியந்த பாடல் பாவைப் பாட்டு என்று வழங்கியது.

அம்மையப்பனாகிய இறையை அடைவதற்கு அன்பு நெறிவழிச் செல்ல வேண்டும். அன்பு நெறி கைகூட வேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெனில் அன்னையின் திருவருள் நோக்கைப் பெறவேண்டும். அன்னை உபகாரியாக அப்பனை அணுகுவது தான் எளிதான முறைமை. சாதாரணமாக உலகியலில் நாம் பெற்ற அனுபவமும் அதுவே. அஃதேபோன்று இறைவன் திருவருட் பார்வையைப் பெறுவதற்கும் தேவியாரின் அனுசரணை வேண்டும். எனவே சக்தியை வழிபட்டுச் சிவானந்தப் பேற்றினை அடைய வேண்டுமென்பது புலனாகின்றது. 'அம்மையே அப்பா' என்று அம்மைக்கு முதலிடங் கொடுத்துப் பிரார்த்தனைப் பத்தில் திருப்பாடல் செய்தது மூலம், மாணிக்கவாசக சுவாமிகளே அதனை அநுவதித்துமுள்ளார்கள்.

திருவெம்பாவை என்னும் இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு பாடல் இறுதியிலும் எம்பாவாய் என்றிருக்கும் முடிவிடத்தைப் பார்க்கிறோம். அப்பகுதி தெய்வீகத்தையுணர்த்தும் திரு என்னும் அடையைப் பெற்றுத் திருவெம்பாவை என்று நின்றது. திருவாசக உண்மை என்னுந் தலைப்பிலமைந்த பாடல்களுள் திருவெம்பாவை பற்றிக் குறிப்பிடுவதொரு செய்யுள்,

மலவிருளுற் றுறங்காமல் மன்னுபரி பாகரருள்
செலமுழுக வருகவெனச் செப்பல்திரு வெம்பாவை

என்று குறிப்பிடுவது கொண்டு எமது சிந்தையிற்பட வேண்டிய கருத்துக்கள் சில உண்டெனத் தெளியலாம். பக்குவமடைந்த ஆன்மாக்களே கன்னியர்களெனக் கருதப்பட்டனரென்றும் இறைவன் தலைவனெனக் கொள்ளப்பட்டானென்றும் மலப் பிணிப்புடனாகிக் கிடக்கும் ஆன்மாவின் நிலை துயிலுதல் என்றும், அந்தப் பிணிப்பினின்றும் விடுபடுதல் துயிலெழுப்புதல் என்றும், பக்குவமடைந்த ஆன்மாக்கள் பக்குவமடையாத ஆன்மாக்களை நன்னெறிப்படுத்தல் நீராட அழைத்தல் என்றும் உணரல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைத்தமிழர் கலாச்சாரப்படி ஐந்து முதல் பன்னிரண்டு வயது வரையிலான பெண்கள் எட்டுப் பிரிவுள் அடக்கப்பட்டனர். திருவெம்பாவை முதலெட்டுத் திருப்பாடல்களும் முன்னே காட்டிய பகுப்புள் மூத்தவரானோர் ஏனையோரை வரிசைக் கிரமமாக எழுப்புவதாக அமைந்துள்ளது. மூத்தவர்கள் முதலில் துயிலுணர்ந்து விடுவர். அவர்கள் தம்மோடொத்தவரையே முதலில் எழுப்புவர். அதன் பின்னர் இருவருமாகவும் தொடர்ந்து பின்னர் எழுப்பப்பட்டவர்களுடனுஞ் சேர்ந்து எழுப்புவர். ஒன்பதாவது திருப்பாடலில் எல்லோருமாக இறைவனைப் பாடிப் பரவி வேண்டுதல் செய்தல் பேசப்படுகின்றது. இருபதாவது திருப்பாடல் நீராடல் நிறைவாகியதும் தம்மைக் காத்தருளுமாறு இறைவனை வேண்டுவதாக அமைகிறது. இறைவனைப் புகழ்ந்து வழிபட வாய்ப்பாயமைந்த மார்கழி நீராடலையும் வேண்டுவதாக இதிற் கருத்துண்டு.

இந்தப் பதிகத்தின் முதலாவது செய்யுளில் முதலும் முடிபும் இல்லாத இறைவன் எனத் தொடங்கிய மணிவாசகர் இறுதித் திருப்பாடலில் உலகத்திற்கு முதலாகவும் முடிவாகவும் இருக்கின்றான் என்கிறார்கள். தனக்கு முதலும் முடிபும் இல்லாதவனே உலகிற்கு முதலாகவும் முடிபாகவும் இருக்க முடியும் என்பது இங்கே அறியப்படுகின்றது. முதலும் முடிபும் இல்லாத அவனிடமாகி உய்தி பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருவாதிரை

மார்கழி தேவர்களுக்கு அருணோதய காலம். தை முதல் ஆனி வரை உத்தராயணம்; தேவர்களுக்கு அது பகற்போது. ஆடி முதல் மார்கழி வரை தட்ஷிணாயனம்; தேவர்களுக்கு இரவு. இந்த வகையில் மார்கழி பின்னிரவு. வைகறைப்போது என்று சொல்லலாம். சிவவழிபாட்டிற்கு உவப்பான காலம். அதனாலே தான் மார்கழி முழுமையாக வழிபாட்டிற்குரியதாகி உள்ளது. மார்கழி மட்டுந்தான் வழிபாட்டிற்குரிய காலமா! ஏனைய மாதங்கள் வழிபாட்டுச் சிறப்பில்லாதனவா! என்பதொரு ஐயம் இங்கே நிகழ வாய்ப்பிருக்கிறது.

எல்லா மாதங்களும் வழிபாட்டிற்குரியவைதான். ஐயமில்லை. ஆனாற் சில சில காலங்கள் சில சில வழிபாட்டு முயற்சிகளுக்குச் சிறப்பானவை என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். காலை, நண்பகல், முன்னிரவு என்று உணவு கொள்ளுகின்றோம். ஒரு நியதிக்கமைவாகவே அதனை நடைமுறைப்படுத்துகின்றோம். **'ஒருநாளுணவை ஒழியென்றா லொழியாய் இருநாளுக் கேலென்றா லேலாய்'** என்பது ஒளவையார் தருவதொரு பாடற் பகுதி. இஃது ஒன்று. **'காலை விளங்கனி கடும்பகல் சுக்கு மாலை கடுக்காய் மண்டலம் உண்பரேல்'** என்பது சுதேச வைத்திய வாகடத்துள்ளதொரு பாடற்பகுதி. இந்தப் பாடல் குறிப்பிடும் நியதி மாறினால் பயன் பூஜ்ஜியமாகிவிடும். ஆகவே ஏதோ சில குறியீடுகள் நோக்கி ஒழுங்கு கவனிக்கப்பட வேண்டும். ஒழுங்கு மாறினால் பயன் பூஜ்ஜியந்தான் என்பது தெளிவாகின்றது. அஃதே போன்று வழிபாட்டிற்கென்று குறிப்பிடப்படும் கால ஒழுங்குகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் மண்ணில் நல்ல வண்ணம் வாழ முடியும். இந்த வகை சிந்திக்கும் போது தேவர்களது பின்னிரவுக் காலம் எங்கள் வைகறையாகி அதிகாலை வழிபாட்டிற்குரிய மார்கழி நீராடல் திருவெம்பாவை நோன்பு என்பவற்றுக்குரியதாதல் பொருத்தந்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவைப் பீடித்துள்ள வினைமாசு நீங்கிச் சிந்தை தூயதாகிப் புனிதமானவர்களாக வாழவேண்டும் என்னும் எண்ணத்துடன் பண்டைய மக்கள் பல்வேறு வகை நோன்புகளை அநுட்டித்துள்ளனர். அவற்றுள் மார்கழி நோன்புஞ் சிறப்புடைய தொன்று. நாடு வளம்பெற வேண்டுமென்றும், தமக்கு நல்ல கணவன் கிடைக்க வேண்டும் என்னுஞ் சிந்தனைகளைக் கருத்திற்கொண்டும் கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் நோன்பிருந்தனர். அதிகாலை நித்திரை விட்டெழுந்து தம்மைத் தூய்மையாக்கிக் கொண்டு தம் தோழியரையும் துயிலுணர்த்தி ஆற்றுக்குச் சென்று நீராடித் தேவியின் வடிவை ஈர மணல் கொண்டு ஆக்கிச், சிறப்பாகத் திருவாதிரைத் திருநாளை இறுதி நாளாகக் கொண்ட பத்துத் தினங்களும் திருவெம்பாவை என்பது கண்டு வழிபட்டனர். அம்மானை, சாழல், பூவல்லி, உந்தி பறத்தல், தோணோக்கம், பொன்னூசல் என்று கன்னியர்களாடிய ஆடல்களையெல்லாம் தெய்வீகமொளிர் அருட் பாக்களாக்கி ஆனந்திக்க வைத்த மணிவாசகசுவாமிகள் இந்த மார்கழி நீராடலையும் திருவெம்பாவை என்னும் பெயரில் அருட் பாடல்களாக்கி இன்பங்காண வைத்துள்ளார்கள். மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரையை இறுதித் தினமாகக் கொண்ட பத்து நாள்களும் திருவெம்பாவை நோன்புக் காலமாயிற்று.

> மாதர்கண் மாத ரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்
> ஆதிரை முன்னீ ரைந்தே யாகிய தினங்க ளெல்லாம்
> மேதகு மனைக டோறும் அமைந்திருள் விடிவதான
> போதிவர் தம்மிற் கூடிப் புனற்றடம் ஆடல் செய்வார்.

என்னுந் திருவாதவூரடிகள் புராணச் செய்யுள் இக்கருத்திற்கு ஆதாரமாகின்றது.

நடராசப் பெருமானுக்கு வருடத்தில் ஆறுமுறை சிறப்பான அபிஷேக காலமாய் அமைகிறது. அவற்றுளும் முதன்மையானது மார்கழித் திருவாதிரையில் நடைபெறுவது என்பர். ஆதிரையான் என்றொரு சிறப்புப் பெயரையுஞ் சிவன் தாங்கியிருப்பது சிந்திக்கப்பட வேண்டியது. திருவாதிரையன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை - சூர்யோதயத்தின் முன்பாக - வைகறைப் போதிலே நடேசரபிஷேகம் நடைபெற்று நிறைவெய்தும். அருணோ தயத்தில் அடியவர்களுக்கு அனுக்கிரகித்தற் பொருட்டு எழுந்தருளி வரும் ஆதிரையான் தரிசனங் கிடைக்கும். இது ஆர்த்திரா தரிசனம் எனப் பெயர் பெறும். ஆர்த்திரா என்னும் வடமொழிச் சொல் நனைதல் என்னும் பொருள் தருவது என்று காஞ்சிப் பெரியவர் சந்திர சேகரேந்திர சுவாமிகள், ஆச்சாரிய சுவாமிகள் உபந்நியாசம் என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே ஆர்த்திரா தரிசனம் என்பது. சுவாமியை நனைந்த நிலையிலே தரிசித்தல் என்று பொருள்படும். இந்தத் திருவெம்பாவைக் காலம் பத்து நாளும் சிதம்பரத்தில் மகோற்சவ காலமாகும். திருவாதிரைக்கு முதன் நாள் தேர்த் திருவிழாவும் இரவு நடேசரபிஷேகமும் நடைபெறும். சூரியோதயத்தின் முன் அபிஷேக ஆராதனைகள் எல்லாம் நிறைவாகி அருணோதயத்தில் ஆர்த்திரா தரிசனங் கிடைக்கும். இந்தத் தரிசனங் கிடைத்து விட வேண்டுமே என்னும் ஏக்கத்துடன் அங்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடுவது வழக்கம். இந்த வகையில் தில்லையில் நடைபெறும் வழிபாட்டு முறைகளே அனைத்துச் சிவாலயங்களிலும் நடை முறைப்படுத்தப்படுகின்றன.

இவ்வகை சிதம்பரத்தில் ஒரு திருவாதிரை மகோற்சவத்தின் போது தேர்த்திருவிழாவன்று தேரின் சில்லு நிலத்திலே புதைந்து தேர் ஓடாது நின்று விட்டதென்றும் சேந்தனார் மனங் கசிந்துருகித் திருப்பல்லாண்டு பாடினாரென்றும் ஒரு வரலாறு உண்டு. பதின்மூன்று பாடல்கள் பாடி வாழ்த்திய போது தேர் ஓடியதென்றுஞ் செய்தி உண்டு. சேந்தனார் பாடிய பதின்மூன்று திருப்பாடல்களும் ஒன்பதாந் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி ரவியும் இந்திரனும்
தோரார் வீதியிற் றேவர் குழாங்கள் திசையனைத் தும்நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஆதிரை பற்றிய குறிப்பைக் கொண்டுள்ளதும் சேந்தனார் பாடல் வரிசையிற் பன்னிரண்டாம் இடத்தைப் பெற்றதுமான திருப்பல்லாண்டாகும்.

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரம மர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்

என்பது எலும்பைப் பெண்ணாக்கி அற்புதஞ் செய்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தேவாரம். 'ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள் துய்ப்பனவுங் காணாது போதியோ பூம்பாவாய்' என்றும், 'ஆதிரைநாள் காணாது போதியோ பூம்பாவாய்' என்றும், தைப்பூசங் காணாது போதியோ பூம்பாவாய்' என்றும், 'பங்குனி உத்தரங் காணாது போதியோ பூம்பாவாய்' என்றும் நட்சத்திரங்கள் உடனாகி வரும் விழாக்களை எடுத்துக்கொண்ட சுவாமிகள் திருவாதிரை திருவோணம் இரண்டையுஞ் சிறப்பாகக் காட்டுகின்றார்கள். இருபத்தேழு நட்சத்திரங்களுக்குள்ளே திருவென்று போற்றப்படுஞ் சிறப்பு அடையைப் பெற்றவை அவை இரண்டுமே என்பதும் இந்த இடத்துக் கவனிப்பிற்குள்ளாக வேண்டும்.

முத்து விதானம் மணிபொற் கவரி முறையாலே
பத்தர் களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்.

என்னும் அப்பரடிகள் தேவாரமும் திருவாதிரை பற்றிப் பேசுகின்றது.

திருவாதிரை விரதம் திருவெம்பாவை உடனாகிப் பத்தாவது நாளாக அமைந்துள்ளதால் திருவாதிரை தவிர்ந்த ஒன்பது தினங்களும் நாளாந்தக் கடன்களை நிறைவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சிவாலய தரிசனஞ் செய்து திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி என்னுந் திருவருட் பாடல்களைப் பாராயணஞ் செய்யலாம். திருவாதவூரடிகள் புராணங் கேட்டல், வாசித்தல், பயன் சொல்லுதல் என்பனவும் இடம்பெறலாம். நண்பகல் ஒருவேளை உணவு கொள்ளலாம். இரவு உணவு கொள்ளாதிருக்க முடியாதவர்கள் பால் பழம் அல்லது பலகாரம் உண்ணலாம். திருவாதிரையன்று வைகறைக்கு முன்னதாகத் துயிலுணர்ந்து நாளாந்தக் கடமைகளை நிறைவு செய்து தோய்த் துலர்ந்த ஆடை அணிந்து சிவசின்னங்கள் தரித்துச் சிவாலயஞ் சென்று நடேசரபிஷேகம் காணவேண்டும். தொடர்ந்து ஆர்த்திரா தரிசனமும் கிடைக்கும். அன்று உபவாசமாயிருத்தல் நல்லது. முடியாதவர்கள் மதிய உணவு கொள்ளலாம். மறுநாள் காலைக் கடன்களை நிறைவு செய்து சிவாலய தரிசனஞ் செய்து சிவபூசையுங் கண்டு வீடு வந்து, சுற்றத்தவருடன் பாரணை உணவு கொள்ளலாம். அன்றைய பகற் போதில் துயில்வதோ மீண்டும் உணவு கொள்வதோ தவிர்க்கப்பட வேண்டியவை.

திருவாதிரையன்று நிவேதனமாகச் சுவாமிக்கு களி வைக்கும் முறைமையொன்றுண்டு. அதனைச் செய்தவர் சேந்தன் சிவனடியார்களைஉபசரித்து உணவு உண்ணச் செய்து தில்லையம்பதியிற் பெருவாழ்வு வாழ்ந்தவர். ஒரு முறை சில தினங்கள் தொடர்ந்து மழைபெய்து கொண்டிருந்தது. விறகு வெட்டக்கூடிய வாய்ப்பும் இல்லை. வீட்டில் உணவுப் பொருள்களும் குறையத் தொடங்கின. அன்றொரு திருவாதிரை நாள். மழைபெய்து கொண்டிருந்த வேளை, சிவனடியார் ஒருவர் வந்துவிட்டார். அவரை அகமும் முகமும் மலர வரவேற்றனர் தம்பதியர். உணவு அளிப்பது பற்றிய சலனம் மனத்தைக் குடைந்து கொண்டிருக்க அடியவரைத் தக்கதோராசனத்து இருந்தருளச் செய்து உபசரித்தனர். சேந்தனின் வாழ்க்கைத் துணைவி, வேண்டியதை வேண்டியவாறு தக்க தருணத்தில் தலைவனுக்கு உதவுந் தர்மபத்தினி, தம்மிடமிருந்த அரிசிமாவை இருந்த சிறிதளவு உழுந்துடன் பொருந்தும் வகை கலந்து வெல்லப்பாகும் சேர்த்து அருமந்த களியாக்கிச் சிவனடியாரை அமுது செய்வித்துக் களி பேருவகை கொண்டனர். அடியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த மனநிறைவுடன் விடைபெற்றார். மறுதினம் அதிகாலை இறைவழிபாட்டிற்காகச் சிவாலயம் சென்றனர் தம்பதியர். ஆலயத் திருக்கதவைத் திறந்து உள்ளே சென்ற அர்ச்சகர்கள் இறை சந்நிதியிற் களிசிதறி இருப்பது கண்டு அதிர்ச்சியடைந்து, நின்றவர்களைப் பார்வையிட வைத்தனர். சேந்தனாரும் அவர் துணைவியாரும் அந்தக் காட்சிகளைக் கண்டதும் உள்ளம் நெக்கு நெக்குருக ஆனந்தக் கண்ணீருகுத்து முந்திய தினம் நடற்தவற்றையெல்லாம் சொல்லினர். இறைவன் திருவிளையாடலை வியந்த அங்கு நின்றோர் சேந்தனைப் போற்றினர். இந்த நிகழ்வுதான் திருவாதிரைக் களி நிவேதன மரபை உருவாக்கியதென்பர்.

சிவபெருமானை உஷக்காலம், பிராதக்காலம், மத்தியான்னர், சாயான்னம், அர்த்தயாமம் என்னுங் காலங்களிற் சிறப்பாக வழிபடுவோம். அவற்றுள் உஷக்காலப் பூசை மார்கழி மாதத்திற் சிறப்புப் பெறுவது. அந்த மாதத்தில் நிகழ்வதாகிய திருவெம்பாவை வழிபாடு திருவாதிரை வழிபாடு உஷக் காலத்திலேயே நடைபெறும். வழிபாட்டின் போது மல்லிகை, முல்லை, மாந்தரை வெள்ளெருக்கு, வெண்டாமரை, வெள்ளலரி, பிச்சி, நந்தியாவர்த்தம் முதலிய வெள்ளை நிறமலர்களைப் பயன்படுத்துவது நல்லது. உஷக்காலப் பூசைக்கு வெள்ளைநிற மலர்களே உவப்பானவை என்று அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் கூறுவர். 'வெள்ளெருக்கஞ் சடைமுடியான்' என்று கம்பராமாயணம் தரும் செய்தியும், க்ஷகண்ணி கார் நறுங்கொன்றை காமர் வண்ண மார்பின் தாருங்கொன்றை ஊர்தி வால்வெள்ளேறே; என்று புறநானூறு தரும் செய்தியும் இங்கு சிந்திக்கப் படக்கூடியவை.

திருவாதிரை நட்சத்திரம் சிவப்பு நிறமானது. அதனால் செம்மீன் என்னும் பெயரையுமுடையது. நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த அண்டத்துக்குரிய சூரியனிலும் மிகமிகப் பெரியது திருவாதிரை.

திருவாதிரை நோன்பை முறைப்படி அநுட்டித்தவர் களாகிய பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர் என்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பேறு பெற்றுள்ளனர். பதஞ்சலியார் இந்த விரத அநுட்டானங் காரணமாக நடராசரின் திருநடனத்தை என்றுக் கண்டு களிக்கக்கூடிய வகையில் பெருமான் திருவடிகளின் கீழிருக்கும் பெரும்பேறு பெற்றுக் கொண்டார். எம்பெருமானை அன்றி வேறு யாரையும் வணங்காத இயல்பு பொருந்திய உபமன்யு முனிவரை மகனாகப் பெறும் பாக்கியம் பெற்றவர் திருவாதிரை விரதம் அநுட்டித்த வியாக்கிரபாதர்.

எந்தவொரு விரதத்தையும் அநுட்டிக்கத் தொடங்கு முன், இந்த விரதத்தை இந்தத் தேவைக்காக இந்த முறைப்படி இவ்வளவு காலம் தொடருவேனென்று திட்டமிட்டுக் கொண்டு நியமந் தவறாது நடந்து கொள்ள ஒவ்வொருவரும் தம்மை நெறிப்படுத்திக் கொண்டு பயன்பெறுவாராக.

*1999.12.13இல் இலங்கை வானொலியில் பதிவாகியது.*

விரதங்கள் அநுட்டிக்கத் தகுதியானவர்கள் யார், தகுதியற்றோர் யார் என்றொரு கேள்வி எழுகிறது. சுத்த போசனமுடை யோராயும், சிவதீட்சை பெற்றவராயும், ஒழுக்கசீலராயும் இருப்பவர்களே விரதங்களைக் கைக்கொள்ளத் தகுதியுடையோர் என்று விரத நூல்கள் சொல்லுகின்றன.

கோப்பாய் சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சூரிய வழிபாடு

இந்தப் பூவுலக வாழ்வில் எம்மை ஒழுங்காக வாழ வைப்பன சமய நெறிகள். உலகியலை அறிய வைத்துப் பேரின்ப வாழ்விற்கு வழிப்படுத்துவன அவை. உலகத் தோற்றம், தோற்றியுள்ள பொருள்கள், தோற்றத்திற்கான காரணம் நாம் தான் தெளிய வேண்டும். தோற்றியன யாவும் அழிவிற்குரியன என்பது முன்னாகவே தெரிந்திருக்க வேண்டும். தோற்றியவற்றுள் நல்லவையும் உண்டு, தீயவையும் உண்டு. எமக்குப் பொருத்தமானவை எவை எனத் துணியும் பொறுப்பும் எம்முடையது. உண்மை எது? பொய் எது? அசல் எது? நகல் எது? பொருள் எது? போலி எது? என்று துணியக்கூடிய ஆற்றல் எமக்குண்டு. அறிவு வளம் நிறைவாக உண்டு. அதேயிடத்து அறிவை உணரவைக்கும் புலன்கள் பொய்யானவை. ஏமாற வைப்பவை. **'மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து'** என்னை நல்வழிப்படுத்த வேண்டும், என்று வேண்டுதல் செய்கின்றார் மணிவாசக சுவாமிகள்.

தோற்றமோ மறைவோ இன்றி என்றும் ஒரேதன்மையாய் இருப்பது உண்மைப் பொருள். எனவே தோற்றத்திற்கும் மறைவிற்கும் உட்பட்டு மாறுதலடையும் இயல்புடைய பொருள் பொய்யானது என்பது புலப்படும். உண்மைப் பொருளைச் சத்து என்றும், பொய்ப்பொருளை அசத்து என்றுங் கண்டனர் அறிவியலாளர். எமக்குக் கிடைத்துள்ள இந்தச் சரீரம் தோன்றி வளர்ந்தது. ஆகவே இது அழியக்கூடியது. அசத்தெனும் பகுதிச் சார்புடையது. அதேவேளை இது பெரும் பயனுடையதாகவும் அமைந்து விடுகிறது. நாவலர் பெருமான் சொல்லுவார், இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம், என்று. உயிர் உடலுடனாகிப் பொய்யை மெய்யெனக் காணும் நிலையொன்றுண்டு என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான். கானலை நீரெனக் கண்டு ஏமாந்த மானினம் போலவும், கயிறென மின்னற்கீற்றைப் பற்றி வீழ்ந்த வானரம் போலவும் நாம் அல்லலுறுகின்றோம். உயிர் சார்ந்ததன் வண்ணமாவது. உண்மைப் பொருளொடு சேர்ந்து உண்மைப் பொருளாகியும், பொய்ப் பொருளுடன் சேர்ந்து போலியாகியும் நிற்கும். சத்துப் பொருளைச் சார்ந்து சத்தாகியும் அசத்தைச் சார்ந்து அசத்தாயும் நிற்கக்கூடிய இயல்பைப் பொருந்தியமையால் உயிர் சதசத்து என்றாகியது. சத்து ஒளியெனில் அசத்து இருள். ஒளி இருளை அறியாது; இருள் ஒளியை அறியாது. உயிர்க்குயிராகி நின்று உயிரை இயக்குவது சிவம். சிவந்தான் இந்தச் சரீரத்தையும் உயிரையும் சேர்த்து வைக்கின்றது. உயிர்க்குயிராகிய சிவமே உயிர் உடம்புடனாகி அனுபவிப்பதற்குக் காரணமாயுள்ளது. இங்கே சிவம் ஒன்றாகி வேறாகி உடனாகி நிற்கும் உபகார நிலையைப் பார்க்கின்றோம்.

பண்டைய மக்கள் பகுத்தறிவின் பகுதியைக் கூடக் காணாதவர்கள். அறிவியலின் அரிச்சுவடியையும் அறியாத வர்கள். உண்மைப் பொருளை உள்ளத்தால் உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு இருந்திருக்கவில்லை. ஆனால் அந்த உண்மைப் பொருளின் இயல்புகளின் நியாயமான பகுதியைத் தனதாக்கிக் கொண்ட ஒரு சடப்பொருளை, ஒரு அசத்தினை அவர்கள் கண்டார்கள். உணர்ந்தார்கள். அதனிடம் இறைமைக் குணங்கள் இருப்பதைத் தெளிந்தார்கள். இறைமைக் குணங்கள் இருந்தன என்று தெளிந்தார்கள் என்பதினும், மக்களியல்புக்கு மேலான இயல்புகள் இருந்தன என்று கண்டார்கள் என்பது சிறப்பான தரவாகலாம். ஒன்றாதல், வேறாதல், உடனாதல் என்ற உபகாரத் தன்மைகள் நிறைந்திருப்பதைக் கண்டார்கள். அதனால் அதனிடத்துத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகியது. வழிபாடு ஆரம்பமாகியது. இன்று அது சூரிய வழிபாடு என்று பரிமளிக்கின்றது.

சூரியன் சடப்பொருள். என்றோ ஒருநாள் அழியக் கூடியது. எனவே அசத்து. இந்த அசத்திற்கும் நாம் காணும் அசத்துகளுக்குமிடையே பாரிய வேறுபாடுண்டு. ஞாயிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அசத்து ஒளியென்றும், வெப்பமென்றும் இரு இயல்புகளை, மேலான இயல்புகளைப் பொருந்தியுள்ளது. இந்த இயல்புகள் இரண்டும் உலகியலுக்கு மிக மிக வேண்டியவை. உலகியல் விளக்கம் பெற ஒளி வேண்டும். சூரிய ஒளி இல்லையெனில் கண் எதையுங் கண்டு கொள்ளமுடியாது. கண் காணுவதற்குச் சூரியஒளி உபகாரமாகின்றது. வெவ்வேறு வழிகளிலும் நாம் ஒளியைப் பெறுகின்றோம். ஆனாலும் ஆதவனது ஒளிக்குத் தலைமைப்பாடுண்டு. மற்றைய ஒளிகளால் விளக்கம் பெற முடியாதவற்றையும் சூரிய ஒளி விளக்கவல்லது. பயிர்கள் வளர்வதற்கு, இலைகள் தம் தொழிலைச் செய்வதற்கு, ஒளி தேவை. விதைகளின் உற்பத்திக்கு, விதைகள் முளைப்பதற்கு, வர்க்க விருத்திக்கு, பொருளாதார அபிவிருத்திக்கு, உணவு ஜீரணிப்பதற்கு சூரிய வெப்பம் வேண்டும். பயிர்களை, மற்றை உயிர்த் தோற்றங்களை உருவாக்குதற்கும், அவற்றை ஒரு சிலகாலம் நிலைபெற்று இருக்கச் செய்வதற்கும், அவை இந்த உலகியலை அனுபவிப்பதற்கும் வெப்பமும் ஒளியும் வேண்டும். கண் காணுவதாகிய நிகழ்ச்சி இடம்பெறும் போது ஒன்றாகியும், காணப்படும் பொருள்கள் மேற்பட்டு அவற்றைத் தெரிய வைப்பதில் வேறாகியும், கண்டு தெளியுமிடத்து உடனாகியும் இந்த ஞாயிறு உதவுகின்றது. இந்த இடத்தில் ஆதித்தனை இறைவனாகவே பார்க்க நேருகிறது. இதனாலேதான் 'ஆதித்யோ பிரத்தியட்ச தேவதா' என்று வேதம் பேசுவதாயிற்று. சூரியன் தான் கண் கண்ட தெய்வம். சிவவழிபாட்டின் ஆரம்ப இடமாக அது அமைந்தது. வழிபாட்டின் ஆரம்பம் இயற்கையை வழிபடுவதாகவே இருந்திருக்க வேண்டும். வழிபாட்டுத் தலங்களோ, கோயில்களோ இருந்தனவென்று சொல்வ தற்கில்லை. சூரியன், சோமன், அக்கினி, வருணன் என்று ஆரம்பகால வழிபாட்டுத் தெய்வங்கள் அமைந்தன. சிவன் என்ற முழுமுதலை அன்று மக்கள் அறியாதிருந்தபோதும், வழிபாட்டிற்குரியனவாகி அவர்கள் முன்னின்ற இந்த வடிவுகளை நாம் சிவனைத் தரிசிப்பது போலவே வணங்கினார்கள். அந்த வழிபாட்டு வழியிற்றான் சிவனைக் காணும் நிலைக்கு உள்ளாகினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெரியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாயட்ட மூர்த்தமாகி
பெருநலமும் குற்றமும் பெண்ணுமாணும்
பிறவுருவும் தம்முருவுந் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே.

என்னும் அப்பர் சுவாமிகள் தேவாரம் எமது சிந்தனை சரிதான் என்று எண்ண வைக்கின்றது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஞாயிறு, திங்கள், ஆன்மா என்னும் எட்டும் சிவபிரானது அட்டமூர்த்தங்கள் என்று சொல்லப் படுகின்றன. எனவே வேதகாலத்திய அட்டமூர்த்த வழிபாடு சிவவழிபாடென்றே கொள்ள வேண்டும். அப்பர் சுவாமிகளின் மற்றொரு தேவாரம்,

'அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்
அருக்கன் ஆவா னரனுரு வல்லனோ'

என்று அருக்கன் சிவன்தான் என்கின்றது.

ஆதியில் ஆதித்தன் வழிபாடு மந்திர வடிவில் இருந்திருக்கிறது. பிற்காலத்திற் புராணங்கள் உருவ இலட்சணங்களைப் பலவிதமாக வர்ணிக்கத் தொடங்கின. இறைவனுடன் தொடர்பு படுத்திச் சிவசூரியமூர்த்தி என்றும் அழைக்கத் தொடங்கினர். இந்தியாவின் ஒரிஸ்சா மாநிலத்தில் சிவசூரிய மூர்த்திக்கென்று பெரியதொரு கோயில் இருப்பதாகவும், ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் சூரியபகவான் அமர்ந்திருப்பது போன்ற கோலத்தினை அங்கே காணமுடியுமென்றும் அறிகிறோம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எகிப்தில் சூரிய வழிபாடு இருந்ததென்றும், 'அப்போலோ' என்ற பெயரில் கிரேக்கர் சூரியனை வழிபட்டனரென்றுந் தெரிகிறது.

சூரியனே கண்கண்ட தெய்வம் என்னும் வேதவாக்கை ஆதாரமாகக் கொண்டு சூரியன்தான் முழுமுதற் கடவுளெனுங் கருத்தினை வலிவுபெறச் செய்து சௌரம் என்றொரு மதத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சாரார் உருவாக்கினர். காலப்போக்கில் இக்கருத்து வலுவிழந்து போயிற்று. ஆதித்ய வழிபாடு சிவவழிபாட்டு டனாயது என்பதை,

> பெருக்க நுகர்வினைப் பேரொளியாய் எங்கும்
> அருக்கனென நிற்கு மருள்

என்று அருக்கனை, அவனது செயற்பாடுகளை திருவருளுக்கு ஒப்புவமையாக்கிப் பேசுவது போன்ற கருத்துக்கள் வெளிவர லாயின. இருளை நீக்குதல், ஒளிமயமாக்குதல் ஆகிய இரு செயல்களும் அருக்கனுக்குந் திருவருளுக்கும் பொதுவானவை. அதனாற் சிவசம்பந்தம் தெளிவு பெறலாயிற்று. அதனாலேதான் எமது வழிபாட்டு வேளைகளிலெல்லாம் சூரிய வழிபாட்டிற்கும் இடமளிக்கின்றோம். எமது வீடுகளில் நடைபெறும் சமய சம்பந்தமான நிகழ்வுகளிலெல்லாம் சூரிய வழிபாட்டிற்கு முக்கிய இடங்கொடுக்கின்றோம். ஆலயங்களிற் கூட உதயகாலப் பூசை வேளையில் முதலில் சூரிய வழிபாடு நடைபெறுவதுண்டு. சில ஆலயங்களிற் சூரிய பகவானுக்கென்று பிரகாரத்திற் தனிச் சந்நிதியுமுண்டு. அவர் சந்நிதி, மூலமூர்த்தியை எதிர்நோக்கு வதாகவே அமைக்கப்பட்டிருக்கும். ஈழத்தின் புராதன ஆலயமாகிய திருக்கேதீஸ்வரத்திலும், கொழும்பு கொம்பனித்தெரு சிவசுப்பிர மணியர் ஆலயத்திலும் சூரிய பகவானுக்காய பிரகாரமூர்த்தச் சந்நிதியைப் பார்க்க முடியும்.

ஆகாய வெளியில் அண்டங்கள் பலவாக உள்ளன. ஒவ்வொரு அண்டத்திற்கும் ஒவ்வொரு சூரியன் உண்டு. ஒவ்வொன்றிலுமுள்ள சூரியர்களுக்கும் அவ்வவ்வண்டங் களில் தலைமைப்பாடு உண்டு. அதனாலேதான் அண்டங்களைச் சூரியமண்டலம் என்றுஞ் சொல்வர். சோதிடக் கலையிற்கூட சூரியனுக்கே முதலிடங் கொடுக்கப்படுகிறது. இராசி நிலையின் பன்னிரண்டு இடங்களிலும் சூரியன் முதலிடம் பெறுகின்றான். ஒவ்வொரு நாளும் சூரியன் உதயமாகும் நேரத்தை வைத்துக் கொண்டுதான் இலக்கின நிலைக் கணிப்பும் கிரகங்களின் நிலைய எண்ணும் குறியீடு செய்யப்படுகின்றன. சிங்கராசியிற் சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பிடம் பெறுகின்றது. அதனாலேதான் சூரியன் சிங்கராசியிற் சஞ்சரிக்கும் ஆவணி மாதம் ஞாயிறு வழிபாட்டிற்குச் சிறந்ததாகியது. ஆவணி ஞாயிறு எல்லாம் சூரிய பொங்கல் நடைபெறும் வழக்கமும் உண்டு.

சூரியன் தென் அட்சம் செல்லும் ஆடியிலிருந்து மார்கழி இறுதிவரையுள்ள காலம் தெட்சணாயம் என்றும், வட அட்சம் செல்லும் தையிலிருந்து ஆனி இறுதிவரையுள்ள காலம் உத்தராயணம் என்றும் பெயர் பெறும். ஆடி முதல் மார்கழி வரையிலான காலம் மழைக்காலம். உழவர்களுக்கு உவப்பான காலம். விதைத்தல், நாற்று நடுதல், களை பிடுங்கல் முதலான விவசாய வேலைகளுக்குப் பொருத்தமான காலம். அந்தக் காலத்துப்பட்ட கடின உழைப்பின் காரணமான வருவாய் பெறப்படுங் காலம் தை. அதனாலேதான் தை முதலாந் திகதியை உழவர் திருநாளாக்கி நன்றி தெரிவிக்கும் சூரிய வழிபாட்டு நாளாகக் கொண்டாடுகின்றனர். ஒவ்வொருவரும் தாம் பெற்ற புது வருவாய்கொண்டு புதுப்பானையிற் பசும் பாலைச் சீருடனாக்கிக் கொதிக்க வைத்துப் பொங்கி முற்றத்திற் சூரிய பகவானுக்கு நிவேதிப்பர். பழம், பாக்கு வெற்றிலை இளநீர் என்பனவும் நிவேதனமாகும். தூப தீப அஞ்சலிகளுடனாகித் திருமுறைப் பாராயணத்துடன் நிறைவாகும்.

இந்தச் சூரிய வழிபாட்டுப் பொங்கல் இந்தியாவின் சில பகுதிகளில் நான்கு நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. மார்கழியின் இறுதி நாளன்று முதலாவது பண்டிகை கொண்டாடப் படும். வீட்டிலுள்ள மிகப் பழைய பொருள்களை நீக்கிப் புதியனவற்றைப் பயன்படுத்தும் ஆரம்ப விழா முயற்சிகளும் வழிபாடும் நடைபெறும். இது பழையவற்றை வெளியே போக்கிச் செய்யப்படும் போகி பண்டிகை யாகும். இரண்டாவது தை முதலாந் திகதி நடைபெறும் பொங்கற் பண்டிகை. இது சாதாரணமாக எங்கும் கொண்டாடப்படுவது. மூன்றாவது பட்டிப் பொங்கல் அல்லது மாட்டுப் பொங்கல். தைப்பொங்கலின் மறுதினம் நடைபெறுவது. உழவுக்கும் தொழிலுக்கும் உறுதுணையாகி உதவிய பசுக்கள், எருதுகள் என்பவற்றை வழிபடும் விழா. அன்று மாடுகளை நீராட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணங்கள் கொண்டு அலகாரஞ் செய்து மாலையணிந்து நிவேதனம் செய்து வழிபடுவர். மறுதினம் கன்னிப் பொங்கல் நடைபெறும். இதனைப் பூம் பொங்கல் என்றும் சொல்வர். இத்தினத்திற் பெண்கள் புத்தாடையணிந்து கூட்டங் கூட்டமாக நதிதீரம் சென்று கோலாட்டம், கும்மி ஆடுவர். இவற்றுக்கு முன்னே மஞ்சள் சாதம், குங்குமச் சாதம், வெள்ளைச் சாதம் செய்து நிவேதித்து வழிபடுவர்.

ஈழநாட்டில் தை முதலாந் திகதியில் நடைபெறுவதாகிய சூரிய பொங்கலும், உழவர்க்குப் பேருபகாரமாயுள்ள மாடுகளை வழிபடும் வகையிலமைந்த பட்டிப் பொங்கலும் மட்டுமே நடைபெறுகின்றன. இந்த வழிபாடுகள் எல்லாமே சிவ வழிபாட்டின்பால் வழிப்படுத்துவன என்று கண்டு பயன்பெறுவோமாக.

***1999.12.13***இல் இலங்கை வானொலியிற் பதிவாகியது.

விரத நியமங்களை ஆரம்பத்திலேயே அளவுடன் கைக்கொள்வது நன்று. கடுமையான முறையில் ஆரம்பித்துப் பின்னர் அரை குறையாக நிறுத்துவது கூடாது. விரதத்தைக் கிரமப்படி அனுசரிக்க முடியாதவர்கள் தம்மால் இயன்றளவு மீறித் தேகத்தை வருத்த நேரிடின் விரதத்தில் வெறுப்புத் தோன்றும். இதனால் விரத பலன் இல்லாமற் போய்விடும்.

திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தைப்பூசம்

மனம், பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடல் விரத வழிபாடென்பர். ஆறுமுகநாவலர் 'வினை மாசு தீர்ந்து அந்தக் கரணங்கள் தூயவாதற் பொருட்டு அவராற் காக்கப்படும் விரதம்' என்றும், விரதங்களாவன இன்ன அறஞ் செய்வலெனவும், இன்ன பாவம் ஒழிவலெனவும் தம் ஆற்றலுக்கேற்ப வரைந்து கொள்வன' என்றும் பரிமேலழகர் கூறுவர். மனம் மொழி மெய் மூன்றையும் கட்டுப்படுத்தி ஒருங்கு சேரச் செய்து இறைசிந்தனையை வளர்த்து ஆண்டவனருகே எம்மை அழைத்துச் செல்பவை விரதங்கள் என்பது சிவஸ்ரீ மகாதேவாக் குருக்கள் தரும் விளக்கம். இந்த வகையிலான சிந்தனைகள் அடிப்படையாகக் கொண்ட விரதங்கள் நாள் சம்பந்தமானவை என்றும், திதி சம்பந்தமானவை என்றும், நட்சத்திரம் சம்பந்தமானவை என்றும் அனுட்டிக்கப்படுகின்றன.

நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அனுட்டிக் கப்படும் விரதங்களுள் தைப்பூசமும் சிறப்பிடம் பெறுகின்றது. பூம்பாவை என்னும் பெண்மணியின் எலும்பு சாம்பர் என்பவற்றை வைத்துக்கொண்டு தேவாரத் திருப்பதிகம் பாடி மீண்டும் உயிர் பெற்றெழும்படியாக அற்புதம் செய்த வேளை பாடப்பட்டதொரு திருப்பாடல்:

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூச நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்

என்று பேசுகின்றது. பங்குனி உத்தரங் காணாது போதியோ என்றும், கார்த்திகைத் தீபங் காணாது போதியோ என்றும், ஆதிரை நாள் காணாது போதியோ என்றும் வருந்தொடர்களில் அங்கு குறிக்கப்பட்டுள்ள நட்சத்தி ரங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள முதன்மை போன்று தைப்பூசங் காணாது போதியோ என்னுமிடத்துங் கொடுக்கப்பட்டுள்ளது. தைப்பூச விழாவின் உயர்வு நிலையும் சொல்லமைதி கொண்டு புலப்படுத்தப் பட்டுள்ளமை கவனத்திற்குள்ளாக வேண்டியது.

அருணன் அசைவு தை முதல் ஆனி வரை வடக்கு நோக்கியது. எனவே உத்தராயணம். அதன் ஆரம்பம் எனவே தேவர்களுக்குரிய பகற் போதின் காலை வேளை எனலாம். சிவ சூரியமூர்த்தி மகர இராசியிற் சஞ்சரிக்க சந்திரன் கடகராசியில் ஆட்சி பெற்று நிற்க அனுட்டிக்கப்படுவது தைப்பூச நோன்பாகும். உலகத் தோற்றம் இத்தினத்திலேதான் நிகழ்ந்தது என்பதொரு கருத்தும் நிலவுகிறது.

வியாக்கிரபாத முனிவர் பதஞ்சலியார் என்போர் தரிசனைக்குள்ளாகிய நடராசரின் ஆனந்தத் தாண்டவம் தைப்பூச நன்னாளிலே நிகழ்ந்தது என்பதானதொரு கருத்தும் உண்டு. புது வருவாயை எதிர்ந்து புத்தூக்கத்துடனாகி நிற்கும் தைத் திங்களில் வரும் தைப்பூசத் திருநாள் முருகப் பெருமான் பிரபாவம் பேசும் நாள் என்றும் சிந்திக்கப்படுகின்றது. அதனாலேயே இத்தினத்தில் முருகனாலயங்களில் விசேட விழாக்கள் நிகழுகின்றன. முருகனை வேண்டுதல் செய்யும் விரத அனுட்டானங்கள் இத்தினத்தில் நிகழ்வதும் இதனாலேதான் என்று உணர்ந்து கொள்ளலாம்.

வாயு, வருணன், அக்கினி மூவரும் அழிவு வேலை செய்வதில் ஒருவருக்கொருவர் சளைத்தவரல்லர். ஆக்கம் பற்றிய சிந்தனை யிலும் அவ்வகையினரே! ஒரு சந்தர்ப்பத்தில் இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரும் தம்முள் வல்லமை கூடியவர் தனித்தனி தாந்தாமெனத் தருக்கினர். அந்தவேளை ஒருசிறு துரும்பு அவர்களருகே காணப்பட்டது. ஒவ்வொருவரும் தத்தமக்குரிய வல்லமையின்படி அசைக்கவும், நனைக்கவும், எரிக்கவும் முயன்றனர். தோல்விகண்டனர். அந்த நேரத்தில் அங்கு வந்த நாரதர் இவர்கள் தருக்கி நிற்பதை உணர்ந்து, எங்கள் எல்லோருக்கும் மேலாக ஒரு பரம்பொருள் உண்டென்றும் அப்பரம் பொருளின் வல்லமையே உங்களிடமாகிச் செயற்படுவ தெல்லாம் என்றும் விளக்கம் செய்து பரம்பொருளை நினைய வைத்தார். இது நிகழ்ந்ததும் தைப்பூசத் திருநாள் என்ற கருத்து உண்டு.

முகூர்த்த காரியங்களுக்கு, நல்ல கருமங்களை ஆரம்பிப்பதற்குத் தைப்பூசங் கருத்திற் கொள்ளப் படுகின்றது. இந்தப் புனிதமான நன்னாளில் நாமும் இறைவனை வணங்கி வாழ்வு பெறுவோமாக.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்.

திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சோம வார விரதம்

விரதங்களுள்ளே உத்தமமான விரதம் சோமவார விரதம் என்றொரு கருத்துண்டு. சிவபெருமான் உமாதேவியாருடன் கூடுவதால் சோமசுந்தரர் ஆயினர். சோமருக்கே உரிய வாரம் சோமரை நினைந்து அனுட்டிக்கும் விரதநாள். எனவே சோமவாரம் எனப்பட்டது. அவற்றுளும், **'அருக்கனில் மதிதோய்ந் தொன்றித் தங்கிய திங்கள்'** உத்தமமானதென்று திருவிளையாடற் புராணங் கூறும். அதாவது சூரியனுக்கும் பூமிக்குமிடையே சந்திரன் வருவதால் உண்டாகும் அமாவாசைத்தினம் சோமவாரத் தினமாகுமானால் அது சோமவார விரதத்திற்கு உத்தமமான நாள் என்று கொள்ளப்படும். சோமன், சந்திரன், திங்கள் என்பன ஒரு கருத்துடைய சொற்கள். குற்றமற்றதாகிய கார்த்திகை அல்லது மாழ்கழி மாதத்து வரும் முதல் திங்களை ஆரம்பமாகக் கொண்டு இந்த விரத அனுட்டானத்தை ஆரம்பிக்கலாம். எந்த மாத்தத்திற் திங்கள் வந்தாலும் அது சோமவாரந்தான் எனவே விரத அனுட்டான ஆரம்பத்தின் பின் வரும் எல்லாச் சோமவாரங்களும் விரதத்திற்குரிய நாள்களாகவே கொள்ளப்படவேண்டும். தொடர்ந்து அநுட்டிக்க முடியாதவர்கள் கார்த்திகைச் சோமவாரங்களை விரதநாள்களாகக் கொள்வதோடு நிறுத்திக் கொள்ளலாம்.

சோமவார விரதத்தை அநுட்டிக்கத் தொடங்குவோர் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு உணவு கொள்ளுவதைத் தவிர்க்க வேண்டும். சாணத்தால் மெழுகிய மண் தரையிற் படுத்துறங்க வேண்டும். இன்றைய காலகட்ட வாழ்க்கை முறைக்கு அது பொருந்தாது. எனவே சொகுசான படுக்கை களிலே துயிலும் முறைமைகளைத் தவிர்த்துக்கொள்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பக்கூடியது. சோமவாரத்தன்று அதிகாலை நித்திரை விட்டெழுந்து சோம சுந்தரரைத் தியானித்துக் காலைக் கடன்களை நிறைவு செய்து நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, விபூதி உருத்திராக்கம் எனுஞ் சிவசின்னங்கள் அணிந்து ஆலயஞ் சென்று சோமசுந்தரரை வழிபடத் தயாராக வேண்டும்.

ஆலயத்திற்குச் செல்லும் போது மல்லிகை, முல்லை, இருவாட்சி, வெள்ளெருக்கு, வெண்டாமரை, மந்தாரை முதலிய வெள்ளைப் பூக்களுடன் வில்வம் அறுகு என்பனவுங் கொண்டு செல்லலாம். மந்திரங்களுள் பஞ்சாட்சரம் உயர்வானது போலப் பத்திரங்களுள் வில்வம் உயர்வானது. வில்வமரத்தைத் தரிசித்து வணங்குதலும் பாவ நீக்கத்திற்குக் காரணம் என்பர்.

சோமவாரத்தில் சோமசுந்தரர் சந்நிதியில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல் மாவிளக்கிடுதல், அலங் காரஞ் செய்தல், சுகந்த தூபமிடுதல் நெய்விளக்கேற்றல் முதலிய சரியைத் தொண்டுகளைச் செய்வோர் சகல பாவங்களினின்றும் நீங்குவர். விரத அனுட்டானத்தின் சிறப்பம்சமாக இந்தச் சரியைத் தொண்டு ஒன்றோ இரண்டோ இடம் பெறுவது மிக மிக நல்லது. பூவெடுத்துக் கொடுத்தல் முதலாயினவும் இதனுள் அடங்கும்.

சோமவார விரதம் ஐந்து வகையினவாக அமையுமென்பர். அவைகளாவன, உச்சிப்பொழுதிலே விரத உணவு உண்ணுவது மூலம் நிறைவு செய்வது, சூரிய அஸ்தமனத்தின் பின் விரத உணவு கொள்ளுவது மூலம் நிறைவு செய்வது, சோமவார தினத்தில் உணவு கொள்ளாது மறுநாள், காலையில் விரத உணவு உண்ணுவது மூலம் நிறைவு செய்வது, சோமவார தினத்தில் உணவு துயில் என்பவற்றை விடுத்து வழிபாடுகள் செய்வது கொண்டு பொழுதைப் பயனுள்ளதாகச் செலவு செய்து மறுநாள் காலை விரத உணவு கொள்வதுடன் நிறைவு செய்வது, சோமவார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினத்தில் ஊணுறக்கமின்றி நான்கு யாமமும் சிவபூசை செய்து மறுநாள் பாரணம் பண்ணுவது மூலம் நிறைவு செய்வது என்பனவே அவை. இவற்றுள் முதலிற் குறிப்பிட்டவகை நோன்பிருக்க விரும்பியோர் நண்பகலின் பின் சிவதரிசனஞ் செய்து சிவபூசையுங் கண்டபின் சுற்றத்தாரோடு உணவு உண்ணலாம். இரண்டாவது வகை வழி நோன்பை அநுட்டிக்க விரும்புவோர் சூரிய அஸ்தமனத்தின் பின் சிவதரிசனம் செய்து சிவபூசையுங் கண்டு சுற்றுஞ் சூழ உணவு கொள்ளலாம். மூன்றாவது வகையினதாக நோன்பு அநுட்டிக்க விரும்பியோர் சிவதரிசனஞ் செய்து சிவபூசையும் கண்டு உபவாசமாகவிருந்து துயின்று மறுநாட் காலை சிவ தரிசனஞ் செய்து சிவபூசையும் கண்டு சுற்றஞ்சூழ உணவு கொள்ளலாம். நான்காவதுள்ளதொரு முறைப்படி நோன்பிருக்க விரும்புவோர் சிவதரிசனத்திற் குள்ளாகிச் சிவபூசை கண்டு ஊண் உறக்கம் என்பவற்றைத் தவிர்த்து நான்கு யாமமும் அந்தர் யாகம் செய்து சோமசுந்தரரை வழிபட்டு மறுநாட்காலை சிவதரிசனங் கிடைக்கப் பெற்றுச் சிவபூசையுங் கண்டு சுற்றத்தாருடன் பாரணம் செய்யலாம். ஐந்தாவது வகை நோன்பு அனுட்டிக்க விரும்புவோர், சோமவார தினத்தில் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து சிவதரிசனம் பெற்றுச் சிவபூசையுங் கண்டு ஊண் உறக்கம் என்பவற்றை விடுத்து யாமந் தோறும் சிவபூசை செய்து மறுநாட்காலை கடன்களை நிறைவு செய்து சிவதரிசனம் செய்து சிவபூசை கண்டு சுற்றத்தாருடனாகிப் பாரணம் பண்ணலாம். எந்தவொரு விரத நிறைவிலும் பாரணம் நிறைவாகிய பின் வழிபாட்டிற் பொழுது செலவாக வேண்டும். துயிலுதல் நீக்கப்படவேண்டும். பாரணம் பண்ணுவதற்கு முன், முடியுமெனில், சிவனடியார்கள் சிலரை அழைத்து மாகேசுர பூசை செய்து அதன்பின் விரத உணவு கொள்ளுவது நல்லது.

தாமே தமது வீட்டில் பூஜித்து வழிபட விரும்புவோர் வீட்டின் ஒரு பகுதியைப் புனிதப்படுத்தித் தம்மையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமாக்கிக் கொண்டு விபூதி உருத்திராக்கம் என்னும் சிவசின்னங்களை அணிந்து கொண்டு, உரிய இடத்தை மாவிலை தோரணம் முதலியவற்றால் அலங்கரித்து விநாயகனை நினைந்து எந்தவித விக்கினங்களும் ஏற்படாது பாதுகாத்தருள வேண்டுமென வேண்டிப் பதினொரு கும்பங்கள் வைக்க வேண்டும். அக்கும்பங்களிலே எழுந்தருளுமாறு ஏகாதச உருத்திரர்களை வேண்டுதல் செய்ய வேண்டும். பின்னர் அன்ன வகை, கறிவகை, பலகாரங்கள், பால், பழவகை, வெற்றிலை பாக்கு முதலியவற்றை நிவேதித்துத் தூபம், தீபம் என்பவற்றால் அஞ்சலி செய்து திருமுறைப் பாராயணஞ் செய்யலாம்.

இந்த வகையிலோ அல்லது சிவாலயங்களுக்குச் சென்றோ இந்த விரதத்தை அனுட்டிப்போர் விவாகப்பேறு, மகப்பேறு, நல்ல சொல்வன்மை, கல்வி, செல்வம், போகம், பகையை வெல்லுதல், நோய் நீக்கம், அகால மரணமின்மை, அரச நிர்வாகப் பகுதியாரின் பாராட்டுப் பெறுதல் முதலிய நலன்களையெல்லாம் அநுபவிப்பர்.

சோமவார விரதத்தை அனுட்டிக்க விரும்புவோர் ஒரு வருடகாலம், இரண்டு வருடகாலம், மூன்று வருடகாலம், பன்னிரண்டு வருட காலம், வாழ்நாள் முழுவதும் என்று எல்லை வகுத்துக் கொள்ளலாம். விரதம் அநுட்டிக்க ஆரம்பிக்கும் போது குறிப்பிடப்பட்ட கால எல்லைகளுள் விரும்பிய ஒரு கால கட்டத்தைத் தேர்ந்து கொண்டு சங்கற்பித்து நியமம் தவறாமல் தொடர்ந்து அநுட்டிக்க வேண்டும். சங்கற்பித்துக்கொண்ட கால எல்லையில் முறைப்படி உத்தியாபனம் செய்தல் வேண்டும். வாழ்நாள் முழுவதும் என்று சங்கற்பித்து ஆரம்பித்தவருக்கு உத்தியாபனம் செய்ய வாய்ப்பேற்படாது. தொடங்கிய விரதத்தை இடையே நிறுத்திக் கொண்டவருக்கும் உத்தியாபனம் இல்லை. உத்தியாபனம் செய்ய முடியாது போனவர்கள் விரத பயனை அனுபவிக்க முடியாது. ஆகவே விரதத்தை ஒருகாலப் பகுதிக்கென்று நிர்ணயித்துத் தொடர்ந்து உத்தியாபனஞ் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனடைய முயற்சிக்க வேண்டும்.

உத்தியாபனம் என்பது விரத நிறைவிலே நிகழும் கிரியை என்பது. வெள்ளியினாலோ செம்பினாலோ சிவன் உமை பிரதிமைகளைச் செய்விக்க வேண்டும். முப்பது கழஞ்சு செம்பினாலோ வெள்ளியினாலோ செய்யப்படும் பிரதிமை உத்தமமானது என்பர். குறிப்பிட்ட காலத்து இறுதி சோமவாரத்தின் முதனாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஒருவேளை மட்டும் உணவு கொண்டு சிவ சிந்தனையுடன் சொகுசு நீக்கித் துயின்று வைகறையிலே நித்திரை விட்டெழுந்து காலைக்கடன், நித்திய கருமவிதி சைவனுட்டான விதி எல்லாம் முறையாக நிறைவாக்கிச் சோமசுந்தரரை வணங்கவேண்டும். மத்தியானந் தொடங்கிச் சாயங்காலம் வரை சிவபுராணங் கேட்டுச் சாயங்காலந் தொடக்கம் நான்கு யாமங்களிலும் கும்பத்திலும் செய்யப்பட்ட பிரதிமைகளிலும் சிவலிங்கத்திலும் சிவபெருமானை ஆவாகனம் செய்து பூசை செய்தல் வேண்டும். பூசை முடிவில் சிவமூல மந்திரத்திதினால் நூற்றெட்டுத்தரம் ஒவ்வொரு யாமத்திலும் செபிக்க வேண்டும். ஆயிரம் பெயர்களைச் சொல்லி ஆயிரம் வில்வம் சாத்திப் பஞ்சாட்சர மந்திர நீர் இறைத்துத் திருமுறையைப் பாராயணஞ் செய்ய வேண்டும். பின் நித்திய கருமங்களைப் பூரணப்படுத்திப் பதின்மூன்று வாழையிலை பரப்பி அரிசி காய்கறி என்பவற்றால் அவற்றை நிரப்பிச் சிவவழிபாட்டிற்குரிய சிவப்பிராமணர்களை அழைத்து அவர்களைச் சிவனாக மதித்துப் பூஜித்துத் தட்சணை வெள்ளைப்பசு, பாதக்குறடு, கடை, விசிறி வஸ்திரம் முதலியவற்றைத் தானஞ் செய்ய வேண்டும். பின்பு தன் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய குருவை, குரு இல்லாத விடத்துத் தக்க சைவச் சான்றோரை அவர் தர்ம பத்தினியோடும் வருகை தரச்செய்து அவர்களைத் தக்கதோர் ஆசனத்திருத்திச் சிவனும் உமையுமாகக் கண்டு மலர்கள் முதலிவற்றினாற் பூசித்து முன்பாகவே செய்து வைத்திருந்த பிரதிமையோடு பொன், பூமி, பசு என்பவற்றையுஞ் சேர்த்துத் தானஞ் செய்ய வேண்டும். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை உத்தியாபனம் முடித்து சிவனடியார்களுக்கு மாகேசுர பூசை செய்து சுற்றத்தாருடனாகித் தாம் உணவு கொள்ளலாம். குருவையோ சைவச்சான்றோரையோ தமது இல்லத்திற்கு அழைக்க முடியாதவர், தேர்ந் தெடுக்கப்பட்ட தம்பதியினர்க்கு முன்கூட்டியே அறிவித்தல் கொடுத்து அவர்கள் இல்லம் சென்று வேண்டிய கிரியைகளைச் செய்யலாம். ஒவ்வொருவரும் தத்தம் இயல்பிற்கேற்பச் சிறிய அளவிலோ பெரிய அளவிலோ செய்யலாம். மாகேசுர பூசைக்குப் பொருத்தமான தகுதி வாய்ந்த ஒரு சிவனடியார் இருந்தாலே போதுமானது.

இவ்விரதத்தை அநுட்டிப்போர் மனந் தூய்மை பெறுவர். பகை இல்லாதொழியும். சஞ்சலம் நீங்கி மனம் அமைதி நிலை காணும். ஓராயிரந்தரம் பிறந்து பெற்ற அனுபவிக்க வேண்டி வந்த பாவங்களெல்லாம் இந்த விரதத்தைச் செவ்விதாக அநுட்டித்த இந்தப் பிறவியிலேயே நீங்கப் பெற்றுச் சிவகதி அடைவர். இவ்விரதத்தை அநுட்டித்தவர்கள், மனைவி மக்களும், சுற்றத்தாரும், வழிபாட்டு முயற்சிகளில் உதவுநர்களாய் இருந்தவர்களும் எல்லா நலங்களுடனும் இனிது வாழ்வர். விரத அநுட்டானத்துடனாகி இருந்தோர் இறையனுபவத்தை அண்மித்து விட்டனர் என்றுஞ் சொல்லுவர். அந்த அளவிற்கு விரதங்கள் மனதைப் பண்படுத்துவனவாய் அமைந்து விடுகின்றன.

அதிகாலை அதாவது வைகறையில் நித்திரை விட்டெழுந்து செய்ய வேண்டிய காலைக்கடன்களை எல்லாம் நிறைவு செய்து ஆற்று நீரிலோ, குளத்து நீரிலோ, கிணற்று நீரிலோ நீராடி. அதாவது சாதாரணமாகக் குளிர்ந்த நீரில் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து சைவானுட்டான விதிப்படி விபூதியணிய வேண்டும். இந்த நிலையே எமக்கு அமைதியையும் சாந்தியையும் தருவதாக அமையும். மனது மலர்ச்சிக்குரியதாகித் தெளிவான சிந்தனைக்கு இட்டுச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவவழிபாட்டிற்கு உவப்பானதாக அந்தவேளை அமைந்து விடுகின்றது. விபூதி அணிதல், உருத்திராக்கம் பூணல் என்பனவும் மிக உயர்ந்ததொரு புனித நிலையை உருவாக்கி விடுகின்றன. எந்தவொரு விரத நாளாக இருந்தாலென்ன, எந்த வகையிலமைந்த விரதமென்றாலென்ன விரத அனுட்டானத்திற்கு முந்திய தினமே எம்மை நாம் தயார் நிலைக்குக் கொண்டுவந்து விடுவது நல்லது. வைகறைத் துயிலெழல், காலைக்கடன்கள் நிறைவு காணல், சைவானுட்டான விதிகளைக் கைக்கொள்ளுதல், காலை உணவைத் தவிர்த்தல், சிவாலயங்களைத் தரிசித்தல், செய்யக்கூடிய சரியைத் தொண்டு களைச் செய்தல், திருமுறைப் பாராயணம் செய்தல், வீடுவந்து நண்பகல் மட்டும் உணவு கொள்ளுதல், சொந்தமானவையும் வழமையானவையுமான கடமைகளைச் செய்தல், இரவு பால் பழம் உண்ணல் அல்லது பலகாரம் உண்ணல் என்று வழக்கப்படுத்திக் கொள்ளுவது நல்லது. நாம் அநுட்டிக்க விரும்பும் எந்தவொரு விரதத்திற்கும் எம்மைத் தயார் செய்யும் வகையில் இந்த நடைமுறைகளை முதல் நாள் கொள்வது எம்மை நாம் ஊக்குவிப்பதாக அமையும். இந்த வகையிலான வழிநின்று விரதங்களை அநுட்டித்து மனதைத் தூய்மைப்படுத்தி உயர் பயன் பெறுவோமாக.

*1999.11.18*இல் இலங்கை வானொலியில் பதிவாகியது.

**விரதம் - உபவாசம்**

விரதத்திற்கு உபவாசம் என்பதும் ஒரு பரியாயம். உபவாசம் என்றால் கிட்ட இருத்தல் என்ற கருத்துப் ப்ராஹ்மணங்கள் என்ற வேத நூல்களிலே இடம்பெற்று வந்திருக்கிறது. எதற்குக் கிட்ட எனில் வழிபடு பொருட்குக் கிட்ட என்பர். கிட்ட என்பது இடத்தினாலுந்தான்; மனச்சேர்க்கை யாலுந்தான். இடத்தாற் கிட்டுதல், மனத்தாற் கிட்டுதல் இரண்டும் சைவத்தில் மகா முக்கியமானவை. வீட்டிலிருந்த படியே விரதம் திருப்தியளிக்காது.

இலக்கியகலாநிதி பண்டிதமணி மு. கந்தையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவராத்திரி விரதம்

பூக்களுள்ளே தாமரையும் பொன் வகைகளுள்ளே சிறந்தவையாய் இருப்பது போன்று நூல்களுள் வள்ளுவர் முப்பால் உயர்ந்தது என்னுங் கருத்தைத் தருவதொரு பாடல் திருவள்ளுவ மாலையிலுண்டு. அஃதே போன்று சிவராத்திரி என்னும் நூலில்,

*மறைகளிற் சாம மகங்களிற் புரவி மகமலை களின்மக மேரு*
*நிறைபுன னதியிற் கங்கையோ ரைந்தாய் நிகழ்ந்தபூ தத்திலா காய*
*முறைதெரி சுரரிற் கருமுகி லூர்தி முதன்மைபெற் றுயர்ந்தவா றென்ன*
*முறைதரு விரத மனைத்தினு முரைக்கு மரனிர வதிகமென் றறிமின்*

என்பதொரு பாடல் காணப்படுகின்றது. வேதங்களுள்ளே சாமவேதம் உயர்வானது. நதிகளிற் கங்கையும், மலைகளுள்ளே மேருவும் உயர்வானவை. இவ்வகை, விரதங்களுள்ளே உயர்வானது சிவராத்திரி விரதம் என்கின்றது இப்பாடல். அதற்காகிய காரணமும் அங்கே குறிப்பிடப்படுகின்றது.

சிவனை முழுமுதலாகக் கொண்ட சமயம் சைவம். எனவே சிவசமயத்தினர் கொள்ளும் சிவவிரதங்கள் சிறப்பானவை. அந்த வகையமைந்தவற்றுள் சிவராத்திரி விரதம் உயர்வானது என்கின்றது இப்பாடல். சிவனை வேண்டுதல் செய்யும் இரவு வேளையுடன் கூடியது இது. அதனாற் சிவராத்திரி எனப்பட்டது. சிவனை வழிபட்டு, நல்ல பயன் எதிர்பார்பிற்குரியதாயமைந்த சிறப்பானதொரு விரதம் என்ற தொனியும் அத்தொடரிற் தொக்கு நிற்பது போன்று தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பெற்றுயர் கற்ப வீற்றுல கீன்ற*
*பிதாமக னுலந்துபே ருலக*
*முற்றுமற் றொடுங்கிப் பிரளயத்*
*துயிர்கண் முடித்திடுங் கங்குலினுளத்தன்*
*புற்றுமா மறையா கமவிதிப்*
*படிவண் டுழுதுதே னுண்டுபாட்டயரும்*
*பொற்றுணர்க் கடுக்கைத் தொடைமிடை*
*சடிலப் புனிதனை யருச்சனை புரிந்தாள்.*

என்பது சிவராத்திரி விரத அனுட்டான ஆரம்ப நிலை பற்றிக் குறிப்பிடுகின்றது. ஒரு கற்ப முடிவு. உலகம் முழுமையாக வெள்ளத்துள் அமிழ்ந்து போகின்றது. எங்கும் இருள் மயம்; பிரமதேவரும் இறந்தொழிந்தார். அந்த இரவில் உமாதேவயார் விழித்திருந்து இறைவனைப் பூஜித்தார். மெய்யன்போடு வழிபட்டார். இறையருளை வேண்டி நின்றார். மகிழ்ச்சியடைந்த இறைவன் அன்னை முன் காட்சி தந்தார். எம்பெருமானை மனமொழி மெய்களால் வணங்கிய அன்னை, சுவாமி, இத்தினத்தைச் சிவன் இரவாகக் கொண்டு நித்திரையை ஒழித்து வழிபடுவோர்க் கெல்லாம் எல்லா நலங்களுங் கிடைக்குமாறு அருள வேண்டும்; அதற்காகிய அருளை வழங்க வேண்டுமென்று வேண்டுதல் செய்தார். அப்படியேயாகுக என்று இறைவன் திருவருள் பாலித்தான். இவ்வண்ணம் அம்பிகையாலே நோற்கப் பட்ட வழிபாட்டமைதி, ஆன்மாக்களின் துயர் தவிர்க்கும் நிலை வேண்டிச் செய்யப்பட தொழுகை நெறி உயர்வுடைய தாகத்தானே இருக்க வேண்டும்.

இந்த விரத அமைவிற்கான கருதுகோளாக மற்றோர் செய்தியும் பேசப்படுகின்றது. மற்றுமொரு கற்ப முடிபிற் பிரளயந் தோன்றி எல்லாம் வெள்ளத்துளமிழ்ந்தப் பிரமனும் மறைந்தான். பின்னர்ப் பங்கயத் தயனைக் கடைக்கணித்துலகம் பண்டுபோற் படைத்திடப் பணித்து வெங்கண்மா மணிச்சூட்டரவணைப் புறத்து வெண்டிரைப் பாற்கடணடுவன் அறிதுயில் புரியத் திருமால் சென்றார். மகா விஷ்ணுவின் உந்திக் கமலத்துத் தோற்றுவிக்கப் பட்டவனாகிய பிரமன் ஈரேழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுடன் புலவர், கிம்புருடர், கந்தருவர், அரக்கர், இயக்கர் மானுடர் முனிவரர் உயிர்விகற்பங்கள் சூரிய சந்திரர் அனைத்தையும் படைத்து, ஒன்பது கணமுஞ் சேவிப்பக் கோளரி சுமந்த பொற்றவிசில் கலைமகள் உடனாகி வீற்றிருந்தான். பின்னொருநாள் தன் படைப்பினால் தோன்றியுள்ள வளங்களையெல்லாம் பார்வையிடச் சென்றான். கணங்கள் சூழ்வர எழுந்து துலங்கு மேலுலகு பாதலங்கள் எல்லாவற்றையும் பார்த்து உடல் புளகித்தது என்னினும் முதல்வர் இனிப் பிறரொருவர் இலர் எனச் செருக்குற்றான். பாற்கடலில் யோக நித்திரை செய்பவராகிய திருமாலிடஞ் சென்று உளம் பொறாது இங்கு கண்படை துயில்வோன் யாவனீ யெழுந்தி ரென்றிசைந்தான். இவ்வண்ணம் என்னை வினவும் நீ யார் என விஷ்ணு கேட்க, பிரமன் எல்லாவற்றையும் படைத்த முதல்வன் யான் என்றான். எல்லா வற்றையுந் தரக்கூடிய வகை உன்னைப் படைத்தவன் நானே. எல்லாவற்றையுங் காப்பவனும் நானேஞ ஆகவே உன்னைவிட நானே பெரியவன் என்றார். வாய் நிறைந்த சண்டை கைகால் பயன்படும் போராகமாறிப் பலகாலம் நீண்டது. இருவரதும் அறியாமை இருளைப் போக்கவெண்ணிய இறைவன் அவர்கள் நடுவே ஜோதி வடிவினனாகி நின்றான். அங்கே ஒரு அசரீரி ஒலி எழுந்தது. 'இந்தச் சோதியின் அடியை ஒருவரும் முடியை ஒருவரும் காணவேண்டும். யார் முதலிற் காண்கின்றாரோ அவரே முழுமுதல்' என்பது தான் அசரீரி தந்த செய்தி. இருவரது வேகமும் மிகுதியாகியது. பன்றி உருவுடனாகி நிலத்தை அகழ்ந்து கீழ்நோக்கிச் சென்றார் விஷ்ணு. அன்னப்பறவை விமானத்தில் ஆகாயத்திற் பறந்தான் பிரமன். அன்னமாகியே சென்றான். நீண்ட கால முயற்சியின் பின் தம் ஆற்றாமையை உணர்ந்த பிரம விஷ்ணுக்கள் தேடித் தேடொணாத் தேவனைத் தம்மிடமாகக் கண்டு அகந்தை நீங்கித் தொழுது நின்றனர்.

கூடியங் கிருவர் தாமுங் கோலநீ டொளியை நோக்கி
யாடியி னடங்கும் வெற்பின் அமர்ந்துய ரன்ப ருள்ளத்
தூடிருந் தருள்வோய் நின்னை யுணர்ந்தில மெமது சென்னி
சூடியாம் வாழ வின்றுன் றுணைப்பதங் காட்டு கென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருக்கு அடங்கிய இருவரும் இறைவன் மலர்ப்பதங்களை வேண்டி நின்றனர். சோதி வடிவம் ஒடுங்கத் தொடங்கியது. இறைவன் தனதுருக்காட்டி இருவரிடையேயுங் காட்சி நல்கினன். நீலகண்டமும் எண்தோளும் நெற்றிக் கண்ணும் நீறும் காலனைக் காய்ந்த காலும் கையின் மான் மழுவும் உடனாக, திருமால் இடமாகவும் பிரமா வலமாகவும் நின்று சூலபாணியைத் துதித்தனர். இது நிகழ்ந்தது ஒரு மாசி மாதத்துத் தேய்பிறைக் காலத்துப் பதினான்காம் நாள் என்றும் அன்று நள்ளிரவிற்றான் இறையெனுஞ் சோதி வடிவு லிங்கோற்பவராகி நின்றதென்றும் சிவராத்திரி புராணங் குறிப்பிடும். பிரம தேவருக்கும் விஷ்ணுவிற்கும் அவ்வண்ணங் காட்சி கொடுத்த அத்தினமே சிவராத்திரி எனப்பட்டது.

சிவராத்திரியை ஐந்து வகையினவாகப் பார்ப்பதொரு முறைமையும் உண்டு. ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறைக்கால தேய்பிறைக்காலச் சதுர்த்தசித் திதி நித்திய சிவராத்திரி என்னும் பெயராற் குறிப்பிடப்படும். இந்த வகையில் சிவராத்திரி விரதத்தை அநுட்டிப்போர் மிக மிகக் குறைவு. சோம வாரத்தில் சூரியோதயம் முதல், இரவு பூராவும் அமாவாசை சேர்ந்து நின்றால் அது யோக சிவராத்திரி என்று பெயர் பெறும். மாசிமாத அபரபட்சச் சதுர்த்தசி, பங்குனிமாதப் பூர்வபட்சத் திருதியை, சித்திரை மாத அபரபட்ச அட்டமி, வைகாசி மாதப் பூர்வபட்ச அட்டமி, ஆனி மாதப் பூர்வபட்சச் சதுர்த்தி, ஆடி மாத அபரபட்சப் பஞ்சமி, ஆவணி மாதப் பூர்வபட்ச அட்டமி, புரட்டாதி மாதப் பூர்வபட்சத் திரயோதசி, ஐப்பசி மாதப் பூர்வபட்சத் துவாதசி, கார்த்திகை மாதப் பூர்வபட்சச் சப்தமி, அபரபட்ச அட்டமி, மார்கழி மாதப் பூர்வ அபரபட்சச் சதுர்த்தசி, தை மாதப் பூர்வபட்சத் திருதியை என்பன மாத சிவராத்திரித் தினங்கள் என்று குறிப்பிடப்படும். தை மாத அபரபட்சப் பிரதமை முதல் திரயோதசி வரை பதின்மூன்று நாள்களும் மதிய உணவு மட்டும் உண்டு சதுர்த்தசியன்று உபவாசமிருந்து மறுநாள் பாறணை கொள்ளும் முறையிலமைந்த விரதம் பட்ச சிவராத்திரி விரதமாகும். மாசி மாதத்து அபரபட்சச் சதுர்த்தசித் திதியில் மகா சிவராத்திரி கொள்ளப்படும். இச்சிவராத்திரி தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய்க்கிழமையாக அல்லது ஞாயிற்றுக்கிழமை என்று அமையுமானால் அது அளவில் பெரும்பயன் விளைப்பதாக அமையும். மகா சிவராத்திரி, பகல் திரயோதசியாகவிருந்து இரவு சதுர்த்தசியாக மாறி வியாபித்தலுஞ் சிறப்பான அமைவாகும்.

சிவராத்திரி விரதத்தை அநுட்டிப்பவர்கள் திரயோதசித் திதியன்று வைகறையில் நித்திரை விட்டெழுந்து செய்ய வேண்டிய காலைக்கடன்களை நிறைவு செய்து புனித நீரில் குளித்துத் தோய்த்துலர்ந்த ஆடையணிந்து சைவானுஷ்டான விதிப்படி விபூதி தரித்துச் சிவாலயஞ் சென்று வழிபட வேண்டும். நண்பகல் உணவு கொள்ளலாம். இரவு உணவைத் தவிர்த்துக் கொள்ள முடியவில்லை என்று கண்டால் பால் பழம், பலகாரம் என்பவற்று ளொன்றை உண்ணலாம். ஓய்வான நேரம் முழுமையாகத் திருமுறைப் பாராயணத்திற் செலவிடப்படலாம். இன்னொரு வகையிற் சொல்வதானால் இத்தினத்தைச் சிவராத்திரி விரத முன்னாய தினமாகக் கொள்ளுதல் என்னும் வகை சிந்திக்கலாம். சதுர்த்தசித் திதியன்று, அதாவது சிவராத்திரிக்கு உரிய தினத்தன்று அதிகாலை துயில் நீத்துச் செய்யப்பட வேண்டிய காலைக் கடன்களை நித்திய கரும விதிக்கமையக் கழித்துச் சைவானுட்டான விதிகளை நிறைவு கண்டு சிவாலய தரிசனஞ் செய்தல் வேண்டும். அங்கு செய்யப்படக்கூடிய சரியைத் தொண்டுகள் செய்யலாம். பின்னர் வழிபாடுகளிற் பொழுதைச் செலவு செய்யலாம். அன்று உபவாசமாயிருத்தல் நல்லது. எனவே ஆலயங்களில் நடைபெறும் சைவசமயக் கருத்துரைகளைக் கேட்கலாம். முடியுமானால் கருத்துக்களை மற்றையோர் முன் வைக்கலாம். திருமுறைப் பாடல்களைப் பாராயணஞ் செய்யலாம். இறைவன் திருவிளையாடல் நிகழ்வுகளைச் செய்து காட்டலாம்ஞ செய் விக்கலாம். இரவு நித்திரை விழித்திருக்கவேண்டும். நான்கு யாமங் களிலும் நடைபெறும் பூசைகளிலே பங்கு கொள்ள வேண்டும். மறுநாள் அதிகாலை புனித தீர்த்தமொன்றில் நீராடிச் சுவாமி தரிசனஞ் செய்து சிவபூசை கண்டு வீடுவந்து யாராவது ஒரு சிவனடியாருக்காவது உணவு கொடுத்துச் சுற்றஞ் சூழப் பாரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணலாம். அதற்கு மேல் அன்று உணவு கொள்வது பொருத்த மில்லை. பகல் நித்திரை செய்வதுந் தவிர்க்கப்பட வேண்டும்.

சிவராத்திரி இரவின் நான்கு யாமப் பூசைகளும் நடைபெற வேண்டிய முறையொன்றுண்டு. இரவின் முதல் யாமத்தில் பஞ்ச கௌவியத்தால் அபிஷேகம் செய்தல் வேண்டும். சந்தனஞ் சாத்திச் சாம்பிராணித் தூபங் காட்டலாம். பயற்றன்னம் வில்வம்பழம் நிவேதனமாகலாம். இருக்கு வேதம் ஓதித் தாமரை வில்வம் என்பவற்றால் அர்ச்சிக்கலாம். இரண்டாம் யாமத்தில் தேன், சருக்கரை, பால், தயிர், நெய் என்பவை சேர்ந்த பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் நடைபெறவேண்டும். அகில், சந்தனத் தூபம் காட்டிப் பலாப்பழம் பாயாசம் நிவேதிக்கலாம். வில்வம் துளசி என்பவற்றால் அர்ச்சிக்கலாம். யசுர் வேதம் ஓதப்படல் வேண்டும். மூன்றாவது யாமத்திற் தேன்கொண்டு அபிஷேகிக்கலாம். கருப்பூர பொடி சாத்தலாம் குங்கிலியத் தூபமிட்டு எள் கலந்த சாதம் மாதுளம்பழம் நிவேனமாகலாம். வில்வம் ஆத்தி சண்பகம் என்பவற்றால் அர்ச்சித்துச் சாம வேதம் ஓத வேண்டும். நான்காவது யாமத்தில் கருப்பஞ்சாற்றால் அபிஷேகம் நடைபெற வேண்டும். குங்குமஞ் சாத்திச் சுத்த அன்னம் பழங்கள் நிவேதிக்கலாம். வில்வம் நந்தியாவர்தங் கொண்டு அர்ச்சிக்கலாம். அதர்வ வேதம் ஓதல் வேண்டும்.

பஞ்ச வில்வங்களான வில்வம், மாவிலங்கை, முட்கிளுவை, நொச்சி, விளாத்தி என்பவற்றால் நான்கு சாமங்களிலும் அர்ச்சிப்பது விசேட பயனைத் தருமெனச் சிவராத்திரி புராணங் கூறும்.

சிவராத்திரி இரவு முழுவதும் நித்திரையைத் தவிர்த்து இருக்க முடியாதவர்கள் நள்ளிரவு லிங்கோற்பவ காலம் வரையாதல் விழித்திருக்க முயலல் வேண்டும். உபவாசமிருக்க முடியாதவர்கள் பாலோ பழமோ அருந்தி விரதத்தைத் தொடரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராத்திரி இரவு நான்கு கூறுகளாக்கப்பட்டு நான்கு யாமங்களாகக் கொள்ளப்படும். முதலாம் யாமம் மாலை ஆறு மணிமுதல் முன்னிரவு ஒன்பது மணிவரையென்றும் இரண்டாம் யாமம் ஒன்பது மணி முதல் நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை என்றும், மூன்றாம் யாமம் நள்ளிரவு பன்னிரண்டு மணி முதல் பின்னிரவு மூன்று மணிவரையென்றும், நான்காம் யாமம் மூன்று மணி முதல் விடியற்காலை ஆறு மணி வரை என்றுங் கொள்ளப்படும். நள்ளிரவில் வரும் இலிங்கோற்பவ காலம் சுமார் **11.30** தொடக்கம் **12.15** வரையிலான காலமாகலாம்.

சிவராத்திரி மேன்மையை விண்டுரைப்பனவாய கதைகள் பல உள. வேடனொருவன் காட்டில் தூக்கத்தைத் தவிர்த்திருக்க வேண்டி ஒரு மரத்தின் மீதிருந்து இலைகளை ஒவ்வொன்றாகப் போட்டுக் கொண்டிருந்தான். அந்த மரம் வில்வமரம். கீழே ஒரு சிவலிங்கம் இருந்திருக்கிறது. அன்றைய தினம் சிவராத்திரி நாள். நினையாமற் செய்த செயல் தின விசேடம், மர விசேடம், தலவிசேடம் என்பன அவன் உயர் வெய்தக் காரணமாயின, என்பது ஒன்று. நடராசர் கால் மாறி ஆடிய தினம் அதுவென்பது மற்றொன்று. குபேரன், இந்திரன், சந்திரன் என்போர் இவ்விரதத்தை அனுட்டித்துப் பேறு பெற்றனர் என்பது இன்னொன்று. இவ்விரதத்தை அனுட்டித்து யாமும் மேலான வாழ்வு பெறுவோமாக.

**2000.03.14**இல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியது.

துறந்தார்க்கு உரியதாய அறம் வினைமாசு தீர்ந்து அந்தக் கரணங்கள் தூயவாதற் பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும் அவற்றான் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும்.

பரிமேலழகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாசி மகம்

பிரமதேவருடைய மூத்த புதல்வன் தக்கன். அவனுக்கு ஒரு விபரீத ஆசைஞ அன்னை பராசக்தியை மகளாகப் பெறவேண்டும்ஞ சிவபெருமான் அவரைத் திருமணஞ் செய்வது மூலம் தன் மருமகனாக வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. சிவபெருமானை வேண்டித் தவஞ் செய்தான். அவன் தவத்தில் மகிழ்ந்த இறைவன் அவன் முன் தோன்றி உனக்கு வேண்டுவது என்ன என்று கேட்டார். தக்கன் மிகுந்த பணிவோடு தன் விருப்பத்தைச் சமர்ப்பித்தான். அவன் கேட்ட வரம் கொடுக்கப்பட்டது. அப்பனின் அருமந்த வாரிசாக வந்த தக்கபிரசாபதி, இந்த வரம் பெற்றுக் கொண்டபின், தன் மனைவி வேதவல்லியுடன் காளிந்தி நதி எனவும் பெயர் பெறும் புண்ணிய நதியாகிய யமுனையில் நீராடச் சென்றான். அந்த நதியில் ஒரு தாமரை மலரில் அன்னை உமை ஒரு வலம்புரிச் சங்கு போன்று இருந்தார். கண்ணுற்ற தக்கன் வலம்புரியைக் கையிலெடுத்தான். அது அழகுமிகு பெண்குழந்தை ஆகியது. இறைவனிடம் பெற்ற வரங் காரணமாக கிடைத்த குழந்தை என மகிழ்ந்து தாட்சாயிணி என்று பெயரிட்டு அன்போடும் ஆதரவோடும் அதனை வளர்த்தான். அக்குழந்தை கிடைத்த நாள் தாட்சாயிணியின் தோற்றம் நிகழ்ந்த தினம் மாசி மகம் என்னும் புனித நாளாகும். அது சிறப்பான வழிபாட்டுத் தினமாகவும் விரத தினமாகவும் அமைந்து விட்டது.

மகநட்சத்திரம் சிங்க ராசியைச் சேர்ந்தது. சிங்கராசி சூரியனுடைய ஆட்சிக்குரிய வீடு. குறிப்பிட்ட மாசி மாதத்தில் சூரியன் கும்பராசியிலிருந்து சந்திரனைப் பார்க்கும் நிலைமையும் உண்டு. அதனால் மாசி மகம் சிறப்புப் பெறுகின்றது. அல்லாமலும் மாசி மாதத்திய மகம் பூரணையுடன் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது மிகுந்த சிறப்பிற்குரியதாகி விரத மகிமையும் பெறுகின்றது.

பலரையும் துன்பத்திற்குள்ளாக்கிய வல்லமை பொருந்திய அரசனொருவனை வெற்றிகொள்வதற்குரிய வழிகளை ஆலோசித்து நிலைமையைச் சீர்செய்வதற்காக வருண பகவானின் குரு வருணனிடம் சென்றான். நேரம் இருள் கவிந்த இரவுவேளை தன்னை நோக்கி வருபவன் தன் பகைவனாக இருக்கலாமோ என்ற எண்ணத்தில் வருணன் தன் குருவைக் கொலை செய்து விட்டான். குருவைக் கொன்ற பிரமஹத்தி வருணனைப் பீடித்தது. அவன் கைகால் கட்டப்பட்ட நிலையில் சமுத்திரத்தில் வீசப்பட்டான். பல்லாண்டு சமுத்திரத்தில் வருந்திய வருணனின் பரிதாப நிலை கண்ட தேவர்கள் அவனுக்கு விமோசனம் வழங்குமாறு இறைவனிடம் வேண்டினர். தேவர்களது வேண்டுதலை ஏற்றுக்கொண்ட சிவபெருமான் வருணனது பாபச் சுமையை நீக்கி விடுதலை அளித்தார். வருணன் இறைவனை வணங்கினான். இது நிகழ்ந்ததும் ஒரு மாசிமக நாளாகும். இந்தத் தின விசேடத்தைக் கருத்திற் கொண்ட வருணன் இந்தத் தினத்தில் அதாவது மாசிமக நாளில் சமுத்திரத்தில் நீராடுவோர் பாபம் நீங்குமாறு அருள வேண்டுமென இறைவனை வேண்டினான். வருணன் வேண்டிய வரம் இறைவனாற் கொடுக்கப்பட்டது. மாசி மகத்தன்று சமுத்திர தீர்த்தம் விசேடமானதென்று மக்கள் கூட்டம் விரும்பிச் செல்வதற்குரிய காரணம் இதுவே. மாசிமகத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு மகோற்சவம் நடைபெறும் ஆலயங்களும் உண்டு.

கலியுக முடிபில் பிரளயமேற்பட்ட வேளை அமுத கலசமொன்றை இறைவன் மகாமேரு மலையில் வைத்தார். அது வெள்ளத்தில் மிதந்து வந்தபோது வேடனாகி வந்த சிவபெருமான் அதன்மீது அம்பெய்ய அது உடைந்து அமுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிந்தோடியது. அதுவே மகாமகத் தீர்த்தமென்றாகியது. இது நிகழ்ந்தது கும்பகோணத்தில் என்பர். அமுதம் வழிந்தோடிய புனித இடத்தில் ஸ்நானம் செய்வது பாவங்கள் எல்லாம் தொலைவதற்கு ஏதுவாகும். மகாமகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை வருவது. இதை மாமாங்கம் என்றும் சொல்வர்.

மாசிமக விரதநாளுக்கு ஒருவாரம் முன்பிருந்தே விரதத்திற்கான ஆயத்த நிலையை உண்டாக்க வேண்டும். நாளும் வைகறையில் நித்திரை விட்டெழுந்து செய்ய வேண்டிய கடன்களை நிறைவாக்கி ஆலயம் சென்று வழிபாடு செய்து நண்பகல் உணவு கொள்ளலாம். இரவு பால், பழம், பலகார வகை உண்ணலாம். மகத்தினத்தன்று காலை நித்திய கருமங்களை நிறைவு செய்த பின் சமுத்திர தீர்த்தமாடிச் சுவாமி தரிசனஞ் செய்து நண்பகல் ஒரு வேளை உணவு கொள்ளலாம். இரவு உணவைத் தவிர்க்க முடியவில்லையெனில் பால்பழம் உண்ணலாம். முருகன் சிவகுருநாதனாகித் தந்தைக்கு உபதேசம் செய்த புண்ணிய தினமும் மாசிமகம் தான் என்பது நினைவிற்குரியதாக வேண்டும். அப்புண்ணியதின சிந்தனைகளுடனாகி மேலான வாழ்வு பெறுவோமாக.

2000.02.14இல் இலங்கை வானொலியிற் பதிவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பிரதோஷ விரதம்

**அறிமுகம் :**

இறைவன் திருவளை எமதாக்கிக் கொள்ள நாம் பல்வேறு வகையினாலான முயற்சிகளைச் செய்து பார்க்கின்றோம். நித்திய நைமித்திய பூசைகள் செய்தல், சரியைத் தொண்டுகள் செய்தல், அநாதைகள், அங்கவீனர்கள், வயோதிபர்கள் முதலாயினோரைப் பராமரித்தல், விரதங்களை அவ்வவற்றுக்கு விதிக்கப்பட்ட நியமங்களுக்கு ஏற்றவகை அநுட்டித்தல் என்பன அவற்றுட் சில. விரதங்கள் எல்லாமே சிறந்தவை தான். உணவுகள் அனைத்துஞ் சிறந்தவை. ஆனாலுஞ் சில சில உணவுகள் சில சில நேரத் துண்ணப்படும் போது தான் அவை நல்ல பயனைத் தருபவையாக அமையும். இலகுவாக ஜீரணமாகும் உணவு வகைகள் இரவுவேளைக்குப் பொருத்தமானவை. கந்த ஷஷ்டி விரதம் போன்று உபவாசம் இருக்க வேண்டிய விரதங்கள் நிறைவாகிப் பாரணம் பண்ணும் போது நீராகாரமாகிய கரைசல் உணவுகள் பொருத்தமானவை. அஃதேபோன்று விரதங்களும் அவ்வவற்றுக் கென்று குறிப்பிடப்பட்ட நேரங்களில், குறிப்பிடப்பட்ட வகை கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்படும் போது தான் சமமான பயனை அனுபவிக்க வாய்ப்புக் கிடைக்கும். பிரதோஷ விரதம் அந்திப்பொழுது வழிபாட்டிற் குரியதாகும்.

**பிரதோஷ காலம் :**

பிரதோஷ என்பது சாயங்காலம் எனப் பொருள் தருவதொரு சொல். பிரதோஷ விரத காலம் என்னும் போது பகற்போது நிறைவாகி வானத்திற் சந்திரன் நட்சத்திரம் என்பன பிரகாசிக்க ஆரம்பிக்கும் இரவும் பகலும் சங்கமமாகும் நேரம் என்று சொல்வது பொருத்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகையே வெண்சங்கா வண்டூதா வான்கருப்ப
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப - முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது.

என்று புகழேந்திப் புலவர் குறித்துக் காட்டியுள்ள நேரம் அதுவா கலாம். இந்தக் காலக் கணிப்பின்படி மாலை ஐந்தேமுக்கால் மணி முதல் முன்னிரவு ஆறரை மணி வரை உள்ள காலந்தான் அது என்று அறிஞர்கள் குறிப்பிடுவர். பிரதோஷ வழிபாடு என்னுந் தலைப்பில் சென்னை சகுந்தலை நிலையத்தின் மூலம் சிறிய பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ள இரா. இளையபெருமாள் அவர்களும் இவ்வாறே குறிப்பிட்டுள் ளார்கள்.

அமாவாசையின் பின் வரும் பதின்மூன்றாம் நாளும், பௌர்ணமியின் பின்வரும் பதின்மூன்றாம் நாளும் வரும் திரயோதசித் திதி நாளே இந்த விரதத்திற்குரிய தினமாகும். எனவே ஒரு மாதத்தில் இருமுறை இவ்விரதநாள் அமையுமென அறிந்து கொள்ள முடிகின்றது. இதனை ஐந்து வ்கையாகக் கொள்ளுகின்ற முறைமையும் ஒன்றுண்டு.

**1. நித்தியப் பிரதோஷம் :**

நாள்தோறும் சூரியன் மறைவதற்கு முன் ஐந்தேமுக்கால் மணி முதல் சூரியன் மறைந்த பின் ஆறரை மணி வரை உள்ள காலம் நித்தியப் பிரதோச காலம் என்று கொள்ளப்படும்.

**2. பட்சப் பிரதோஷம் :**

சுக்கில பட்சச் சதுர்த்தி நாள் மாலை வேளை கொள்ளப்படுவது பட்சப் பிரதோஷமாகும். பிரதோஷ நேரம் பொதுவானதே.

**3. மாத பிரதோஷம் :**

அமாவாசையின் பின் பதின்மூன்றாம் நாளும், பௌர்ணமியின் பின் பதின்மூன்றாம் நாளும் திரயோதசித் திதியில் வருவது மாத பிரதோஷமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. மகா பிரதோஷம் :**

மாதப் பிரதோஷ நாளன்று சனிக்கிழமையாக இருப்பின் அது மகா பிரதோஷமாகும்.

**5. பிரளயப் பிரதோஷம் :**

பிரளய காலத்தில் எல்லாம் சிவனுடன் ஒடுங்கும் வேளையில் வருவது பிரளயப் பிரதோஷம் ஆகும்.

இந்தச் செய்தி 1997 நொவெம்பர் மங்கை ஆலய மலரின் பிரதோஷ விரதம் என்ற தலைப்பில் சக்திதாசன் எழுதிய கட்டுரையிற் காணப்பட்டது.

இவற்றுக்கு மேலாக, சோம வார தினங்களிற் பொருந்தி வரும் பிரதோஷம் மிக மேலானது என்றும் அந்த நாளில் வரும் பிரதோஷத்தை உரிய முறைப்படி அனுட்டிப்போர் துன்பம் என்கின்ற பெரிய கடலின் கரையிற் சென்று இம்மை மறுமைப் பயனை அனுபவிப்பார்கள் என்று பிரமோத்திரகாண்டம் என்னும் நூலின் சோமவார விரதமான்மியங் கூறும்.

சொன்னவினை யெவற்றினுக்கு மேல மாகிச்
சுருதிசிவா கமம்புகலுஞ் சோம வாரம்
மன்னிவரும் பிரதோடந் தோறுஞ் செம்பொன்
மலைச்சிலைவா னவனையுல கங்க ளீன்ற
கன்னியுட னாகமத்தின் வழிதப் பாது
கடிமலரின் வழிபாடு புரியு மேலோர்
இன்னலெனும் பெருங்கடலின் கரைநின் றேறி
யிகபரத்தும் போகநுகர்ந் திடுவ ரன்றே.

என்பது பிரமோத்திரகாண்டம் என்னும் நூலின் சோமவார விரத மான்மியம் என்னும் பகுதியிற் காணப்படுவது.

**பிரதோஷ விரத அநுட்டானம் :**

பிரதோஷ விரத நாளன்று அதிகாலை துயிலுணர்ந்து காலைக் கடன்களை நிறைவு செய்து நீராடித் தோய்த்துலர்ந்த ஆடையணிந்து விபூதி உருத்திராக்கம் தரித்துத் திருமுறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களைப் பாராயணஞ் செய்யலாம். சிவ கதைகளைச் சிவபுராணங்களை வாசிக்கலாம். சிவன் கோயில் வழிபாட்டிற்கு வாய்ப்பிருந்தாற் பயன்படுத்திக் கொள்ளலாம். உபவாசமிருந்து வழிபாடுகளிற் கலந்து கொள்ள வேண்டும். வீட்டிலுள்ள வழிபாட்டிடத்தின் முன்பாகவிருந்தும் வழிபடலாம்.

மாலையில் மீண்டும் நீராடிச் சைவானுட்டானம் முதலிய கருமங்களை நிறைவு செய்து, வீட்டிலுள்ள வழிபடு மிடத்தமைந்த சிவலிங்கம், நடராசர் போன்ற படிமங்களை அபிஷேகித்துப் பால், பழம், பாக்கு, வெற்றிலை, பூக்கள், அலங்கார தீபங்கள், தூபங்கள் நிவேதித்து அர்ச்சிக்கலாம். திருமுறைப் பாடல் அர்ச்சனை சிறப்பானது.

தொடர்ந்து, சிவன் கோயில் வழிபாடு செய்யப்பட வேண்டியது. அங்கு சென்று பிரதோஷ காலத்தைக் கருத்திற் கொண்டு நடைபெறும் அபிஷேக ஆராதனைகளைக் கண் குளிரக் காணவேண்டும். கண்டு மன நிறைவுடன் எம்பெருமானை வழிபட வேண்டும். நந்திதேவருக்கு அறுகம்புல் மாலை அணிவிக்க வேண்டும். மாவினால் அகல் விளக்குச் செய்து பசுவிலிருந்து பெறப்பட்ட தூய நெய் விட்டுத் தீபமேற்றுவது நல்லது. நந்திதேவருடைய இருகொம்புகளிடையே இறைவனைக் கண்டு வழிபட வேண்டும்.

சிவபெருமான் உமாதேவியாருடன் இடபாரூடராய்ப் பிரதோஷ நேரத்தில் உலாவருதலைத் தரிசிப்பது மிகப் பெரிய புண்ணியமெனக் குறிப்பிடுவர். முதல் முறை வேத பாராயணத்து டனும், இரண்டாவது முறை திருமுறைப் பாராயணத்துடனும் மூன்றாவது முறை மங்கல இசைகளுடனும் சுவாமி வலம் வரும் முறைமை உண்டு. மூன்றாவது முறையாக வீதியுலா வரும் போது ஈசான மூலையில் இறைவனையும் இறைவியையும் இருந்தருளச் செய்து கர்ப்பூர ஆராதனை நடைபெறும். இந்த ஆராதனையிற் கலந்து தரிசிப்பது பெரும் பயன் விளைப்பது. சிவாலய தரிசனத்தின் பின் வீடு வந்து சிவனடியார் ஒருவருக்காவது உணவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துத் தாமும் சுற்றஞ் சூழ உண்டு விரதத்தை நிறைவு செய்யலாம்.

பிரதோஷ விரத நாள்களில் ஆலயத்தைச் சுற்றி வழிபடும் முறைமை :

நாளும் ஆலயத்தை வலம் வருதல் போன்று பிரதோஷ விரத நாள்களிலும் வலம் வருதல் பொருந்தாது. அன்றைய தினம் அப்பிரதட்சணமாக இடம் வருவதாக கோமுகை வரை சென்று திரும்பி வருவதாக அமைய வேண்டும்.



பிரதோஷ நாளில் வலம் வரு முறைமை

முதலில் நந்திதேவரை - இடபதேவரை - தரிசித்து வழிபட வேண்டும். படத்திற் காட்டியுள்ளது போல் அங்கு நின்று இடப்பக்கமாகச் சண்டேசுரர் வரை சென்று திரும்பி வலமாகச் சென்று வடதிசையிலுள்ள கோமுகை வரை வந்து, அதனைக் கடக்காது வந்த வழியே திரும்பி இடபதேவரைத் தரிசித்துப் பின்னும் இடமாகச் சண்டேசுரர் வரை சென்று தரிசித்துத் திரும்பி வலமாக வரவேண்டும். அந்த வேளை இடபதேவரைத் தரிசிக்க வேண்டியதில்லை. தொடர்ந்து வலமாகக் கோமுகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை சென்று திரும்பி இடமாக வந்து இடபதேவரைத் தரிசித்துப் பின்னும் இடமாகத் தொடர்ந்து சண்டேசுரர் வரை சென்று தரிசித்துத் திரும்பி வலமாக வரும் போது இடபதேவரைத் தரிசித்து அவர் இரண்டு கொம்புகளின் இடையாகச் சிவனைத் தரிசித்து வணங்க வேண்டும். இத்தனையும் அப்பிரதட்சண வழிபாடாகும். இவ்வண்ணம் மூன்று முறை வழிபட வேண்டும்.

**பிரதோஷ வழிபாட்டு முறைமை வந்த வரலாறு :**

தேவர் அசுரர்களிடையே நடந்ததொரு போரின் விளைவாகத் தங்கள் குலமே அழிந்து விடலாம் என அஞ்சிய தேவர்கள், வயோதிபமோ இறப்போ தம்மை அணுகாவகை வாழ வேண்டிய உபாயம் பற்றிச் சிந்தித்தனர். என்றும் வாழவேண்டும், இளமையாக இருக்கவும் வேண்டும் என்று விரும்பினர். தங்கள் விருப்பைப் படைத்தற் கடவுளாகிய பிரமனிடம் விண்ணப்பித்தனர். எல்லோரையும் அழைத்துக் கொண்டு பிரம்மா விஷ்ணுவிடம் சென்றார். செய்தியை அறியவும் வைத்தனர். முகமலர்ச்சியுடனாகிய திருமால் பாற்கடலைக் கடைய வேண்டிய நிலைமையைத் தெளிவுபடுத்தினார். பாற்கடலைக் கடைவதாற் பெறப்படக்கூடிய அமிர்தத்தை உண்ண வேண்டும். அமிர்தம் உண்டவர்களுக்கு இறப்பில்லை. அது சாவா மருந்து. அமிர்தம் உண்டவர்கள் இளமையுடன் வாழவும் முடியும் என்னும் உண்மைகளைத் திருமால் விளக்கம் செய்தார்.

திருமாலின் வழிகாட்டலின்படி பாற்கடலைக் கடையும் முயற்சி ஆரம்பமானது. மந்தரம் என்னும் மலை மத்தாகியது. வாசுகி என்னும் பாம்பு நாணாகியது. பிரம்மா தலைமையிற் பாற்கடல் கடையப்படும் முயற்சி தொடர்ந்தது. அசுரர்கள் சும்மா பார்த்துக் கொண்டிருப்பார்களா? அவர்களும் வந்துவிட்டார்கள். திருமாலின் குள்ளமூளை வேலை செய்யத் தொடங்கியது. கடையும் முயற்சியில் அசுரர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பமளிப்பதாகக் காட்டிக் கொண்டு அவர்களை வாசுகியின் தலைப் பக்கமாக நிற்க வைத்தார். தேவர்கள் வாற்பக்கமாக நின்று கொண்டு முயற்சியைத் தொடர்ந்தனர். மந்தரமெனும் மத்துக் கடலுள் அமிழ்ந்து போகாவகை திருமால் ஆமை வேடந்தாக்கிக் கடலுட் சென்று மத்தின் கீழ் நின்று தாங்கிக் கொண்டார்.

தசமித் திதியிலே கடையத் தொடங்கினார்கள். மறுநாள் ஏகாதசியன்று நாணாகி நின்ற வாசுகி என்னும் பாம்பு வலி பொறுக்க முடியாது நஞ்சைக் கக்கியது. பாற்கடலிலிருந்தும் நஞ்சு வெளியாகியது. இரண்டு விஷங்களும் ஒன்றாகிப் பெரிய விஷமாய் ஆலமாகியது. அதன் வெம்மையைத் தாங்க முடியாது தேவர்கள் அசுரர்கள் அனைவருஞ் சிதறி ஓடினர். ஆமை வடிவை விடுத்து நீரின் மேலே வந்த திருமால்கூட விஷப்புகையினால் கருநிறமாகினர். எல்லோரும் சிவபெருமானைத் தஞ்சமடையக் கயிலையை நோக்கி ஓடினர். அங்கே வலமாகச் செல்ல முயன்ற அவர்களை விஷ மண்டலம் இடையே பரவித் தடை செய்தது. அவர்கள் திரும்பி இடமாக ஓடத் தொடங்கினர். அங்கும் ஆலாலத்தின் வெப்பம் தாக்கத்திற்குள்ளாக்கியது. பின்னர் திரும்பி மீண்டும் வலமாகினர். அங்கும் விஷத் தாக்கம் நிகழவே திரும்பி இடமாக ஓடினர். இப்படி இடமாகவும் வலமாகவும் மாறி மாறி ஓடிய முறைமையே வழிபாட்டு முறைமையாகக் கொள்ளப்படுகின்றது. இந்த வழிபாட்டு முறைமையைச் சோமசூத்திர பிரதட்சணம் என்பர் வடமொழியாளர்.

தேவர்கள் இடபதேவரின் உதவியுடன் சிவபெருமானைப் பணிந்து ஆலாலத்தின் கொடுமைகளிலிருந்து தம்மைக் காக்கவேண்டுமென்று வேண்டினர். கருணாநிதியாகிய இறைவன் ஆலாலத்தை ஏற்று வரும் படி தன் தொண்டர்களுள் ஒருவராய சுந்தரரைப் பணித்தார். சுந்தரர் சென்று விஷத்தைத் திரட்டிக் கொண்டு வந்து பரமசிவன் முன் வைத்துப் பணிந்து நிற்கின்றார். பரமசிவன் அதனை எடுத்து வாயிலிட்டு விழுங்க உடனிருந்த உமையம்மையார் அவர் கண்டத்துக் கையை வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தித் தடை செய்துவிட்டார். அந்த விஷம் சிவன் கண்டத்தினிட மாகியது. உமையம்மையின் மகத்துவங் காரணமாக அந்த நஞ்சு அமிர்தமாகியது. நஞ்சு தங்கிய கண்டம் கருமை நிறமுடைய தாகியது. அதனால் இறைவன் திருநீலகண்டன் என்றாயினர். பரமசிவன் பணிப்பின்படி தேவர்கள் மீண்டும் பாற்கடலைக் கடைந்தனர். அன்று ஏகாதசித் திதி. ஏகாதசியின் மறுதினம் துவாதசியில் அமிர்தம் தோன்றியது. அமிர்தம் உண்ட மகிழ்ச்சியால் அன்றைய தினத்தை ஆடிப்பாடிக் களித்தனர். மறுதினம் திரயோதசி. அன்றும் இறை சிந்தனை அமிர்த உணவின் மயக்கத்தில் மூழ்கிக் காலத்தைக் களித்தனர். காலக் கழிவிற் தமது தவறை உணர்ந்து கொண்டவர்கள் தம்மை மன்னித்து ஏற்றருளுமாறு வேண்டி நின்றனர். பரம தயாநிதியாகிய சிவன் தேவர்களை மன்னித்து ஏற்றுக் கொண்டான். அவர்களை மகிழ்விக்க விரும்பிய இறைவன் அம்பிகை பார்த்திருக்க இடபதேவரின் கொம்புகளுக்கிடையாகி நின்று ஆனந்தத் தாண்டவம் ஆடினார். நர்த்தன நாயகனைத் தேவர்கள் இடபதேவரின் இரு கொம்புகளிடையே கண்டு ஆனந்தித்தனர். வழிபட்டனர். அந்த நிகழ்ச்சி நடந்த நேரமே பிரதோஷ நேரமாயது. அன்று அந்த ஆனந்தத் தாண்டவத்தை இடபதேவரின் கொம்புகளிடையே தேவர்கள் பார்த்து அநுபவித்தமை காரணமாகவே இன்றும் பிரதோஷ வேளையிற் பரமசிவனை நந்திதேவர் கொம்புகளிடையே கண்டானந்திக்க விழைகின்றனர். இறைவனை இறைவன் ஆனந்தத் தாண்டவத்தினை அன்று தேவர்கள் நந்திதேவர் கொம்புகளிடையே கண்டு பெரும் பயன் பெற்றுள்ளனர். அதனாலே தான் இன்றும் நந்திதேவர் கொம்பு களிடையே கண்டு வழிபட்டுப் பயன் காண விரும்புகின்றனர்.

தேவர்கள் காணும்படியாகச் சிவன் ஆனந்தத் தாண்டவம் ஆடியது சனிக்கிழமை அந்திப்பொழுது என்ற காரணத்தாலேயே சனிக்கிழமையில் வரும் பிரதோஷம் பெருஞ் சிறப்பினதாகக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னதே யருளு மிப்பிர தோட
மென்னயாம் வழுத்துதற் கெளிதோ
அன்னவா கனனுங் கலுழுவா கனனு
மறிவதன் றதனுடைப் பெருமை
பன்னகா பரணன் பூசையி னிதுபோற்
பலந்தரும் பூசையின் றென்னா
முன்னனநுல் முழுது முணர்ந்தவன்
மொழிந்தான் முனிவர ரனைவரு மகிழ்ந்தார்.

என்பது பிரமோத்திர காண்டம் என்னும் நூல் சொல்லும் சனிப்பிரதோஷ மகிமை பற்றிய செய்யுளாகும். பொதுவாகப் பிரதோஷ மகிமை பற்றிச் சூதமுனிவர் சொல்லிய வரலாறுகளைப் பிரமோத்திர காண்டத்திற் காணமுடியும். சாண்டில்ய முனிவர் உரைகளையும் ஆங்காங்குக் காண முடிகின்றது.

நட்சத்திரங்கள் திதிகள் வாரங்களிற் குறிக்கப்பட்ட சில கட்டங்களில் விசேடம் பெறுவதற்குக் கிரக சஞ்சார ரீதியான விஞ்ஞான காரணமுளதாகத் தெரிகிறது. அவற்றிற் சிலவற்றைப் பற்றிய சில அசுகைகள் சோதிட சாஸ்திர வாயிலாக அறியப்படுகின்றன.

இலக்கியகலாநிதி பண்டிதமணி மு. கந்தையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கல கருமங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

விடயம்

1. குழந்தைப் பருவ மங்கலச் சடங்கு முறை
2. பூப்பு மங்கலச் சடங்கு முறை
3. திருமண மங்கலச் சடங்கு முறை
4. புதுமனை மங்கலச் சடங்கு முறை
5. ஆண்டு விழாக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மங்கல கருமங்கள் அறிமுகம்

'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முக்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்' என்பது இரண்டாஞ் சைவவினாவிடை என்னும் நூலிற் காணப்படும் நாவலர் வாக்கு - கடவுளை வணங்குதல் - ஞானத்தை அடைவதற்கான கருமங்களைச் செய்தலாகும். இந்தச் சரீரம் ஞானத்தை அடைவதற்கு ஒரு கருவியாகும்.

ஓருயிர் பிறவி எடுப்பதற்குக் கருவாகிய காலத்திலிருந்து, பிறந்து வளர்ந்து வாழ்க்கையை அனுபவித்து இறந்த பின்னுள்ள நிலையிலும் பல கிரியைகளைச் சந்திக்கிறது. இந்தக் கிரியைகள் உயிர் பிறவி எடுக்க ஆயத்தமாகிப் பிறந்து வளர்ந்து வாழ்ந்துகொண்டிருப்பது வரை என்றும், அமரத்து வமடைந்த பின் என்றும் இரு கூறுகளாகச் சிந்திக்கப்படும். மரணத்தின் முன் நிகழ்பவை பூர்வக் கிரியைகளென்றும் பின் நிகழ்பவை அபரக்கிரியைகள் என்றும் பெயர் பெறும். பூர்வம் என்பது முன் என்றும் அபரம் என்பது பின் என்றும் பொருள்படும். மரணத்தின் முன்னும் பின்னும் நிகழ்பவை என்பது கருத்து.

குழந்தை உற்பத்திக்கான திருமணத் தம்பதியரின் முதற் சந்திப்பே சாந்திமுகூர்த்தம் என்று ஒரு மங்கல விழாவாகக் கொள்ளப்பட்டது. இன்றும் தமிழகத் தமிழரிடை கவனத்திற் கொள்ளப்படும் இந்த மங்கலக் கிரியையை நம்மவர் நினைந்தும் பார்ப்பதில்லை. ஓருயிர் கருவிற் புகும் போதே சைவ சித்தாந்தப் பின்னணியுடனாகித் தூய்மை, வலு, உரன் என்பவற்றை உடையதாய்க் குழந்தையாகி வெளிவர வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது கொள்கை. தொடர்ந்து ஜாதக கருமம், கர்ணவேதனம், நாமதாரணம், அன்னப் பிராசனம், வித்தியாரம்பம், தீட்சை, விவாகம் என்று பல, பூர்வக் கிரியைப் பட்டியலில் மங்கலக் கிரியைகளாக இடம்பெறுகின்றன. இவற்றிடையேயும் சிலவற்றைக் கும்பம் வைத்துப் பிள்ளையாரை முன்னிலைப்படுத்திச் சிவமயமாகி நின்று செய்கின்றோம். இக்கிரியைகள் சிவத்துடனாகிய எமது தொடர்பை வலுவடையச் செய்கின்றன எனலாம்.

இந்தக் கிரியைகளைச் செய்வோரும் செய்விப்போரும் உரிய தகுதிப்பாடு உடையவர்களாக வேண்டும் என்பது எமது சமயக் கொள்கை. இது பற்றிச் சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள் என்னும் நூலின் ஆசிரியர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா அவர்கள் குறிப்பிட்டுள்ள கருத்தை இங்கே காண்போம்.

''எந்தக் கிரியையாயினும் அதைச் செய்வோருக்கும் செய்வித்துக் கொள்வோருக்கும் உரிய தகுதிப்பாடு இன்றியமையாதது. சைவர்களுக்குரிய பூர்வ அபரக் கிரியைகளைச் செய்வோர் சிறந்த குல ஒழுக்கமும், வேதசிவாகமப் பயிற்சியும், உயர்ந்த சிவதீட்சைப் பேறும், சிவபூசை நியமமும், சிவ பக்தி வினையப் பண்பாடும், சைவாசிரிய இலக்ஷணமும் உள்ளவராய் இருத்தல் வேண்டும். அவற்றைச் செய்வித்துக் கொள்வோரும் சிவதீட்சை பெற்றுச் சந்தியாவந்தனம் பண்ணுபவர்களாய்ப், பஞ்சமா பாதகங்களில் ஈடுபடாதவர்களாய்ச், சுத்த போசனிகளாய்ச், சிவ வழிபாடு உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். சந்தர்ப்ப வயத்தால் மாமிசபோசனிகளாய் உள்ளவர்கள் அவ்வக் கிரியைக் காலங்களிலாவது பிராயச்சித்தஞ் செய்து தோசம் நீக்கிச் சுத்த போசனிகளாய் இருந்தே அவற்றைச் செய்வித்துக் கொள்ளல் வேண்டும்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை புனித கொள்கைகளுக்கு உட்பட்டவராகி இன்று நாம் இவற்றைச் செய்யக்கூடிய நிலை இல்லை. காலம் வேகங்கூடியதாகிவிட்டது. எதையும் ஆறுதலாகச் சிந்தித்துச் செயற்படுத்துவதற்கு நேரமில்லை என்பது ஒன்று. மாறுபாடான கலாச்சாரச் சூழலுக்கு உட்பட்டு வாழ்ந்து கொண்டிருப்பது இன்னொன்று. அதனால் பிள்ளைகளுக்குப் பெயரிடுவதிலிருந்து எல்லாமே மாற்றமடைந்து விட்டன. எனவே இந்தக் காலத்துடனாகி, முழுமையாக அந்தப் பக்கமும் போகாது, முழுமையாக இந்தப் பக்கக் கொள்கைப் பிடிப்புடனும் நில்லாது எமது சைவ வழிபாட்டுக் கொள்கைகளை நியாயமான அளவிற்கு நிலைநிறுத்தும் வகை சைவ வழிபாட்டு முறைமைகளை நிலைபேறுடையதாக்கும் கருமங்களை அமைத்துக்கொள்ள வேண்டியதொரு நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி உள்ளோம். எனவே இந்தக் காலத்துடனாகி மனித வாழ்வில் இடம்பெறும் சில மங்கல கருமங்கள் மட்டும் இங்கே சிந்திக்கப்பட்டுள்ளன. எப்படித்தான் மாற்றங்களை நாம் எதிர்நோக்கிய போதும் அவை எமது உள்ளார்ந்த சைவ வாழ்வியல் உண்மைகளினின்றும் விலகி விடக்கூடாதென்ற துணிபு எம்முடனாகி இருந்துகொண்டிருக்கத் தான் வேண்டும். சிவனை, சிவ வாழ்வை எந்த நேரத்தும் நினைய வேண்டும்.

'பூர்வக் கிரியைகள் என்ற கொள்கையைக் காலத்தோடொட்டி நாம் மனித வாழ்வில் மங்கலக் கருமங்கள் என்று காண்போம். இந்த இடத்துச் சிலவற்றை நாம் தவிர்த்துக் கொள்ளமுடியும். சிலவற்றைச் சேர்த்துக் கொள்ளவும் முடியும். நடைமுறைகளில் மாற்றங் காணவும் முடியும்.

இப்படியானதொரு மாற்றம் ஏன் அறிமுகப்படுதத்ப்பட வேண்டி வந்தது என்றொரு வினா எழுதல் இயற்கையே! அதற்கான காரணத்தை நாமெல்லாம் உணர்ந்துதான் இருக்கவேண்டும். இன்று எமது வழிபாட்டு முறைகள் தலைகீழாகித்தான் சென்று கொண்டிருக்கின்றன என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமாக நாமெல்லாம் அறிந்துகொண்டுதான் இருக்கின்றோம். ஒழுங்கீனங்கள் படுமோசமானவை. அவற்றை வெளியே சொல்வதும் அழகில்லை. அது எங்கள் பல்லைக் குத்தி நாங்களே மணந்தது போலாகிவிடும். அப்படியே தொடர்ந்து நடந்துகொண்டிருக்க விடுவதும் நல்லதல்ல. அதனால் இப்படிச் செய்வோம் என்பது மூலம் அவர்களை வழிநடத்துவது நல்லதல்லவா! இதுவே இந்தச் சிந்தனைகளின் உள்ளார்ந்த நோக்கமாகும்.

## இன்றைய மங்கல கருமங்கள்:

குழந்தைப்பேறு, பெயரிடுதல், துடக்குக் கழிவு, கோவிலுக்குக் கொண்டு செல்லுதல், உணவூட்டுதல், பல்லின் தோற்றம், ஏடுதொடக்குதல், தீட்சை, பூப்புனித நீராட்டல், திருமணம், வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, பவளவிழா, ஸஷ்டியப்த பூர்த்தி விழா, சதாபிஷேகம் என்பன இன்றைய எமது வாழ்வில் மங்கல கருமங்களாகக் கொள்ளப்படக் கூடியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைப் பருவ மங்கலச் சடங்குகள்

## குழந்தைப் பேறு:

'எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிவிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்'

என்பது திருக்குறள். பண்பு நிறைந்த மக்களைப் பெற்றால் தாம் முன் செய்த வினை காரணமாகப் பிறக்கும் பிறப்பு ஏழின் கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடைய மாட்டா என்பது. புதல்வன் நல்வினைகளைச் செய்யச் செய்யத் தந்தையின் தீவினை தேயும் என்பதும் பெறப்படும்.

அன்னை என்றுந் தந்தை என்றும் தகுதி பெறுவதற்குக் குழந்தை வேண்டும். குழந்தைப் பேற்றிற்கு வாய்ப்பில்லாத பெண், மலடி என்னும் தகைமைக்கு உரியவளாகி விடுவாள். அதாவது இழிவுரைக்கு ஆளாகி விடுவாள். அந்தத் தகுதியின்மையினின்றுந் தவறுவதற்குக் குழந்தை வேண்டும். பண்டை நாள்களில் வைத்தியசாலை கிடையாது. ஓலையால் வேயப்பட்ட மண் வீடுகளிலேதான் வாழ்க்கை. குழந்தைப் பிரசவங்கூட அங்கேதான். கிராமப் புறத்தைச் சேர்ந்த மருத்துவிச்சி என்னும் பெண்ணணங்கு - தான் பிரசவ பரிகாரமெல்லாவற்றையும் கவனிப்பாள். ஆண் குழந்தை கிடைத்திருக்கிறது என்று மருத்துவிச்சி சொன்னதும் குழந்தை யின் தந்தை கூரையிற் தட்டி ஆரவாரஞ் செய்வதொரு முறை அன்றிருந்தது. பெற்ற தாயிலிருந்து அனைவருமே ஆண் மகவை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். குழந்தைப் பேற்றினால் உண்டாயத் துடக்குக் காரணமாக இந்தவேளை வழிபாட்டுடன் கூடிய நிகழ்வு எதுவும் நடைபெறுவதில்லை. குழந்தையின் தோற்றம் பற்றித் தந்தை வேண்டியவர்கள் அனைவருக்கும் அறிவிப்பார். தமது மகிழ்வைத் தெரிவிக்கும் வகையில் ஆண் மகவு கிடைத்திருந்தால் வருபவர்க்குக் கற்கண்டு கொடுப்பார்கள். பெண் குழந்தையாகவிருந்தால் சருக்கரை கொடுப்பார்கள். சருக்கரைக்குப் பதிலாக இனிப்பு வகையுங் கொடுப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயரிடுதல்:

பெயர் சூட்டும் நிகழ்வு குழந்தை பிறந்து முப்பத்தொரு தினங்களுக்கிடையே நடைபெறவேண்டும். பண்டை நாள்களில் பேரனின் அல்லது பேர்த்தியின் பெயரை வைத்தார்கள். சண்முகநாதன், சுப்பிரமணியன் என்ற தெய்வப் பெயர்களையோ சம்பந்தர், நாவுக்கரசன் என்று சிவனடியார் பெயர்களையோ வைத்ததுமுண்டு. இன்று எண் சோதிடத்தை மூலமாக்கிப் பெயரமைதி காண முயல்கின்றனர்.

மேலை நாட்டுத் தொடர்புடனானவர்கள் அந்த நாட்டு ஒலிகளுடன் கூடிய பெயர்களை வைக்கின்றார்கள். அப்பெயரிலுள்ள ஒலிவழக்குகள் தமிழ்மொழி ஒலிகளுடன் ஒத்துப் போகக் கூடியவை அன்று. பெயர் சூட்டும் மங்கல கருமம் தமிழ்க் கலாச்சாரத்தை மறந்து செய்யப்படுவதாக இருக்கக் கூடாது. சைவமும் தமிழும் பிரிக்க முடியாதவாறு ஒன்றையொன்று தழுவி நிற்பன. எனவே தமிழ் பற்றிய சிந்தனை சைவம் பற்றிய சிந்தனையேயாம்.

அரசினரின் பதிவுத் தேவை காரணமாகக் குழந்தை பிறந்து சில நாள்களுள் இது நிறைவெய்த வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுளது. உயிரெழுத்துக்களுள் ஒன்றை முன்னாகக் கொண்டமையும் பெயர் சாலச் சிறந்தது என்பதொரு கொள்கையுமுண்டு.

## துடக்குக் கழிவு:

இது குழந்தை பிறந்து முப்பத்தோராவது நாளில் தூய்மை வேண்டி அந்தண சிவாச்சாரியார் ஒருவரின் அநுசரணையுடன் நடைபெறுவது. குழந்தை, தாய், வீட்டினுள்ளோர் அனைவரும் நீராடவேண்டும். வீடும் தூயதாக்கப்பட வேண்டும். சிவாச்சாரியார் கொடுக்கும் பஞ்சகௌவிய நீர் எல்லோராலும் சில துளிகள் உட்கொள்ளப்பட வேண்டும். வீடு எங்கும் தெளிக்கப்படவும் வேண்டும். இந்த முப்பத்தொரு தினங்களும் குழந்தை இருந்த வளாகத்தை விட்டு அந்த வீட்டின் எந்த இடத்திற்கும் செல்லக்கூடிய நிலைமையை அன்று இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பெறும். வீட்டைவிட்டு வெளியே கொண்டு செல்லப்படக் கூடாது என்பது நினைவில் இருக்கவேண்டியது. குழந்தைத் தோற்றத்தினால் உண்டாகக் கூடிய துடக்கு முப்பத்தொரு தினங்களுக்கு மட்டுமே.

## கோயிலுக்குக் கொண்டு செல்லுதல்:

குழந்தையின் வாழ்வில் இது சிறப்பானதொரு தினமாகும். குழந்தை பிறந்து நாற்பத்தோராவது நாளில் இது நடைபெறும். பிறந்த தன் வீட்டை விட்டுக் குழந்தை முதன் முதலிற் செல்லும் இடம் சிவாலயமே என்பது நினைவிருக்க வேண்டும். அதன் பின்னரே ஏனைய இடங்களுக்குச் செல்ல முடியும். குழந்தையின் ஆலய வருகையை அறிந்து அர்ச்சகர் செய்யும் பூசையிற் கலந்து குலதெய்வ வழிபாட்டை நிறைவாக அனுபவித்துப் பிரசாதம் பெறுவது இது. இது குலதெய்வக் கோயிலில் நடைபெறுவது தான் முறைமை.

## உணவூட்டுதல்:

முதன் முதலாகச் சோற்றை உண்ணக் கொடுத்தல் இது. ஆண் குழந்தையாயின் ஆறாம், எட்டாம், பத்தாம் மாதங்களுள் ஒன்றிலும் பெண் குழந்தையாயின் ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் மாதங்களுள் ஒன்றிலும் உணவு ஊட்டலாம். பூரண கும்பம் வைத்துத் தீபாராதனை செய்து கிழக்கு நோக்கிக் குழந்தையை இருக்கச் செய்து கனியும்படி ஆக்கிய சோற்றைச் சுட்டாறிய பாலுடன் சேர்த்துச் சிறிதளவு தீற்றலாம். சிறிதளவு நெய் கலந்த பாயாசம் கொடுக்கும் முறைமையும் உண்டு. முதன் முதலாக உணவூட்டும் இந்தக் கிரியை ஆலயங்களிலும் நடைபெறுவதுண்டு.

## பல்லின் தோற்றம்:

இது குழந்தையின் முன் வாயில் முதன் முதல் பல் தோற்றம் கண்டதும் நிகழ்வது. உடனடியாகப் பல்லுக் கொழுக்கட்டை அவிப்பார்கள். வீட்டின் வழிபாடிடத்தில் கும்பம் வைத்துத் தீபாராதனை செய்து தூய வெள்ளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணியொன்றை விரித்துக் கும்பத்தின் முன்னே கிழக்காகவோ வடக்காகவோ பார்த்திருக்க குழந்தையை இருத்திப் பின்னும் ஒரு தூய வெள்ளைத் துணியைக் குழந்தையின் தலைமேல் இட்டுத் தாய்மாமன் கொழுக்கட்டைகளைக் குழந்தையின் தலைமேல் கொட்டுவார். நாலாபுறம் விழும் கொழுக்கட்டை களை எடுப்பதில் குழந்தை ஆர்வங்காட்டும். பின் நிகழ்விற் பங்கு கொண்டோர் கொழுக்கட்டையைக் குழந்தைக்குக் கொடுத்துத் தாமும் உண்டு மகிழலாம். இந்த வேளையில் அவிக்கப்படும் கொழுக்கட்டை சோமசுந்தரப் புலவரின் ஆடிப்பிறப்புப் பாடலில் இடம்பெறும் பல்லுக் கொழுக்கட்டை என்பது குறிப்பிடக்கூடியது.

## ஏடு தொடக்குதல்:

பண்டை நாள்களில் பிள்ளை ஐந்தாவது வயதிலேதான் பாடசாலை செல்லத் தொடங்கும். அதனாற் பாடசாலை செல்லு முன்பாக ஏடு தொடக்குதல் நடைபெறும். இப்பொழுது முன்பள்ளி என்றும் குழந்தைகள் பாடசாலை என்றும் மூன்றாம் நான்காம் வயதிலேயே பள்ளிக்கூடஞ் செல்லத் தொடங்கி விடுகிறார்கள்.

ஏடு தொடக்கல் - கற்க ஆரம்பித்தல் என்பது, அதாவது வித்தியாரம்பம், பண்டை நாள்களில் பனை ஓலையில் எழுதித்தான் எம்மவர்கள் படித்தார்கள். கடதாசி இல்லாத காலம். பனை ஓலைகளை அழகாக வார்ந்து தேவையான அளவிற்கு எடுத்துத் துவாரமிட்டுக் கட்டிக்கொள்வார்கள். எழுத்தாணியால் எழுதுவார்கள். அதுவே ஏடு எனப்படுகிறது. ஏடு என்பது பனையோலையை வார்ந்து இரண்டு மூன்று ஒன்றாகக் கட்டப்பட்ட அமைப்பு. பூவிதழ், புத்தக இதழ் என்பனவும் ஏடு என்று பெயர் பெறும். பழைமையை மறக்காது இன்றும் நாம் பனை ஓலையையே ஏடு தொடக்குவதற்குப் பயன்படுத்துகின்றோம்.

அறிவு, ஒழுக்கம், ஆசாரம் நிறைந்த ஒரு புனிதர் இந்தத் தேவைக்குப் பயன்கொள்ளப்படுவார். வழிபாட்டிற்குரியதாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் பகுதியில் இது நடைபெறலாம். பூரண கும்பம் வைத்துப் பக்கலில் விளக்கேற்றிப் பூக்கள் நிவேதித்து ஒரு தட்டில் அரிசி வைக்கவேண்டும். காய் பிஞ்சு முதலியனவும் நிவேதிக்கப்படலாம். விபூதி முதலியனவும் கற்கண்டும் இருக்கவேண்டும். ஏடு பூக்களுடனாகப் பிள்ளையார் முன்பாக வைக்கப்பட வேண்டும். தந்தை தேங்காயுடைக்கக் குரு தீபாராதனை செய்து திருமுறைப் பாடற் பாராயணத்துடன் கற்பித்தலை ஆரம்பித்து வைப்பார். ஏட்டை எடுத்து ஒவ்வோர் எழுத்தாகப் பிள்ளையைத் தொடச் செய்து குரு சொல்லிக் கொடுப்பார். உயிரெழுத்துப் பயிற்சி மட்டும் போதியது. தட்டில் வைக்கப்பட்டுள்ள அரிசியில் எழுதும் பயிற்சியும் நடைபெறும். இறுதியிலே எல்லோருக்குங் கற்கண்டு கொடுத்து மகிழ்வர்.

## தீட்சை:

எந்தவொரு சமயத்தவரும் தத்தம் சமய வழிபாட்டு டனாவதற்கு முன் ஒரு விசேட கிரியைக்கு உட்படுத்தப்படுவர். அதாவது அந்தச் சமய வழிபாட்டிற்குரிய புகுமுகக் கிரியை அதுவெனலாம். சிவ வழிபாட்டுடனாகிய சைவ சமயப் பெற்றொருக்குப் புத்திரராகத் தோன்றியவர்களும் சைவ சமயத்தினரின் வழிபாட்டுடனாவதற்குச் சமய தீட்சை என்னுஞ் சிவதீட்சை பெறவேண்டும். சிவதீட்சை பெற்ற பின்னரே அக்குழந்தை சைவசமயக் குழந்தையாக ஏற்றுக்கொள்ளப் படும். சிவனை வழிபடும் அதிகாரமும் அதன் பின்னரே கிடைக்கின்றது. சிவ தீட்சை பெற்றவர்கள் மட்டுந்தான் சைவ சமயத்தவர்களுக்கான பூர்வக் கிரியைகள் அபரக் கிரியைகள் செய்யமுடியும். கிரியை செய்பவனாயினுஞ் சரி, கிரியையைச் செய்விப்போனாயினுஞ் சரி, நடைபெறுங் கிரியைக்கு உதவு பவனாக நிற்பவனுஞ் சரி சிவ தீட்சையைப் பெற்றிருந்தாற்றான் நடைபெறுங் கிரியையாலாய பயனைப் பெறமுடியும். சிவதீட்சை பெறாத ஒருவர் பூர்வக் கிரியைகள் அபரக் கிரியைகளைச் செய்யக் கூடாதோ என ஒரு வினா எழுதல் இந்த இடத்தில் இயற்கையே! எந்தக் கிரியையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம் என்றுதான் பதில் சொல்லுவோம். ஏன்? அவன் மனம் நொந்துபோகக் கூடாதே! சலனமடையக் கூடாதே! என்பதற்காகத்தான். அமைதியாகத் தக்க தருணத்தில் பொருத்தமான வேண்டிய விளக்கத்தைக் கொடுத்து அவனைச் சிவசமயி ஆக்க முடியும்.

உபமன்யு முனிவர் சிவபூசை செய்ய ஆரம்பிக்கின்றதொரு சந்தர்ப்பம். சிவபூசைக்காக மலர்கள் எடுத்து வைக்கப் படவில்லை. என்ன செய்யலாம் என்று உதவியாளர்களுஞ் சிந்திக்கின்றனர். கண்ணன் சிவபூசை செய்கின்றான். அவன் சிவபூசைக்கு பயன்படுத்திய மலர்களை எடுத்துவாருங்கள் என்று முனிவர் உதவியாளரைப் பணிக்கின்றார். உதவியாளர் கள் எடுத்து வந்த மலர்கள் கொண்டு முனிவர் சிவபூசை நிறைவுபெறுகின்றது. கண்ணன் மனதில் ஒரு பரபரப்பு, உடனே முனிவரிடஞ் சென்று பணிவுடன் கேட்டும் விடுகின்றான். சுவாமி யான் சிவபூசைக்குப் பயன்படுத்திய மலர்கள், நிர்மாலிய மானவை, அவற்றை நீங்கள் பயன்படுத்தியுள்ளீர்களே! இது எப்படிப் பொருத்தமாகும் என்று வினவி ஏக்கத்துடன் முனிவர் பதிலை எதிர்பார்த்து நிற்கின்றான். சிவனை அல்லது வேறு யாரையும் வணங்குதல் செய்யாத மாபெரும் முனி சிரேஷ்டர், உண்மையொன்று மிக அமைதியாக அவர் வாய்ப்பதிலாகக் கிடைக்கின்றது. சிவதீட்சை பெற்றவர்கள் தான் சிவபூசை செய்ய முடியும். ஏனையவர்கள் செய்யும் பூசை சிவபூசை யாகாது. சிவதீட்சை பெற்றவர்கள் சிவ பூசைக்காகப் பயன்படுத்திய மலர்கள் மட்டுந்தான் நிர்மாலியமாக முடியும். சிவதீட்சை பெறாதவர் சிவபூசைக்காகப் பயன்படுத்திய மலர்நிர்மாலியம் ஆவதில்லை. நீ சிவதீட்சை பெறாதவன், எனவே நீ செய்த சிவபூசை பயனற்றது. நீ சிவபூசைக்காக உபயோகித்த மலர்களும் நிர்மாலியமாக முடியாது. எனவே யான் அம்மலர்களைப் பயன்படுத்தியது தவறில்லைத்தானே! என்று முனிவரிடத்திருந்து பெற்ற செய்திகள் மூலம் தன் நிலையை உணர்ந்த கண்ணன், தனக்குத் தீட்சை வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள வேண்டுமென முனிவரைப் பணிந்து நிற்கின்றான். உபமன்யு முனிவர் கண்ணனுக்கு மந்திரோபதேசஞ் செய்து தீட்சை வைத்த செய்தியைப் பெரிய புராணமெனுந் திருத்தொண்டர் புராணம் சொல்லும்.

''யாதவன் துவரைக்கிற யாகிய
மாதவன் முடிமேல் அடிவைத்தவன்
பூதநாதன் பொருவருந் தொண்டினுக்கு
ஆதியந்தம் இலாமை அடைந்தவன்''

என்று வரும் பெரிய புராணத்துத் திருமலைச்சிறப்பு என்னும் பகுதியிலுள்ள இப்பாடல் கண்ணன் தீட்சை பெற்ற செய்தியைக் குறிப்பிடுகின்றது.

தீட்சை - ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது என்று பொருள் கொள்ள நிற்கின்றது. தீட்சை = தி + சை என்று பிரித்துப் பொருள்காணக்கூடியது. தீ கொடுத்தலையும் சை கெடுத்தலையும் அறிவுறுத்துவன. எனவே மேலான அறிவைக் கொடுத்துப் புலனழுக்கால் வரும் மலபந்தத்தை நீக்குவது என்று சிந்திக்கப்படும். மலக்கேடு ஞான விளக்கத்திற்குக் காரணமாகின்றது. இறைவன் குருவிடமாக நின்று ஆன்மாக்களின் மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பான். அதற்கு இத்தீட்சை அனுகூலமாகின்றது. இது சமய தீட்சை அல்லது சிவ தீட்சை, விசேட தீட்சை, நிருவாண தீட்சை என மூவகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூப்புமங்கலச் சடங்கு முறை

## அறிமுகம்

ஒரு பெண் குழந்தை வளர்ந்து கன்னிமையை - கன்னிப் பருவத்தை - அடைதல் பூப்படைதல் எனப்படும். இது காலத்திற்கும் இடத்திற்கும் சுவாத்தியத்திற்குமேற்ப மாறுபட்டு நிகழலாம். அநேகமாகப் பத்து வயதிற்கும் பதினைந்து வயதிற்குமிடையே பூப்படைதல் நடைபெறலாம். உடல் வளர்ச்சியில் ஏற்படும் இந்த மாற்றம் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கேற்பப் பருவமடைதல், பெரிய பிள்ளையாதல், சாமர்த்தியப்படல், ருதுவாதல், பூப்படைதல், புத்தியடைதல், விருவடைதல், ஆளாதல், வயதுக்கு வரல், சமைஞ்சிடல் எனப் பல தொடர்புகளால் சொல்லப்படும்.

கர்ப்பப் பையில் ஏற்படும் மாற்றம் - அபிவிருத்தி - கழிவுப் பொருள்களை வெளியேற்றுஞ் சந்தர்ப்பம் அது. தீட்டு என்று அது பெயர் பெறும். அந்தத் தீட்டுக் கண்ணிற் பட்டதும் பிள்ளை பூப்படைந்த செய்தி உறுதிப்படுத்தப்படும். நல்ல தேக ஆரோக்கியம் உள்ள பெண் குழந்தை சூரியோதய காலத்தில் பூப்படையும். அது அந்தக் குழந்தையின் உணர்விற் படுவதோ அன்றி மற்றையோர் கண்ணிற் படுவதோ பின்னா கலாம். உடல் வளம் குன்றிய பிள்ளை, நோய்வாய்ப்பட்ட பிள்ளை பிற்பகலிலும் பூப்படைய வாய்ப்புண்டு. ஏன்? இரவு நேரத்திலும் நிகழலாம்.

இதனைத் தொடர்ந்து பிள்ளையின் உடல் உளம் சார்ந்த பெண்மைப் பண்பு விருத்திக்கான கருமங்கள் தொடரும். இக்கருமங்கள் இடத்திற்கிடம் பெயரளவிலோ செயன் முறையிலோ மாறுபட்டிருக்கலாம். ஆனாலும் பொதுநோக்கு ஒன்றாகவே இருக்கும். அவை உடல் நலத்தைப் பேணு பவையாய் உள்ளத்தைப் புனிதப்படுத்துபனவாய் அமையும். அமையவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2குப்பைத் தண்ணீர் வார்த்தல்:

இது பண்டைக் காலத்தியதொரு கிராமிய வழக்கு. இந்தக் கருத்து இன்று பலருக்கு ஆச்சரியத்தை உண்டாக்கலாம். இப்பொழுது பட்டின வாழ்வு தவிர்ந்த இடங்களில் கூட்டுமாறு போன்றவற்றைக் கீழே போட்டு மேலே பலகையிட்டு இருத்தி முழுகவார்க்கின்றனர்.

பெண்குழந்தை பூப்படைந்துள்ளார் என்ற குறிப்பைக் கண்டதும் மங்கல வாழ்வுடைய ஒரு பெண், குழந்தையை அழைத்துச் சென்று வீட்டில் தனியான ஓரிடத்தில் இருத்திவிட்டுத் தாய்வழி மாமன் மாமிக்கு உடனடியாக அறிவித்து அவர்களை வருகை தரச்செய்ய வேண்டும். அப்பிள்ளையின் இக்கிரியைகளுக்கான உரிமையாளர்கள் அவர்கள்தான். தாய்வழி மாமன் மாமியர் இல்லாதவிடத்து அல்லது அவர்கள் கலந்துகொள்ள முடியாதவிடத்து மங்கல வாழ்வுடைய, பிள்ளைக்கு வேண்டியவர்களால் இப்பணி செய்யப்படலாம்.

மாமி பிள்ளையை அழைத்து வந்து நீராடுமிடத்திற்கு அண்மையாகக் குப்பை மீது ஒரு பலகையைப் போட்டு இருக்கச் செய்வார். மாமனார் நீரெடுத்துக் கொடுக்க மாமி பிள்ளையை முழுகச் செய்வார். நீராடுதல் நிறைவாகியதும் ஈரந்துவட்டி தூய உடையை உடுத்தி அழைத்துச் செல்வர்.

வீட்டினுட் சென்றதும் மீண்டும் நன்றாக ஈரத்தைத் துவட்டிப் பொருத்தமான வகை உடைகளை அணிய வேண்டும்.

## முதல் நான்கு நாள்களும் உணவுப் பராமரிப்பு

இந்த வேளையில் பிள்ளையின் உடல் வளர்ச்சிக்கும் உளவிருத்திக்கும் உரிய பராமரிப்பு முறைகள் இடம்பெற வேண்டும். நான்கு நாட்கள் வரை பிஞ்சுக் கத்திரிக்காய் சாறு, வேப்பந்துளிர், மஞ்சள், நற்சீரகம், உள்ளி என்பவற்றை அரைத்துத் திரட்டிச் சிறு உருண்டைகளாக்கி விழுங்கக் கொடுப்பர். கர்ப்பப்பைத் தூய்மைக்கும் விருத்திக்கும் இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமருந்தாகும். பிள்ளையின் எதிர்கால உடல்நலம் இக்காலப் பராமரிப்பிலே தங்கியுள்ளது. இதன்பின்னர் பச்சையரிசியைப் பொங்கிப் புற்கையாக்கிப் பொங்கற் சாதங் கொடுக்கலாம். இதற்கு நற்சீரகம் அரைத்துச் சமைத்த கத்தரிக்காய்க் கறியை உப உணவாகச் சேர்க்கலாம். உணவில் மாற்றம் வேண்டுமாயின் பச்சை அரிசிப் புற்கைக்குப் பதிலாகக் குத்தரிசியைக் கனிந்த சோறாக்கி நற்சீரகம் அரைத்துச் சமைத்த கறியுடன் கொடுக்கலாம். கத்தரிக்காய்ச்சாறு நல்லெண்ணையுடன் காலையில் ஒரு நாளைக்கு ஒருமுறை குடிப்பதைத் தவறவிடக் கூடாது. இந்தச் சாற்றுடன் நல்லெண்ணெய் கலக்கப்படுவதால் தண்ணீர் குடிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். பதிலாக நற்சீரகம் அவித்து ஆறவைத்த தண்ணீரை உணவின் பின் ஒரு சிறிதளவு குடிக்கக் கொடுக்கலாம். இதன்மேலும் தாகத்தினாற் பிள்ளை தவிப்பாராயின் ஒரு சிறிதளவு கோப்பி பருக இடமளிக்கலாம்.

## ஐந்தாவது நாளிலிருந்து உணவுப் பராமரிப்பு:

ஐந்தாவது நாளிலிருந்து நல்லெண்ணெயிற் பொரிக்கப்பட்ட கத்தரிக்காய்ப் பொரியல் தாராளமாக உபயோகிக்கப்படலாம். உழுத்தம்மாக் களி, பாற்பிட்டு, ஓரளவு உழுத்தம் மாவுடன் கலந்த அரிசிப்பிட்டு என்பனவுங் கொடுக்கப்படலாம். இந்த வேளை பிள்ளையின் ஆரோக்கியத்தைப் பேணத் தக்க, சக்தியை வளம்படுத்தவல்ல உணவு வகைகளை நாம் சிந்திக்கவேண்டும். நாள் செல்லச் செல்ல நற்சீரகம் அவித்த நீர் பருகக் கொடுப்பதைக் கூட்டலாம். பதினைந்து நாள்களின் பின் சிறிதளவு நீரும் பருகக் கொடுக்கலாம்.

எதிர்காலத்துக் குழந்தை ஆரோக்கியத்துடன் வாழவேண்டும். நோய் நொடி இன்றி வாழ வேண்டும். அங்க இலட்சணத்துடன் வாழ வேண்டும், உளநலத்துடன் வாழ வேண்டும் என்னும் எண்ணங்களுடனேயே உணவு தண்ணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன பற்றிய கட்டுப்பாட்டுக் கொள்ளைகள் சிந்திக்கப் படுகின்றன.

## பூப்புப் புனித நீராட்டல்:

பால், அறுகு என்பன வைத்து முழுகுவது இது. பிள்ளை பூப்பெய்திய நாள் முதல் நான்காவதாக வரும் நாள் காலையில் இந்தப் புனித நீராட்டு வைபவம் நடைபெற வேண்டும். காலை சூரியோதய நேரம் நல்லது. அது தவறினால் ஒன்பது மணிக்கு முன்பாக நடைமுறைப்படுத்த முயலவேண்டும். அதுவும் முடியவில்லையெனில் நண்பகல் பன்னிரண்டு மணிக்குச் செய்வதை ஒரு அளவிற்கு விதிவிலக்காக ஏற்றுக் கொள்ளலாம். எக்காரணம் கொண்டும் மாலையில் நடைபெறக் கூடாது. நாலாம் நாள் செய்ய முடியாவிட்டால் 5,7,9,11,13 ஆம் நாள்களில் ஒரு சுபவேளையில் இச்சடங்கைச் செய்யலாம்.

## நீராட்டு விழா நடைமுறை விளக்கம்:

முற்றத்திற் கும்பம் வைத்து மாமன் மாமி என்போர் மங்கல விளக்கேற்றுவர். ஒரு தட்டத்தில் சிறு சிறு துணிக்கைகள் ஆக்கப்பட்ட அறுகுடன் மஞ்சள் கரைசலுடனான பால் விடப்பட்டு கும்பத்தருகே வைக்கப்படும். இருப்பதற்கான பலகை மீது வெள்ளைத் துணி விரிக்கப்பட்டு அருகே வைக்கப்படும். தனியிடத்திருந்த பிள்ளையை மாமியுடன் அன்னை ஏனைய மங்கல மங்கையரும் சேர்ந்து அழைத்து வருவர். பிள்ளையின் இரண்டு கைகளிலும் இரண்டு வெற்றிலைச் சுருள்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அந்தச் சுருள்களுள் பாக்கு சில்லறை நாணயம் என்பன இருக்கும். ஒரு வெள்ளைத் துணியால் தலைக்கு மேலாக மொட்டாக்குப் போடப்பட்டி ருக்கும். இவ்வண்ணம் அழைத்து வரப்பட்ட பிள்ளை துணி விரிக்கப்பட்ட பலகை மீது கிழக்கு நோக்கிய வண்ணம் இருத்தப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து பிள்ளையின் தந்தை கர்ப்பூர தீபமேற்ற மாமனார் தேங்காயுடைக்க மாமி பிள்ளையின் தலையிலுள்ள மொட்டாக்கை நீக்கிவிட்டுச் சிவத்தியானத்துடன் அறுகுடனாகிய பாலை எடுத்து மூன்று முறை பிள்ளையின் தலையில் வைப்பார். தொடர்ந்து ஏனைய மங்கல மங்கையரும் பிள்ளையின் நல்வாழ்வை நினைந்து வாழ்த்தியவராய் அறுகுடனாய பாலை எடுத்துப் பிள்ளையின் தலையில் வைப்பர். பால் வைப்பவர்களின் எண்ணிக்கை ஒற்றை எண்ணினதாக இருக்க வேண்டும்.

(முதுமையினரான மங்கல வாழ்வுடைய அறிஞர்கள், பெரியவர்கள், நெருங்கிய உறவினர்கள், வணக்கத்திற்குரிய புனிதர்கள் என்ற வகையில் ஆண்களும் பால் வைக்கும் வழக்கம் நடைமுறையில் வந்துகொண்டிருக்கிறது)

மீண்டும் மொட்டாக்கிட்டு முன் கொடுக்கப்பட்ட வெற்றிலைச் சுருளுடன் நீராடுமிடத்திற்கு பிள்ளையை மாமியும் மங்கல மங்கையரும் அழைத்துச் சென்று கிழக்கு நோக்கியவாறு பலகை ஒன்றில் இருக்கச் செய்வர். மாமனார் கர்ப்பூர தீபமேற்றித் தேங்காயுடைக்கப் பிள்ளையைப் பெற்ற தந்தை நீரள்ளிக் கொடுக்க மாமி முதலில் முழுக்காட்டுவார். பின் பால் வைத்தவர்கள் எல்லோரும் முழுக்காட்டுவர். பெற்ற அன்னை மாமி என்போர் பிள்ளையை நன்றாக முழுக்காட்டியபின் திரும்பவும் மொட்டாக்கிட்டுக் கைகளில் வெற்றிலைச் சுருள் கொடுத்து அழைத்துச் செல்வர். வீட்டுள் சென்றதும் ஈரந் துவட்டிப் பிள்ளையை நன்றாக அலங்கரித்து அங்குள்ள வழிபடுமிடத்திற்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் கிடைக்கச் செய்து வழிபாடாற்றுவிக்க வேண்டும். பின்னர் பெற்றவர்களையும், மாமன் மாமியையும் வீழ்ந்து வணங்கச் செய்ய வேண்டும். பெற்றோரதும் மாமன் மாமியரதும் ஆசி அந்தவேளை பிள்ளைக்குக் கிடைப்பது அவசியம். அன்னை தங்கச் சங்கிலி ஒன்றைப் பிள்ளையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்தில் அணிய வேண்டும். மாமா மாமி தங்க நாணயம் அல்லது தங்க நகை அல்லது நாணயங்கள் என்பவற்றுள் ஒன்றைப் பிள்ளையின் கையிற் கொடுப்பது நல்லது.

இத்தனை பணிகளும் நிறைவாகிய பின் வீட்டின் முற்றத்தில் ஆரத்தி எடுப்பதற்கென ஒழுங்கு செய்து கும்பம் முதலியவற்றுடனாகியுள்ள இடத்திற்குப் பிள்ளையை அழைத்துச் செல்ல வேண்டும். அந்தவேளை பிள்ளை நெல்லுடனாகிய நிறை நாழியைத் தாங்கியிருப்பார். அந்த நெல்லினுள்ளே ஒரு காம்புச் சத்தகத்தின் கூரான பகுதி புதைந்திருக்க அலகு மேலே நிமிர்ந்து நிற்கும் வண்ணம் குத்தி வைக்கப்பட்டிருக்கும். அலகின் நுனிச் சொண்டில் நல்ல மஞ்சள் நிறமானதொரு எலுமிச்சம்பழம் குத்தப்பட்டிருக்கும். அந்த நிறைநாழியை இரண்டு கைகளாலும் தாங்கி வந்த பிள்ளை அதனைக் கும்பத்தின் முன்னே வைத்துவிட்டு நிற்பார்.

இப்பொழுது ஆரத்திக்காய பொருள்களைத் தட்டுக்களிலே அடுக்கி மங்கல மங்கையரும், இளையராய பெண் பிள்ளை களும் விழா நாயகிக்கு முன்னே இருவரிசையிற் கொண்டுவர விழா நாயகி ஆரத்தி இடத்தை நோக்கி வருவதொரு முறைமை ஆரமபித்துத் தொடருகின்றது.

## ஆரத்தி நடைமுறை:

புனித நீராட்டு விழா நாயகியிடம் கும்பத்தைக் கொடுத்து வைத்திருக்கச் செய்து தந்தையார் கற்பூர தீபம் ஏற்ற மாமனார் தேங்காயுடைக்க இரண்டு மங்கல மங்கையர் முதலிலே நிறைநாழியைக் கொண்டு ஆரத்தி எடுப்பர். தொடர்ந்து பிட்டு, களி, புற்கை, பலகார வகைகள், வாழைப்பழம், ஏனைய பழவகைகள், தாம்பூலம், தேங்காய், மலர்கள், பால்றொட்டி, வேப்பிலை முதலியவற்றுடனான தட்டுக்களை இரண்டு இரண்டு பேராக ஆரத்தி இடமிருந்து வலம் நோக்கியதாக அதாவது கடிகாரமுள் சுற்றுவது போன்று மூன்று முறை சுற்றி விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகியின் தலைக்கு மேலாக எடுத்துப் பின்னே இவற்றைத் தாங்கிக் கொள்ள நிற்கும் சுமங்கலிகளிடம் கொடுக்க வேண்டும். பால்றொட்டி கொண்டு ஆரத்தி எடுப்போர் மூன்றாவது சுற்றின் பின் அவற்றை ஒவ்வொன்றாக உடைத்து ஒவ்வொரு திசைக்கும் வீசவேண்டும். வேப்பம் பத்திரி கொண்டு ஆரத்தி எடுப்போர் அந்தப் பத்திரி கொண்டு விழா நாயகியின் உடம்பு முழுவதையுந் துடைத்து வாயில் மென்று உமிழச் செய்து தலைக்கு மேலாக வீசவேண்டும்.

விழா நாயகிக்குக் கண்ணூறு, தோஷங்கள், பேய் பிசாசுக் குறைபாடுகள் ஏற்பட்டுவிடக் கூடாதென்றே இப்பொருள்கள் கொண்டு ஆரத்தி எடுத்து இறுதியில் வேப்பிலையில் எச்சில் பெற்று வீசுகிறோம். இதைக் கிராமியமொழியிற் காட்டிக் கழித்தல் என்பர்.

## வாழ்த்துதலும் அன்பளிப்பு வழங்கலும்:

காட்டிக் கழிக்கும் கிரியை நிறைவாகியதும் உறவினரும், நண்பர்களும் பிள்ளையை வாழ்த்துவர். அன்பளிப்புக்களையும் வழங்குவர். பிள்ளையின் முன்னே வைக்கப்பட்டிருக்கும் மஞ்சள் கலந்த அரிசியில் ஒரு சிறிதளவு எடுத்து இரண்டு கைகளாலும் விழா நாயகிக்கு தலையில் மூன்று முறை போட்டு பிள்ளையின் நல்ல எதிர்காலத்தை நினைந்து வாழ்த்துவதும் வேண்டுதல் செய்வதுமே அந்த வாழ்த்தெனலாம்.

## நிறைவு:

வாழ்த்துதல் நிறைவாகியதும் தீபங்கொண்டு ஆரத்தி எடுக்கப்படும். தொடர்ந்து தீபமொளிருங் குத்துவிளக்கு நிறைநாளி என்பவற்றை மங்கல மங்கையர் கொண்டு வீட்டினுள்ளே செல்ல விழா நாயகி கைகளில் தாங்கிய கும்பத்துடனே தொடர்ந்து செல்லுவார். கொண்டு செல்லப் பட்டவை வணக்கத்திற்குரிய அறையினிடத்துச் சமர்ப்பணமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். அங்கு கொண்டு செல்லப்பட்ட நிறைநாழியை மாமனார் பெற்று மாமியின் முன்தானை விரிப்புள் வைக்க அவர் நிவேதனமாக்கும் முறையும் சில இடங்களில் நடைமுறையில் உண்டு. அங்கே தந்தை தாயவரை வீழ்ந்து வணங்கி ஆசி பெற்றுக் கொள்ளுவார். அதனை தொடர்ந்து விருந்துபசார நிகழ்வு இடம்பெறும்.

**சிந்தனைக்கு உரியன.**

- மேலே கூறப்பட்டவை மரபுவழி நடப்பவை. காலத்திற்கும் இடத்திற்குமேற்ப நடைமுறைகளில் மாற்றமிருக்கலாம்.
- பிள்ளை பூப்படைவதால் ஆசௌசம் எனுந் துடக்கு ஏற்படுகிறது. இந்தத் தீட்டு நான்கு நாள்களுக்கு மட்டுமே நிற்கக்கூடியது. அதனாலேதான் பிள்ளை பூப்பெய்தி நான்காவது நாளிலே புனித நீராட்டு விழா வைக்கின்றோம். இத்துடக்கு தாய் தந்தையரை மட்டும் சாரக்கூடியது. அந்த வீட்டில் உணவு கொள்வோர் அனைவரையும் அதுகாரணமாக அத்துடக்குத் தொடர லாம். நான்காவது நாள் நீராடுவதுடன் அத்துடக்கு நீங்கிவிடும். இப்பொழுது ஐயர் வந்து துடக்குக் கழிக்கும் முறை பரவி வருகிறது.
- அலங்காரஞ் செய்தல் என்ற தேவைக்காகப் பிள்ளையை மற்றோர் வீட்டிற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் அழைத்துச் செல்லுதல் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டியது. அறுகுடன் கூடிய பால் வைத்து முழுகிய பிள்ளை அந்த வேளை மற்றோரிடஞ் செல்வது புனிதத்திற்குப் பாதிப்பை உண்டாக்கும். இன்னும், பலவீனப்பட்ட பிள்ளையை மேலும் துன்பங்களுக்கு ஆட்படுத்தக் கூடாது.
- இப்பொழுது எல்லோருமே மிகப் பெரிய அளவில் ஆடம்பரமாகப் புனித நீராட்டு விழாவைச் செய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வீட்டினர் என்ன செய்தார்கள் அதைவிட நாம் சிறப்பாகச் செய்ய வேண்டுமே என்ற எண்ணத்திற் பெரும் பொருளைச் செலவு செய்கின்றனர். திருமணத்தின் போது மண்டபங்களை வாடகைக்குப் பெற்றுச் செய்வது போன்ற நிலை வளருகின்றது. இந்த ஆடம்பரச் செயற்பாடுகள் மிகப்பெரும் பாதகமானவை என்றுதான் சொல்ல வேண்டும். இந்த ஆடம்பர நிகழ்வு வசதி குறைந்த குழந்தைகளின் மனதைப் புண்படுத்தும். அதேவேளை இந்த ஆடம்பரச் செலவினம் குழந்தை களின் பெற்றோரைத் தகாத வழியிற் செல்லவும் தூண்டலாம். பஞ்சமா பாதகங்களை விடக் கொடுமை யான பாவம் ஆடம்பரமாய் வாழ்தல் என்று Dr.மு.வரத ராஜன் ''தங்கைக்கு'' என்ற நூலில் எழுதியுள்ள கருத்தை இந்த இடத்தில் நாம் சிந்திப்போமாக.

- உரிய காலத்துப் புனித நீராட்டலைச் செய்ய முடியாதவர்கள் திருமணம் நடைபெறும் நாளிற் பால் அறுகு வைத்து முழுக வார்த்து இந்தக் காட்டிக் கழிக்கும் கிரியைகளையும் செய்கிறார்கள்.

- மனித வாழ்வின் ஒவ்வொரு படியேற்றத்தும் உண்டாகும் வளர்ச்சிப் பருவங்களை விழாக்களாகக் கொண்டாடுவது சைவமரபு. எல்லாம் ஆரோக்கிய சுப வாழ்வையே மையமாகக் கொண்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமண மங்கலச் சடங்குமுறை

## அறிமுகம்:

திருமணம் என்பது, ஒத்த இயல்புடைய ஆண் மகனையும் பெண்மகளையும் பலரறிய இல்லறத்தில் இணைத்து வைக்கும் சடங்காகும். இங்ஙனம் இணைத்து வைக்கப்படும் தலைவன் தலைவியாகிய இருவரினதும் ஒன்று பட்ட மன விருப்பமே (காதல்) திருமணத்துக்கு வேண்டிய அதிமேலான முதலீடாகும். பழந்தமிழர் திருமணங்கள் பெரும்பான்மையுங் காதல் திருமணங்களே என்பதைச் சங்க இலக்கியங்கள் கொண்டு அறிய முடிகின்றது.

மேன்மைக்குரிய பதவிகளையோ, எல்லையில்லாத இன்பத்தைத் தந்து கொண்டிருக்கும் சுவர்க்க வாழ்வையோ அடைவதற்கு வேண்டிய உறுதிப் பொருள்களாக அறம் பொருள் இன்பம் வீடு என்பன அமைகின்றன. ஒத்த இயல்புள்ள ஆணும் பெண்ணும் மன ஒருமைப்பாடுடையவர்களாய்ப் பொருந்தும் வகை வாழ்வது மூலந்தான் இந்த உறுதிப் பொருள்களை அடைய முடியும். இல்லற வாழ்வு இவற்றை மூலதனமாகக் கொண்டு நடைபெற வேண்டும்.

திருமண முறைகள் பலவாக இருந்த போதும், சைவநூல் மரபைப் போற்றுவனவும், இப்போது நடை முறையிலுள்ளன வுமாகிய திருமணத்தொடர்பு சம்பந்தமான ஆரம்பப் பேச்சிலிருந்து, வாழ்த்துதல், விருந்திற் கலந்து கொள்ளல் ஈறாகவுள்ள எல்லா நிகழ்வுகள் பற்றியும் சிந்தித்தல் இந்தத் தொகுப்பு நூலின் நோக்கமாக அமைகின்றது.

திருமண முறைகள், கிரியைகள், அவற்றின் நோக்கங்கள், பயனுடையனவாகும். மங்கலப் பொருள்கள் என்பவை பற்றிய விளக்கம், செய்பவருக்கும் செய்விப்ப வருக்கும் இருக்க வேண்டியது அவசியம். விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாற்தான் அதில் ஒரு உறுதியான நம்பிக்கை ஏற்படும், பயன் கிடைக்கும் வாய்ப்பும் அதன்வழி உண்டாகும். ஒன்றையுந் தெரிந்து கொள்ளவில்லையெனில் அவை வெறுஞ் சடங்காகவே முடியும்.

ஆதலாற் சைவ சமயக் கிரியைகளுள்ளே சிறப்பினதாய திருமணக் கிரியை பற்றிய அறிவை எல்லோரும் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

## திருமணப் பேச்சு :

மணமகள் வீட்டினர் தங்கள் குடும்பத்துக்குப் பொருத்தமானதொரு குடும்பத்திலே மணமகனைத் தேடிக் கண்டுகொண்டு, இடையே நிற்பவர்கள் சிலரைப் பயன்படுத்திப் பேச்சை ஆரம்பிப்பார்கள். பெண்ணின் வயது, உயரம், கல்வி, கிரகநிலை, அழகு முதலான நலன்கள் பேச்சின் பொருந்து நிலைக்கு உபகாரமாகக் கூடியவை. இந்த வகையிற் பொருந்து நிலை காணப்பட்டதும், இருபகுதியினருஞ் சேர்ந்து திருமணத்திற்குரிய சுபநாளைத் தேர்ந்து கொள்வர்.

## பொன் உருக்கல் :

திருமண நாளுக்கு முன்னர் உள்ளதொரு திருநாளின் சுபவேளையில் மணமகன் இல்லத்தில் திருமாங்கல்யத்திற்குப் பொன்னுருக்குதல் நடைபெறும். மங்கல வாழ்வைப் பொருந்தியுள்ள பொன்வினைஞர் ஒருவரால் இது நிகழ்த்தப்படும். பெண் வீட்டினரும் இந்த வைபவத்திற் கலந்து கொள்வர். உருக்கப்பட்ட ஒரு முழுத் தங்கப் பவுணிலேயே தாலி செய்யப்படும். பொன் உருகும் முறை கொண்டு மணமக்களின் எதிர்கால வாழ்வை - வாழ்வு எப்படி அமையுமென்பதைக் கண்டு கொள்ளலாம் என்பர். பொன் வினைஞர் செய்யும் வழிபாட்டு முயற்சிகளைத் தொடர்ந்து கன்னிக்கால் நாட்டல் நடைபெறும். திருமண விழாவிற்காக அமைக்கப்படும் பந்தலின் முதலாவது கால் என்பது இது. அன்றே மணமகள் வீட்டிலும் கன்னிக்கால் நாட்டுவர். அந்த நிகழ்விலும் மணமகன் வீட்டினர் கலந்து கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுருக்கப்படும் தினத்தில் இட்டு வைக்கப்படும் நவதானியம் முளைகொண்டிருக்கும் நிலையில், மணமகன் திருமாங்கல்ய தாரணத்துக்காக வருகை தரும்போது கொண்டு வரப்படுதல் முன்னை நாள் வழக்கு. கன்னிக்காலைச் சுற்றி நவதானியங்கள் இட்டுப் புனித நீர் தெளிக்கப்படும். மணமகள் வீட்டில் நாட்டப்படும் கன்னிக்காலைச் சூழவும் நவதானியம் இடப்படும்.

## மாப்பிள்ளை அழைப்பு :

திருமண நாளன்று, பெண்வீட்டுக்கு மணமகனை அழைத்துச் செல்லப் பெண் வீட்டினரும் வருவர். மணப்பந்தலிற் கும்பம் வைத்து, மங்கல விளக்கேற்றிப், பசுவின் சாணம் அல்லது மஞ்சள் மா கொண்டு விநாயகரை எழுந்தருளச் செய்வர். மணமகன், கும்பத்தை முன்னாகக் கொண்டு கிழக்கு நோக்கி இருக்கக் கூடிய வகையிலே, ஒரு பலகை வைத்து வெள்ளைத் துணித் துண்டொன்றை அதன்மேல் விரித்து விடவேண்டும். பெண் வீட்டினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் உடனாக மணமகனை அழைத்து வந்து பலகையின் மேல் கிழக்கு நோக்கி இருக்கச் செய்து கர்ப்பூர தீபம் ஏற்றி வழிபட்டு, வடக்கு நோக்கியிருந்து ஒருவர் தேங்காய் உடைக்கச், சுற்றத்தவர்கள், பெரியவர்கள் பால் அறுகு வைத்து - இறுதியாக அறுகுடனாகிய பால் வைப்பவர் மீதமுள்ள பால் அறுகு என்பவற்றால் நிறைவாக மணமகனைப் புனிதப்படுத்தி நீராடுவதற்கு உரிய இடத்திற்கு அழைத்துச் சென்று நீராட்டுவர்.

எல்லாக் கருமங்களிலும் மங்கல வாழ்வுடைய ஆண்களும் பெண்களும் மட்டுமே கலந்து கொள்வது நல்லது.

தொடர்ந்து மணமகனை அலங்கரிப்பர். மாப்பிள்ளைத் தோழனாக வந்திருப்பவர் மணமகனை அழைத்து வந்து மணப்பந்தலிற் கிழக்கு முகமாக அமரச் செய்வர். அவ்விடத்து விநாயகரை வழிபட்டுத் தேங்காய் உடைக்க மணமகனுக்குக் கடுக்கன் பூட்டும் வைபவம் நடைபெறும். பின்னர் மதிப்பார்ந்த ஒரு பெரியவரினால் தலைப்பாகை வைக்கப்பட மாப்பிள்ளைத் தோழன் மாலையணிவிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையிலுள்ளோர் மணமகனை ஆசிர்வதித்த பின்னர் சபையினர்க்கு உணவளித்து உபசரித்தல் நடைபெறும். உபசரிப்பு நிறைவாகியதும், மணமகள் இல்லம் நோக்கி மங்கலப் பொருள்களை உடன் வருவோர் தாங்கி வர, வாயிலில் வைக்கப்பட்டுள்ள நிறைகுடம் மங்கலதீபம் முதலானவை வைக்கப்பட்டுள்ள மேசை முன்னாக இருக்கும் வகை தோழனுடனாகி மணமகன் நிற்பார். அந்த இடத்தில் மங்கல மங்கையர் இருவர் ஆரத்தி எடுத்து மணமகனை வாழ்த்துவர். ஹாரத்தீ என்னும் உபயோகந்தான் ஆலத்தி. ஆலாத்தி, என்று வந்திருக்கலாம் என்பதொரு கருத்துமுண்டு. தோழன் மணமகனை, நிறைகுடம் முதலியன உள்ள மேசையை வலஞ்செய வைத்து சுற்றி மங்கல வாத்தியங்கள் சகிதம் அழைத்துச் சென்று, திருமணம் நடைபெற வேண்டிய இடம்நோக்கிச் செல்லவேண்டிய ஒழுங்குகள் செய்வர்.

## மணப்பெண்ணைப் புனித நீராட்டல்:

சமகாலத்தில், மணமகன் வீட்டிலிருந்து பிரதிநிதி களாய்ச் சென்றவர்களும் பெண்பிள்ளைத் தோழியும் மணப் பெண்ணுக்குப் பால் அறுகு வைத்து, நீராட்டி, அலங்கரித்து, உபசரித்து மணவறைக்குச் செல்லக்கூடிய தயார் நிலையில் வைத்திருப்பர்.

## மணமகனை வரவேற்றல் :

மணமங்கல மனை வாயிலில் மணமகன் வந்தவுடன் மணமகள் வீட்டினர் எதிர்கொண்டு அழைத்து, வாயிலில் வைத்திருக்கும் நிறைகுடத்தின் முன்பாக நிறுத்தி மங்கல மங்கையர் இருவர் ஆரத்தி எடுத்த பின், தோழன் மணமகனின் கால்களைக் கழுவுவார். மணமகன் தோழனுக்கு கணையாழி அணிவார். தோழன் மணமகனை நிறைகுடத்துக்கு வலமாக அழைத்து வந்து மணவறையில் இருத்துவார். வெற்றிலைத் தட்டு, சந்தனக்கும்பா, பன்னீர்ச் செம்பு முதலிய மங்கலப் பொருள்களை உப்சாரத்திற்காக மணமகன் முன் வைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கிரியா குரு :

குரு அங்கலட்சணம் உடையவராகவும், - அதாவது குறைபாடுகள் இல்லாதவராகவும், மங்கல வாழ்வுடைய வராகவும், கிரியா விளக்கம் நிறைந்தவராகவும், சாந்த குண முடையவராகவும், கிரியைகளை நடைமுறைப் படுத்துதலில், நிறைவான கவனம் உள்ள வராகவும், திருமண பந்தத்தினாற் சேரும் இரு வீட்டினரையும் நன்கறிந்தவராகவும் இருப்பது சிறப்பாகும்.

## கிரியா மண்டப அமைவு :

மண்டபம் சதுரமானதாக, நான்கு பக்கமும் வாசல் வைத்துக் கோலமிட்டு, மேலே விதானம் அமைத்து, நான்கு புறமும் மாவிலை தோரணம், மாலை என்பன தொங்கவிடப்பட வேண்டும். அரசாணிமாலைகள் நான்குந் தொங்க வேண்டும். ஈசான (வடகிழக்கு) மூலையில் யாகேஸ்வரர் யாகேஸ்வரிக்காக ஒரு மேடையும், அக்கினி (தென்கிழக்கு) மூலையில் நவக்கிரக கும்பங்களுக்காக ஒரு மேடையும் அமைக்க வேண்டும். நடுவே அமையும் அரசாணிக்கு மேற்கே சதுரமாக ஒரு குண்டலமும், வடக்கே அம்மியும், கிழக்கே மோதிரம் போட்டு எடுப்பதற்காக ஒரு தண்ணீர்ப் பாத்திரமும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

## மண்டப வரைபடம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஈசான மூலை - யாகேஸ்வரர் யாகேஸ்வரிக்கு இரண்டு கும்பம்

2. வாயு மூலை - சந்திரனுக்காக ஒரு கும்பம்

3.அக்கினி மூலை - நவக்கிரகங்களுக்காக ஒன்பது கும்பம்

4.அரசாணி

5.ஓமகுண்டம்

6.அம்மி

7.மோதிரம் போட்டெடுக்கவுள்ள நீர்ப்பாத்திரம்

- மண்டப மத்தியில் அரசாணியும், அதற்குப் பக்கத்தில் நான்கு திசைகளிலும் நான்கு கும்பங்களும் நான்கு மூலைகளிலும் நான்கு குத்து விளக்குகளும் வைக்க வேண்டும்.
- ஈசான (வடகிழக்கு) மூலையில் யாகேஸ்வரன் யாகேஸ்வரிக்கு ஒரு குடத்திலும் ஒரு கெண்டியிலும் இரண்டு கும்பங்கள் வைக்கப்பட வேண்டும்.
- வாயு (வடமேற்கு) மூலையில் சந்திரனுக்காக ஒரு கும்பம் வைக்கப்படும்.
- அக்கினி (தென்கிழக்கு) மூலையில் நவக்கிரகங்களுக்காக ஒன்பது கும்பங்கள் வைக்கப்படும்.
- புண்ணியாகவாசனத்துக்காக ஓம குண்டத்தின் பக்கலில், ஓமகுண்டத்தின் தெற்குப் புறமாக வாழையிலையில் அரிசி பரப்பி ஒரு கும்பம் வைக்க வேண்டும். சில சந்தர்ப்பங் களில் ஓமகுண்டம் இருக்க வேண்டிய இடத்திலேயே இக்கும்பம் வைக்கப்பட்டு தேவை நிறைவாகியதும் கும்பத்தை எடுத்துவிட்டு ஓமகுண்டத்தை அமைப்பர். விநாயக வணக்கத்திற்காக மஞ்சள் மாவிற் பிள்ளையாரை எழுந்தருளச் செய்ய வேண்டும்.
- பஞ்சகௌவிய பூசைக்காக ஒரு பாத்திரத்திற் பாலும் வைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மணமக்களுக்குக் காப்புக் கட்டுவதற்கு ஒரு தாம்பாளத்தில் அரிசி, தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, காப்பு நூல் (இருவருக்குமுரியவை) முதலியவற்றை வைக்க வேண்டும்.
- பாலிகை போடுவதற்காகப் பாத்திரத்திற்கு நூல் சுற்றி மாவிலைகள் வைத்து மண் நிரப்பிச் சந்திர கும்பத்திற்கு மேற்கில் வைக்க வேண்டும்.
- அக்கினி காரியத்திற்காக அக்கினி எடுத்து வரும் பாத்திரம், எள்ளு, நவதானியம், நெற்பொரி, சமித்துக்கட்டு, கட்டைப் புல்லு (இலாமிச்சை), நூற்பந்து, நெய்ப்பாத்திரம், நெய்ப்போத்தல், சிருக்ஸ்ருவம் பரிதி விஸ்தரம், பரிஸ்தரணம் முதலிய பொருள்கள் வைக்கப்படவேண்டும்.
- தாம்பாளமொன்றில் மகா பூரணாதிக்குரிய பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், நெற்பொரி, தட்சிணை முதலியன வும் வைக்க வேண்டும்.
- கன்னிகா தானத்திற்குரிய வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம் பழம், சுவர்ணம், வெள்ளிக்காசு, மஞ்சள், அட்சதை முதலியனவும் இருக்க வேண்டும்.
- அருந்ததி தரிசனத்துக்காக பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய் முதலியவற்றை ஒரு தட்டில் வைத்திருக்க வேண்டும்.

## கிரியாரம்பம் :

குருக்கள் மணமகனுக்குத் திருநீறு கொடுத்து, சைவக்கிரியைகள் அனைத்திற்கும் பொதுவான முதற் கிரியைகளாகிய சங்கற்பம் செய்தல், பிள்ளையார் பூசை, புண்ணியாக வாசனம், பஞ்சகௌவியம், அங்குரார்ப்பணம் (பாலிகை இடல்), இரட்சா பந்தனம் (காப்புக் கட்டுதல்) ஆகியவை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கற்பம் செய்தல் :

மணமகனுக்குத் திருநீறு கொடுத்துப் பவித்திரம் (தருப்பை) தரிப்பித்து, இன்ன வருடருது, மாத, பட்ச, நட்சத்திர, திதி, வார, இலக்கின சுப முகூர்த்த வேளையில், இன்ன நட்சத்திர இராசியுள்ள மணமகனுக்கு அவர் திருமண வைபவத் தின் போது இன்ன இன்ன கிரியைகளைக் குருக்களாகவிருந்து நடத்தப் போகின்றேன் என்றும், மணமகன், சிவாசாரியார் (கிரியைக்குரு) செய்யும் இக்கிரியைபூர்வமாகத் திருநிறை செல்வி...... ஐத் திருமணஞ் செய்யப் போகின்றேன் என்றும் உறுதி பூணல். மணமகளும் இந்த முறையிற் சங்கற்பஞ் செய்ய வேண்டும்.

## பிள்ளையார் பூசை :

நாம் தொடங்குகின்ற இத்திருமணக் கிரியைகளை எந்தவித இடையூறுமின்றி இனிதே நிறைவேற்றி வைக்கவேண்டுமென விநாயகனை வேண்டி வழிபடல் முதலிலே நடைபெறும். மஞ்சள் மா கொண்டு பிள்ளையார் பிடித்து வைத்து அதில் அவரை எழுந்தருளச் செய்து, உத்தம இலட்சணமுடைய தேங்காய் ஒன்றைத் தெரிந்தெடுத்துத் தூபங் காட்டிச் சந்தன, புஷ்ப, அட்சதையிட்டுப் பெருமானை வேண்டி, இருபாதியாக உடைத்து வைத்து நிவேதனம், கர்ப்பூர நீராஞ்சனம், தோத்திரம் செய்தல் வேண்டும்.

## புண்ணியாகவாசனம் :

திருமண மண்டபத்தையும், மணமங்கலப் பொருள் களையும் மணமகனையும் மந்திர ஜலம் தெளித்துச் சுத்தப் படுத்தலாகிய வருண கும்ப பூசையும், பஞ்சகௌவிய பூசையும் நடைபெறும். மணமகன் ஆத்ம சுத்திக்காக மூன்று தத்துவங் களையும் சொல்லிப் பஞ்சகௌவியத்தை உடகொள்வர்.

### அங்குரார்ப்பணம் :

அங்குரம் - முளை, அங்குரார்ப்பணம் - முளையிடல் - முளைக்கும்படியாக விதைகளை இடல் - பாலிகையிடல் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர கும்பத்தைப் பூசித்து, அதற்கு முன்பாக இருக்கும் மண் நிரப்பப்பட்ட ஒரு பாத்திரத்தில் மணமகள் பகுதியைச் சார்ந்த சுமங்கலிகளான மூன்று பெண்களைக் கொண்டு நவதானியம் இடுவித்துப் (பாலிகை இடுதல்) புண்ணிய சலங் கொண்டு தெளித்து முளை கொள்ளச் செய் தல். மணமகள் மணவறைக்கு வருகை தந்த பின் மணமகன் சார்பினரான சுமங்கலிகள் மூவரைக் கொண்டு நவதானியம் இடுவித்துப் புனிதநீர் தெளிப்பிக்க வேண்டும். அந்த முளை வளர்ச்சி கொண்டு மணமக்களின் எதிர்கால நல்வாழ்வு கண்டுகொள்ளப்படலாம் என்பர்.

## குறிப்பு :

திருமாங்கல்ய தாரண தினத்திற்கு மூன்று தினங்கள் முன்பாக ஐந்து சிறிய மண்சட்டிகளில் மண்நிரப்பிச் சுமங்கலிகளான மூன்று அல்லது ஐந்து நங்கையர்களைக் கொண்டு நவதானியங்களை அச்சட்டிகளில் இடுவித்துப் புனித நீர் தினமுந் தெளித்து முளை கொள்ளச் செய்ய வேண்டும். மணமகன் மணவறைக்கு வருகை தரும் போது அந்த முளை கொள் பாத்திரங்களும் கொண்டுவரப்படும். இஃது இன்றுள்ள முறை.

## இரட்சாபந்தனம் :

இரட்சாபந்தனம் - காப்புக்கட்டல். தொடங்கிய கருமம் நிறைவுறும் வரை எந்தவித தீட்டுக்களோ, இடையீடுகளோ, துக்கங்களோ மணமகனைச் சாராதிருக்க வேண்டிய பாதுகாப்புக் கருதிச் செய்யப்படுவது. முன்னரே ஆயத்தமாக வைத்திருந்த காப்பு நூலைப் பூசித்தெடுத்து மணமகனின் வலது கையிற் குருக்கள் கட்டுவார்.

இதுவரை குறிப்பிட்ட கிரியைகள், சைவக் கிரியைகள் அனைத்திற்குமே பொதுவானவை.

## யாகேஸ்வரன் யாகேஸ்வரி பூசை :

யாகேஸ்வரன் யாகேஸ்வரி - உமா மகேஸ்வரர். யாகத் தலைவன் என்ற காரணத்தால் பரமேஸ்வரனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகேஸ்வரனென்றும், யாகத் தலைவி என்பதாற் பார்வதி தேவியே யாகேஸ்வரி என்றுஞ் சொல்வர். இந்த வகையில் ஈசான மூலையில் வைக்கப்பட்டுள்ள கும்பங்களில் பார்வதி பரமேஸ்வரனுக்கும் பூசை செய்து குருக்கள் சிவோகம் பாவனை மூலம் தம்மைச் சிவமாக்கிக் காண நிற்பார்.

## நவக்கிரக பூசை :

இந்தத் திருமணத்தின் போது நீங்கள் எல்லோரும் நல்லருள் புரிய வேண்டுமென நவக்கிரக தேவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கும்பங்களிற் பூசை செய்து வேண்டுதல் செய்தல். நவக்கிரக தேவர்களிடம் ஆசி பெற்றுக் கொள்ளுதல்.

## அக்கினி காரியம் :

சுமங்கலிப் பெண்கள் மூலம் அக்கினி பெற்று ஓமகுண்டத்திலிட்டு, இறைவனை அக்கினியில் எழுந்தருளச் செய்து அவிப்பாகம் இட்டுப் பூசித்தல்.

## மணமகளை அழைத்தல் :

குருக்களின் பணிப்பை ஏற்றுத் தோழி மணமகளை அழைத்து வந்து மணமகனின் வலப்பக்கத்தில் இருத்துவார். குருக்கள் திருநீறு கொடுத்துப் பவித்திரம் கொடுத்து இடது கையிற் தரிப்பித்துச் சங்கற்பம் செய்து, விநாயகர் வழிபாடு செய்து முன்னரே வைக்கப்பட்டிருந்த காப்பு நூலைப் பூசித்தெடுத்துப் பெண்ணின் இடது கையிற் கட்டுவார்.

## பிதிர்தேவர் ஆசீர்வாதம் : (சோபனநாந்தீஸ்ராத்தம்)

ஆசி பெறும் நோக்கில் பிதிர்களைத் தேவர்களுடன் எழுந்தருளச் செய்து வழிபடல். மணமகளின் பெற்றோரை மணமகளுக்கு வலது பக்கத்திலும் மணமகனின் பெற்றோரை மணமகனுக்கு இடது புறத்திலும் கிழக்கு முகமாக இருக்கச் செய்து குருக்கள் விபூதி கொடுப்பார். சங்கற்பம் செய்து, விநாயக வழிபாடு செய்வித்து பஞ்சகௌவியம் கொடுத்து, பிதிர்தேவர் பிரீதிக்காக இரண்டு தானமுங் கொடுக்கச் செய்து பிதிரரின் ஆசியைப் பெறச் செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர பூசை:

மணமகனை உபசரித்தல் வரபூசை எனப்படும். மணமகனைச் சிவபெருமான் எனப் பாவனை செய்து அவரது கால்களை ஒரு தாம்பாளத்தில் வைத்து மணமகளின் தாய் நீர் வார்க்கத் தந்தை கால்களைக் கழுவிச் சந்தனம், புஷ்பம் சாத்தி மங்கலப் பொருள்கள் வழங்கி உபசரித்தல் வேண்டும்.

## கன்னிகாதானம்:

மணமக்களின் பெற்றோர் இரு பகுதியினரும் சங்கற்பம் செய்து பெண்ணின் பெற்றோர் மணமகனின் பெற்றோர்க்கும், மணமகனின் பெற்றோர் பெண்ணின் பெற்றோர்க்கும் திலகமிட்டுப் பன்னீர் தெளித்து மரியாதை செய்வர். கன்னிகா தானப் பொருள்களை வைத்து மணமகளின் பூட்டன், பாட்டன், தந்தை, மணமகள் என்போர் பெயர்களையும் மணமகன் கோத்திரப் பெயர்களையும் அதாவது பூட்டன், பாட்டன், தந்தை, மணமகன் பெயர்களையும் ஒன்றுவிட்டொரு வரிசையாக மாறி மாறி மூன்று முறை சொல்லிப் பெண்ணின் தாயார் தாரை வார்க்க (தொடர்ந்து ஒழுகும் நீர் வார்க்க), தாம்பூலம், எலுமிச்சம் பழம், மஞ்சள், வெள்ளிக்காசு, பொன், மலர்கள் உடனாக பெண்ணின் இருகைகளையும், சபையோர் வாழ்த்த மணமகளின் தந்தை மணமகனின் கையிற் கொடுப்பார். அந்த வேளை மணமகள் பங்கினரும், மங்கல வாழ்வுடையவருமாகிய ஒருவரால் தேங்காய் உடைக்கப்படும். கெட்டிமேளம் கொட்டப்படும். தொடர்ந்து, மணமகன் கொண்டு வந்த மங்கல நாண், கூறை, கண்ணாடி, தாம்பூலம், மலர்மாலை முதலிய மங்கலப் பொருள்களை விதிப்படி பூசித்து, ஆசீர்வதித்து அக்கினியினாற் சுத்திசெய்த பின் அச்சபையிலுள்ள பெரியோர்க்கும் சுமங்கலிகளுக்கும் காட்டி அவர்கள் நல்லாசி பெறப்படும். சபையினர் ஆசி வழங்கிய பின் கூறையை மணமகன் மணமகளுக்குக் கொடுக்கத் தோழியும் மங்கல மங்கையரும் மணமகளை அழைத்துச் சென்று கூறையை உடுத்தி மீண்டும் மணவறைக்கு அழைத்து வருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாலி கட்டுதல்:

மங்கல நாண் பூணல், மாங்கல்ய தாரணம் என்னுந் தொடர்களாலும் குறியீடு செய்யப்படும். கூறையணிந்து வந்த மணமகள் மணமகனின் வலப்புறத்தில் கிழக்கு நோக்கி இருப்பார். குறித்த சுப முகூர்த்த நேரத்தில் மணமகன் எழுந்து மணமகளின் வலப்புறஞ் சென்று வடக்கு நோக்கி நின்று மனம் நிறைய இறைவனைத் தியானித்து, குருக்கள் ஆசீர்வதித்துக் கொடுக்கும் மாங்கல்யத்தை இரு கரங்களாலும் இறை உணர்வோடு பெற்று, கொட்டு மேளம் முழங்க வேதியர் வேத நூற் துணிபுடனாகிய வாழ்த்தி நிற்ப, அறந்தாறிதுவென உணர்ந்த அறவோர், மங்கல வாழ்வமைதியுடனாகிய பெண்கள் மலர்கள் தூவியும் அட்சதை போட்டும் வாழ்த்தி நிற்ப, தருமந் தவறாத தண்ணளியாளர் ஒருவர் இலட்சணம் மிகுதியுமுடைய தேங்காய் ஒன்றை உடைத்து நிற்ப, அறநெறிநில் அந்தணர்கள் ஆசி கூற, சபையிலுள்ளோர், புஷ்பம் அட்சதை தூவி வாழ்த்த, மணமகன் மேற்குத் திசை நோக்கித் திரும்பிப் பெண்ணின் கழுத்திற் கட்டவேண்டும். அந்த வேளை 'யான் சிரஞ்சீவியாக இருப்பதற்குக் கழுத்திற் கட்டுகின்றேன். ஓ! பாக்கியவதியே! நீயும் நூறாண்டு வாழ்வாயாக!' என்று குருக்கள் கூறும் மந்திரப் பொருளை மனத்துள் நினைத்துத் தாலி முடிச்சிலே திருநீறிட்டுத் தனது இடத்தில் இருக்க வேண்டும்.

மணமகள் எழுந்து வடக்கு நோக்கி இறைவனைத் தியானித்து நாயகனுக்கு மாலை சூட்டுவாள். நாயகன் நாயகியைத் தன் இடப்பக்கத்திருக்கச் செய்து மாலை சூட்டுவான். அதன் பின் தான் கொண்டு வந்த மங்கலப் பொருள்களாகிய மஞ்சள், குங்குமம், பூ, வாசனைப் பொருள்கள், சீப்பு, கண்ணாடி முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். தம் மங்கலக் கோலத்தை இருவரும் கண்ணாடியிற் பார்த்து மகிழவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் பழம் கொடுத்தல்:

பால், சர்க்கரை, தேன், முப்பழம் முதலியவற்றைச் சேர்த்து நாயகி நாயகனுக்கு மூன்று முறை கொடுப்பாள். நாயகன் மூன்று முறை நாயகிக்குக் கொடுப்பான். நாயகன் நாயகி உணவு கொள்ளல் மறைவிற்குரியது என்பதை உணர்த்தும் வகை திரை ஒன்று பிடிக்கப்படும்.

## கோதரிசனம்:

இல்லற வாழ்வு தொடங்குந் தம்பதியர், வாழ்விற்கு வேண்டிய அட்ட ஐசுவரியங்களையும் வேண்டிப், பசுவின் யோனிபாகத்தில் இருந்து இலட்சுமிதேவியை வணங்குவர். பசுவைக் கிழக்கு முகமாக நிறுத்திச் சந்தனம், குங்குமம், புஷ்பம் சாத்தித் தீபாராதனை செய்து வழிபடவேண்டும். பசுவினது உடலெங்கும் உறைகின்ற சகல தேவர்கள், முனிவர்கள், தெய்வங்களின் ஆசீர்வாதமும் இதன் மூலங்கிடைக்கும். அரிசி, காய் பிஞ்சு, தட்சிணை வைத்துத் தானம் வழங்க வேண்டும்.

## கைப்பிடித்தல்:

கைப்பிடித்தல் - பாணிக்கிரகணம். தருமம் செய்வதற்காகவும் சந்ததி விருத்திக்காகவும் திருமணஞ் செய்யப்படுகின்றது. இறைவன் திருவருளால் உன்னை நான் திருமணஞ் செய்து கொள்கின்றேன். நீயும் யானும் முதுமையடைந்து விட்டாலும் கூட ஒருவரைவிட்டொருவர் பிரியாதபடி இருப்போம் என்று உன் கையை யான் பிடிக்கின்றேன். என்று கூறி மணமகளின் கையைப் பிடிக்க வேண்டும்.

ஆண்பிள்ளை பிறக்க வேண்டுமெனில், கையைப் பிடிக்கும் போது பெண்ணின் கட்டை விரலை மட்டும் பிடிக்க வேண்டுமென்றும், பெண் பிள்ளை பிறக்க வேண்டுமெனில் கட்டை விரல் நீங்கலாக உள்ள ஏனைய நான்கு விரல்களையும் உள்ளங்கையுடன் சேர்த்துப் பிடிக்க வேண்டும் என்றுஞ் சில இடங்களிற் பேசப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழடி நடத்தல் :

ஏழடி நடத்தல், ஸப்தபதீனம் என்று வடமொழி வழக்கிற் குறிப்பிடப்படும். பெண்ணின் வலது காலை மணமகன் கைகளாற் பிடித்து ஏழடி எடுத்து வைக்கும் படி செய்ய வேண்டும். ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்கப்படும்போது ஒவ்வொரு மந்திரம் சொல்லப்படும். பெண்ணே! நாம் நடத்தவுள்ள இல்லற வாழ்வில் வாழ்நாள் முழுவதும் எமக்கு

i. உணவு கிடைக்க வேண்டும்.
ii. நல்ல பலம் கிடைக்க வேண்டும்.
iii. இறைவழிபாட்டுடன் நல்வினை செய்ய வேண்டும்.
iv. மனச்சாந்தி கிடைக்க வேண்டும்.
v. நல்லறிவு கிடைக்க வேண்டும்.
vi. சகல போகங்களும் கிடைக்க வேண்டும்
vii. யாகத்துக்கு வேண்டிய துணைகள் தவம் கிடைக்க வேண்டும்.

ஓரடி கடவுளுக்காக என்றும், ஓரடி கணவற்காக வென்றும், மூன்றாவதடி சேர்ந்தோர் குலத்தைக் காக்க வென்றும், நான்காவதடி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பெண்களின் குணநலன்களைப் பேணவென்றும், ஐந்தாவது பண்பு நலன் பேணவென்றும், ஆறு, சுவைகள் ஆறும் அன்புக் கணவர்க்குப் பொருந்தும் வரை ஊட்டப்பட உரியனவென்றும், ஏழு, ஏழேழு பிறப்பும் அன்பமர் கணவருட னேயே இன்புற்று வாழவேண்டுமென்றும் இக்காலப்பாடலொன்று ஏழடி வைப்பதற்கான பொருள் விளக்கம் தருகின்றது.

ஏழடி நடந்த நாமிருவரும் சிநேகிதராவோம். இருவருஞ் சேர்ந்து இந்த ஏழு செல்வங்களையும் ஈட்டுவோம். இன்ப துன்பங்களைச் சேர்ந்தே அநுபவிப்போம். என்னுடன் கூடவா எனும் பொருளில் இந்நிகழ்ச்சி அமையும்.

## அம்மி மிதித்தல்:

ஏழடி நடந்த பெண்ணின் எட்டாவது (வலது கால்) அடியை மணமகன் தன் கையாற் பிடித்து அம்மியில் வைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் எத்துயர் வரினும் இக்கல்லுப் போல உறுதியாய் இருப்போம், ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய கற்பு நெறியில், ஒருவராகிய நாம் தவறோம் என்று இருவரும் சங்கற்பித்துக் கொள்ளவேண்டும். இந்த வேளை, மெட்டி எனப்படுங் கால் விரல் அணியொன்றை பெண்ணின் காற் பெருவிரல் அடுத்துள்ள விரலில் மணமகன் சூட்டுவார். இதுவும் ஆண் பெண் கற்பு நெறியுடன் தொடர்புடைய தொன்று.

**'அண்ட மீதுலவும் அருந்ததி என்னும்**
**அருந்திறற் கற்பினாள் உன்னைக்**
**கண்டதால் ஊறு படவொணாதென்னக்**
**கருதிநீ கங்குவிற் கவிகை கொண்டது முறைதான்...'**

என்று புகழேந்திப் புலவர் பாடிய பாடற் பகுதியில் உள்ள கருத்து இங்கு உபயோக முள்ளதாகின்றது. திருமணமான பெண், அவளைப் பார்க்கும் ஆண் இருவர் மனமும் தூய்மையுடனிருக்க மெட்டி அவள் திருமணமானவள் என்று அறிவுறுத்தி நிற்கின்றது என்பர்.

## கணையாழி எடுத்தல்:

மோதிரம் எடுத்தல் என்றுஞ் சொல்லப்படும். ஏழடி நடந்து அம்மி மிதித்து, அக்கினியை வலம் வரும்போது, கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் நாயகன் தன் மோதிரத்தைப் போட இருவரும் சமகாலத்திற் கையாலே தேடி எடுத்தல். மூன்று முறை அக்கினியை வலம் வரும் போதும் மோதிரம் எடுத்தல் நிகழும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து எடுத்தல் வேண்டும். வாழ்க்கையில் ஒருவர் மற்றவருக்காகத் தன்னை இழந்து வாழும் வாழ்க்கையை இது பிரதிபலிக்கின்றது.

## மாலை மாற்றுதல்:

மணமக்கள் இருவரும் தாம் அணிந்துள்ள மாலைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி மாறி அணிதல் மாலை மாற்றுதல் எனப்படும். ஒருவர் அணிந்த மாலையைக் கழற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவருக்கு அணிதல் கூடாது இருவரும் இனி ஒருவரே, உடல் இரண்டானாலும் உள்ளம் ஒன்றே என்று கருத வழி செய்வதாகவே இந்த மாலை மாற்று நிகழுகின்றது. இந்த நிகழ்வு நடைபெற முன் ஒவ்வொருவர் பக்கலிலும் குறைந்தது மூன்று மூன்று மாலைகள் இருக்க வேண்டுமென்று தெரிகிறது.

## விசேட ஹோமம் :

விசேட திரவிய ஹோமம், நவக்கிரக ஹோமம், பிராயச்சித்த ஹோமம் முதலியன இந்த வகையிலடங்கும். மணவறைமுன் மணமக்களைக் கிழக்கு நோக்கி நிற்க வைத்து, தோழன் நென்மலரைப் பெற்று மணமகனின் கையிற் கொடுக்க, மணமகன் தாம் பெற்ற நென்மலரை மணமகளின் கையிற் கொடுக்க, மணமகள் இரண்டு கைகளாலும் வாங்கிக் கொள்ள, மணமகன் மணமகளின் கைகளைத் தன் இரு கைகளாலும் தாங்கி, குருக்கள் அக்கினியில் சிருக்ஸ்ருவம் மூலம் நெய் சொரியும்போது அக்கினியில் இடுவர். ‘அக்கினி பகவானே, சகல செல்வங்களையும் எமக்குத் தந்தருள வேண்டும்’ என வேண்டுதல் செய்து நென்மலரைச் சொரிய வேண்டும்.

## அருந்ததி காட்டல் :

அக்கினியை மூன்றாவது முறை வலம் வரும் போது மணமக்களை அழைத்துச் சென்று, வாசலில் வைக்கப்பட்டிருக்கும் நிறைகுடத்திற்கு முன்பாக வடக்கு முகமாக நிற்கச் செய்து, அருந்ததியினதும் துருவனினதும் சரித்திரங்களைக் கூறி, அருந்ததி துருவ நட்சத்திரங்களைக் காட்டி, அவர்களைப் போல உலகு போற்றி வணங்கத்தக்க கற்பொழுக்கங் காக்போமெனவும், சலனமடைதல் இன்றிக் கொள்கை வலு உடையோராய் வாழ்வோமெனவும் அதற்கு வேண்டிய மன உறுதியைத் தந்தருள வேண்டுமெனவும் வேண்டுவதுடன் அவர்கள் ஆசியையும் வேண்டி வணங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா பூர்ணாகுதி :

மகா பூர்ணாகுதிக்குரிய பொருள்களைத் தட்டத்துடன் குருவிடமிருந்து பெற்று, குருக்கள் நெய் சொரியும் போது இருவருஞ் சேர்ந்து குண்டத்திற் சொரிதல் வேண்டும்.

## ஆசீர்வாதம் :

மணமக்களைக் கிழக்கு முகமாக வைத்துக், குருக்கள் இறைவனைப் பிரார்த்தித்து, மங்கல தோத்திரங்கள் சொல்லி மணமக்களுக்கு அட்சதையிட்டு ஆசீர்வதிப்பார். தொடர்ந்து பெற்றோரும் அட்சதையிட்டு ஆசீர்வதிப்பர்.

## சபையினர் ஆசீர்வாதம் :

இதனை அறுகரிசி எடுத்தல் என்பர். அறுகும் மஞ்சள் கலந்த அரிசியும் இட்டு வாழ்த்தப்படுவது காரணமாக அறுகரிசி எடுத்தல் என்று வழங்குவதாயிற்று. அறுகுடன் கூடிய அரிசியைப் பெரியோர் இரண்டு கரங்களாலும் எடுத்து, 'ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி, மூங்கில் போற் சுற்றம் முழுமையாய்ச் சூழப் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என வாழ்த்தி' உச்சியில் மூன்று முறை இட வேண்டும். மணமகனுக்கு மூன்று முறையும் மணமகளுக்கு மூன்று முறையும் தனித்தனி இடவேண்டும். வாழ்த்துதல் நிகழ்வுடனாக உறவினர்களும் நண்பர்களும் மணமக்களுக்கு அன்பளிப்புக்களும் வழங்கி மகிழ்வர்.

## நிறைவு :

மணமக்களது கைகளிற் கட்டப்பட்ட காப்புக்களை அவிழ்த்து, பவித்திரங்களைக் கழற்றி வெற்றிலையில் வைத்துக் குருக்களுக்குத் தட்சிணையும் சேர்த்து வைத்துக் கொடுத்து மணமக்கள் ஆசிபெறுவர்.

மணமக்களுக்கு ஆரத்தி எடுத்துத் திருஷ்டி கழித்துத் தோழன் மணமகன் மணமகள் தோழி என்ற வரிசையில் மங்கல மேளம் முழங்க எல்லோரும் வாழ்த்த வீட்டினுள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது காலை எடுத்து வைத்து மணமக்கள் செல்வர். அவர்களுக்கு முன்னே பூரண கும்பம், மங்கல தீபம் என்பவற்றை மங்கல மங்கையர் கொண்டு செல்ல வேண்டும். வழிபாட்டிற்குரிய அறையில் அவற்றை வைத்தபின் மணமக்கள் பெற்றோரின் ஆசியைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

## பூதாக்கலம் :

மணமகன் மணமகள் இருவருக்கும் ஒரே இலையில், மணமகள் உணவு படைத்து, முதலில் மணமகள் மணமகனுக்கு உணவூட்ட வேண்டும். பின்பு மணமகன் மணமகளுக்கு உணவூட்ட வேண்டும்.

## விருந்துபசாரம் :

மணமக்கள் முகூர்த்த உணவு (பூதாக்கலம்) உண்டபின் திருமணவிழாவிற்கு வருகை தந்தவர்களுக்கு விருந்துபசாரம் நடைபெறும். விருந்தினர்களை வழியனுப்பும் போது மங்கலப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கலும் உண்டு.

**முக்கிய கவனத்திற்குரியவை (தவறு களைதல்)**

1. குறிப்பிட்ட முகூர்த்த நேரத்தில் அவ்வக் கருமங்களைச் செய்தல்
2. மாங்கல்யதாரணம், குறிப்பிட்ட முகூர்த்த நேரத்தின் முன்னரைப் பகுதியில் நடைபெறக்கூடியதாக முயற்சிகள் தொடர வேண்டும்.
3. கிரியைகளுக்கு முக்கியத்துவங் கொடுத்து, அவற்றை விளங்கிக் கொண்டு ஒவ்வொரு கருமத்திலும் அக்கறையுடன் செயற்படல் வேண்டும்.
4. மணமக்கள் கிரியைகளைப் பற்றிய விளக்கத்தை முன்கூட்டியே அறிந்து கொள்ள உதவ வேண்டும்.
5. திருமண மண்டபத்திற்கு வருகை தந்திருப்போர் வீண் கதைகளைத் தவிர்த்து, அங்கு நடைபெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளை அக்கறையுடன் அவதானித்து, மணமக்களின் நல்வாழ்வை வேண்டி வாழ்த்திக் கொண்டிருக்க வேண்டும்.

6. திருமணக் கிரியைகளுக்குப் பயன்படுத்தப்படும் எல்லா பொருள்களும் (உபகரணங்கள் நீங்கலாக) புதியனவா கவும் தூயனவாகவும், முன் பயன்னடுத்தப் படாதனவா கவும் இருத்தல் வேண்டும்.

7. புகைப்படம் பிடிப்போர், வீடியோப் படப்பிடிப்பாளர் எந்த வகையிலுங் கிரியைகளுக்குத் தடையின்றியும், யாருக்கும் இடைஞ்சலின்றியும் தங்கருமத்தைச் செய்தல் வேண்டும். இயல்பான செயற்பாடுகளைப் படமாக்குதலே உத்தமம்.

8. திருமணம் முடிந்தவுடன் திருமணப்பதிவு வைத்தலே பொருத்தமானது. வேண்டாத செலவுகளையும், வீண் சிரமத்தையும் தவிர்க்க இது வாய்ப்பளிக்கும். மாலை மாற்றுதல், மோதிரம் மாற்றுதல், பால் அருந்தல், ஆரத்தி எடுத்தல், விருந்துண்ணல் முதலிய நிகழ்ச்சிகள் மாங்கல்ய தாரணத்தின் போது நிகழ்ந்தமையால் இங்கே இடம் பெறவேண்டியதில்லை. மீண்டும் மீண்டும் இவை நிகழ நேர்ந்தால், அர்த்தமற்றவை என்று உணர்விற் பட்டுவிடும். நம்பகத்தன்மை இழப்பிற்கு வாய்ப்பளிப்பதாகவும் முடியும்.

9. சீதனம் வாங்கிக்கொண்டு திருமணஞ் செய்வது சிறுமையானது. முந்தையோர் தேடி வைத்த பொரு ளையோ, சீதனப் பொருளையோ தம் வாழ்விற்காகப் பயன்படுத்துவது தன்மானத்திற்குரியதாகாது தாம் தாமே உழைத்து வாழவேண்டும். பிறர் உழைப்பிலும் வாழக் கூடாது. நாயகனும் நாயகியும் ஒருமைப்பாடுடைய மனத்தவர்களாகித் தாந்தாமே உழைத்து மனம் மகிழ்ந்து வாழும் வாழ்வு முனைப்புப் பெறவேண்டும். அதுவே தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கும் சீரிய வாழ்வாகும். இது அனைவரும் சிந்திக்க வேண்டியதொன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறவேண்டிய பதினாறு பேறுகள்

உருவளர் வயது பூமி உயர்தவம் கருணை யூக்கம்
அருநிதி ஒழுக்கம் சீலம் பேரபி மானங் கல்வி
பொருவலி விஜயம் வீரம் புண்ணிய மாதின் போகம்
திருநிறை புகழீ ரெட்டும் பெற்றுநீர் வாழி வாழி

அபிராமியம்மை பதிகம் என அபிராமிப்பட்டர் அருளிய ஒரு சிறு நூலுள்ளதொரு பாடலிலும் பதினாறு பேறுகள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மணமக்களை வாழ்த்தும் வேளை சொல்லப்படும் பதினாறும் அவைதாமெனச் சொல்லுவாரும் உளர்.

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பரதத்தில் அன்புமுத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாழி! அபிராமி யே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளைகாப்பு :

இது கர்ப்பமுறும் பெண்ணுக்கு ஏழாம் மாதம், வளர் பிறையில் நாள் பார்த்துச் செய்வது.

வளைகாப்பு அன்று காலை வளைகாப்புப் பெண்ணுக்கும், ஒரு கன்னிப் பெண்ணுக்கும் மங்கள ஸ்நானம் செய்து வைக்க வேண்டும். பிறகு இருவருக்கும் உணவு வழங்குதல் வேண்டும்.

உணவு வழங்கி முடிந்ததும், வளைகாப்புப் பெண்ணுக்கு, அவளுடைய கூறைப் புடவையை கொசுவம் வைத்துக் கட்டி அலங்காரம் செய்து, கன்னிப் பெண்ணையும் அலங்கரித்து, இருவரையும் படிக்கோலம் போட்ட இடத்தில் பாய் அல்லது மணைப் பலகை போட்டு கிழக்கு முகமாக உட்கார வைக்க வேண்டும்.

வளைக்காப்பு பெண்ணுக்கு அடுக்க வேண்டிய வளையல் கள், கன்னிப் பெண்ணுக்கு அடுக்க வேண்டிய வளையல்கள், ஸ்வாமி வளையல்கள் மற்றும் பெண்கள் யாவருக்கும் கொடுக்க, வாங்கியிருக்கும் வளையல்கள் அனைத்தையும் படியின் எதிரில் வைக்கவும். ஒரு ஜதை பணியாரம், தேங்காய், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், சந்தனம், பழம், புஷ்பம் மற்றும் கற்கண்டு, சர்க்கரை, யாவற்றையும் படியில் வைக்கவும். வேப்பிலைக் காப்பு செய்து வைத்துக் கொள்ளவும்.

வெள்ளியில் சூல் காப்பும், மற்றும் தங்க வளையல் செய்திருந்தால், அதையும் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்து வளைகாப்புப் பெண்ணை பிள்ளையாருக்கும், வளையல்களுக்கும் அட்சதை போட்டு, தேங்காய் (உடைத்து வைத்து), பழம் நைவேத்தியம் செய்யச் சொல்லி, பிறகு கற்பூரம் காட்டி நமஸ்காரம் செய்யச் சொல்ல வேண்டும்.

முதலில் ஸ்வாமி வளையல்களை பூஜையில் எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துவிட்டு, கன்னிப் பெண்ணுக்கு முதலில் வளையல் அடுக்க வேண்டும். பிறகு வளைகாப்புப் பெண்ணுக்கு முதலில் வலது கையில் வேப்பிலை காப்பு, சூல் காப்பு போட்டு, பிறகு கண்ணாடி வலையல்களை இரு கைகளிலும் அடுக்கவும். வலது கையில் ஒற்றைப்படையில் ஒரு வளையல் அதிகமாயிருக்க வேண்டும். வைபவத்திற்கு வந்திருக்கும் பெண்கள் யாவரும் ரவிக்கைத் துண்டோ, அல்லது பணமோ வைத்து தாம்பூலத்துடன், வளைகாப்புப் பெண்ணுக்கும் கன்னிப் பெண்ணுக்கும் சக்திப்படி புதுத்துணி வாங்கிக் கொடுக்கவும். பிறகு ஆலாத்தி எடுக்கவும்.

முன் காலத்தில் இதற்காக சீர் வைப்பது வழக்கம். அதாவது அரிசி, பருப்பு, காய்கள், அப்பளம், சில தித்திப்பு பட்சணங்கள், அதிரஸ்த்துடன் சிறிய அளவில் செய்வர். இது அவரவர் சௌகர்யம். வளைகாப்பு முற்றிலும் இலௌகிக காரியம். கடைசியில் பெண்ணுக்கு 'அச்சுதம்' தெளித்து, மனையில் உட்கார வைத்து யாவரும் அவளுக்கு மலர் சூட்டி, பாட்டு பாடி கொண்டாடவேண்டும். பின்னர் வந்திருக்கும் பெண்கள், கன்னிப் பெண்கள் யாவருக்கும் தாம்பூலத்துடன் வளையல்கள் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமனை மங்கலச் சடங்கு முறை

## அத்திவாரமிடல்

நாம் வீடுகட்டத் தேர்ந்தெடுக்கும் நிலத்திற்குள் முதன் முதலில் செய்யும் பூசையானது அத்திவாரமிடல், அதற்கு நாம் முறையாகப் புரோகிதரை (பிராமணக் குருவை) அணுகி அவருடைய அறிவுரை ஆசியுடன் புண்ணியஷேத்திரங்களாய் விளங்கும் ஆலயங்களின் வீதி மண், மலைமண், ஆற்றுமண், புற்றுமண், ஆனைக்கோட்டுமண்(ஆனை பாதம் பட்ட மண்) எருதுக் கோட்டு மண்(எருது பாதம் பட்ட மண்) குளத்து மண் போன்றவற்றை ஒரே அளவில் எடுத்துக் குழைத்து பெட்டி செய்து, அடிப்பேழையில் பள்ளஞ் செய்து அவற்றில் நவரத்தினக் கற்களைப் போட்டு தங்கத் தகட்டில் ''வாஸ்து யந்திரம்' போட்டு ஈசான மூலையில் (வடகிழக்கு மூலையில்) வைத்துப் பூசை செய்ய வேண்டும். வீட்டில் பெரியார் கையால் அதைக் குழியில் இட்டு அத்திவாரமிடல் வேண்டும்.

இதற்குரிய விளக்கம் யாதெனில் காலங்காலமாக எம் சந்ததியினரை வாழவைக்கும் 'கிரகலட்சுமி' எனப்படும் வீட்டையும் எம்மையும் தாங்கி நிற்கும் பூமா தேவியே எம்மால் இயன்ற நவரத்தின, பொன், பொருள் தானங்கள் உமக்கு அர்ப்பணிக்கின்றோம். அதைக் காலைவேளையிற் சூரியபகவான் சாட்சியோடு மக்களுக்காகவே அவை தம்மை அர்ப்பணித்து அவர்களுக்காகவே என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும் சிவாச்சார்யார்களின் துணையோடு முறையாக உமக்கு அர்ப்பணிக்கிறோம். எமது வீட்டு நிலத்தில் நீர்வளம், நிலவளம், பயிர்வளம் நிறைந்து நிற்க அருளவேண்டும் எனப் பிரார்த்திக்கும் பூசை ஆகும்.

அதேபோன்று வீட்டு வேலைகள் நடைபெறும் காலம் வீட்டுக்கு முதல் நிலை, வளை என்பன வைக்கும் போது அதற்குரியவர்களுக்கு தச்சு வேலையாளிக்கு வஸ்திரம், தட்சணை, தாம்பூலம் கொடுத்து உபசரித்து அவர் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ எமை வாழ்த்திட வழிசெய்யும் உபசாரமாக இது அமையும்.

வீட்டிலே வழிபாட்டறை அமைக்கும் போது கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக அமைப்பது உத்தம மாகும். பொதுவாகவே வழிபாட்டறை தனிமை யானதாகவும், பரிசுத்த இடமானதாகவும் அமைவது வீட்டிற்குச் செல்வ போகங்களைக் கொடுக்கும். தீட்டுகள் (ஆசௌசம்) வரும் காலங்களில் வழிபாட்டறையை யாரும் அணுகாது மூடிவிடுதல் உத்தமம்.

## புதுமனை புகுதல்:

'மனையைப் போல் மக்களும் உதவார்' என்பது பழமொழி. இதிலிருந்து ஒருவருடைய வாழ்வுக்கு மனை எவ்வளவு இன்றியமையாததென்பதை உணரமுடியும்.

வீடு கட்டுவதற்கு நிலத்தைத் தேர்ந்தெடுக்கும் போது அது மேட்டு நிலமாகவும் முன்னர் தீயதன்மைகள் எதற்கும் பயன்படுத்தப் படாததாகவும் நல்ல நிலமாகவும் இருக்கவேண்டும்.

வீட்டுக்கு அத்திவாரம் இடும்போது பொருத்தமான சுபநாளில் (எழுந்திருப்பு நாளில்) இடவேண்டும். சிவாசாரியார் மூலம் விநாயகர் பூசை செய்வித்து குரு ஆசிபெற்று வீடு கட்டுபவருக்கு வஸ்திரம், தட்சணை கொடுத்து உபசாரம் செய்தபின் தாயறையின் நிருதி மூலையில் (தென்மேற்கு) தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொளுத்தி வழிபாடு செய்து கிடங்கு வெட்ட வேண்டும்.

யானை அடி மண், நண்டுவளை மண், காளைக் கொம்பு மண், குளத்து மண், புற்று மண், நவரத்தினம் முதலான வற்றைச் சங்கில் வைத்துப் பால் அபிஷேகம் செய்து கிடக்கில் வைத்து நாளுக்குக் கல்லும் வைத்து நவதானியம் இட்டுச் சாந்தினால் மூடிவிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லநாளில் நிலை வைத்தல், வளை வைத்தல், வீடு வேய்தல் முதலான கருமங்களைச் செய்தல் வேண்டும். வீடு கட்டி முடிந்ததும் வீட்டு மனையாளின் நட்சத்திரத்துக்குப் பொருத்தமான சுபநாளில் குடிபுக வேண்டும். வீட்டினுள்ளும் வாசலிலும் முதல் நாளில் பசுவைக் கட்டித் தூபமிட்டுத் தூய்மைப்படுத்த வேண்டும். சிவாசாரியார் மூலம் ஓமம் வளர்த்துச் சாந்தி செய்தல் விசேடமானது.

குடிபுகலுக்குத் தேவையான நிறைகுடம், குத்துவிளக்கு, பிள்ளையார், இலக்குமி, முருகன், படங்கள், முகம் பார்க்கும் கண்ணாடி, பூமாலையுடன் கூடிய அர்ச்சனைத் தட்டம், படங்களுக்குத் தேவையான பட்டுக்கள், நிறைநாழி என்பவற்றை முதல் நாளே கோயில் பூசையில் வைக்க வேண்டும். குடிபுகும் சுபவேளையில் கோயில் வழிபாட்டை முடித்து மேற்படி பொருட்களைச் சுமங்கலிகள் மூலம் வசதியானால் மங்கள வாத்தியத்துடன் வீட்டுக்குக் கொண்டு வருதல் வேண்டும். முதலில் விளக்கு, நிறைகுடம், நிறைநாழி என்பவற்றைத் தொடர்ந்து படங்கள் முதலானவற்றைக் கொண்டு வருதல் வேண்டும். வாசலில் நிற்கும் பசுவைத் தரிசித்து பின் வலதுகாலை முன் வைத்து இவற்றைச் சுவாமி அறைக்குக் கொண்டுசென்று வைத்துத் தூபதீப ஆராதனை செய்து வழிபடவேண்டும். சமையற் கூடத்தில் புதிய பாத்திரத்தில் பால் காய்ச்சிப் பொங்கலும் செய்து சுவாமியறையில் படைத்து வணங்கி எல்லோர்க்கும் விருந்து கொடுத்து மகிழ வேண்டும்.

வாடகை வீட்டில் குடிபுகப் போவோரும் வாஸ்து சாந்தி செய்து குடிபுகல் விரும்பத்தக்கது.

## வாஸ்து சாந்தி:

வீடு குடிபுகும் போது செய்யும் சாந்திகளில் இதுவும் ஒன்று. அசுத்தமான பூமியை அக்னியால் தகித்து சுத்தமாக்க செய்யும் சாந்தியே வாஸ்து சாந்தியாகும். இச்சாந்தியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது விநாயகர் பூசை, புண்ணியாகவாசனஞ் செய்து வாஸ்து புருஷனையும், பிறதேவதைகளையும் பூசித்து அக்னி காரியமும் செய்வர்.

இதன்போது நீற்றுப் பூசணிக்காய் ஒன்றைப் பலியிடுவர். அதன் பின்னர் வைக்கோல், தர்ப்பை முதலியவற்றால் மனித உருவாகச் செய்யப்பட்ட வாஸ்து புருஷனைப் பூசித்து அக்கினியில் எரியூட்டி வீடு, வீதி முதலிய இடங்களில் இழுத்து வருவர். பின் அதற்குக் கும்பநீரைத் தெளித்துத் தகிப்பர். இச்சாந்தியின் பின் கைகால்களைச் சுத்தம் செய்தே ஏனைய கிரியைகளைச் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு விழாக்கள்

## மங்கலச் சடங்கு முறை

தனிமனித வாழ்விலும் சரி, நிறுவனங்களின் வரலாற்றிலுஞ் சரி குறிப்பிட்ட சில ஆண்டுகள் சிறப்புடையவை. அதுவரை செய்த பெருமைக்குரிய சாதனைகளைப் பாராட்டியும், எதிர்காலத்தில் செய்யப் போகும் கருமங்களை வாழ்த்தியும் விழாக்கள் கொண்டாடப்படும். அவையாவன வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா, சஷ்டியப்தபூர்த்திவிழா, பவளவிழா, முத்துவிழா, நூற்றாண்டுவிழா, மற்றும் சதாபிஷேகம் என்பனவாகும்.

25 ஆண்டு நிறைவில் வெள்ளி விழாவும்

50 ஆண்டு நிறைவில் பொன் விழாவும்

60 ஆண்டு நிறைவில் மணிவிழாவும் (இது வைரவிழா என்றும் சொல்லப்படும். திருமணமாகி 60 ஆண்டு நிறைவில் சஷ்டியப்த பூர்த்தி விழாவும் கொண்டாடப்படுவது வழக்கம்)

75 ஆண்டு நிறைவில் பவள விழாவும்

80 ஆண்டு நிறைவில் முத்துவிழாவும், சதாபிஷேகமும்

100 ஆண்டு நிறைவில் நூற்றாண்டு விழாவும் கொண்டாடுவது வழக்கம்.

## வெள்ளி விழா

இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவிற் கொண்டாடப்படுவது வெள்ளிவிழா ஆகும். இல்லற வாழ்வின் சுகத்தை இருபத்தைந்து ஆண்டுகள் உற்றார், உறவினர், நண்பர் களுடன் எவ்வித இடருமின்றிப் பகிர்ந்து கொண்டு தம்பதியர் தம் குடும்ப நலன் பரிமளிக்க உதவிய உறவினரை, நண்பர் களை, அயலவர்களை, விருப்பிற்குரியவர்களை, மதிப்பிற்கு ரியவர்களை இருபத்தாறாவது ஆண்டின் தொடக்க நாளில் அழைத்துச் சில வழிபாட்டுடன் விருந்தளித்துக் குதூகலித்து வாழ்த்துப் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழா

ஐம்பது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படுவது பொன்விழா எனப்படும். ஒரு மனிதன் பிறந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவாகும் போது கொண்டாடப்படுவது மனித வாழ்வியல் மங்கலம் ஆகும். அப்போதும் அவன் மனிதனாக வாழ்ந்திருந்தால் தான் அந்த மங்கல கருமத்திற்கு உரித்துடையவன் ஆவான் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

திருமணம் செய்துகொண்ட ஆண், பெண் எனும் இருவர் குழந்தைப் பேறுடையவர்களாக, அண்டை அயலவர் உற்றார் உறவினர் போற்றும் பணிக்கொடைக்கு உரித்துடையவர்களாக வாழ்ந்திருப்பின் சமூகம் அவர்களுக்குப் பொன்விழா கொண்டாட வேண்டும். எதிர்காலச் சமுதாயக் குழந்தைகள் இந்தப் பாராட்டுக்கான வாழ்த்துக்களைப் பார்த்துத் தாம் தம்மைச் செவ்விய நெறியிற் செலுத்த இவை வழி செய்யும். குறிப்பிட்ட தம்பதியர்களும் தம் உயர்விற்காக உதவிய அனைவரையும் பாராட்டிப் பொன் விழா நடாத்தி எல்லோரது வாழ்த்துதலையும் பெறலாம்.

## வைரவிழா (மணிவிழா)

அறுபது ஆண்டு நிறைவில் நடைபெறும் விழா வைரவிழா ஆகும். இதனை மணிவிழா என்றும் கூறுவர். முன்னர் குறிப்பிட்ட வெள்ளி விழா, பொன்விழா போலல்லாது மணியான விழா என்ற வகையில் அது மணிவிழா என்றாகி இருக்கலாம். சிறந்தவற்றைக் குறிப்பிடும் போது மணியான பேச்சு, மணியான கருத்து, மணியான விளக்கம் என்ற உயர்வைச் சுட்ட 'மணி' என்னுஞ் சொல் பயன்படுத்தப்படுவதைக் காணுகின்றோம். எனவே, விழாக்களுள் உயர்வான விழா எனச் சுட்டும் போக்கில் 'மணிவிழா' என்றனர் எனலாம்.

பிறந்த நாள் முதலாகக் கணக்கிட்டு அறுபதாவது நிறைவில் மணிவிழா கொண்டாடப்படுகின்றது. அரச நிர்வாக உத்தி யோகத்தர் அறுபது வயதில் ஓய்விற்கு உரியதாம். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில், அதாவது தொடர்ந்து இருக்கும் ஏனைய உத்தியோகத்தர்களால் அளிக்கப்படும் பிரிவுபசார விழா அறுபது ஆண்டு நிறைவு விழாவாகிவிடுகின்றது. இது அறுபது நிறைவில் எடுக்கப்படும் விழாதான். ஆகவே மணிவிழா என்ற திட்டத்துள் அடக்கப்படக் கூடியதுதான். அறுபது நிறைவு என்ற கருத்தே மணிவிழாவாகச் சிந்திக்க வைக்கின்றது.

பொன்விழாக் கொண்டாடிய மக்கள் பவள விழாவிற்கு இடையே மணிவிழா என்னும் வைரவிழாவை கொண்டாட வேண்டி ஏற்பட்டமைக்கு உத்தியோக ஓய்வு நிலைதான் காரணம் என்று சிந்திக்க மனம் உந்துகின்றது. ஆறி அமர்ந்து மனிதன் தன்னைப் பற்றிச் சிந்திக்க வாய்ப்பாக அமையும் காலம் இந்த மணிவிழாவுடன் தான் ஆரம்பமாகின்றது. மாடுண்டு கண்டுண்டு மக்களுண்டு என்று மகிழ்ந்தவற்றை எல்லாம் விடுத்து யாருடைய கட்டுப்பாட்டிற்கும் இடமின்றிச் சுயமான கட்டுப்பாட்டுடனான ஆன்ம ஈடேற்றத்திற்கான செயற்பாடுகளுடனோடு வாழ வேண்டிய காலத்தின் ஆரம்பம் இந்த மணிவிழா ஆண்டின் தொடக்க நாள் என்று துணியலாம். எனவே, மணியான ஆண்டு என்ற சிந்தனையை இங்கும் பொருத்திப் பார்த்து வியக்க முடிகிறது.

## சஷ்டியப்த பூர்ததி விழா

அறுபது ஆண்டு நிறைவிற் கொண்டாடப்படும் மற்றொரு வகை விழா சஷ்டியப்த பூர்த்தி விழாவாகும். அதாவது, திருமணமாகி அறுபது ஆண்டு நிறைவிற் கொண்டாடப்படு வதாகும். இவ்விழாவைக் கொண்டாடும் போது ஆண்மகனின் வயது எண்பதை அண்மியதாக இருக்கலாம். எனவே, பலர் இந்த விழாவைக் கொண்டாடக் கூடிய தகுதி பெறுவோராக இருக்க வாய்ப்பில்லை என்பதை உணரலாம்.

இந்தச் சஷ்டியப்த பூர்த்தி விழாவுடன் தொடர்புடைய மூத்த தம்பதியர் இரண்டாவது முறையாகவும் முழுமையான திருமணக் கிரியைகளுக்கு உள்ளாக வேண்டிய நிலைமை உண்டு. மணமகன், மணமகள் இருவரும் அறுகுடனாகிய பால் வைத்து நீராட்டப்படுவர். மணமகன் பட்டுடை அணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார். மணமகள் கூறை அணிவிக்கப்படுவார். பின்னர் இருவரும் மணவறையில் இருத்தப்படுவர். அவர்களுக்கு வேண்டியவர்கள் தோழன் தோழியராக நின்று உதவுவர். திருமணக் கிரியையை நடைமுறைப்படுத்தும் குரு நிறைந்த வயதுடையவராகவும், கிரியா விளக்கப் பூரணத்துவம் பொலியும் முகத்தினராகவும், எல்லோரையும் கவரும் சாந்த குணத்தவராகவும் கிரியைகளை நடைமுறைப்படுத்துதலில் நிறைந்த கவனம் உள்ளவராகவும் இருப்பதை விழா நடத்தும் நாம் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

**"நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்"**

தொடர்ந்து திருமணக் கிரியைகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறும். மணமகனாற் புதிதாகச் செய்விக்கப்பெற்ற தாலி சபையினரின் வாழ்த்துதலுடன் உரிய போது அணிவிக்கப்படும். பின்னர் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளை கள் கூடி வாழ்த்துதல் அன்பளிப்பு வழங்கல் என்பனவும் நடைபெறும். தொடர்ந்து அனைவரும் ஒன்றாக அமர்ந்து விருந்துண்டு மகிழ்வர்.

முதலிலே திருமணம் நடந்தவேளை கட்டப்பட்ட தாலி மணமகள் கழுத்தில் மஞ்சள் கயிற்றில் தொங்கிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

எண்பது வயதாகும் வேளை அதே கணவன் மனைவியர் மீண்டும் திருமணத்தைச் சந்திப்பது என்பது வாழ்வினில் இடம்பெறும் இனிமையான, உண்மையானதொரு மங்கள கருமந்தான் என உறுதியாகக் கூறலாம்.

## பவளவிழா:

வெள்ளிவிழா இருபத்தைந்தாவது வயது நிறைவில் கொண்டாடப்படுவது. பொன்விழா ஐம்பதாவது வயதின் நிறைவிற் கொண்டாடப்படுவது. அடுத்து வரும் இருபத்தைந் தாவது நிறைவில் அதாவது எழுபத்தைந்தாவது வயது நிறைவிற் கொண்டாடப்படுவது பவள விழா. அரசினரின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரிந்தோ அல்லது சொந்தமாக தொழில் புரிந்தோ ஆறுதல் பெற்றுள்ள காலம். இந்த காலந்தான் பெரும் பயனுள்ள காலம் எனலாம். தமக்குத் தெரிந்தவற்றை தம் அறிவில் அனுபவத்திற் பட்ட கருத்துக்களை மற்றையோருக்கு வழங்கக் கூடிய காலம். அறிவு முதிர்ச்சி, அனுபவ முதிர்ச்சி என்பவற்று டனாகி வரும் நல்ல கருத்துக்களை இளைய சமுதாயத்திற்கு கொடுக்கக் கூடிய காலம். சமூகத்திற்குப் பெரும் பயன்பாடுடை யவராக வாழக்கூடியதொரு காலம். இந்நிலையிலேதான் பவளவிழா எடுக்கப்படுகிறது.

இந்த நிலையிற் பவளவிழா எடுக்கப்படுவதற்கு முன் சம்பந்தப்பட்டவர் எவ்வளவிற்குச் சமூகத்திற்குப் பயன்பட்டார் என்பது சிந்திக்கப்பட வேண்டும். மக்களின் வளர்ச்சிக்கு என்ன செய்தார் என்று சிந்திக்க வேண்டும். நாட்டின் உயர்விற்காக என்ன செய்தார் என்று கருத வேண்டும். அந்த வகை பயன்பாடுடையவராகி வாழ்ந்த ஒருவருக்கு எடுக்கப்படும் விழா எதிர்காலச் சிற்பிகளை மனங் குளிரவைக்கும், அவர்களை உற்சாகப்படுத்தும். நாட்டின் உயர்விற்கு இத்தகு விழாக்கள் பேருதவி அளிப்பனவாகும்.

## நூற்றாண்டு விழா:

நூறாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படுவது நூற்றாண்டு விழா எனப்படும். குறிப்பிட்ட நிறுவனமோ சங்கமோ ஆரம்பித்து நூறு ஆண்டுகள் நிறைவின் போது, அந்நிறுவனம், சங்கம் தொடக்க காலத்தில் இருந்து இதுவரை காலமும் வளர்ச்சி பெற்று நிலைத்து நிற்றலை எண்ணியும் அதனை பலர் அறிந்து கொள்ளும் வண்ணமாகவும் மகிழ்ச்சியோடு கொண்டாடப்படும் விழா. இது அந்நிறுவனத்தின், சங்கத்தின் வரலாற்றில் மிக முக்கியமானதும் சிறப்புக் கொண்டமைந்த நிகழ்வுமாகும்.

## சதாபிஷேகம்:

பிறந்து நூறு ஆண்டுகள் வாழ்ந்த ஒருவருக்கு நடைபெறுவது இந்த விழா. சமூகத்திற்கு பயன்பாடுடையவராகி நூறு ஆண்டுகள் வாழ்ந்த ஒருவரை நாம் ஒவ்வொருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைய வேண்டும். அவரை வாழ்த்த வேண்டும். அவ்வகை பலரது ஒன்றுபட்ட நினைவின் பிரதிபலிப்புத்தான் சதாபிஷேகம் என்று கொள்ளலாம்.

நூற்றாண்டினராய ஒருவர் அனுபவ முதிர்ச்சியில் முழுமை பெற்றவராகி இருக்கலாம் என்று நினைய வாய்ப்பிருக்கிறது. அவர் அனுபவங்களை நாமும் அனுபவிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கும். அந்த நன்றியை நினைக்க வேண்டும். பெரியாரை வாழ்த்த வேண்டும். பல்லாண்டு எம்முடனாகி வாழ்ந்து எம்மை வழிப்படுத்துபவராகி ஒளிரவேண்டும் என்று நினைய வேண்டும்.

சதாபிஷேக நாயகரைப் பால் அறுகு வைத்து முழுகச் செய்து புனித ஆடை அணிந்து கொள்ள வைத்து, விபூதிதாரணராக்கி ஒரு கும்பத்தின் முன் இருக்கச் செய்து ஒரு குருவின் கிரியைகளுடனாக்க வேண்டும். விழா நாயகரையே இறைவனாகக் காணும் குரு இறைவனுக்குச் செய்வது போன்று அபிஷேக ஆராதனைகள் எல்லாம் செய்வார். உடன் நிற்பவர்கள் திருமுறைப்பாடல்களை ஓதி வாழ்த்துவர். நூற்றாண்டைச் சந்தித்தவர் தெய்வ நிலையைக் கிட்டியவர் என்ற சிந்தனைக்குரியராதலை இந்தக் கிரியைகள் கொண்டு நினைய முடிகின்றது.

நூற்றாண்டு நிறைவுடனாகி வாழுபவர்கள் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையினரே! அதனால் அதற்கு முன்பாகவே அந்த விழாவைக் கொண்டாடும் முறைமையும் உண்டு. ஆயிரம் பிறை கண்டவர் நூற்றாண்டு வாழ்வை அனுபவித்தவர் எனக் கண்டு எண்பது வயதின் பின்னே சதாபிஷேகத்தை அனுபவிக்கலாம் என இப்போ முடிவு செய்கின்றனர். அதனால் எண்பது எண்பத்தைந்து வயதுகளில் இப்போ சதாபிஷேகம் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய அபரக்கிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


விடயம்

1. தோற்றுவாய்
2. ஆன்மார்த்தக் கிரியைகள்
3. அபரக் கிரியைகள்
4. உத்கிராந்திக்கிரியை
5. மரணக் கிரியை செய்வோர்
6. கிரியை செய்ய உரித்துடையோர்
7. மரணக்கிரியை – சூர்ணோத்சவம்
8. இப்பொழுதுள்ள கிரியை முறை
9. அஸ்திசஞ்சயனம் – காடாற்று – சாம்பர் அள்ளல்
10. எட்டுச் செலவு
11. அந்தியேட்டி
12. அந்தியேட்டி மண்டபம்
13. நடைபெறவுள்ள கிரியைகள்
14. வீட்டுக் கிரியை
15. குறிப்பு
16. நவசிராத்தம்
17. ஏகோத்திர விருத்தி
18. சம்கிதை
19. இடபதானம்
20. ஏகோதிட்டம்
21. மாசிகம்
22. சோதகும்பசிராத்தம்
23. சபிண்டீகரணம்
24. நக்னதானம்
25. பாஷாண பூசை
26. ஆட்டைத்திதி
27. மகாளயம்
28. அமாவாசை/பௌர்ணமி
29. துர்மரணம்/அவமிருத்து
30. அனுபந்தம் I

அனுபந்தம் II

அனுபந்தம் III




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய அபரக்கிரியை விளக்கம்

**தோற்றுவாய் :**

"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே" என்று நெஞ்சை விளித்துச் சம்பந்தப் பெருமான் வினவுவதைத் தேவாரத்திலே காணுகின்றோம். மனிதப் பிறவியைப் பெற்றுள்ள யாம் ஒவ்வொருவரும், எமக்கு இந்தப் பிறவி எப்படிக் கிடைத்தது என்று எம்மையே கேட்டுக் கொள்ள வேண்டும். அரிது அரிது மானிடராதல் அரிது என்று எங்கள் அறிஞர்கள் சொல்லியுள்ளதையும் அறிவோம். புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிப் பல்வேறு பொருத்தமற்ற பிறவிகளைப் பெறுஞ் சந்தர்ப்பம் இருந்த வேளையிலும் மனித்தப் பிறவி கிடைத்தது பெரும் பேறுதான். அவ்வண்ணம் மனிதனாகப் பிறந்தது மட்டுமன்றிச் சிவனை வழிபடக் கூடியவகை, சைவனாகப் பிறந்தது மிகப் பெரிய பேறுதான். மேன்மைக்குரியதாகிய இச்சைவ நெறியில் நிற்பவர்களாகிப் பிறப்பது எல்லோர்க்குங் கிடைக்கக் கூடியதொன்றன்று. முந்திய முந்திய பிறவிகளிலே செய்த புண்ணியத் தொடர்புதான் பாதிமதி வேணியனை வழிபட வைத்தது என்று துணிய வேண்டும்.

வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடும் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவர் அருள்பெற் றாரே.

மெய்கண்டதேவரை ஞானகுருவாகப் பெற்ற அருணந்தி சிவாசாரியார் சிவஞானசித்தியார் என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளதொரு பாடல் இது. இங்கு சைவமாஞ் சமயஞ் சாரும் ஊழ் பெறலரிது என்று பார்க்கின்றோம். "வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி" என்பதை உணர்ந்து, இந்தச் சந்தர்ப்பத்தை வாய்ப்புள்ளதாகப் பயன்படுத்த வேண்டும். தொடர்ந்து வரவுள்ள பிறவிகளில் இன்னும் மேலான நிலை கிடைக்க வேண்டுமே என்ற ஆதங்கத்துடன் நல்ல முயற்சிகள் தொடரவேண்டும். எங்கள் குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்கள், எம்மைச் சூழவுள்ளோர் என்று எல்லோரது நல்ல நிலைமையையும் சிந்திக்க வேண்டும். மற்றையோரின் வாழ்வு வளம் பெற என்ன செய்யலாமென்று சிந்தித்துச் செயற்படுவது மிகச் சிறப்பானது. "வித்துமிடல் வேண்டுங்கொல்லோ" என்ற குறள்தான் இந்த இடத்தில் நினைவிற்கு வருகிறது. பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தாற் தன்பிள்ளை தானே வளரும் என்பதொரு முதுமொழி உண்டுதானே! ஆகவே பிறருக்காக வாழும் வாழ்க்கை முறையை நாம் எமதாக்கிக் கொள்ள வேண்டும். எமது வாழ்வின் பிற்பகுதியில் எமக்கு ஏனையோரின் உதவி தேவைப்படும். ஆகவே, பொருத்தமான நேரத்தில் நாம் மற்றையோரின் உதவியாளர்களாக வேண்டும். ஒரு ஆன்மா நல்ல நிலையை அடைய வேண்டுமெனில் அந்த ஆன்மா உடம்போடு கூடி இந்த உலகில் வாழுகின்ற காலம் போக, அது உடம்பினின்று பிரிந்த பின்னும் பல கிரியைகள் தொடரவேண்டியுள்ளது. இந்த இடத்து எமது உதவி பெரிதும் வேண்டப்படும். இங்கேதான் அபரக்கிரியை பற்றிய தெளிவான அறிவை நாம் பெற்றிருப்பது நல்லது என்று உணர முடிகின்றது.

## ஆன்மார்த்தக் கிரியைகள் :

ஆன்மார்த்தக் கிரியைகள் இரண்டு வகையின. ஒன்று பூர்வக் கிரியை என்றும், மற்றையது அபரக்கிரியை என்றும் பெயர் பெறும். அன்னை வயிற்றிற் கருவாகிய காலத்திலிருந்து குழந்தையாகிப் பிறந்து மரணித்தற்குரிய கால எல்லையை அடைதல் வரை நிகழ்பவை பூர்வக் கிரியைகள் எனப்படும். மரணித்தற்குரிய கால எல்லையிலிருந்து பின்னே நிகழ்பவையெல்லாம் அபரக்கிரியைகள் எனப்படும். அபரம் – பின் எனும் பொருள் தருவதொரு சொல். இறந்த ஒருவரது ஆன்மாவைச் சிந்தனையிற் கொண்டு முப்பத்தோராம் நாள்வரை என்றும், வருட முடிவு வரை என்றும், வருடம் தோறுமென்றும் கிரியைகள் செய்வதனால் இறந்தவரது ஆன்மாவுடனாகிய பாவம் படிப்படியாகக் குறையும் என்ற கருத்துண்டு. பற்றியுள்ள மலபந்தம் மெல்ல மெல்ல நீக்கம் பெறும். விரைவான உயிர் விளக்கத்திற்கு இக்கிரியைகள் வாய்ப்பளிப்பவையாகலாம் என்பதொரு நம்பிக்கையிலேயே கிரியைகள் தொடருகின்றன.

## அபரக்கிரியைகள் :

மரணத்தின்பின் நடைபெறுபவைதான் அபரக்கிரியைகள் எனினும், ஒரு ஆன்மா தூல உடம்பை விட்டு உயிர் பிரிவதாகிய எல்லையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்துவிட்டது என்று உணர்விறபடுகின்ற காலத்திலிருந்தே அபரக்கிரியைகள் ஆரம்பித்து விடுகின்றன. உயிர் காலன் கைப்படப் போகின்றதென்று உணர்விற்பட்ட வேளை, அந்த ஆன்மாவைப் புனிதமான நிலமைக்குள்ளாக்க வேண்டும் என்னுங் கருத்துடன் பல நல்ல கருமங்கள் இடம்பெற வேண்டும். இந்தவேளை நடைபெறுபவை உத்கிராந்திக் கிரியைகள் என்று பெயர் பெறும். தொடர்ந்து சூர்ணோத்சவம், (மரணக்கிரியை), தகனம், அஸ்திசஞ்சயனம், அந்தியேட்டி, பாஷாணபூசை, ருத்திரபலி, நவசிராத்தம், ஏகோத்திரவிருத்தி, சம்கிதை, இடபதானம், எகோதிட்டம், மாசிகம், சோதகும்ப சிராத்தம், சபிண்டீகரணம், சிராத்தம், திவசம், ஆட்டைத்திதி மகாளயம் முதலியன நடைபெறும்.

## உத்கிராந்தியக்கிரியை :

நிகழவுள்ள மரணத்தை நினைத்து, உயிர் உடலைவிட்டுப் பிரிந்து செல்லுமுன் – பிரிந்து செல்லத்தயாராகும் நிலையிற் செய்யப்படுங் கிரியை இது. சம்பந்தப்பட்டவர் தென்திசை தலைவைத்துப் படுத்திருப்பது நல்லது. இல்லையெனினும் அந்த வேளை மாற்றிப்படுக்க வைப்பது மூலம் அவருக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது. தூய்மை கவனிக்கப்பட வேண்டும். சிவசிந்தனைக்குரிய இனிய சூழல், அமைதியான சூழல் அங்கு நிலவ வேண்டும். புண்ணிய சேத்திரங்களிலிருந்து பெறப்பட்ட விபூதி இருந்தால் அல்லது வீட்டிலுள்ள விபூதியை அணிந்துவிடலாம். புண்ணிய தலங்களிலிருந்து பெற்ற தீர்த்தம் இருந்தால், பிள்ளைகள், இல்லையெனிற் சிவதீட்சை பெற்ற ஒருவர் தமது மடியிலே தூக்கி வைத்துக் கொண்டு இரண்டொரு துளிகளாக வாயிலே விடலாம். சிவதீட்சை பெற்ற ஒருவர் வலது காதிலே மிக மென்மையாகப் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதலாம். மிக இனிமையான குரலில் திருமுறைப் பாடல்களை ஓதலாம். ஓதுவிக்கலாம். கோதானம் செய்கின்ற முறையும் உண்டு. மரணிக்கவுள்ளவர் படுத்திருக்குஞ் சூழலில் எந்தவித அவலக்குரலும் எழாதவகை பார்த்துக் கொள்ள வேண்டும்.

சிவ சிந்தனையுடனிருந்த நாவுக்கரசருக்கு நீற்றறை தென்றல் வீசும் இளவேனிற்காலத்திய பொய்கைக்கரை போன்றிருந்ததே! இறுதியாத்திரை வழிநிற்பவர்கள் காதில் சிவசிந்தனையைச் – சிவ உணர்வை உண்டாக்கக் கூடிய செய்திகளை அனுப்பி அவர்கள் சிந்தனையில் சிவ உணர்வு நிலவ வைக்கவேண்டும். மலபந்த துன்பத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பகுதியையாவது இதன் மூலம் இல்லாமற் செய்யலாம் என்று நாவுக்கரசர் நிலை உணர்த்துகிறது.

## மரணக்கிரியை செய்வோர் :

சிவதீட்சை பெற்றவர்களே சைவர்கள். அவர்களுக்கே இந்தக் கிரியைகள் நடைபெறலாம். கிரியையைச் செய்பவர்களும் சிவதீட்சை பெற்றவர்களாக இருக்க வேண்டும். மதுபானம் அருந்தியவர்களும் மாமிசம் புசித்தவர்களும் மரணத்துடனான கிரியைகளின்போது உதவுபவர்களாக இருக்கக்கூடாது. சிவதீட்சை பெற்றுக்கொள்ளாத ஒருவருக்குக் கிரியை நடக்கும் வேளையிலுங்கூட உதவியாளர்களாய் நிற்பவர்கள், பிரேதத்தைத் தூக்குபவர்கள் அனைவரும் புனிதம் பேணியவர்களாய் இருக்க வேண்டும். புனிதமற்றவர்கள் எக்காரணங் கொண்டும் கிரியைகளிற் பங்காளர்களாகக் கூடாது.

## கிரியை செய்ய உரித்துடையோர் :

தந்தைக்கு மூத்த புதல்வனும் தாய்க்கு இளைய புதல்வனும் கிரியை செய்ய உரித்துடையர். அவ்வண்ணம் பிள்ளைகள் இல்லையெனில் மனைவி, மகள், மனைவிக்குக் கணவன், தமையன், தம்பி, சகோதரன் புதல்வன், தந்தை, தாய், மருமகன், சகோதரி, சகோதரி மகன், பிதாவழி உறவினன், சமானோதகன், தாய்வழி உறவினன், தாய்வழிச் சமானோதகன், சீடன், குரு, மகள் கணவன், தோழன், அரசன் என்று இவர்களுள் ஒருவரை முன்னையவர் இல்லையெனில் பின்னையவர் என்ற வரிசைக் கிரமத்திற் தேர்ந்து கொள்ளலாம். புத்திரர் அல்லாத மற்றொருவரைத் தேர்ந்து கொள்ளும் போது, அவர் தன் தாய் தந்தையருக்குக் கடமை செய்ய வேண்டிய உரித்தில்லாதவரா என்று கவனிக்க வேண்டும். கடமை செய்ய வேண்டிய ஒருவர்தான் என்றால் இந்த இடத்திற் தவிர்த்து மற்றொருவரைத் தேர்ந்து கொள்ளலாம். தனது பெற்றோருக்குக் கிரியை செய்தவர் இந்தக் கிரியையிற் பங்குகொள்ள முடியும்.

புத்திரர், குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் இல்லையெனில் தந்துள்ள வரிசைக் கிரமத்தில் அடுத்துள்ள உரித்தினர் கிரியையைச் செய்யலாம். அப்படிச் செய்து கொண்டிருக்கும் போது உரித்துடையவரான புத்திரர் வருகை தந்துவிட்டால் அவர் தம்மைப் புனிதப்படுத்திக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்சிய கிரியைகளைச் செய்ய அங்கீகாரம் உண்டு. முன்னையவருடன் சேர்ந்தும் நிறைவு செய்யலாம். மரணக்கிரியை செய்யும் மகன் ஏனைய கிரியைகள் நடைபெற வேண்டிய காலத்து அங்கு நிற்க முடியாதிருக்குமென முன்பே அறிந்திருந்தால் மகனுக்கு அடுத்த நிலையிலிருந்து ஏனைய கிரியைகளை நிறைவு செய்யவிருப்பவரைப் பிரேதக் கிரியைகளின் போதும் சேர்த்து இருவருமாக மரணக் கிரியைகளை நிறைவாக்குவது நல்லது.

வெளிநாடுகளுக்குப் பயணஞ் செய்ய வேண்டியுளது என்பதற்காக அந்தியேட்டிக் கிரியைகளைப் பத்தாம் நாள் செய்வோம் அல்லது பதினைந்திற் செய்வோம் என்று தீர்மானிப்பது தவறு. நான்காவது வருணத்தவராகிய எமது துடக்கு நிலை முப்பதின் பின்தான் மாற்றமடையும். அதாவது முப்பது இரவுகளின் பின் என்று உணர்க. இந்த முப்பதுக்குட்பட்ட காலத்திற் சாம்பர் அள்ளுதல் – காடாற்றுதல், எட்டுச் செலவு என்பன மட்டுந்தான் நிகழும். அந்தியேட்டி முப்பதின் பின் நடைபெறும். ஏனைய கிரியைகளும் பின்தான் நடைபெறும். அவசரத் தேவைக்காக அந்தியேட்டியை மட்டும் இருபத்தொன்றின் பின்னும் செய்யலாம் என்றொரு விதி உண்டு. அதற்கும் முன்னே செய்வது பொருந்தாது.

தாய்க்கோ, தந்தைக்கோ அன்றி உரிமையுடைய மற்றொருவருக்கோ மரணக் கிரியை செய்த ஒருவர், அடுத்துவரும் ஒருவருட காலத்திற்குள் தன் கிராம எல்லையைத் தாண்டி அப்பாற் செல்லக்கூடாதென்பதொரு கொள்கை பண்டைக் காலச் சைவரிடையே இருந்திருக்கின்றது. அந்தக் கொள்கை இன்றைய வாழ்க்கை முறைக்குப் பொருந்துவதாயில்லை. அதனால் முப்பத்தொன்று வரை வெளியிடங்களுக்குச் செல்லக் கூடாதென்று குறுகி வந்த கொள்கை இன்று தன்னைப் பார்த்தே குறுகி நிற்கின்றது.

### மரணக்கிரியை – சூர்ணோத்சவம் :

இன்று மரணக்கிரியை என்றும் பிரேதக் கிரியை என்றும் வழங்குஞ் சொற்றொடர்களின் குறியீடாக முன்பு சூர்ணோத்சவம் என்று வழங்கியிருக்கின்றது. இது அபர சூர்ணோத்சவம். அந்தக் கிரியை அன்று நடந்த முறைமை கொண்டே அப்படிச் சிந்திக்க வைத்தது.

சூர்ணோத்சவம் – தூள் செய் விழா – சுண்ணமிடித்தல் விழா என்று சிந்திக்கலாம். சுண்ணமிடித்தல் தான் அன்று முக்கிய கிரியையாகக் கருதப்பட்டது. மரணக் கிரியையின் ஆரம்பத்திலேயே சுண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிக்கப்படும். மரணக் கிரியையின் போது இடிக்கப்படும் மஞ்சள்மா சைவக்குருக்கள் செபிக்கும் மந்திர வலிமையுடையதாகிச் சக்தி பெற்று, உடம்பை விட்டுப் பிரிந்து சூக்கும தேகத்துடன் உலவும் ஆன்மாவைப் பற்றியுள்ள மல பந்தத்தின் பெரும் பகுதியை இல்லாமற் செய்யும். உடம்புடன் கூடிய குற்றங்களையும் நீக்கி ஒரு பரிசுத்தமான நிலையை உண்டாக்கும் என்பதனாலேயே பிரேதத்தைக் குளிப்பாட்ட முன்பாகவே இந்தக் கிரியை, முறைப்படி முன்னொரு காலம் நடந்திருக்கிறது.

ஆலயத் திருவிழாக்களின் நிறைவில் தீர்த்தோற்சவத்தன்று சுவாமி தீர்த்தமாடுவதற்கு முன்பாகத் திருப்பொற்சுண்ணம் இடிக்கப்படும். அதையுஞ் சூர்ணோத்சவம் என்றே சொல்வர். அங்கே இடிக்கப்படும் மாவைப் புனித கும்ப நீருடன் கலந்து சுவாமிக்குத் தெளித்த பின்பே நீராடச் செல்வது வழக்கம். இதனை ஆதாரமாகக் கொண்டு பிரேதத்தைப் புனிதப்படுத்துவதற்கும் அங்கிருந்து பிரிந்து சென்ற ஆன்மாவின் அழுக்கு நிலையைக் குறைப்பதற்கும் இந்த வல்லமை பெற்றதாகிய மஞ்சள்மா சிவ கும்ப நீருடன் கலந்து பிரேதக் குளிப்பாட்டலின் போது உபயோகமாகியிருக்கிறது என்று உணர முடிகின்றது. நியமப்படி புனிதம் செய்த பின் எண்ணெய், அறுகு, அட்சதை, தாம்பூலம் என்பவற்றைச் சாத்திச் சிவகும்ப நீருடன் சுண்ணமிடிக்கப்பட்ட மாவைக் கலந்து பிரேதத்தைக் குளிப்பாட்டலாம். பின்னர் தூய சலம், பஞ்ச கௌவியம், நவகும்பசலம் என்பவற்றால் அபிஷேகம் செய்யலாம். ஏனைய கிரியைகள் தொடரலாம். இந்த வகைப் பிரேதக் கிரியையிலே சூர்ணத்திற்குத்தான் முக்கியத்துவங் கொடுக்கப்படுகின்றது. அதனாலேதான் மரணக்கிரியையைச் சூர்ணோத்சவமென்று அன்றுள்ளவர்கள் குறிப்பிட்டார்கள் போலும். இன்று சுண்ணமிடித்தல் குளிப்பாட்டலின் பின்னேதான் நடைபெறுகின்றது. இத்தகு மாற்றம் நிகழ்ந்த காலம் எதுவென்றோ யார் அதிகாரியாகவிருந்து செய்தாரென்றோ தெரியவில்லை.

## இப்பொழுதுள்ள கிரியை முறை :

இறந்தவரின் தூய்மை பேணித் தருப்பை, வேப்பிலை என்பவை மேல் தலை தென்புற மிருக்கக்கூடிய வகை பிரேதத்தை ஒழுங்கு செய்து தலைப் புறத்தில் ஒரு குத்துவிளக்கேற்றி வைப்பர். இந்தத் தீபம் அணையா விளக்காக இறுதிக் கிரியைக்காகப் பிரேதத்தைக் கொண்டு செல்லும் நேரம்வரை சுடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். ஊதுபத்திகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக எரிந்து நறுமணம் உண்டாக்கலாம். நாலாம் வர்ணத்தவர் என்னும் குறியீட்டுக்குள்ளாகி இருக்கும் எமக்குச் சைவாகம முறைப்படியே கிரியைகள் நடைபெற வேண்டும். எமது அபரக் கிரியைகளிற் பிரேதக் கிரியை தொடக்கம் பாஷாண பூசை வரையுள்ள எல்லாக் கிரியைகளும் சைவக் குருக்கள்மாராலும், சபிண்டீகரணம் முதல் திவசம் வரையுள்ள எல்லாக் கிரியைகளும் பிராமணக் குருக்கள்மாராலும் செய்யப்படும். எனவே மரணக் கிரியைக்கு ஒரு சைவக் குருக்களே அமர்த்தப்பட்டிருப்பார்.

கிரியை நடைபெற வேண்டிய வீட்டின் முன்புற வாயிலருகே பந்தலிட்டு வெள்ளை கட்டி, மாவிலை, தென்னோலைத் தோரணங்களாலும் பூமாலைகளாலும் அலங்காரஞ் செய்து மண்டபம் அமைக்க வேண்டும். நான்கு முழச் சதுர மண்டபம் அமைக்கக்கூடிய வகையில் நிலத்தைப் பசுவின் சாணியால் மெழுகி அதன்மேல் நான்கு முழச் சதுரத்தைத் தேர்ந்து மாக்கோலம் போடவேண்டும். நடுவே குண்டம் அமைய வடகிழக்கில் யாகத்திற்கு ஒரு கும்பமும் தென்மேற்கிற் பஞ்சகௌவிய சேகரத்தானமும் அமையவேண்டும். குண்டத்திற்குக் கிழக்கில் உரல் உலக்கை என்பன வைக்கப்பட வேண்டும். அவை வஸ்திரம், தருப்பை, மாவிலை, மலர்கள் என்பவற்றால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். உரலில் மஞ்சட் பொடி இட்டு வைக்க வேண்டும். உரலைச் சுற்றி நான்கு மூலைகளிலும் நல்லெண்ணெய், அறுகு, அட்சதை, தாம்பூலம் முதலியவற்றை வைக்க வேண்டும். அதற்குக் கிழக்குப்புறத்திற் பேரிகை இருக்க வேண்டும். நடுவே வாழையிலை இட்டு நெல்பரப்பி அதற்குமேல் மற்றோர் வாழையிலை வைத்து அரிசி பரப்பி நடுவே உருத்திர கும்பமும் சுற்றிவர அட்டதிக்குப் பாலகர் கும்பமும், மேற்கிற் புண்ணியாகவாசன கும்பமும் கிழக்கில் சுடலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய மட்குடச் சிவகும்பமும் வைக்கப்படும். குரு உரிய பூசை வழிபாடுகளைத் தொடங்கும் வேளை கிரியைகளைச் செய்யவுள்ள நாயகர் நித்திய கருமங்களை நிறைவு செய்து நீராடிச் சந்தியா வந்தனம் முதலியவற்றை நிறைவு செய்து குருக்களிடம் விபூதிபெற்றுத் தரித்துக் கொண்டு கிரியை நாயகராதற் பொருட்டு தர்ப்பை பூணூல் என்பவற்றைக் குருக்களிடமாகப் பெற்று அணிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்து குருக்கள் செய்யும் கிரியைகளுடனாகி அவர் நிற்பர். கிரியையின் ஆரம்பத்திலிருந்தே திருமுறைப்பாடல்கள் ஓதவேண்டும். மந்திரங்களினுங் குறையாத வல்லமை வாய்ந்தவை அவை என்பதைத் தெளிந்து கொண்டு இனிமையாக இசைக்கவல்ல ஓதுவார்களைப் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வேண்டும். சூக்கும தேகத்துடன் அங்கு உலவும் ஆன்மாவை அமைதியுறச் செய்ய வல்லவை திருமுறைகள்தான் என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்னொரு முக்கிய கருத்தும் உண்டு. அதாவது கிரியை செய்யும் குரு நிறைந்த ஒழுக்கமுடையவராய்க், கல்விமானாய்ச், செய்யுங் கிரியைகளுக்கான பூரண விளக்கமுடையவராய்க், கிரியை செய்யும் நாயகனை, பார்வையாளர்களாய் வந்திருப்பவர்களைக், கவரக்கூடிய தோற்றமுடையவராய் இருக்க வேண்டும்.

இப்படியான சந்தர்ப்பங்களிற் செய்யப்படுங் கிரியை சம்பந்தமான விளக்கத்தினை கிரியை நாயகர் அறிந்திருந்தாற்தான் செய்வதாலாம் கிரியையினாற் பயன் கிடைக்கும்.

கிரியை மண்டபத்துள்ளே பேரிகை வைப்பது பற்றிய குறிப்பை முன்பு காட்டினோம். குருக்கள் உரிய மந்திரங்களைச் செபித்து மூன்றுமுறை பேரிகையிற் தட்டி ஒலி எழுப்பிய பின் அந்த வாத்தியத்தை இசைப்பவனிடங் கொடுத்துப் பேரிகையை அடிக்க வைப்பார். இது பழைய காலக் கொள்கை. பின்னர் அந்தக் கொள்கையில் மாற்றமேற்பட்டது. குருக்கள் தமது மணியை ஒரு வஸ்திரத்தினால் அலங்கரித்துப் பேரிகை இருக்க வண்டிய இடத்தில் வைத்துக் கிரியைகள் செய்து மணியை மூன்று முறை ஒலிக்கப் பேரிகைக்காரன் பேரிகையை ஒலிக்கும் முறை நடைமுறைக்கு வந்தது. இதுவும் மாற்றம் பெற்றுக் குறிப்பிட்ட மரண வீட்டைச் சேர்ந்த மூன்று நான்கு வயது முதிர்ந்த பெண்கள் பேரிகைக்காரனை முன்னே நிறுத்தி, பேரிகை அடிப்பது பற்றிய குறிப்புக்கள் தொனிக்கும்வகை ஒப்பாரி படிக்க அந்தப் பேரிகைக்காரன் அந்தப் பெண்களின் ஒப்பாரி என்னும் நாட்டார் பாடல் இசைக்கேற்ப மூன்றுமுறை அடித்த பின் தன் சகபாடிகளுடன் வாத்தியத்தை இசைப்பர். இந்த நிலைமையும் மாற்றத்திற்குள்ளாகி வாத்தியமில்லாமலேயே கொண்டோடிப்போய் நிறைவு காணும் ஓர் அவசர யுகத்தை அண்மிவிட்டோம்.

குருக்கள் கிரியைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் போது பிரேதத்திற்கு அபிஷேகம் செய்யவேண்டுமென்னும் பணிப்புக் குருக்களிடமிருந்து கிடைக்கும். பிரேதத்தை வீட்டின் பின்புறமாகக் கொண்டு சென்று சிரசு தென்புறமிருக்கக் கூடியதாகக் கிடத்த வேண்டும். கிரியை செய்யும் நாயகர் அரப்பு எண்ணெய் என்பவற்றை மரணித்தவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிலிருந்து சிரசு வரை பட வைப்பார். மரணித்தவரின் இரத்த உரித்துடையோர் அனைவரும் இந்தக் கிரியையிற் பங்கு கொள்வர். இன்று நெருக்கமான பற்றுடையவர்களும் இந்த நிகழ்விலே கலந்து கொள்கின்றனர். பின்னர் அரிசிமா, மஞ்சள் மா, அபிஷேகக் கூட்டு, பால், தயிர், இளநீர் முதலியவை கொண்டும் அபிஷேகம் செய்ய வேண்டும். கிரியை நாயகர் மேற்கு நோக்கியவாறு நின்று கிரியைகளைச் செய்வார். மரணித்தவரின் காலிலிருந்து தலை நோக்கித் தமது இரண்டு கைகளையும் பிரேதத்தை நோக்கியவாறு பிடித்து அசைத்துக் கொண்டு செல்ல மற்றொரு உதவியாளர் புறங்கைமேல் இளநீர் முதலியவற்றை விட்டு நீராட்டுவார். பின்னர் கும்ப அபிஷேகம் நடைபெறும். பன்னீர் அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களைச் சாத்துவர். தொடர்ந்து அலங்கரிப்பு நடைபெறும். அலங்கரிப்பு நிறைவாகியதும் பிரேதத்தை மண்டபத்திற்குக் கொண்டுவந்து சிரசு தென்புறம் இருக்கக் கூடியதாக குருக்களின் இடப்புறம் வைக்க வேண்டும். வலப்புறத்தில் சுண்ணமிடிப்பதற்கான உரல் இருக்கும். திருமுறை ஓதுபவர்கள் திருநீற்றுப் பதிகத் தேவாரங்களை ஓத இறந்தவரின் காற் புறத்திலிருந்து தலைநோக்கி விபூதி அணிவார் கிரியை நாயகர். அதன்பின்னர் சுண்ணமிடிக்கப்படும். அறுகுடன் மஞ்சள் மாவும் உரலில் இடப்பட்டிருக்கும். அதேவேளை பேரிகைக்குப் பதிலாக மணிதான் அடிக்கப்படும். சொல்ல வேண்டிய மந்திரங்கள் சொல்லப்பட்டு எட்டுமுறை இடிக்கப்படும். பின்பு திருவாசகத் திருப்பொற்சுண்ணத்திருப் பாடல்கள் படிக்கப்படும். ஒவ்வோர் பாடல் முடிவிலும் சுண்ணம் இடிக்கப்படும். இந்தக் கிரியை நடைபெறும் போது சிவாசாரியாரும் கிரியாநாயகருடன் உலக்கையைப் பற்றிச் சுண்ணமிடிப்பதைப் பார்க்க முடிகிறது. இது பொருத்தமற்றதொரு செயல் என்று தெரிகிறது. மற்றைய எந்தவொரு செயலிலும் தொடர்பு கொள்ளாத குருக்கள் இந்த இடத்தில் மட்டும் ஏன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பது தெரியவில்லை.

இடிக்கப்பட்ட மஞ்சள் மாவைக் கிரியை நாயகர் மரணமானவரின் இரு கண்களிலும் நிறைவாகச் சாத்தவேண்டும். ஒரு பகுதியை நீருடன் கலந்து உடம்பு முழுவதும் தெளிக்க வேண்டும். முன்னொரு காலத்தில் முன்பாக இடிக்கப்பட்ட சுண்ணம் பிரேத அபிஷேகத்திற்குப் பயன்பட்டது. நேரிதாகச் சிந்திக்கும் போது அதுதான் பொருத்தமான முறை என்று படுகின்றது. பிரேத அபிஷேகத்திற் பயன்படுத்தும் முறையை மனத்துக் கொண்டுதான் இப்போது ஒரு பகுதிச் சுண்ணத்தை நீருடன் கலந்து தெளிக்கின்றார்கள் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் வாய்க்கரிசி இடுதல் என்னுங் கிரியை நடைபெறும். பெண்கள் சுடலைக்குச் செல்வதில்லை என்ற காரணத்தால் வீட்டிலேயே பெண்பாலினர் வாய்க்கரிசி இடுவர். நிலைமைகள் மாறிக்கொண்டிருப்பதால் இதுவும் மாற்றம் பெறக்கூடியதே! அதன் பின்னர் பிரேதத்தின் வாய், கைகள், காற்பெருவிரல்கள் என்பவற்றைப் வெள்ளைத் துணித் துண்டுகளினாற் கட்டித் துணியால் மூடிக்கட்டலாம். இப்பொழுது பெட்டி மூடி கொண்டு மூடப்படும். முன்பு பாடை எனும் அமைப்புள் வைத்துத் தூக்கிச் சென்றனர். இப்பொழுது அதற்கென வாகனங்கள் இருப்பதால் அவை பயன்படுத்தப்படுகின்றன. வாகனத்திற் பெட்டியை வைத்துக் கொண்டு போனாலென்ன கால் முன்புறமிருக்கக் கொண்டு செல்லப்படும். மிகக் கிட்டிய உரித்துடையவர்கள் வாயிலில் மூன்றுமுறை சுற்றி அழுவார்கள். சிவாக்கினியில் இருந்து பெறப்பட்ட கொள்ளி வைப்பதற்காய அக்கினியை மூன்று தண்டுகள் கொண்டு உறி மாதிரிக் கட்டிய அமைப்பினுள்ளே உமி சிறிதளவு நிரப்பப்பட்ட மண் சட்டியொன்றினுள் வைத்து தூய்மையற்ற மற்றொருவர் எடுத்துச் செல்லும் முறைமை முன்பிருந்தது. புனிதத் தன்மை பொருந்திய சிவாக்கினியை தூய்மையற்றவன் எடுத்துச் செல்வது தவறு. கிரியை நாயகரே அதனை எடுத்துச் செல்வதுதான் பொருத்தமானது. கொள்ளியிடப்போகின்ற அவர் கையில் அது இருப்பதுதானே சரியானது. சிவ கும்பத்தை சிவதீட்சை பெற்றவரும், புனிதமுடையவராகிக் கிரியை நாயகரின் உதவியாளராகி நின்று பணி புரிந்தவருமாகிய மற்றொருவர் கொண்டு செல்லலாம்.

பிரேத ஊர்வலத்தின் போது நெல்லுப் பொரியுடன் உப்பைக் கலந்து முன்னே தூவிச் செல்லும் முறைமை யொன்றுண்டு. அநேகமாக இதனையும் தூய்மையற்ற மற்றொருவனே செய்வான். இஃதொரு அநாகரிகமான செயல். எல்லா விடயங்களிலும் தூய்மை பேணப்பட வேண்டுமென்று எண்ணும் யாம், சூக்கும தேகத்துடனாகி ஆன்மா அந்தரத்தே அலைய அந்த ஆன்மா இருப்பதற்கு இடமாயமைந்த உடம்பைத் தூய்மையற்ற ஒருவரின் வழிப்படுத்தலுடனாக்கிக் கொண்டு செல்வது நியாயமற்றது. கிரியை கிரியைக்காக என்றாவது அமையின் அவ்வண்ணம் செய்யலாம். இங்கே எமது சிந்தனை ஆன்மாவின் அழுக்கு நீக்கத்துடனாகியது. ஆகவே எல்லா முயற்சிகளிலும் புனிதம் பேணப்பட வேண்டும். சிவசிந்தனைக்கு உரியதாகி நிகழவேண்டும். சிவதீட்சை பெற்ற ஒருவர்தான் இதனைச் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுகாட்டில் வடக்குத் தெற்காகச் சிதை அடுக்கப்பட்டிருக்கும். அதை அண்மிய பிரேதம் மூன்றுமுறை இடப்புறமாகச் சிதையைச் சுற்றியபின் பிரேதத்தின் தலை தென்புறமாகி இருக்கக்கூடிய வகை சிதையின் மீது வைக்கப்படும். அந்த இடத்தில் உறவினர்கள் அன்பு பூண்டொழுகியவர்கள் அனைவரும் வாய்க்கரிசி இடுவர். பின்னர் கிரியை நாயகர் தாம் கொண்டுவந்த சிவாக்கினிச் சட்டியைப் புனிதமான இன்னொருவரிடங் கொடுத்துவிட்டுச் சிவ கும்பத்தைப் பெற்று இடப்புறத்தோளில் வைத்து மெதுவாக இறந்தவரது ஆன்மபோத நினைவுச் சுமையுடன் இடப்புறமாகச் சிதையைச் சுற்றி வர வேண்டும். சிதையைச் சுற்றிவர ஆரம்பிக்கும் போது ஒருமுறையும், இரண்டாவது தடவை சுற்றிவர ஆரம்பிக்கும் போது ஒரு தடவையும், மூன்றாவது தடவை சுற்றிவர ஆரம்பிக்கும் போது ஒரு தடவையுமாக மூன்று முறை கும்பத்தின் மேலிருந்து கீழாகக் கத்தியால் கொத்தித் துவாரமுண்டாக்கிவிட வேண்டும். துவாரத்தினூடு ஒழுகும் அந்தப் புனித நீரை, சமய தீட்சை பெற்ற ஒருவர் கிரியை நாயகர் பின்னே சென்று சிதையின் மேற்படும்படி எற்ற வேண்டும். பிரேதத்திற் படச் செய்வது என்பது பொருள். இஃது புனிதமாகச் செய்யப்பட வேண்டியதென்பதை ஒவ்வொருவருஞ் சிந்திக்கக் கடவர். கால வெள்ளத்தில் எல்லாம் அள்ளுண்டு போகும் நிலை தொடரும் இந்த வேளையில் யாம் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

மூன்றாவது முறையாகச் சுற்றி வந்த கிரியை நாயகர் மரணித்தவரின் தலைப் பகுதியிற் தென்திசை நோக்கி நிற்க வேண்டும். மற்றொருவர் தருகின்ற சிவாக்கினியை வலக்கையாற் பெற்றுப் பின்புறமாகக் கையை நீட்டிச் சிதையிற் சேர்க்கும் அதேவேளை இடத்தோளிலிருந்த கும்பத்தை முன்புறமாக விழச் செய்ய வேண்டும். பின்னர் கால் உள்ள பகுதிக்குச் சென்று வணக்கம் செலுத்திப் பூணூலைக் கழற்றிப் பவித்திரத்துடன் சேர்த்துச் சிதையிலே போட்டுவிட்டு வீழ்ந்து வணங்கி எழுந்து திருமுறைப் பாராயணஞ் செய்து திரும்பிப் பாராமலே மீளவேண்டும்.

மச்ச மாமிசம் சாப்பிடாத மூன்று தலைமுறையைக் கண்ட ஒருவர் இறந்திருந்த போது மச்ச மாமிசம் சாப்பிடாத ஒருவரே கிரியை செய்யும் நிலைமையும் பொருந்தி வந்தால், அவருக்குப் பிரேத தகனத்தின் முன்னே அந்தியேட்டி செய்யப்படலாம். அவருடைய துடக்குப் பதினாறாம் நாள் கழிக்கப்படலாம். மச்ச மாமிசம் இல்லாத அந்தச் சூழலுக்குத் துடக்கு என்னுந் தீட்டுப் பதினாறின் மேல் நிற்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாக்கினியுடனாக்கியவரும் உறவினரும் வீட்டிற்கு வந்து நீராடித் தூய்மை செய்து திரும்பு முன் வீடு நீரினாற் கழுவப்பட்டுத் தூய்மையாகிவிடும். உணவு கொள்வதன் முன் எல்லாவற்றிலும் சிறிதளவு எடுத்து அந்த ஆன்மாவிற்காக வைக்கப்படும். ஒரு பாத்திரத்தில் நீரும் அருகே தீபமும் வைக்கப்படும்.

## அந்திசஞ்சயனம் – காடாற்று – சாம்பர் அள்ளல் :

தகனம் நிகழ்ந்த முதலாம் மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாள்களுள் ஒரு தினத்தில் நடைபெறலாம். அந்திசஞ் சயனம் – எழும்பு பொறுக்கல். இது முதல் ஐந்து நாள்களுள் எந்த நாளிலுஞ் செய்யலாமென்பது சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்கள் கருத்து. தகனஞ் செய்த மறுநாள் செய்ய வேண்டுமென்பது தேவகோட்டை சிவஶ்ரீ தத்புருஷ தேசிகர் கருத்து. தகனம் நடைபெற்ற அன்றோ அல்லது அடுத்த தினமோ செய்ய நேர்ந்தால் நன்றாக எரிந்துள்ள நிலையில் நீர் தெளித்து நெருப்பின் வேகத்தைத் தணிக்க வேண்டும். நன்றாக நீர் தெளித்த பின் சிரசு இருந்த பக்கத்தில் கும்பம் வைத்துத் தீபமேற்றிப் பூசைத் திரவியங்களும் வைத்தபின் பசும் பாலுள்ளதொரு பாத்திரத்தைக் கும்பத்தின் முன்னாக முக்காலியில் அல்லது மூன்று கல்லின் மேல் வைக்க வேண்டும். பின்னர் கிரியை நாயகருக்கு விபூதி கொடுத்துத் தரிக்கச் செய்க. இறந்தவரின் வலது புறத்தில் மேற்கே பார்த்தபடி அவர் நின்று கொண்டு புறங்கையை விரித்தபடி காற் புறமிருந்து தலை நோக்கி அசைத்துச் செல்ல மற்றொருவர் இளநீர், பால் என்பவற்றைக் கிரியை நாயகனின் புறங்கையில் வீழ்ந்து மரணித்தவரைச் சாரக்கூடியதாக அபிஷேகம் செய்ய வேண்டும். பின்னர் கால், கொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களுக்குரிய எலும்பைப் பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு எடுத்துப் பாலிலே போட வேண்டும். பின்னர் அந்த நிலத்தைப் பக்குவப்படுத்தி நவதானியம் விதைத்து நீர் தெளித்து நெற்பொரி தூவி, றொட்டி, பழம், தாம்பூலம் என்பன படைத்துத் திருமுறை ஓதியபின் பெறப்பட்ட அஸ்தியைப் புனித தீர்த்தத்தில் இடவேண்டும். அஸ்தியாகிய சாம்பரை வைத்திருந்து சந்தர்ப்பம் கிடைக்கும் போது புனித தீர்த்தங்களிலே கலக்கலாம்.

கபில முனிவருடைய விழித் தீயினாற் சகர புத்திரர் அறுபதினாயிரவர் பாதாளத்தில் உடம்பு சாம்பராய் நரகத் துன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்தனர். கங்கா தீர்த்தத்தை அவர்கள் எலும்பிற் பாயச் செய்து நற்கதியடைவிக்க விரும்பிய வழித்தோன்றலான பகீரத மகாராசன் அநேக காலம் சிவபெருமானை நோக்கித் தவமியற்றினான். சிவபெருமானுடைய உத்தரவினால் பிரமலோகத்திலிருந்த கங்கை வேகமாய்ப் பாய்ந்து வந்தது. கடவுள் அதனைத் தமது திருமுடியிலே தாங்கிச் சிறு துளியை விடுத்தனர். அது பாதாளத்திற் சென்று அவர்கள் எலும்பிற் பாய்ந்தது. அந்தவிசேடத்தால் அவர்கள் நற்கதியடைந்தனர் என்பது வரலாறு. இச்சரித்திரத்தால் - அஸ்தியைப் புண்ணிய தீர்த்தத்திலிடுவதனால் - ஆன்மா புனிதமடைந்து புண்ணிய உலகைச்சேருமென்பது நன்கு தேறப்படும் என்று அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் தாமெழுதிய சித்தாந்த தீபிகை என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளமையை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

## எட்டுச் செலவு :

இஃதொரு கிராமப்புற வழக்கமான செயல். சபிண்டீகரணம் நடப்பது வரை வீட்டின் ஓரிடத்தில் இளநீர் தண்ணீர் தீபம் என்பன வைத்துப் பூசிப்பது ஒரு முறை. எட்டாவது நாள் கிரியை வரை உண்ணும் உணவின் ஒரு பகுதியையும் நிவேதிப்பது வழக்கம். அஸ்திசஞ்சயனத்தின்பின் அதாவது சாம்பர் அள்ளுதலின் பிற்பாடு எட்டாவது நாளுக்கு முன்பாக ஒரு தினம் இறந்தவர் விரும்பிய, ஆசையோடுண்ட உணவுகளைப் பாகஞ் செய்து, விரும்பிக் குடித்த பானங்களைத் தயாரித்து, விரும்பியுண்ட பழங்களைச் சேகரித்து ஒரு அந்திப் பொழுதில் வழமையான நீர் முதலியன வைக்குமிடத்தில் நிவேதனஞ் செய்ய வேண்டும். தூப தீபங்கள் பரிமளிப்பாக இருக்க வேண்டும். அவர் தொழிலுடன் சம்பந்தப்பட்ட விருப்பத்திற்குரிய பொருள்கள், விருப்பத்திற்குரிய நூல்கள், உடைகள் அணிகலன்கள் என்பனவும் வைக்கப்படலாம். மச்ச மாமிசம் உண்ணும் ஒருவராக இருப்பினும் மச்சமாமிசம் வைக்கக்கூடாது. மது அருந்துபவராக இருப்பினும் மதுபானம் வைக்கக் கூடாது. முப்பத்தொன்று நிறைவாகும் வரை இந்தவகை நிவேதனம் - அந்த வீட்டிலுள்ளோர் உண்ணுதல் - தவிர்க்கப்படல் வேண்டும். நிவேதனமாயதும் திருமுறை ஓதுதல் நிகழ வேண்டும். இறுதியாக, படைக்கப்பட்டவற்றிற் சிறிதளவு எடுத்து முகட்டை நோக்கிக் காட்டிவிட்டு ஒரு பாத்திரத்திட்டு நீர், பால் என்பவற்றுடன் கலந்து எல்லா இடமும் தெளித்தல் வேண்டும். கூரைப்பகுதிக்கும் தெளிக்கப்படும். சூக்குமவுடம்புடன் கூடிய ஆன்மா இந்த நிகழ்வின் மூலம் ஓரளவு அமைதிகாணும் என்பது உறவினர் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி :

அந்தியேட்டி இறுதியிற் செய்யும் யாகம் எனப் பொருள்படும். அந்தியு, இஷ்டி எனப் பிரிந்து நிற்கும் அத்தொடரில் இஷ்டி என்பது கிரியை, யாகமெனப் பொருள்தரும். அந்தியேட்டிக் கிரியை வரை ஆன்மாவிற்கு உடலுடனான தொடர்பு இருந்து கொண்டே இருக்கும். அத்தொடர்பு நீக்கம் அந்தியேட்டியாலமையும். அந்த வகைப் பிரிப்பின் மூலந்தான் உயிர் செல்ல வேண்டிய சுவர்க்கத்தையோ நரகத்தையோ சார்ந்தொழுக முடியும். சமயாசாரங்களில் உளவாகிய குறைகள் மாறுபாடுகள் செய்யப் படாதவைகள் என்பவற்றைச் சுத்தி செய்வதே அந்தியேட்டியின் நோக்கமாகும். ஆலயங்களிலே நிகழும் நித்திய பூசை முறைமைகளில் ஏற்பட்ட தவறுகளை நைமித்திய பூசைகளால் நிறைவாக்குகின்றோம் என்ற கருத்துத்தான் இங்கேயும் இடம்பெறுகின்றதெனலாம்.

சமய அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டி என அந்தியேட்டி மூன்று வகையினவாக அமையும். சமய தீட்சை மட்டும் பெற்றவர்களுக்கு நடைபெறுவது சமய அந்தியேட்டி. காமிக ஆகமத்தில் விதித்தபடி, சிவதீட்சை பெறாத ஒருவர் சைவத் தாய் தந்தையருக்குப் பிள்ளையாயிருந்து, சைவ சாதனங்களை அணிந்து, சைவ வழிபாடு செய்பவராகியும் இருந்துவிட்டால் அவருக்கு சமய அந்தியேட்டி செய்யலாமென்றும், அப்படியான ஒருவர் இறந்தவிடத்து அவருக்கு மறுமை நற்பேறு கிடைக்க நாம் ஆவன செய்ய வேண்டுமென்றும் அறிகின்றோம். விசேட அந்தியேட்டி, சமய தீட்சை, விசேட தீட்சை பெற்றவர்களுக்கு நடைபெறுவது. நிருவாண அந்தியேட்டி, சமய தீட்சை, விசேட தீட்சை நிருவாண தீட்சை பெற்றவர்களுக்கும், சாதகாபிஷேகம், ஆசாரியாபிஷேகம் என்பவற்றைச் சேரப்பெற்றவர்களுக்கும் நடைபெறும். இங்கு சமய அந்தியேட்டி பற்றிச் சிந்திப்போம்.

மயானத்திலோ, அல்லது மயானத்திற்கு அண்மையாகவோ, அல்லது சமுத்திரக் கரையிலோ பொருத்தமாக அமைந்த ஓரிடத்தைச் சமய அந்தியேட்டி செய்யவெனத் தேர்ந்து கொள்ளலாம். குறைந்தது ஐந்து முள நீளமும் அகலமுங் கொண்ட சதுரமான நிலத்தை இத்தேவைக்கெனத் தேர்ந்து மண் நிலமாகவிருந்தாற் சாணியால் மெழுக வேண்டும். சீமெந்து போடப்பட்ட நிலமெனில் கழுவிவிட்டு மஞ்சள் நீர் தெளித்து விடலாம். சுற்றிவர மாக்கோலம் போட்டு மண்டபம் அமைக்கலாம். மண்டபத்தை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது கூறுகளாக்கி நடுப்பகுதியில் ஓமகுண்டமும் வடமேற்கில் சிவ கும்ப வேதிகையும், வடகிழக்கில் பாசுபதாஸ்திர கரக வேதிகையும் தென்கிழக்கில் சிதாவாஸ்து காதமும், தென்மேற்கில் பஞ்சகௌவிய மேடையும், மண்டபத்தின் சுற்றுப் புறத்தில் பத்து ஆயுத கும்பங்களின் பொருட்டுச் சுற்று வேதிகையும் நான்கு வாயிலும், அவற்றுட் தெற்கில் பிரதான வாயிலும் பொருந்தும்படி அமைத்து மேற்பகுதிக்கு வெள்ளை கட்டக்கூடியவகை கால்கள் நாட்டி வெள்ளை கட்டிச் சுற்றிவர மாவிலை தென்னோலைத் தோரணந் தொங்க விட்டு மாலைகளால் அலங்கரித்து மண்டபக் கால்களுக்கு வாழை கரும்பு என்பவற்றைக் கட்டலாம்.

தென் கிழக்கிலமைந்த பகுதியை நீள்சதுரமாக எடுத்து வடக்குத் தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் ஆறு ஆறு கோடுகள் கீறி அப்பகுதியை மட்டும் இருபத்தைந்து கூறுகளாக்க வேண்டும்.

## அந்தியேட்டி மண்டபம்




1. துவசம்
2. கதை
3. சூலம்
4. சிவகும்பம்
5. யாகவர்த்தினி
6. அக்கினிகுண்டம்
7. பஞ்சகவ்வியம்
8. வாள்
9. தண்டம்
10. சத்தி
11. சக்கரம்
12. பாசம்
13. வச்சிரம்
14. பதுமம்
15. வாயு கரிமா
16. குபேரன் சிவப்பு
17. ஆகாசம் பச்சைமா
18. வருணன் வெள்ளை
19. பிதுருவி மஞ்சளமா
20. இந்திரன் மஞ்சள்
21. அப்பு வெள்ளைமா
22. யமன் கரிமா
23. தேயு சிவந்தமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு அமைந்துள்ள சிறிய சதுரங்களுள் படத்திற் காட்டியுள்ளது போன்று ஐந்து நிறத் தூள்கள் பரப்பப்பட்டிருக்கும். அவை ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு பூதத்தைக் குறிப்பன. பஞ்ச பூதங்களாலானது உடம்பு. பஞ்ச பூதங்கள் மூலமாகத்தான் அந்த உயிர் உடம்பெனும் அமைப்புடனாகியிருந்தது. இந்த உண்மையின் அடிப்படையிலேயே சதுரங்களில் வண்ண வண்ண மாக்கள் பரப்பப்பட்டு அவ்வப் பூதங்களுக்குரிய தெய்வத்தைப் பூசித்து அத்தெய்வங்களின் கருணையால் இறந்தவருக்கு அப்பூதங்களோடு இருந்த தொடர்பை நீக்கிவிடுவது இந்தக் கிரியையின் உள்நோக்கமென உணரப்பட்டது.

அந்த இருபத்தைந்து பகுதிகளில் நடு ஐந்து கூறுகளில் மஞ்சள் நிறமாவிட்டு ஒன்றாக்கி அதிற் பிருதுவி தத்துவத்தையும் தென்மேற்கில் நான்கு கூறுகளில் அரிசி மா இட்டு ஒன்றாக்கி அப்பு தத்துவத்தையும், தென்கிழக்கில் நான்கு கூறுகளில் செங்கல் மா இட்டு ஒன்றாக்கி அங்கே தேயு தத்துவத்தையும் வட மேற்கில் நான்கு கூறுகளைக் கரிமா இட்டு ஒன்றாகச் செய்து வாயு தத்துவத்தையும், வடகிழக்கில் நான்கு கூறுகளை ஒன்றாக்கிப் பச்சிலை மாவிட்டு ஆகாச தத்துவத்தையும், வடக்கு, மேற்கு, தெற்கு, கிழக்குத் திக்குகளில் உள்ள ஒவ்வொரு கூறுகளில் முறையே செங்கல் மா, அரிசி மா, கரிமா, மஞ்சள் மா என்பவற்றைப் பரவி அவற்றில் முறையே குபேரன், வருணன், யமன், இந்திரன் என்னும் பெருந்திசைக் காவலர்கள் நால்வரையும் அமைத்து கும்பங்களையும் முறைப்படி தானியங்கள் மீது வைத்தல் வேண்டும்.

சிவதீட்சை பெறாதோர் சைவர்களாக முடியாது எனவே பிரேதக் கிரியைகள் அவர்களுக்கு இல்லை. மச்சம் மாமிசம் உண்ணுவோர், மது அருந்துவோர், தமதுயிரைத் தாமே போக்கியோர், விபத்தில் உடம்பு சிதறி இறந்தோர், தீக்காயங்களினால் இறந்தோர், குஷ்டரோகம், தொழுநோய் முதலிய கொடிய நோய்களால் இறந்தோர் என இவர்களுக்கும் பிரேதக் கிரியைகள் செய்ய முடியாது. இவர்களுடைய பிரேதக் கிரியைகள் அந்தியேட்டிக் காலத்திலே தருப்பையாற் செய்யப்பட்ட பிரதி தேகத்திற் செய்யப்படும். ஆன்மாவின் பரகதியை வேண்டிச் செய்யப்படுவது அந்தியேட்டி. எனவே இங்கே குறிப்பிடப் பட்டவர்களுக்கான பரகதி சில காலம் பிந்துமென்று எண்ண இடமிருக்கிறது. அந்தியேட்டிக் கிரியை மூலம் குறிப்பிட்ட உடம்புடனாகிய தொடர்பை முழுமையாக விட்டு நீங்கும் உயிர் சிவத்துவப் பேறடைய வாய்ப்புக் கிடைக்கும். நரகம் புகவேண்டிய நிலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டாலும் தொடர்ந்து காலத்திற்குக் காலம் நடைபெறும் கிரியைகளினால் என்றோ ஒருநாள் சிவபதம் கிட்டுமென்பது உறுதி.

## நடைபெறவுள்ள கிரியைகள் :

சிவாசாரியர் நீராடிச் சந்தியா வந்தனம் முடித்துச் சிவ கும்ப வேதிகைக்குத் தெற்கில் வடக்கு நோக்கி இருக்க வேண்டும். சங்கல்பஞ் செய்து கிரியை ஆரம்பமாகும். கரநியாசம், அங்க நியாசம் பூதசுத்தி முதலியன தொடரும். அஸ்திர மந்திரத்தைச் செபித்துப் பஞ்சகௌவியம் அமைத்து அதனைத் தெளித்து மண்டபத்தைத் தூய்மை செய்து கொள்வர். நெற்பொரி தூவி இந்த யாகம் முடியும் வரை எந்தவித விக்கினமும் வாராது காக்கவெனத் தசாயுத தேவர்களிடம் வேண்டுதலும் செய்வார்.

சைவ ஆசார நியதிகளின்படி பிரேதத்திலேயே அந்தியேட்டிக் கிரியைகளும் நடைபெற வேண்டும். ஆனாற் சைவப் பரம்பரையிற் பிறந்தும் சைவர்களாகா நிலைமைக்குள்ளாகிய ஒரு பிரிவினருக்குப் பிரேதக் கிரியை மட்டும் அன்று நடைபெறும். அந்தியேட்டி முப்பது நாள்களின் பின் நடைபெறும். பிரேதக் கிரியை நடைபெற்று நீண்ட கால இடைவெளியின் பின் - முப்பது நாள்களின் பின் - அந்தியேட்டி நடைபெறுவதாற் சுண்ணமிடித்தல் எனுஞ் சூர்ணோத்சவம் மீண்டும் நடைபெற வேண்டியுள்ளது. அதனால் உடம்பைத் தருப்பையில் ஆக்கிக், கிடைத்த பிரதிதேகத்திற்குப் பிரேதக் கிரியையெல்லாஞ் செய்து புத்தாலிகா எனும் அந்தப் பிரதி தேகத்தைப் புனர்தகனஞ் செய்வர். சுடலைக் கிரியைகளுந் தொடரும். தகனம், சாம்பரள்ளுதல், நீருடன் கலத்தல், நீராடல், பாஷாண பூசை, தர்ப்பணம், பிண்டம், ருத்திரபலி முதலியவெல்லாந் தொடரும். இங்கு முப்பது பிண்டங்கள் இடம்பெறும். இவை பச்சை அரிசிச் சாதம், கறிவகைகள், பலகார வகைகள், பழவகைகள், ஏனைய பட்சணங்கள் எல்லாவற்றையும் ஒன்றாக்கிப் பிசைந்து உருட்டி இடப்படும். வாஸோதகம், திலோதகம் முதலான தர்ப்பணங்கள் 525 நடைபெறும், பாஷாணத்திற்குத் தூப தீபங் காட்டியபின் கும்பம், பாஷாணம், பிண்டம் என்பவற்றை அலங்கரிக்கப்பட்ட ஒரு பல்லக்கிலேற்றி மங்கல வாத்தியங்கள், தீவர்த்திகள் சகிதம் ஒரு நீர் நிலைக்கு எடுத்துச் செல்லப்படும். பிண்டத்தை ஒருவரும், கும்பத்தை அவர் பின்னே மற்றொருவரும், பாஷாணத்தை அவர் பின்னே இன்னொருவருமாக நீர் நிலையுள் எடுத்துச் செல்வர். கிரியை நாயகர் இடுப்பளவு தண்ணீருட் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு நோக்கி நின்று பிண்டத்தை வாங்கித் தலைக்கு மேலால் பின்புறம் தென்திசையிற் போடவேண்டும். பின்னர் கும்பத்தைப் பெற்று முன்புறமாக வடதிசையிற் போடவேண்டும். தொடர்ந்து பாஷாணத்தைப் பெற்றுத் தலைக்கு மேலாகத் தென்திசையிற் போட்டுவிட்டு அதிலேயே நீருள் அமிழ்ந்தி நீராடுவர்.

கிரியைகள் நிறைவாகி வீட்டை அடைந்து காலைக் கழுவிக் குறுக்கே போடப்பட்டிருக்கும் உலக்கையைக் கடந்து பசுவில் விழித்துச் சென்று வேப்பிலையை மென்று தின்று நிற்க, வீட்டிலுள்ளோர் ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துச் செல்வர்.

## வீட்டுக்கிரியை :

நாலாவது வருணத்தவர் என்று குறித்து வைக்கப்பட்டுள்ள சைவர்களாகிய எமது துடக்கு (ஆசௌசம்) முப்பதாம் நாள் முடிவில், அதாவது முப்பத்தோராம் நாள் காலையிற்றான் நீக்கம் பெறும், என்பது கொள்கை. அதன்படி அன்றைய தினம் பொருத்தமான ஓரிடத்தில் அந்தியேட்டியைச் செய்யலாம். அந்தியேட்டி செய்ய வேண்டியவர்கள் அதற்குரிய இடத்திற்குச் செல்ல வீட்டில் நிற்கும் மற்றொரு பகுதியினர் வீட்டைக் கழுவித் தூய்மை செய்யப்பட வேண்டியவற்றைத் தூய்மை செய்து பிராமண சிவாசாரியார் ஒருவரைக் குருவாகக் கொண்டு துடக்கை நீக்கலாம். அல்லது அந்தியேட்டிக்காகச் சென்றவர்கள் திரும்பியபின் மாலை வேளையிலுஞ் செய்யலாம். முப்பத்திரண்டாவது நாள் காலையிற் துடக்குக் கழித்தல் தவறாகாது. ஆனால் முப்பத்திரண்டாம் நாள் நடைபெறும் சபிண்டீகரணம் முதலியவற்றுக்கு அது இடைஞ்சலாக இருக்கலாம்.

## குறிப்பு :

ஏதாவதொரு அவசிய தேவையைக் காரணமாகக் கொண்டு அந்தியேட்டிக் கிரியை மட்டும் இருபத்தோராம் நாளிலுஞ் செய்யலாம். இருபத்தொன்றிலிருந்து முப்பத்தொன்று வரையுள்ள எந்த நாளிலுஞ் செய்யலாம். புத்திரனில்லாத மற்றொருவர் செய்யும் அந்தியேட்டிக் கிரியை சுபதினத்திலே நடைபெற வேண்டுமென்பதைக் கவனத்திற் கொள்க. அன்றி அந்தியேட்டிக் கிரியையை இருபத்தொன்றின் முன் செய்வதோ, ஏனைய கிரியைகளை உரிய காலத்திற்கு முன்னாக்கிச் செய்வதோ பொருந்தாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக் கிரியையைச் செய்ய அதிகாரம் பெற்றவர் பிராமண சிவாசாரியார். தானங்களை ஏற்கும் அதிகாரம் அவர்களுக்கே உண்டு என்பது தான் அதற்கான காரணமாம். வீட்டுக்கிரியைகளாவன விக்நேஸ்வரர் பூசையைத் தொடர்ந்து புண்ணியாக வாசனம் (தூய்மைப்படுத்தல் – ஆசௌச நீக்கம் பெறுவது மூலம் வீட்டினை, வீட்டுச் சூழலைப் புனிதமாக்கல்) செய்த பின்னர் வீட்டுக் கிரியை நடைபெற வேண்டும். புண்ணியாக வாசனத்தைத் தொடர்ந்து பஞ்சகௌவியத் தூய்மை, நவசிராத்தம், ஏகோத்ர விருத்தி, சம்கிதை, இடபதானம், ஏகோதிட்டம், மாசிமகம் சோத கும்ப சிராத்தம், சபிண்டீகரணம் முதலியன நடைபெறும்.

## நவசிராத்தம் :

நவம் – புதிது. எனவே முதலிற் செய்யும் சிரார்த்தம் என்பது பொருள். உடற்றொடர்பை இல்லாமற் செய்து ஆன்மாவை நற்கதிக்கு இட்டுச் செல்வது. பச்சையரிசி காய்கறிவகைகளைத் தானமாகக் கொடுத்தல். முதலாம் மூன்றாம் ஐந்தாம் ஏழாம் ஒன்பதாம் பதினொராம் நாள்களிற் செய்யக்கூடியது. சற்பாத்திரரை வருவித்துப் புஸ்பம் தூபம் தீபம் என்பன இன்றிப் பொருள்களை மட்டுஞ் சற்பாத்திரருக்குக் கொடுப்பது நவசிராத்தம் எனப்படும்.

## ஏகோத்திர விருத்தி :

முதல் நாளில் மூன்று தருப்பணமும் அடுத்து வரும் நாள்களில் ஒவ்வொன்று கூடியும் வரும். ஆசௌச நிறைவு வரை செய்ய வேண்டும். அதனாலேயே ஏகோத்திர விருத்தி என்று பெயர் பெற்றது. ஒன்று கூடி வருதல் என்பது. நாலாம் வருணத்தினராய நாம் ஐநூற்றிருபத்தைந்து தருப்பணஞ் செய்ய வேண்டும். தருப்பணம் – திருப்திக்காகச் செய்யப்படுவது. தருப்பணத் தொகையினளவு ஏகோத்திர விருத்தி.

## சம்கிதை :

நேத்திர மந்திரம் ஒழிந்த பத்து மந்திரங்களைப் பத்துச் சற்பாத்திரரிடம் ஆவாகித்து அவர்களுக்குத் தானஞ் செய்வது. இறந்தவர் சிவதீட்சை பெற்றபின் ஆகார நடைமுறையில் வந்த தவறுகள் இதனால் நீங்கும். இது மந்திர வடிவம் உண்டாக்கப்படும் முறையுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடபதானம் :

எருதொன்றினை அலங்கரித்துத் தானமாகக் கொடுப்பது இது. மரணமானவருடைய தரும சிந்தனையுடனான செயல்களை, பயன்களைத் தரும வடிவினதென எண்ணப்படும் இடபத்தின் மூலம் சிவனிடம் சேர்த்தல். ஆன்மாவை இறைவன் திருவருள் வழியில் நிற்கச் செய்தல். இடபதானஞ் செய்வதற்குப் பொருளாதார வசதி பொருந்தாதெனக் கண்டவிடத்து ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதில் இடபத்தின் படத்தை எழுதி அதன்மேற் தேங்காய் ஒன்றை வைத்து அங்கே இடப தேவரை ஆவாகனஞ் செய்ய வேண்டும். பின்னர் கிரியை நாயகர் இரண்டு கைகளாலும் அந்த எருதைப் பற்றுவது போன்றும் ஒவ்வொரு திக்கிற்கும் ஓடச் செய்வது போன்றும் செலுத்திப் பாவானை செய்யக் குரு அதற்குரிய மந்திரங்களைச் சொல்வார். அதனைத் தட்சணையோடு தானமாகக் கொடுக்கலாம். இந்தத் தானம் நடந்தாற்தான் ஆன்மாவின் பைசாச உருவம் நீங்கும்.

## ஏகோதிட்டம் :

இறந்த ஒருவர் உலக வாழ்வுக் காலத்துப் பல வித அனுபவிப்புக்களை விரும்பியிருக்கலாம். அந்த விருப்பங்களை இயன்றமட்டும் திருப்தி செய்யும் பொருட்டுப் பலவித உபசாரங்களுடன் செய்யப்படுவதே ஏகோதிட்டம். இதுவும் பிசாசத்துவ நிவர்த்தியை உண்டாக்குவது. ஆசௌசம் நீங்கிய மறுநாளே இது செய்யப்படக் கூடியது.

முதல் நாளே தகுதியுடையவரான சிவதீட்சை பெற்றவர் ஒருவரைச் சிராத்தத்திற்கு வரும்படி உபசாரத்தோடு கேட்டுக் கொள்ள வேண்டும். சிவ சிந்தனையுடன் அன்று நித்திரை செய்து அடுத்துவரும் நாட்காலை நித்திய கருமங்களை முடித்துச் சிராத்தத்திற்கு வந்தவருக்கு எல்லா உபசாரங்களும் செய்ய வேண்டும். அவரிடம் அனுமதி பெற்று வடக்கு முகமாகவோ மேற்கு முகமாகவோ தருப்பையில் இருக்கச் செய்ய வேண்டும். இறந்தவரை அழைத்து ஆசாரியரிலே எழுந்தருளும்படி வேண்டிக் கொண்டு அவருக்குப் பூவைச் சாத்தித் தூபதீப ஆராதனை செய்து "திருப்தி உண்டாக்குக" என்று சொல்ல வேண்டும், பின் பொருத்தப்பாட்டிற்கேற்ப உணவையேனும், உணவிற்குரிய பொருள்களையேனும் கொடுக்கலாம்.

போசனம் முடிந்தபின் அல்லது அதற்குச் சமமானவை செய்து முடிந்ததும் அவருடைய அங்கீகாரத்துடன் தென்திசை நுனியிருக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருப்பையைப் பரப்பி அதில் எள்ளிட்டு எல்லாவகையான உணவுகளையும் சேர்த்துப் பிசைந்து உருட்டிப் பிண்டமாக்கி இறந்தவருடைய திருப்திக்காகவென்று சொல்லித் தெற்கு முகமாகி இடது முழந்தாளை ஊன்றி அப்பிண்டத்தில் அவரை வணங்குக. பின் இயன்றளவு தானம் அவருக்குக் கொடுக்க. சிராத்தத்திற்கு வந்தவரை அனுப்பியபின் பிண்டத்தைத் தண்ணீருட் கரைத்து நீராடி உணவு கொள்ள வேண்டும். ஏகோதிட்டத்திற்கான தானப் பொருள்கள்: பவித்திரம், பூணூல் கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை (மிதியடி), தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, நீர்ச்செம்பு, விளக்கு குல்லாய் மேல் வஸ்திரம் (சால்வை), வஸ்திரம், பொன், மோதிரம், இரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருள்கள், சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருள்கள் இவற்றிற் சிலவற்றைக் கொடுக்கலாம். பின்னர் ஒரு பிண்டமிட்டு அதற்குச் சந்தன பத்திர புஸ்பம் சாத்தித் தூப தீபங்காட்ட வேண்டும். தொடர்ந்து வழிபடவும் வேண்டும். ஏகோதிட்டத்திற்கு வந்த சைவப்பெருமகனாரை வழியனுப்பிய பின் அந்த இடத்தைச் சுத்திசெய்து கிரியை நாயகன் நீராட வேண்டும். பிராமண ஆசாரியர் மீண்டும் புண்ணியாக வாசனம் செய்து பஞ்சகௌவியத்தினாலே இருவரையும், (தம்மையும், கிரியை நாயகரையும்,) சுத்தி செய்து கொள்ள வேண்டும். ஏகோதிட்டக் குருவை இறந்தவராகப் பாவனை செய்தே இத்தனை கிரியைகளும் அவர் போனபின் நடந்துள்ளன. இத்தேவைக்குப் பயன்கொள்ளப்படுபவர் பாரம்பரியத்துடன் தொடர்புடையவராய் இருப்பது நல்லது. இந்தக் குரு தானங்கள் பெற்றுச் சென்றபின் ஆறுமாதத்திற்கு மீண்டும் பார்க்கக் கூடாதென்பதொரு கருத்துமுண்டு. பெற்ற தானங்களுடன் அவர் தீர்த்த யாத்திரை செல்ல வேண்டும். அதற்கேற்ற பொருள் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் அக்கருத்துடனாயது.

**மாசிகம் :**

ஒருவர் இறந்த முதல் வருடம் முழுவதும் வரும் இறந்த நட்சத்திரத்திற் செய்யப்படுவது மாசிமகமாகும். இறந்த திதியிற் செய்யப்படுவது என்று சொல்பவர்களும் உண்டு. வருடம் முழுவதும் பதினைந்து மாசிகங்கள் நடைபெறவுள்ளதால் பஞ்சதசமாசிகம் என்றும் இதற்குப் பெயருண்டு. ஆசௌச நிறைவின் மறுதினம் ஏகோதிட்டம் நடைபெறுவதால் முதல் மாசிகம் அதனோடு நிறைவுறும். எனவே ஏனைய பதினொரு மாதங்களுமே கணக்கிற் கொள்ளப்படும். ஒவ்வொரு மாதத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் இறந்த நட்சத்திர நாளில் நடைபெறுவது பதினொரு மாசிகம். மற்றும் இறந்த நாளுக்கு இருபத்தேழாம் நாளில் இருந்து முப்பதாம் நாளுக்குட் செய்வது ஊனமாசிகம். நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்துக்குட் செய்யப்படுவது திரைபட்சிக மாசிகம். நூற்றெழுபது நாளின்மேல் பத்துநாள்களுட் செய்யப்படுவது ஊனஷாண்மாசிகம் முந்நூறு நாற்பத்தைந்து நாளின் மேல் பதினைந்து நாள்களுட் செய்யப்படுவது ஊனாப்திக மாசிகம். இந்த நான்கு மாசிகங்களும், இரண்டாம் மாதம் முதல் பன்னிரண்டாம் மாதம் வரை இறந்த நட்சத்திரங்களிற் செய்யப்படும் பதினொரு மாசிகங்களுமாகப் பதினைந்து மாசிகங்கள் செய்யப்பட வேண்டியன.

இந்த ஊனமாசிகம், திலை பட்சிமாசிகம், ஊனஷாண் மாசிகம், ஊனாப்திக மாசிகம் என்னும் நான்கு மாசிகங்களையும் தோஷமில்லா நாளாகப் பார்த்துச் செய்ய வேண்டும். வெள்ளிக்கிழமையிலும் பிரதமை, சஷ்டி, ஏகாதசி, சதுர்த்தி, அமாவாசை என்னுந் திதிகளிலும், கேட்டை, பூரம், பூரட்டாதி, ஆயிலியம், மூலம், கார்த்திகை என்னும் நட்சத்திரங்களிலும், திரிபுஸ்கரயோகம், துவி புஸ்கரயோகம் என்பவற்றிலும் செய்தலாகாது. மற்றைப் பதினொரு மாசிகங்களையும் கால தோஷம் பாராது அந்த அந்த நட்சத்திரங்களிற் செய்யலாம்.

## குறிப்பு :

திரிபுஸ்கரயோகம் துவிபுஸ்கரயோகம் : துதியை, சப்தமி, துவாதசி என்னுந் திதிகளுள் ஒன்றும் உத்தரம், உத்தராடம், புநர்பூசம், விசாகம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களுள் ஒன்றும், ஞாயிறு, செவ்வாய், சனி என்னும் நாள்களுள் ஒன்றும் கூடி வந்தால் திரிபுஸ்கர யோகமென்றும், இவற்றுள் இரண்டு கூடிவந்தால் துவிபுஸ்கர யோகமென்றும் குறிப்பிடப்படும்.

இந்தப் பதினைந்து மாசிகங்களையும் மாசிகதானஞ் செய்து ஏகோதிட்டத்தின் பின் ஒன்றாகச் செய்யும் முறையும் உண்டு. பதினைந்து பிண்டமிட்டுச் சந்தனம் பத்திர புஸ்பம் சாத்தித் தூப தீபங் காட்டிப் பூசித்துத் தர்ப்பணஞ் செய்ய வேண்டும். இவ்வண்ணம் பதினைந்து மாசிகங்களையும் ஒன்றாகச் செய்ய முடியுமென்றாலும் மாதாந்தம் அந்தத் தினங்களிலே செய்வதுதான் சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோதகும்பசிராத்தம் :**

சோத கும்ப சிராத்தம் ஒரு வருடம் வரை செய்யப்பட வேண்டியது. கிரியை நாயகர், முதலாவது ஆண்டிறுதி வைபவம் நிறைவாகுவது வரை இதனைச் செய்யலாம். தண்ணீர் நிறையவுள்ளதொரு பாத்திரத்தை அன்னத்துடன் தானம் செய்வது அது. இதனால் பசி தாகம் என்பன தீரும்.

## சபிண்டீகரணம் :

ஓராண்டு முடிவிற் செய்யத்தக்கது சபிண்டீகரணம். அதற்கிடைப்பட்ட காலப் பகுதியில் நிகழக்கூடிய பொருத்தமற்ற நிகழ்வுகளை, வசதியீனங்களை நினைவிலே கொண்டு ஏகோதிட்டம் நிறைவெய்தியதற்கு மறுதினம் இதனைச் செய்கின்றார்கள். ஏகோதிட்டம், நான்கு ஊன மாசிகங்கள், பதினொரு மாதந்தோறும் இறந்த நட்சத்திரத்திற் செய்யப்படும் மாசிகங்கள், சோதகும்ப சிராத்தங்கள் என்பவற்றை அவ்வப்போது செய்து வருட முடிவில் சபிண்டீகரணஞ் செய்வதே உத்தமமானது. ஆனால் கிரியை நாயகருக்கு ஏதாவது பொருத்தமற்ற நிகழ்வு நிகழ்ந்துவிட்டால் அநர்த்தமாகிவிடுமே என்பதாலேயே ஆசௌச நீக்கத்தின் பின் செய்யலாம் எனக் கூறி வைத்துள்ளார்கள். சபிண்டீகரணம் செய்வதால் ஆன்மா பிதிர்த்துவத் தன்மையடையும். இந்தக் கிரியை மூலம் உயிர் பிதிர்த்துவத்தையோ தேவத்துவத்தையோ சிவத்துவத்தையோ அடையக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.

இந்தக் கிரியையிலே நான்கு பகுதியினர் பூசிக்கப்படுவர். தேவத்தானத்தின் பொருட்டு நந்திதேவர், மாகாளர் என்போரும் பிதிர்தானத்தினராகக் கந்தர் சண்டர் கருணாதீசர் என்போரும் விருந்தினர் அதிதி (புதிதாக வந்தோர்), அப்பியாகதர் (முன் அறியப்பட்டவர்), என்போரும், இறந்தவர்களது ஆன்மாவும் என எண்மராய இவர்களே பூசிக்கப்படுவர்.

"சபிண்டீகரணம் – ஒன்றுசேர்த்தல் – ஒரு வடிவமாக்கல். பிண்டம் – வடிவம். இறந்த ஒருவர் சுவர்க்க நரகப் பேறுகளைப் பெறுவதற்கு, முன் சொன்ன பிதுரர்களின் சகாயம் வேண்டும். அதற்காக அவர் பிதுரர்களோடு சேர்க்கப்பட வேண்டும். பிதுரர்களுக்கு அறிகுறியாக மாவுடன் எள் அரிசி தேன் சர்க்கரை தயிர் குழைத்துருட்டிய பிண்டங்களையிட்டு வைத்து அவற்றுக்கெதிர் இறந்தவர்க்கு அறிகுறியாக ஒரு பிண்டமிட்டுக் கிரியை செய்பவர். எல்லோரையும் ஒருசேரப் பூசித்து எல்லோர்க்கும் நைவேத்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதலீபல தாம்பூலம் எல்லாஞ் சமர்ப்பித்துத் தூப தீபாராதனை செய்து முடிபில் இறந்தவரைக் குறிக்கும் பிண்டத்தை மற்றப் பிண்டங்களோடு ஒன்று சேர்த்தல் காரணமாக இது சபிண்டீகரணம் எனப்பட்டது."

என்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா அவர்கள் தாமெழுதிய அபரக்கிரியை விளக்க வினாவிடை என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார்கள்.

சபிண்டியிற் பூசனைக்குரியராய நான்கு பகுதியினருள் தேவர் சார்பினர் இருவரையும் மேற்கில் வடக்கு முகமாகவும், பிதுரர் சார்பினர் மூவரையும் தெற்கில் வடக்கு முகமாகவும், நிமித்திகர் இருவரையும் கிழக்கில் மேற்கு முகமாகவும், மற்றையவர் நிமித்திகருக்கு வடக்கே மேற்கு முகமாகவும் அமர்த்துவர். பூசைகள் முடித்துத் தானங்கள் கொடுப்பர். பின்னர் சபிண்டீகரணம் நடைபெறும். சம்பந்தப்பட்டோருக்காகக் குருமார் இருத்தப்படுவர். அவர்களுக்கு உபசரிப்பு நடைபெறும். அந்தவேளை அவர்கள் முன் பாத்திரங்கள் வைத்துத் தேவப் பிரதிநிதிகளின் பாத்திரத்தில் நெல்லும் பிதிர் பாத்திரத்தில் எள்ளும் இட்டு ஏகோதிட்டம் போன்று பூசை செய்து சபிண்டீகரண சிராத்தம் செய்வதற்கு உத்தரவு பெற்று வலது புறப் பூணூலோடு விசுவதேவரைப் பூசிக்க வேண்டும். பின்பு பூணூலை இடமாக மாற்றிக் கொண்டு பிதுர் தேவர்களைப் பூசிக்க வேண்டும். நிமித்திகராயினோரை மூலமந்திரத்துடன் இறந்தவரின் தீட்சா நாமத்தையும் சேர்த்துப் பூசித்து அதிதி அப்பியாகதர்களையும் பூசிக்க. எல்லோரையும் போசனஞ் செய்விக்க வேண்டும். சாப்பிடாதவர்களுக்கு அரிசி முதலியன கொடுக்க வேண்டும். முன்னையவர்களை நன்கு சிந்திக்க வேண்டும். இறந்தவர்களுள்ளே முதல் தலைமுறையினருக்கு உள்ள பூசை கந்த தேவருக்கும், இரண்டாவது தலைமுறையினர்க்கு உள்ள பூசை சண்டதேவருக்கும், மூன்றாந் தலைமுறைக்குரியதும் செய்யப்படும்.

## நக்னதானம் :

இறந்தவரது பசி தாகம் என்பவற்றை மாற்றவும் அவர் சூழலில் இருளை நீக்கவும், வஸ்திரதேவை, படுக்கைத்தேவை முதலானவற்றை நிவிர்த்திக்கவும் வழிசெய்யும் தானமியற்றல். இது காமிக ஆகமத்துக் காணப்படுவது. குடும்பத்திற்கு உரியவரான பிராமண சிவாசாரியாருக்கு அரிசி காய் பிஞ்சு முதலியன எல்லாங் கொடுக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஷாண பூசை :

மரணித்தவரை ஒரு கல்லிலே கண்டு பூசிப்பது அது. ஆன்மா சிவபதவி அடைய இந்த வகைப் பூசனை உதவுகின்றது. பாஷாண பூசை திருப்தி நிலையை உண்டாக்குவதுடன் குற்றங்களையும் இல்லாமற் செய்யும்.

கிரியை செய்வதற்கு உரியவர் சவரஞ் செய்து நீராடிய பின் வீட்டினுள்ளோ அல்லது வெளியிலோ ஒரு மண்டபம் நான்கு முழச் சதுரத்தில் அமைத்து வடக்கே மட்டும் வாயில் விட்டுத் தெற்குப் புறத்தில் வேதிகை ஒன்று அமைக்க வேண்டும். அதற்கு முன்பாக ஒரு குழி இருக்க வேண்டும். வேதிகையிற் கும்பமும் குழியில் ஒரு பாத்திரம் வைத்து நீரும் கல்லும் வைத்து வழிபடல் வேண்டும். பன்னிரண்டங்குல நீளமும் ஆறங்குல அகலமுங் கொண்ட செங்கல்லைப் பயன்படுத்தலாம். அந்தக் கல்லில் ஆன்மாவை ஆவாகித்துப் பூசை தருப்பணம் பிண்டமிடுகை எல்லாம் செய்ய வேண்டும். முதல் நாளிலிருந்து ஆசௌச நிறைவு நாள் வரை பூசித்து அந்தியேட்டியின் போது சமுத்திர நீரிலிடலாம்.

## ஆட்டைத்திதி :

இது வருட முடிவில், மரணித்த திதியிற் செய்யப்படுவது. ஆண்டுத்திதி, ஆப்திகம் என்னுஞ் சொற்களாலும் இது குறிப்பிடப்படும். இறந்தவரை நினைந்து செய்யுங் கிரியைகளெல்லாம் இந்த ஆண்டுத்திதிக் கிரியையுடன் நிறைவுறும். பின்னர் திதிக்குச் சிராத்தம் செய்யப்படும். சிராத்தம் என்ற வகையில் இது முதலாவதாக அமைவது என்றும் சொல்லலாம். சிராத்தங்கள் ஒரு அந்தண சிவாசாரியாரை வரச்செய்து அவர் மூலமாய் பூசனையுடன் எள்ளுந் தண்ணீருமிறைத்தல் ஈறாகச் செய்தல் வேண்டும்.

## மகாளயம் :

புரட்டாதி மாதத்தில் அபரபக்கப் பிரதமை முதல் தொடர்ந்துவரும் அமாவாசைக்கடுத்த தினமாகிய பிரதமை வரையுள்ள காலம் மகாளய பட்ச காலம் எனப்படும். இந்தக் காலத்தில் வரும் தந்தை தாயாரின் திதியில் சிராத்தம் செய்யலாம். அந்தத்திதி எமக்கு வாய்ப்பாக அமையவில்லை எனில் நல்லதோர் திதி என நமக்குப் பிடித்த திதியிலுஞ் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் அர்த்த சாமப் பூசையின் மேல் கதவடைக்கப்படும். பிதிர்களுக்கு இராத்திரிக் காலத்தின் நடுப்பகுதி புரட்டாதி. ஆலயங்களிற் போன்ற ஒடுக்க காலமெனினும், தேவ உலகினரது என்பதாற் பேரொடுக்க காலம் ஆயிற்று. பேரொடுக்க காலச் சிராத்தம் மகாளயம் என்றாகிவிட்டது.

## அமாவாசை / பௌர்ணமி :

இவை மாதந்தோறும் வருபவை. மாதா பிதாவின் தாக சாந்தியை நோக்கமாகக் கொண்டவை. இவற்றுளும் சித்திரைப் பூரணையும் ஆடி அமைவாசையும் சிறப்பானவை. முன்பு ஏதாவது சிராத்தம் தவறியதென்றாலும் ஆடியமாவாசையிற் சிறப்பாகச் செய்வது மூலம் அந்தத் தவறை நீக்கிவிடலாம். இந்தக் காலத்தில் ஸ்நானஞ் செய்து விரதமிருந்து உணவு கொள்வது நல்லது.

## துர்மரணம் - அவமிருத்து :

அவமிருத்து - அவம் ¸ மிருந்து - வீணான மரணம். மரணம் வரவேண்டாத நிலையில் நிகழ்வது. இவ்வகை மரணங்களை இரண்டு வகையினவாகப் பார்க்கலாம். ஒன்று எதிர் பாராத வாகன விபத்துக்களாலோ, நீரில் அடிபட்டுச் செல்வதாலோ, எரியுந்தீயுள் அகப்படுவதாலோ, இடிந்து வீழும் வீட்டுள், மலைப் பகுதிகளுள் அகப்படுவதாலோ, மரங்கள் முறிந்து வீழ்வதாலோ, மரத்திலிருந்து, உயர்ந்த கட்டிடங்களிலிருந்து தவறி விழுவதாலோ ஏற்படலாம். அதாவது மரணித்தவருடைய எதிர்பார்ப்பு இல்லாமலே நிகழ்ந்த மரணம் என்பது கருத்து. இந்த வகை இறப்பு இறந்தவருடைய உணர்விற்படாமலே நிகழ்ந்ததனால் இயற்கை மரணம் என்னுங் கூட்டத்தைச் சார்ந்ததாகக் கிரியைகள் நடைபெறலாம். சிறியதொரு வேறுபாடுங் கற்பிக்க வேண்டியுளது.

இறந்தவருடைய உடம்பு சிதறுப்படாமல், சின்னா பின்னப்படாமல், பக்குவமானதாக இருக்குமானால் இயல்பாக இறந்தவருக்குரிய கிரியைகள் எல்லாம் செய்யலாம். ஆனாலும் அந்தியேட்டி செய்தலை நாற்பத்தைந்தின் பின் குறிப்பிட்ட திதியிற் செய்யலாம். அந்தியேட்டிக் கிரியைக்கு முன் வயிரவர் சாந்தி செய்யவேண்டும்.

உடம்பு சிதறியிருந்தால் அல்லது பின்னப்பட்டிருந்தால் பிரேதக் கிரியை, செய்ய முடியாது. மூன்று மாதங்களின்பின் தருப்பையாலாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிதேகத்தில் மரணக் கிரியை நடைபெறலாம். பின்னர் வயிரவர் சாந்தி செய்து அந்தியேட்டியைத் தொடரலாம். துடக்கு முப்பது நாள்களுடன் நீக்கம் பெறுமென்பதால் முப்பத்தோராநாள் ஆசௌச நீக்கத்திற்கான கிரியையைச் செய்து வீட்டுச் சூழலைத் தவிர்ந்த ஏனையோர்க்கு விமோசனமளிக்கலாம். கிரியை நாயகருக்கும் இந்த மரணத்தினாற் கூடிய பாதிப்பிற்குள்ளாகி இருப்போருக்கும் மனச் சலனம் நீங்குவது வரை துடக்கு இருக்கும். பிரதி தேகத்தில் மரணக்கிரியை நடந்து அந்தியேட்டி நிறைவாகும் வேளையில் எல்லோருடைய துடக்கும் நீக்கம் பெறும். அந்தவேளையில் முதல் மூன்று தினங்களுக்கு இரத்த உரித்துடையோர் அனைவருக்குந் துடக்கு இருக்கும் என்ற கருத்துமுண்டு.

உடம்பு சிதறியிருப்பினும் இயற்கை மரணம் போன்றதே என்ற கருத்தால் முகம் முதலிய பகுதிகள் முழுமையான நிலைமைக்குள்ளாகி இருக்குமென்றால் சுண்ணமிடித்தல், நீராட்டுதல் முதலிய கிரியைகளைத் தவிர்த்து ஏனைய கிரியைகளைச் செய்யலாம் என்னுங் கொள்கை இப்போ சில இடங்களில் நடைமுறைக்குள்ளாகி இருக்கின்றது.

கிரியை நடைபெறவில்லை என்றால் கர்ப்பூர தீபாராதனை திருமுறை ஓதல் என்பவற்றுடன் பிரேதத்தைக் கொண்டு சென்று சாதாரண அக்கினியுடன் சங்கமமாக்கலாம். சாம்பரள்ளிப் புனித தீர்த்தங்களிற் கலத்தலும் செலவும் நிகழலாம்.

## துர்மரணம் – இரண்டாவது வகை :

தானே தனது உயிரைப் போக்கிக் கொள்வது இது. நஞ்சுண்டு இறத்தல், கயிற்றிற் தொங்கி இறத்தல், தனக்குத்தானே எரியூட்டி இறத்தல், நீர்நிலையுட் பாய்ந்திறத்தல், கனரக வாகனங்கள் முன் பாய்ந்திறத்தல் என்பனவாகிய இவை இப்பகுதியைச் சாரும். இவ்வகை இறப்பினால் யாருக்குந் துடக்குத் தொடர்வதில்லை. பிரேதத்துடனாகி நிற்கும் வரையுள்ள துடக்கு மட்டுந்தான். அப்பாற் சென்று நீராடிவிட்டால் துடக்கு நீக்கம் பெற்றுவிடும். இவர்களுக்குப் பிரேதக் கிரியை எதுவுங் கிடையாது. தீபமேற்றித் திருமுறை ஓதிப் பிரேதத்தை எடுத்துச் சென்று சாதாரண அக்னியில் தகனஞ் செய்யலாம். ஒருவருடத்தின் பின்னோ ஆறுமாதங்களின் பின்னோ மூன்று மாதங்களின் பின்னோ பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகத்தில் மரணக்கிரியை செய்யலாம். பின்னர் வயிரவர் சாந்தியும் தொடர்ந்து அந்தியேட்டியும் நடைபெறலாம். மரணக்கிரியை நடைபெற்று அந்தியேட்டிக் கிரியை நடைபெறும் நாள்வரை மூன்று தினங்களுக்கு இரத்த உரித்தினர் அனைவருக்கும் துடக்கு இருக்கும். அந்த ஆத்மாவும் நல்ல நிலையை அடைய வேண்டுமென்று விரும்புபவர்கள் சாம்பரை அள்ளிப் பாதுகாப்பாக வைத்திருந்து மரணக் கிரியையின் பின் புனித தீர்த்தத்துடன் கலந்து விடலாம். அந்தியேட்டியின் பின் நடைபெற வேண்டிய கிரியைகளையும் ஒழுங்காகச் செய்யலாம்.

## துர்மரணம் – இரண்டாவது வகையுள் ஒருபிரிவு :

தேசாந்திரத்தில் மரணமாகி உடம்பு கிடைக்கப் பெறாதவர் வெளிநாடுகளில் மரணஞ் சம்பவித்து எந்தவித விளக்கமுங் கிடைக்கப் பெறாதவர் அறிந்து இறந்தாரோ? அறியாது இறந்தாரோ? என்று கண்டுகொள்ளப்படாதவர் குஷ்டம், வைசூரி முதலிய கொடிய நோய்களால் இறந்தோர் என்போரது நிலைமையை நன்றாகத் தெளிந்து மூன்றாவது மாத முடிவிலோ ஆறாவது மாத முடிவிலோ தருப்பையாலான பிரதி தேகத்தில் மரணக்கிரியைச் செய்து அந்தியேட்டி செய்யலாம். இப்படியானவர்களது மரணக்கிரியை நடக்கின்ற நாள்வரை மூன்று தினங்கள் இரத்த உரித்தினர் ஆசௌச நியமத்தைக் கொள்ளவேண்டும். விபரந் தெரியாத காரணத்தாற் செய்தி அறியவந்த நாள் தொடக்கம் முப்பத்தொரு நாள்வரை தொடக்குக் காத்தலும் பொருத்தமானதே. மூன்று மாத நிறைவில் இறந்த திதியில் அந்தியேட்டி செய்ய வேண்டும். திகதியோ திதியோ அறியப்படவில்லையெனில் அந்த மாதத்தில் வரும் நல்லதொரு சுபநாளில் – திரிபுஸ்கரயோகம் துவிபுஸ்கரயோகம் இல்லாத நாளில் – ஒரு அறிவார்ந்த சிவாசாரியாரின் அறிவுறுத்தலைப் பெற்றுச் செய்யலாம். எந்தச் சந்தர்ப்பத்திலும் வயிரவர் சாந்தி அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபந்தம் 1

1. **இறந்தவருக்குக் கிரியை செய்வதன் அர்த்தமென்ன?**
இறந்ததன் மேலும் அவருக்கு வாழ்வுண்டு என்பதே அரத்தமாகும்.

2. **இறந்த பின்பு அவருக்கு எங்கே வாழ்வு? எப்படி வாழ்வு?**
அவருக்குக் சுவர்க்கத்திலும், நரகத்திலும் வாழ்வுண்டு. திரும்பவும் அவர் பூமியிற் பிறந்து முன் வாழ்ந்ததுபோல் வாழும் வாழ்வுமுண்டு. சுவர்க்க வாழ்வு இன்பாநுபவம். நரக வாழ்வு துன்பாநுபவம். திரும்ப வரும் பூமி வாழ்வு இன்ப துன்ப கலப்பான அநுபவம்.

3. **இறந்த பின்பு அவர் இங்கில்லை. அந்நிலையில் அவருக்குச் செய்வதை அவர் பெறுவதெப்படி?**
இறந்த பின்பும் குறைந்தது முப்பத்தொரு நாள் வரை அதாவது அந்தியேட்டி வரை அவர் இங்கேதான் இருக்கிறார். அதாவது தான் விட்ட உடலின் தொடர்பு நீங்காமல் அருவமாய் இருந்து கொண்டிருக்கிறார். அந்நிலையில் உடலைத் தொடர்புபடுத்திச் செய்யுங் கிரியைகளின் பலனை அவர் நேரடியாகவே பெறுகிறார். அந்தியேட்டியின் பிறகு நிகழுங் கிரியைகளின் பலனை மேலுலகத்திலுள்ள பிதிரர்கள் என்ற தேவசாதியார் ஏற்று அவர்கள் எங்கெங்கிருந்தாலும் அங்காங்கு சேரச் செய்கிறார்கள்.

4. **இக்கிரியைகளை அபரக்கிரியை என்பதேன்?**
அவை இறந்தபின் செய்யப்படுங் கிரியைகள் என்பதனால் தான். அபரம் என்றால் பின்.

5. **அபரக்கிரியைகள் எவையெவை?**
பிரேதக் கிரியை, சாம்பலள்ளுதல், அந்தியேட்டி, மாசிமகம், ஆட்டைத்திதி, திவசம் என்பனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. அபரக்கிரியைகள் உடலுக்காகவோ உயிருக் காகவோ?**
உயிருக்காகவேதான். ஆனால் அந்தியேட்டி வரை உடல் தொடர்பில் வைத்தும் பிறகு தனியாகவும் உயிரைக் கருதிச் செய்யப்படும்.

**7. இக்கிரியைகளினால் உயிருக்கு நன்மை விளைவது எங்ஙனம்?**
இக்கிரியைகளால் உயிருக்கு இருவிதத்தில் நன்மை விளையும். தனது சரீரத்தை விட்டுக் கிளம்பிய உயிர் அதன் மேல் பெறவேண்டிய அநுபவங்களுக்கு உபகரிப்பது ஒன்று. படிப்படியாக அவ்வுயிர் சிவத்தன்மை பெறுவது ஒன்று.

**8. சிவத்தன்மை பெறுவதென்பது எங்ஙனம்?**
அபரக்கிரியைகளைச் செய்வதனால் உயிரின் பாவங்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. அதற்குத்தக்க அளவு உயிரைப் பற்றியுள்ள மல பந்தம் விலகிக் கொடுக்கும். மலம் விலகுமளவுக்குச் சிவத்தன்மை சிறிது சிறிதாகப் பற்றும். கால அடைவில் சரியான பக்குவம் வாய்க்கும் போது முழுமையாக அது சிவத்தன்மை பெற்றுவிடும்.

**9. நினைவஞ்சலிகளில் அவர் சிவபதம் அடைந்தார் என்றுதானே எல்லோரையும் குறிக்கிறார்கள். அப்படியானால் கிரியைக்கு என்ன அவசியம்?**
அப்படிக் குறிப்பது ஒவ்வொருவரும் சிவபதமடைய வேண்டும் என்ற நல்விருப்பத்தினால். இப்படி நல்விருப்பத்தினால் உரைப்பது உபசாரம் என்ற அளவில் வைத்துக் கொண்டு உரிய கிரியைகளை முறைப்படி செய்ய வேண்டும்.

**10. பிரேதக் கிரியையில் கும்பபூஜை அக்கினி காரியம் எல்லாம் செய்வதேன்?**
அவையெல்லாம் முன் சொல்லியவாறு இறந்தவரைச் சிவமாக்கும் முயற்சிகள் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பங்களில் உருத்திரனையும் திக்குப் பாலகர்களையும் எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகின்றது. அக்கினியில் சிவனை எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகின்றது. கும்பங்களைப் பூசிப்பதனால் அவற்றிலுள்ள நீருக்குச் சிவத்தன்மை உண்டாகும். அந்நீரினால் இறந்த உடலுக்கு நீராட்டுதலால் நீரிலுள்ள சிவத்தன்மை உடலிற் செறியும். அக்கினி சிவமாகப் பூசிக்கப்படுவதால் அதில் ஏற்பட்ட சிவத்தன்மை அந்த அக்கினியினால் உடலை எரிக்கும் போது அதன் சிவத்தன்மை மேலும் அதிகரிக்க உதவும். உடலைவிட்டுப் பிரிந்தாலும் ஒருவகையில் அதன் தொடர்பு நீங்காதிருக்கும் உயிருக்கும் அச்சிவத்தன்மை பதியும்.

11. **உடலை விட்டுப் பிரிந்த பின்னும் உயிர் உடல் தொடர்பு நீங்காதிருக்கிறதென்பதை விளங்க முடியவில்லையே! அதை எப்படி நம்ப முடியும்?**

அப்படி, அது தொடர்பு நீங்காதிருப்பதைக் காட்சியாற் காண முடியாது. காணும் பக்குவம் சாதாரணமான எங்களுக்கில்லை. பக்குவமுள்ளவர்கள் கண்டு சொல்லியுள்ளார்கள். அவர்கள் சொல்வதை நாம் அநுமானித்து நம்புவதற்குரிய ஏதுக்கள் நடைமுறையில் இருக்கின்றன. இறந்தவர்கள் உயிர்விடும் போது கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் இளநீர், அல்லது தண்ணீர்ச்செம்பு வைப்பதுண்டு. "எட்டு" என்ற வைபவத்திலன்று அவர் விரும்பி அருந்தி வந்த சகல உணவுப் பண்டங்களையும் படைப்பதுண்டு. அங்கே பாடல் படிப்புக்கள் முடிந்தபின் படைத்தவற்றிற் சிறிது சிறிது எடுத்து முகட்டை நோக்கிக் காட்டுவதுண்டு. இவையெல்லாம் இறந்தவர் தனது உடம்பு எரிந்தபின்னுங்கூட உடல் இருந்த சூழலில் இருக்கிறார் என்பதை அறிவிக்கும் ஏதுக்களாகும்.

12. **அங்ஙனமாயின், அவர் சுவர்க்க நரகம் போவாரென்றல்லவோ முதலிற் சொல்லப்பட்டது. இப்போ இங்கேதான் இருக்கிறார் என்பது அதற்கு மாறுபடுகிறதே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு இது மாறுபடாது. எங்ஙனமெனில், இப்போ சொல்லப்படுகிற இந்தத் தொடர்பு முற்றாக நீக்கப்பட்டதன் மேல்தான் அவர் சுவர்க்க நரகங்களிற் செல்வர். அந்தியேட்டியில் தான் அத்தொடர்பு முற்றாக நீக்கப்படும்.

**13. அந்தியேட்டியில் அது நீக்கப்படும் என்பது எப்படி?**

அந்தியேட்டிக் கிரியையை அவதானிப்பதால் அது புலனாகும். அந்தியேட்டிக் கிரியைக்கு அமைக்கும் மாக்கோடிட்ட மண்டபத்தில் தென்கிழக்கு மூலையில் ஐந்து நிற மாக்கள் சதுரவடிவாகப் பரப்பப்பட்டி ருக்குமே! அதில் ஒவ்வொரு நிறமும் பஞ்ச பூதங்க ளில் ஒவ்வொன்றைக் குறிக்கும். பஞ்ச பூதங்களால் அமைந்தது அவர் உடம்பு. பஞ்ச பூதங்கள் மூலமாகத்தான் அவர் உடம்பில் தொடர்புற்றிருந்தார் என்ற உண்மையின் அடிப்படையில், மாவடிவான சதுரங்களில் பஞ்ச பூதங்களைப் பொருத்தி அவ்வப் பூதங்களுக்குரிய தெய்வங்களைப் பூசித்து அவற்றின் கருணையால் அவருக்கு அப்பூதங்களோடு இருந்த தொடர்புகளை நீக்கிவிடுவது அக்கிரியையின் விளக்கமாகும்.

**14. அந்தியேட்டியிலும் தர்ப்பையில் ஆளுருவஞ் செய்து குளிப் பாட்டிப், பொற்சுண்ணமிடித்துச் சுடுகிறார்களே அது ஏன்?**

அதுவும் அந்தியேட்டிவரை உயிருக்கு உடல் தொடர்பு இருக்கிறதென்பதற்கான மற்றொரு அறிகுறிதான்.

**15. சிலருக்கு மட்டும் பிரேதக் கிரியையோடு அந்தியேட்டியும் செய்கிறார்கள். அது ஏன்?**

அதையும் அறியத்தான் வேண்டும். சாதாரணமாக நம்மவரைப் போலல்லாது சிலர் விசேஷமான தீட்சை, ஆசாரம், ஒழுக்கம், சாதனை, சிவபூசை ஒழுங்கு உள்ளவர்களாய் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு விசேட பக்குவம் இருக்கிறது. அந்தவாய்ப்பினால் அவர்கள் இறந்த உடனேயே தேகத் தொடர்பை நீக்கி விடக்கூடிய தகுதியும் இருக்கிறது. அதனாலே தான் அப்படி நிகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16. அஃதிருக்க பிரேதக் கிரியையிலும் அந்தியேட்டியிலும் பொற்சுண்ணமிடிக்கிறார்களே அது எதற்காக?**

அதுவும் அவர் உடல் தொடர்புள்ளவராயிருத்தலிற் சம்பந்தப் பட்டது. அவருடைய தநு, கரணம், புவனம், போகம் எல்லாவற்றை யும் இடித்து நொறுக்கி இல்லாமற் செய்தல் என்ற கருத்தில்தான் செய்யப்படுகின்றது.

**17. பொற்சுண்ணமிடிக்கையில் திருவாசகத்தில் இருக்கும் திருப்பொற்சுண்ணப் பதிகமும் படிக்கிறார்களே! அது ஏன்?**

பொற்சுண்ணமிடித்தலினால் இறந்தவருடைய தேகத் தொடர்பு நீக்கப்பட அவர் சிவலோகஞ் சேரத் தகுதியா கிறார். அப்படி அவர் சிவலோகஞ் சேரும்பட்சத்தில் அவருக்கு அங்கு வரவேற்பு நிகழும். அந்நிகழ்ச் சியைப் பிரதிபலிக்கும் ஓசைப் பொலிவும் பொருள் விளக்கமும் திருப்பொற்சுண்ணப் பதிகப் பாடல்களில் உண்டு. அதனாலேயே பொற்சுண்ணமிடிக்கும் நிகழ்ச்சியோடு இதுவும் தொடர்புபட்டிருக்கின்றது. உண்மையில் சிவலோகஞ் சேருந்தகுதியுள்ளவர் விஷயத்தில் அது உண்மையாய் முடியும். மற்றவர் விஷயத்தில் உபசாரமாகும். என்றாலும் பரவாயில்லை. ஏனெனில், இவர்களும் எப்போவெனினும் தமக்குரிய காலத்திற் சிவலோகமடைய வேண்டியவர்களே. அது நியதமான உண்மை. நியதமான உண்மையை உபசாரமாகக் கொள்ளுதல் பழுதில்லை. அது திருத் தத்திற்குச் சிறந்த வழி என்பது சைவ விளக்கநிலை.

**18. அந்தியேட்டி முடிவில் வீட்டுக்கிரியை செய்வதேன்?**

அந்தியேட்டி முடிவில் இறந்தவரது வீட்டில், நக்ன தானம், ஏகோதிட்டம், தசதானம், சபிண்டீகரணம் முதலிய பல கிரியைகள் நிகழும். இவையெல்லாம் பொதுவில் வீட்டுக் கிரியைகள் எனப்படும். அந்தியேட்டியில் தேகத்தொடர்பு நீக்கப் பெற்றவர் தனக்குரிய சுவர்க்க, நரக கதிகளிற் செல்வார். அவ்வாறு செல்லும் அவர் பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமையானது; இருளானது; விக்கினங்களோடு கூடியது. ஆதலால் அவ்வித கஷ்டங்களில் இருந்து அவருக்கு விமோசனமளிக்கும் நோக்கில் வீட்டுக் கிரியைகள் நிகழ்கின்றன. கிரியைகளில், குடை, செருப்பு, விளக்கு, செம்பு, தண்ணீர் முதலிய எல்லாம் கொடுப்பது அவ்வசதிகள் வேண்டியிருக்கும் பாதையில் அவை அவருக்கு உதவட்டும் என்பதனாலே தான்.

**19. வீட்டுக் கிரியை அழைப்பிதழிற் சிலர் சபிண்டிக் கிரியை என்று மட்டுங் குறிக்கிறார்களே அது ஏன்?**

அது வேறொரு விசேசத்தினாலுமல்ல. வீட்டுக் கிரியையின் பகுதி கள் என மேற் சொன்னவற்றிற் சபிண்டீகரணம் பிரதானமானது என்பதால்தான். எங்ஙனமெனில், இறந்தவர் மேற்குறித்த கஷ்ட வழியெல்லாந் தாண்டிப் போய்த்தன் சுவர்க்க நரகப் பேறுகளைப் பெறுவதற்கு, முன்சொன்ன பிதிரர்களின் சகாயம் வேண்டும். அதற்காக அவர் பிதிரர்களோடு சேர்க்கப்பட வேண்டும். பிதிரர்களுக்கு அறிகுறியாக, மாவுடன் எள், அரிசி, தேன், சர்க்கரை, தயிர் குழைத்துருட்டிய பிண்டங்களையிட்டு வைத்து அவற்றுக் கெதிர் இறந்தவர்களுக்கு அறிகுறியாக ஒரு பிண்டமிட்டுக், கிரியை செய்பவர் எல்லோரையும் ஒருசேரப் பூசித்து எல்லோருக்கும் நைவேத்தியம் கதலீபல தாம்பூலம் எல்லாம் சமர்ப்பித்துத் தூப தீபாராதனை செய்து முடிவில் இறந்தவரைக் குறிக்கும் பிண்டத்தை மற்றப் பிண்டங்களோடு ஒன்று சேர்த்தல் காரணமாக இது சபிண்டீகரணம் எனப் பெயர் பெற்றது.

**20. அவ்வாறு பிண்டத்தாற் குறிக்கப்படும் பிதிரர் என்பார் யார்? அவர்களுக்கும் இறந்தவர்க்கும் உள்ள தொடர்பு யாது?**

பிதிரர் என்பார் படைப்புக் காலத்திற் சிவனால் படைக்கப்பட்ட ஒரு தேவசாதியார். இறந்தவர் நலன்களைக் கவனிக்கும் அலுவலர்களாகச் சிவனால் நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள். இறந்தவர் ஒரு ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவரது பிதாமகர், (பேரன்), பிரபிதாமகர் (பூட்டன்) என்றதற்குப் பொருந்தும் நிலைகளில் அவர்கள் இருப்பர். இறந்தவர் பெண்ணானால் அவரின் மாதா, மாதாமஹீ (பேர்த்தி), பிரமாதாமஹு என்ற முறைக்குப் பொருந்தும் நிலைகளில் இருப்பார்கள். அதாவது இறந்தவரின் பேரில், அவரது தகப்பன், தாய்; பேரன், பேர்த்தி, பூட்டன், பூட்டி என்போர்க்கிருக்கும் கரிசனைக்குச் சமானமான கரிசனையுள்ளவர்களாக அவர்கள் இருப்பார்கள். இறந்தவர் பேரில் அவர்களைக் குறித்துச் செய்யப்படும் எள்ளுந் தண்ணீருமிறைத்தற் (திலதர்ப்பணம்) கிரியையால் அவர்கள் திருப்தியுற்று இவரைக் குறித்துச் செய்யும் தானதருமப் பலன்களை அவர்கள் ஏற்று அவற்றின் மூலம் அவருக்கு நன்மை விளைவிப்பார்கள். அதேவேளை, கிரியை செய்பவர் மேல் அவர் தந்தை, தாய் முதலியோர் சொரியும் அன்பையும் ஆசியையும் இவர்கள் பெறவும் வகை செய்வார்கள் அதனாலேதான் 'பிதிர்க்கடன் பிரதானகடன்' எனப்படுகிறது.

**21. இப்படியான பரிவர்த்தனைகள் (கொடுக்கல் வாங்கல்) உண்மையென நம்பலாமா? இவற்றுக்கான தொடர்பு சாதனங்கள் எங்கே?**

ஏன் நம்பக்கூடாது? சந்திர மண்டலத்துக்கு ஏதும் அனுப்பினால் போய்ச் சேரும் என்று இப்போ சில வருடங்களுக்கு முன் யாருமே நம்பியதில்லை. இப்போ நம்புகிறார்கள். உண்மையில் பூமிக்கும் சந்திரனுக்குமிடையில் மெயில்வண்டியோ, தந்திக்கம்பியோ ஒரு சாதனமுமில்லை. ஆனால் அனுப்பும் பொருள் போய்ச்சேர விஞ்ஞானத்தில் தொடர்பு சாதனம் இருக்கிறது. இச்சாதனத்தை மனிதன் இப்போதான் கண்டறிந்தான் என்பதேயன்றி இதற்குமுன் அதற்குவழி இருந்ததில்லை என்பதற்கில்லை. அந்த அமைப்பை ஏற்படுத்தி வைத்த சிவன் மேற்குறித்த பிதிரர்களுக்கும், பூமியிலுள்ளோர்க்கும் இடையில் அப்படியொரு தொடர்புக்கான சாதனங்களை அமைத்து வைத்திருக்க மாட்டார் என்பதற்கு ஆதாரமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், கடவுள் சம்பந்தப்பட்ட தொடர்புச் சாதனங்கள் அருவமாயிருந்தே தொழில் செய்யும். மனிதன் சம்பந்தப்பட்டவை தான் உருவாமாயிருக்க வேண்டிய நிர்பந்தமுண்டு. எனில், சந்திர மண்டலத் தொடர்புச் சாதனம் போலப் பிதிர்மண்டலத் தொடர்புச் சாதனமும் ஒரு காலத்தில் வரலாமோ எனில் ஆகாது. காரணம் என்னெனில், நமது சூழலாகிய பஞ்சபூதப் பிராந்தியத்துக்குட்பட்ட அளவில்தான் உருவ அமைப்பு வாய்க்கும். அதற்கு அப்பாலான பிதிர்லோகம் முதலியவற்றுக்கு அது வாய்க்காது. தத்துவ இயல்பின்படி அது என்றும் அருவமாயிருக்கும். ஆனால் நம்பலாம்.

**22. இப்பரிவர்த்தனையில் புரோகிதராய் இருப்பவரின் பங்கு யாது?**

கிரியை செய்பவருக்கும் இறந்தவருக்கும் தொடர்பூட்ட திகாரி போலப் பிதிரர் இருப்பர். அது போலக் கிரியை செய்பவருக்கும் பிதிரர்க்கும் இடை யில் தொடர்பூட்ட திகாரியாக இருப்பவர் புரோகிதர். புரோகிதராவார் நல்லறிவொழுக்கம், அக்கினி காரியம், சிவபூசை நெறிகளும் உடையவராயிருந்தால் அவரிடத்தில் பிதிரர்கள் திருப்தியடைவார்கள். அத்தொடர்பில் இவர் ஏற்கும் தானம் முதலியவை பல பிதிரர்களையடையும். அதற்குபகாரமாக இவர் தானங்களை ஏற்கும் போது “இதம் சிவாய நம” - ‘இது சிவனுக்கு எனக்கல்ல’ என்று சொல்லி ஏற்க வேண்டிய விதியுண்டு. தானம் சற்பாத்திரமானவர்கள் கையில் கொடுக்கப்பட்டால் சிப்பியின் வாயில் விழுந்த நீர் முத்தாய் விளைவது போலப் பெரும்பயனாய் விளையும். அந்நிலையில்லாத போது கமரிலூற்றிய பால்போலாகும். (கமர்நிலப்பிளவு)

**23. சிராத்தம் என்பது யாது?**

அந்தியேட்டிக்குப்பின் இறந்தவரைக் குறித்து நிகழும் கிரியைகள் எல்லாம் பொதுவில் சிராத்தம் எனப்படும். சிரத்தையோடு செய்வது சிராத்தம் என்ற விளக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரில் அது அமையும். 'சிரத்தை' என்பது, கிரியை செய்பவர் இறந்தவர்மேற் கொள்ளும் அன்பு, அவரைக் குறித்துச் செய்யுஞ் செயல்களிற் காட்டும் நேர்மை, மேற்கொள்ளும் பிரயாசை எல்லாவற்றையும் அடக்கும். நம்மவர் சூழலில், ஆட்டைத்திதி, திவசம் இரண்டுந்தான் சிராத்தம் எனச் சிறப்பாகக் குறிக்கப்படுவதுண்டு, 'சும்மா, ஐயருக்குக்கரிசி கொடுப்பது' என்ற பாவனை மட்டிலிருந்தால் அது சிராத்தமாகாது. தெய்வ சிந்தனையும், தேவார திருவாசக பாராயணமும், உபவாசமுமாயிருந்து உத்தமமான திரவியங்களைத் தேடிப் பக்திபூர்வமாகச் செய்தாற்றான் அது சிராத்தமென்ற பெயர்க்குப் பொருத்தமாகும்.

**24. துடக்குக் காத்தல் என்ற ஒரு வழக்கம் இருக்கிறதே! அது என்ன? அது எதற்காக?**

துடக்கு என்பது ஒருவர் தொடர்பு காரணமாக ஒருவர்க்கேற் படும் அசுசுசுப்பான அகப்புறச் சூழ்நிலைகளைக் குறிக்கும். விஷேசமாகப் பிறப்பு, இறப்பு, ருதுவாதல் காரணமாக நிகழும் அத்தகைய அகப்புறச் சூழ்நிலையை அது குறிப்பதுண்டு. அது தொடக்கு எனவும்படும். வடமொழியில் 'தூய்மை யின்மை' என்ற கருத்தில் ஆசௌசம் எனப்படும். குறித்த நிகழ்ச்சிகள் காரணமாகச் சம்பந்தப்பட்ட வர்களின் உடம்பிலிருந்து வெளிவரும் துர்நாற்றஞ் சார்பான திரவங்கள், கிருமிகள் முதலியன அகச் சூழ்நிலையை மட்டுமன்றிப் புறச் சூழ்நிலையையும் பாதிப்பதுண்டு. இறப்பு விஷயத்தில் பிரத்தியேகமாக மனத்தில், அதிர்ச்சி, அமைதி யின்மை, கவலைகள் மிகுந்து அதனால் தனிப்பட்டவரும், அவர் தொடர்புள்ளா ரும், அவர் சூழலும் துடக்காகும் நிலை ஏற்படும். ஒருவர் சம்பந்தப்பட்ட துடக்கு இரத்தத் தொடர்பு அடிப்படையில் பலரைத் தாக்கும் என்பது அநுபவ உண்மை. அவ்வகையான தொடக்குக்குட் பட்ட அகப்புறச் சூழ்நிலைகள், சாந்தம், பொறுமை, நேர்மை, திருப்தி முதலிய சத்துவ குணநிலைக்குப் பாதகமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் சோம்பல், கவலை, மந்தம் முதலிய தாமசகுண விரத்திகளே அச்சூழ் நிலையில் இருக்கும். அதனால், சத்துவ குணவிருத்தி நிலையில் செய்யப்பட வேண்டிய, தெய்வ கைங்கரியங் கள், விரதங்கள், தானம், தவங்கள், கல்யாணம் போன்ற நன்மைக் காரியங்கள் ஆகியவற்றுக்கு அத்துடக்குக் காலம் விலக்காகும். புனித நிலையங் களிற் பிரவேசித்தற்கும் அது தடையாகும். இந்த ஒழுங்கை அநுசரித்தல் துடக்குக் காத்தல் எனப்படும். சைவப் பண்பாட்டின் பாரம்பரியமான ஒரு நடைமுறை விதி இதுவாகும்.

மேற்காட்டியவாறான அகப்புற அசுகுசுப்புச் சூழ்நிலைகள் மாறுவதற்குக் குறிப்பிட்ட ஒரு கால எல்லையுண்டு. அது இயற்கை நியதி. அவ்வெல்லை யில் மந்திரக் கிரியை சம்பந்தமான ஒரு தூய்மை செய்தல் மூலம் அகப்புறச் சூழ்நிலையில் ஒரு திருப்தியும் பரிமளிப்பும் புது மலர்ச்சியும் ஏற்படுதல் சாத்தியமாகும். அந்நோக்கில் நிகழும் மந்திரக் கிரியை துடக்குக் கழித்தல், ஆசௌச நீக்கம் எனப் பெயர் பெறும்.

நன்றி : அபரக்கிரியை விளக்கம்
வினா விடை
**இலக்கியகலாநிதி பண்டிதமணி மு. கந்தையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபந்தம் 2

**1. இறுதிக்கிரியையைப் பெண்கள் செய்யலாமா?**

சைவசமய ஆசாரப்படி புத்திரன்தான் இறுதிக் கிரியையைச் செய்ய உரிமை உடையவன். புதல்வரைப் பெறுதல் என்னும் திருக்குறள் அதிகாரத்துள்ள முதற்குறிப்பிற் பரிமேலழகர், "தென் புலத்தார் கடன் புதல்வரைப் பெறுத லானு மல்லது இறுக்கப்படாமையின்" என்று குறிப்பிட்டி ருப்பது கொண்டு புதல்வனின் முக்கியத்துவம் உணரப்படும். புதல்வன் இல்லாதவிடத்து அடுத்த உரிமை மனைவிக்குத் தானுண்டு. மனைவியும் இல்லையெனில் மகள்தான் செய்ய வேண்டும். இவர்கள் இருவரும் பெண்கள் தானென்ப தும் மகன் மனைவி, சகோதரி என்போருஞ் சில சந்தர்ப்பங்களில் உரிமை பெறுவர் என்பதும் எமது கருத்திற்பட வேண்டும்.

**2. உடலைச் சிதையில் வைத்தபின் எரியூட்டுவதற்கு முன்பாகச் சிவகும்பத்தை வைத்திருக்கும் நாயகர் சிதையை மூன்று முறை சுற்றி வருவார். அந்த இடத்திற் கத்தியுடன் நிற்கு மொருவர் இடமாகச் சுற்ற ஆரம்பிக்கும் ஒவ்வொருமுறையும் மேலிருந்து கீழ் நோக்கிக் கொத்தி ஒழுகும் நீரைச் சிதையின் மேல் விழச் செய்வார். இச்செயல் விளக்கும் உண்மை யென்ன?**

இந்தப்புவி வாழ்வில் நாம் செய்த பாவங்களுக்கேற்ப மூவகை நரகங்களை அனுபவிக்க வேண்டி இருக்குமென்றும் அவை வரட்சிக்குரியனவாகி அங்கு செல்லும் ஆன்மா துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருக்குமென்றும் அந்த நிலையை நீக்கிக் குளிர்ச்சியை உண்டாக்கவே இச்செய லென்றும் சொல்லுகின்றனர்.

**3. இறந்துள்ள ஒருவரின் பக்கத்திலிருந்து தேவார திருவாசகங் களை ஓதுகின்றார்களே! அதனால் உண்டாகக்கூடிய பய னென்ன?**

இறந்தவருடைய ஆன்மா முப்பத்தொன்று வரை, சூழலிலேயே நடமாடிக் கொண்டிருக்கும். தூல உடம்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீத்த அந்த ஆன்மா சூக்கும உடம்புடன், தான் விட்டுப்பிரிந்த உடம்பைப் பூரணமாக விட்டு நீங்க முடியாது அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கும். அதனால் நாம் செய்வனவற்றை அது அனுபவிக்கலாம். "மாசறு திங்கள் கங்கை முடி மேலணிந்து என் உளமே புகுந்த அதனால் ஆசறு நல்ல" என்ற துணிபுடன் சென்ற சம்பந்தர் இருந்த மடத்திற்குத் தீ வைக்கப்பட்டதே! சிவ சிந்தனையுடன் இருந்தமையால் அது சம்பந்தப் பெருமானைத் தாக்கவில்லை என அறிகின்றோம். ஆகவே ஆன்மாவை நல்ல நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதால் தேவார திருவாசகங்களைப் படித்து ஆன்மாவைச் சிவநெறி நிற்கச் செய்ய வேண்டியது சிவசிந்தனையுடன் இருக்கச் செய்வது நங்கடன்.

4. **ஒரு மரண நிகழ்வின் பின் ஆசௌசத்திற்குரியோர் எப்போது கோயில் செல்ல முடியும்?**

ஆசௌச நீக்கத்தின்பின் கோயில் செல்லலாம். ஒரு வருடத்திற்குக் கோயிலுக்குச் செல்லக்கூடாது என்போரும் உளர். மனச்சலனத்தை நீக்குவதற்கு உரிய இடம் ஆலயமே. இறைவனிடம் எதையும் சொல்லி அமைதி காணலாம்.

5. **கோழிக்குஞ்சை இறந்தவருடைய பிரேதத்துடன் கொண்டு சென்று மயானத்தில் விடுவது பற்றி......**

எமது துன்பியல் நீக்கம் என்ற கருத்தில் மற்றொரு உயிரைத் துன்பத்திற்குள்ளாக்குவது பொருத்தமற்ற செயல். முட்டாள்தனமான செயலுங் கூட. அறியாமையுடனான ஒரு சிலர் செயல் அது. தவிர்க்கப்படவேண்டும்.

6. **எட்டாவது நாள் - செலவு சம்பந்தமாக.**

இது ஏழாவது நாள் இரவு நடைபெறுவது. தேவை நோக்கி முன்னும் நடைபெறலாம். இறந்தவருடைய விருப்பத்திற்குரிய எல்லாம் சமைத்துப் பூசிக்கப்படும். ஆனால் மச்ச மாமிசம் மதுபானம் இறந்தவர் விருப்பத்திற்குரியதெனினும் வைக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த நாளிலிருந்து உண்ணும் மதிய உணவிற் சிறிதளவு, காலை உணவில் ஒரு சிறிதளவு, மாலை உணவிற் சிறிதளவு இளநீர் தண்ணீர் விளக்கு என்பன வைப்பது வழக்கமாகும். செலவின்பின் அவற்றை நிறுத்தி நீரும் விளக்கும் மட்டும் வைப்பது முறையெனக் கண்டுள்ளனர். எந்தச் சந்தர்ப்பத்திலும் திருமுறை ஓதுவதற்குச் சிறப்பிடங் கொடுக்க வேண்டும்.

## அனுபந்தம் 3

### அபரக்கிரியை சம்பந்தமான சில பதங்களின் விளக்கம்

**சிராத்தம்:-**
சிரத்தையோடு செய்யப்படுவது. (சிரத்தை - பற்று, அன்பு) அபரக்கிரியை உத்தரக்கிரியை எனவும் அழைக்கப்படும். (அபரம், உத்தரம் - பின்) இறந்தபின் செய்யப்படும் கிரியை.

**அஸ்திசஞ்சயனம்:-**
எலும்புகளைத் தொகுத்தல். இது சாம்பல் அள்ளுதல், காடாற்றல், சுடலையாற்றுதல் என்றும் வழங்கப்படும்.

**நக்னதானம்:-**
இறந்த உயிர் தன் வாழ்வியலுக்கு ஆதாரமாயிருந்த எத்தனையோ பண்புகளை இழந்திருக்கும் நிலையில் அவை இல்லாக் குறையை நிரப்புவதற்காகச் செய்யும் தானம்.

**ஏகோதிஷ்டம்:-**
வீட்டுக் கிரியையில் ஒரு புரோகிதரை இறந்தவரின் சார்பிலுள்ள பிரேத சரீரத்தை ஏற்பதற்கு நியமித்து அவருக்குக் கடைசி ஒரு வருட அனுபவத்துக்குப் போதிய பொருட்களைத் தானமாகக் கொடுத்தல்.
(ஏக உதிஷ்டம் - ஒருவரையே குறித்துச் செய்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூதபலி:-**

இறந்து எட்டாம் நாள், குறைந்தது மூன்றாம் நாள் இறந்தவருக்குப் பிரீதியான பண்டங்களைப் பெருமளவிற் படைத்து அவரைப் பிரீதி செய்தல். இதை எட்டுச் செலவு என்றும் சொல்வர்.

**அந்தியேட்டி:-**

இறந்து தேகத் தொடர்புடன் செய்யப்படும் கிரியைகளில் இறுதியான கிரியை (அந்தி - இறுதி, இஷ்டி - கிரியை)

**ஆட்டைத்திதி:-**

இறந்து ஓராண்டு முடிவில் இறந்த திதியில் செய்யும் சிராத்தம். இது ஆப்திக சிராத்தம் எனவும்படும். (ஆப்தம் - ஆண்டு, ஆப்திகம் - ஆண்டு சம்பந்தமானது)

**மாசிகம்:-**

மாசா மாசம் இறந்த நட்சத்திரத்தில் செய்யப்படும் சிராத்தம்.


**திவசம்:-**

முதலாண்டுக்குப்பின் தொடர்ந்துவரும் ஆண்டுத் திதிகளில், இறந்த மாசம், திதிகளில் செய்யப்படும் சிராத்தம்.


**இலக்கியகலாநிதி**
**பண்டிதமணி மு. கந்தையா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பாலை ஞானவைரவர் ஆலயம்



தம்பாலை நாச்சிமார் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி சுசிலாதேவி கணேசமூர்த்தி

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 11-11-1954 - கட்டுவன் |
| பெற்றோர் | : | அமரர்கள் ஐயம்பிள்ளை யோகம்மா தம்பதியர் |
| கற்ற பாடசாலை | : | பண்டத்தரிப்பு மகளீர் உயர் பாடசாலை<br>நல்லூர் சாதனா பாடசாலை |
| திருமணம் | : | 24-08-1981 |
| கணவர் | : | தம்பாலைப்பதி ஐயம்பிள்ளை மாணிக்கம்<br>தம்பதியினரின் புதல்வர் கணேசமூர்த்தி<br>(உரிமையாளர் Downham Bromley Road, "Cost Cutter") |
| பிள்ளைகள் | : | திலிப்காந், ஜெயகாந் |
| மருமகள் | : | வேனுயா |
| பேரப்பிள்ளைகள் | : | அபிஷன், ஜெனிஷா |
| உடன்பிறந்தோர் | : | மஞ்சுளாதேவி, வாசன் |
| மைத்துணர்கள் | : | சத்தியமூர்த்தி, கிருபாமூர்த்தி, சுப்பிரமணியம்,<br>விக்னேஸ்வரமூர்த்தி கலாநிதி (கலா) |
| மைத்துணிகள் | : | மணிமாலா, கருனாநிதி, செல்வநிதி, தயாநிதி. |
| உடன்பிறவா சகோதரர்கள் | : | துரைராஜா, அமிர்தலிங்கம், தவராஜா, அமரர்<br>சாந்தகுமார், ரஜிதா, ராஜசுலோசனா, குலேந்திரா, |
| மருமக்கள் | : | தீபன், தினேஸ், திலக்சன், துளசிகா, நரோசன், தூரிகா,<br>திலீசன், ஹரிசன், பொன்னுஷா, கிருசாந்தன்,<br>பிரசாந்தன், தக்சிகா, தனுசா, சுலக்சனா, சஜீவன்,<br>சபீனா, சகிரா, |
| பெறாமக்கள் | : | கம்சன், மயூரன், மதன், ஜதுயா, விதுயா, மதுயா,<br>அஸ்வின், அனிச்சா, ரஜிதா, தசான், பர்மி. |
| பேரர்கள் | : | கஸ்வின், கபோஸ், விகாஷ் சாருஷ் |
| உதிர்வு | : | 26-02-2013 லண்டன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org